# வேப்பமரம்



கலையார்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்பமரம்




**கலையார்வன்**

**ஜெயந்த் சென்றர்**

**இல. 28, மாட்டின் வீதி,**

**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வேப்பமரம்**
**நாவல்**

நாவலாசிரியர் :
கலையார்வன் (கு. இராயப்பு)
வெளியீடு :
ஜெயந்த் சென்ரர்
28, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம்.
கணினி, வடிவமைப்பு, அட்டை :
ஜெயந்த் சென்ரர்
அச்சுப்பதிப்பு :
யே. எஸ். பிறின்டர்ஸ்
முதற்பதிப்பு : ஐப்பசி 2013
பதிப்புரிமை : ஆசிரியர்
பக்கங்கள் : 12 + 144
விலை : 300/=

**Veppamaram**
**Novel**

Novelist :
Kalayarvan (K. Rayappu)
Published by :
Jeyanth Centre
No. 28, Martyn Road, Jaffna.
Computer, Layout, Cover :
Jeyanth Centre
Print by :
J.S.Printers
First Edition : October 2013
Copy Right : Author
Pages : 12 + 144
Price : 300/=

International Standard Book Number
ISBN 978-955-0197-03-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிரிழந்த,

துயர்சுமந்த

மக்களுக்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெளியீட்டுக் குறிப்பு

கலையார்வனின் 16வது நூலும் இரண்டாவது நாவலுமான 'வேப்பமரம்' என்னும் நாவலை வெளியீடு செய்வதில் மனநிறைவு அடைகின்றோம். யாழ்ப் பாணத்து மக்களின் போர்க்காலச் சூழலின் வாழ்வி னைப் பிரதிபலிக்கும் தகவல்களை பலரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளிக்கொண்டுவரும் இந் நூலை வெளியீடு செய்யச் சந்தர்ப்பம் கிடைத்தமை எமக்கு மகிழ்வைத் தருகின்றது.

எம்மால் வெளியீடு செய்யப்பட்ட கலையார்வ னின் கூத்துக்கள்-5, குறுங்கூத்துக்கள், உப்புக்காற்று போன்ற நூல்கள் விருதுகளையும் வரவேற்பையும் பெற்றதைப்போல 'வேப்பமரம்' நாவலும் உங்களின் வரவேற்பைப் பெறும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

ஜெயந்த் சென்ரர்

28 மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
021-222 9021



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வாசிப்புக் குறிப்பு

வடபுலத்து அரங்கக் கலைகளில் ஆர்வம் மிக்கவராக இருந்த 'கலையார்வன்' யாழ்ப்பாணத்து குருநகர்ப் பிரதேச மக்களின் வாழ்வை மையமாகக் கொண்டு படைத்த 'உப்புக்காற்று' (2012) என்ற நாவலோடு புனைகதை உலகிலும் அடியெடுத்து வைத்தவர்.

மீனவக் களங்களை மையப்படுத்தி காதல் கதைகளையே எழுதி வந்த ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் கலையார்வனின் 'உப்புக்காற்று' அந்த மக்களின் வாழ்வின் சுவடுகளை உள்ளவாறே எடுத்துக் காட்டி உன்னதமானதொரு இலக்கியப் பிரதியாகப் பலரதும் உள்ளத்தைக் கவர்ந்து நின்றவேளையில் அவரது இரண்டாவது நாவல் 'வேப்பமரம்' என்ற பெயரோடு இப்போது வெளிவருகின்றது. இது கலையார்வனின் 16வது நூலாகும்.

'வேப்பமரம்', போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வின் ஒரு பகுதியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

கனகம், சின்னையா தம்பதிகளின் இரண்டாவது மகளான சந்திராவின் குடும்பத்தை மையமாகக் கொண்டு பின்னப்பட்டுள்ள கதையில் 'வேப்பமரம்' பெறுகின்ற இடம் எத்தகையது என்பதை நோக்கும் போது, வேம்பின் பயன்களை அறிந்த கனகம் வீட்டு வாசலில் வைத்து வளர்த்த வேப்பமரத்தை அவளின் பிரிவுக்கு பின்னர் மகள் சந்திரா தாயாகவே பேணிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாத்து வருவதையும் தாயின் அடிச்சுவட்டில் வாழும் தமது வாழ்வுக்கு எடுத்துக் காட்டாக அந்த வேப்பமரத்தையே கருதுவதும் தெரிகிறது.

சந்திரா, ஆனந்தன் தம்பதிகளின் குடும்பத்தினர் யாழ்ப்பாண நகரத்திற்கு அண்மையில் குடியிருப்பவர்கள். இவர்களுக்கு பிரியந்தன், பிரியா, பிரியவதனி, பிரிந்தா என்ற நான்கு பிள்ளைகள் உள்ளனர். பிரியந்தனுக்குப் பின் இரண்டாவதாகப் பிறந்த ஆண் குழந்தையொன்று இறந்து விட்டது. எஞ்சிய நான்கு பிள்ளைகளோடும் அவர்களின் குடும்பம் போர்க்காலச் சூழலில் வாழ்ந்த வாழ்வு யாழ்ப்பாணத்து மக்கள் அனுபவித்த துயரங்களின் வகை மாதிரியாகவே தெரிகின்றது.

சந்திராவின் மூத்த மகன் பிரியந்தன் பதின்மூன்று வயதில் போராளிக் குழுவொன்றினால் பிடித்துச் செல்லப்படுகின்றான். பிரியந்தனை இவர்களின் பிடியிலிருந்து மீட்பதற்காக சந்திராவும் கணவன் ஆனந்தனும் எடுத்த முயற்சிகள், அனுபவித்த துன்பங்கள் அதிகம். அவ்வாறு போராளிகளின் பிடியிலிருந்து அவனை மீட்க முடிந்தாலும் அவன் இருபத்தோராவது பிறந்த நாளன்று யாழ்ப்பாண நகரத்தில் கிளைமோர் தாக்குதலொன்றில் அகப்பட்டுக் கொல்லப்பட்டு விடுகின்றான்.

மகனின் பிரிவால் நிலை குலைந்த சந்திராவும் ஆனந்தனும் மகள் பிரியாவின் படிப்பை இடைநிறுத்தி பதினேழு வயதில் அவளை பணிப்பெண்ணாக மத்திய கிழக்கிற்கு அனுப்பி விடுகின்றனர். பிரியா, 'நஜீமா' என்ற முஸ்லீம் பெயருடன் பத்தொன்பது வயது என்று கூறிப் பெற்ற பொய்யான கடவுச்சீட்டுடன் மத்திய கிழக்கிற்கு அனுப்பப் படுகின்றாள்,

சவூதி அரேபியாவில் பணிபுரிந்த பிரியாவின் பணத்தால் சந்திராவின் குடும்பம் சிறிது முன்னேற்றமடைகின்றது. ஆனால் பிரியா தனது வீட்டு எஜமானால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு வயிற்றிலே கருவோடு கொழும்புக்கு திரும்பி விடுகின்றாள். பிரியாவின் தொடர்பை இழந்த சந்திராவின் குடும்பம் சிறிது காலம் செய்வதறியாது குழம்பி நிற்கின்றது.

பிரியாவின் தங்கை பிரியவதனிக்கு ஜேர்மன் மாப்பிள்ளையான சோதிநாதன் நிச்சயிக்கப்படுகின்றான். சீதனமோ, திருமணச் செலவோ எதையுமே எதிர்பார்க்காமல் வந்த வெளிநாட்டு மணமகனுக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியவதனி மனைவியாகின்றாள். பிரியவதனி ஜேர்மனி சென்று ஒரு சில மாதங்களிலேயே சோதிநாதன் ஏற்கனவே ஒரு வெள்ளைக்காரப் பெண்ணுடன் வாழ்ந்து வருவதை அறிந்து கலக்கமடைகின்றாள். சோதிநாதனைப் பிரிந்து தனியாக வாழ்ந்த பிரியவதனி விடுமுறையில் யாழ்ப்பாணம் திரும்புகிறாள்.

சந்திராவின் கடைசி மகள் பிரிந்தா, ரமேஸ் என்ற வாலிபனைக் காதலித்து அவனோடு சயிக்கிளில் ஊர் சுற்றித் திரிகின்றாள். ரமேஸின் தாய் மணிமாலா சாதியைக் காரணம் காட்டி மகனின் காதலை ஏற்க மறுக்கிறாள். இதனால் சந்திராவின் வீட்டில் குழப்பம் அதிகரிக்கின்றது.

இவை சந்திராவின் குடும்பத்தை மையமாகக் கொண்ட சிக்கல்கள். மறு புறத்தில், சந்திராவின் கணவன் ஆனந்தனின் தமையன் இராசதுரை விலைக்கு வாங்கிய வீட்டை வாஸ்து சாஸ்திரப்படி திருத்தி யமைப்பதற்காக மேலும் பெருமளவு பணத்தைச் செலவு செய்கின்றார். ஆனால், அந்த வீட்டில் குடியேறி குறுகிய காலத்திலேயே குண்டுத் தாக்குதலில் வீடு நொருங்க, அதனுள் அகப்பட்டு கணவனும் மனைவியும் படுகாயமடைந்து அங்கவீனர்களாகின்றார்கள்.

ஆனந்தனின் நண்பன் மணிரத்தினத்தின் மகள் துவாரகாவிற்கு அற்புதனைத் திருமணம் பேசியபோது மணிரத்தினம் சோதிடரிம் சென்று திருமணப் பொருத்தம் பார்க்கின்றார். சோதிடரின் இசைவோடு திருமணம் நடைபெறுகின்றது. ஆனால், திருமணமாகி நான்கே மாதத்தில் அற்புதன் இனந்தெரியாதவர்களால் சுடப்பட்டு இறந்து விடுகின்றான். துவாரகா வாழ்வை இழந்து விதவையாக்கப்படுகின்றாள்.

இது போன்ற சம்பவங்களால் சோதிட முறைப்படி அமையும் விவாகப் பொருத்தங்கள் உயிர்வாழ்வதற்கான உத்தரவாதமல்ல என்ற சிந்தனை இளைய தலைமுறையினரிடையே உருவாகி வருவதும் எடுத்துக்காட்டப்படுகின்றது.

மேலும், யாழ்ப்பாணத்து மக்கள் இடம் பெயர்ந்து குடாநாட்டை விட்டு வெளியேறியபோது சாவகச்சேரியில் இந்த மக்களுக்கு தாகத்திற்கு தண்ணீர் அள்ளுவதற்குக்கூட அனுமதிக்காது கதவடைத்தவர்களின் ஈனச் செயலும், துன்பங்களைச் சுமந்து வாழ்கின்ற மக்களிடம் துப்பாக்கிகளைக் காட்டிப் பயமுறுத்தி கொள்ளையடித்த கூட்டத்தினரின் இழிவான செயல்களும், வெள்ளை வான் கடத்தலுடனான கொலையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசி மூலமாகப் பயமுறுத்தி பணம் பறிக்கும் கும்பலின் நடவடிக்கையும் நாவலில் இடையிடையே எடுத்துக் காட்டப்படுவதால் இது வெறுமனே கற்பனைக் கதை கூறும் நாவலாக இல்லாமல் ஒரு காலத்து யாழ்ப்பாணத்துச் சமூக வாழ்வினைப் பிரதிபலிக்கும் படைப்பாகவே தெரிகின்றது.

நம்பிக்கையே வாழ்வாகக் கொண்டிருந்த மக்களுக்கு நம்பிக்கைகள் ஒவ்வொன்றாகச் சரிந்தபோது வாழ்வின் மீதான நம்பிக்கையே அற்றுப் போய்விடுகின்றது. இவ்வாறான நிலையிலேயே அவர்கள் சமயம், சாஸ்திர விதிகள் முதலியவற்றின் மீதும் நம்பிக்கையை இழக்க நேரிடுகின்றது.

ஆயுள் பலமானது என்று ஆருடம் கூறிய அடுத்த நிமிடமே உருத்தெரியாமல் அழிந்துபோன உயிர்களும், உத்தமத்தில் உத்தமம் என்று சோதிடர்கள் கூறி மணம் முடித்த வாழ்வு மணவறையிலேயே பறிக்கப்பட்டதும், மனையடிச் சாஸ்திரத்தின் நுட்பங்களையெல்லாம் வகுத்தாராய்ந்து அமைக்கப்பட்ட வீடு கற்குவியலாகிப் போனபோதும், ஆண்டவனே காப்பாற்று என்று ஆலயத்தில் தஞ்சமடைந்த மக்கள் ஆலயத்தினுள்ளேயே இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்ணுற்ற போதும் மக்கள் வாழ்வின் மீதான நம்பிக்கையை இழந்து விடுவது சாதாரணமானதுதான். அந்த நம்பிக்கையிழப்பு இந்த நாவலிலும் பிரதிபலிக்கின்றது.

குட்டிகள் தாய் ஆட்டுடன் இணைந்து கொள்வதுபோல நாவலின் முடிவில் சந்திராவின் பிள்ளைகள் இணைந்து கொள்கின்றனர். சவூதியில் வாழ்வைப் பறிகொடுத்த பிரியாவையும், அவள் பெற்ற குழந்தையையும் ஏற்றுக்கொண்ட நவரத்தினம் அவளுக்குப் புதுவாழ்வு கொடுக்கின்றான்; ஜேர்மனியில் வெள்ளைக்காரியோடு வாழ்ந்த சோதிநாதன் அவளைப் பிரிந்து பிரியவதனியிடம் வந்து சேருகின்றான்; சாதி ஏற்றத்தாழ்வைக் காட்டி மகனின் காதலை ஏற்க மறுத்த தாய் மணிமாலா தனது வரட்டுக் கௌரவத்தை விடுத்து திருமணத்தை தானே முன்னின்று நடத்து கின்றாள்.

இவை நாவலின் முடிவுகள். ஆனால், சமூக வாழ்வின் முடிவுகள் எப்போதும் இவ்வாறுதான் அமைந்து விடும் எனக்கூறிவிட முடியாது. எவ்வாறாயினும் எமது வரட்டுக் கௌரவங்களும், தவறான சிந்தனைகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வுக்கு இடையூறாக இருந்தால் அவை தூக்கியெறியப்பட வேண்டும். அந்த எண்ணத்தின் எதிர்பார்ப்பாக இந்த முடிவைக் கருதிக்கொள்ளலாம்.

இறுதியாக, இந்த நாவலினூடாக கலையார்வன் போர்க்காலத்து யாழ்ப்பாணச் சமூக வாழ்வின் சில பகுதிகளை எடுத்துக் காட்டியுள்ளார். அவர் சொல்லாத சேதிகள் பல - சொல்லாமல் சொல்லியவையும் பல - அவர் சொல்ல நினைத்தும் சொல்லாத சேதிகளை நிச்சயமாக அவரின் அடுத்த நாவலில் எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கையோடு வாசகர்கள் காத்திருக்கலாம்.

ஈழத்து தமிழ்ப் புனைகதை உலகிற்கு பயன்மிக்கதொரு படைப்பினைத் தந்த கலையார்வனை ஆர்வம் மிக்க வாசகர்களோடு நானும் இணைந்து பாராட்டுகின்றேன்.

**பேராசிரியர், கலாநிதி. ம.இரகுநாதன்**
**தமிழ்த்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஆக்கக் குறிப்பு

மனிதத்தை மதிக்காத, நேசிக்காத, உணராதவர்களால் அரங்கேற்றப்பட்டு வழமையாகிவிட்டதும், மனதை உருக்குவதுமான காட்சி அந்தக் காட்சி...

கண்ணீர் சிந்த நின்றவர்கள், கதறி அழுதவர்களின் கோலம் பரிதாபமாக இருந்தது...

இடிபட்டும், தள்ளுப்பட்டும், கால்கள் மிதிபட்டும், நெருக்கமாய் சூழ்ந்து நின்று வேடிக்கை பார்த்தவர்கள் பலதையும் கதைத்தனர்...

வார்த்தைகளில் விசமத்தனங்கள், விதண்டாவாதங்கள், ஏளனங்கள், விரும்பத்தகாதவைகள் பரவலாக இருந்தன.

சிலரது உரையாடலில் அனுதாபம் முன்னிலை வகித்தது.

ஏளனமாய்க் கதைத்தவர்களில் சிலர் விலகிச் செல்ல எத்தனித்தனர்...

“தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்...”

வானிலிருந்து கேட்ட திடீர் முழக்கம்போல பெண்ணின் குரல்.

செல்ல முனைந்தவர்கள், வேடிக்கை பார்த்தவர்கள், ஏன், அங்கு நின்ற அனைவருமே குரல் வந்த திசை நோக்கித் திரும்பினர்.

பல தரப்பைச் சார்ந்தோரின் பிரசன்னம் அங்கு இருக்கும் என்பதை அறிந்திருந்தும், சூழ்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றவர்களைப் பார்த்து துணிவுடன் கூறி முடித்து, வெறுப்புடன் பார்த்தவாறு கூட்டத்தினரிடையில் நின்றாள், ஐம்பது வயது மதிக்கத்தக்க பெண்.

எல்லோர் பார்வையும் அவளை நோக்கியே...

அவளது கூற்றிலிருந்த உண்மைத் தன்மையை உணர்ந்த வர்களும் கூட்டத்தினரில் இல்லாமலில்லை. அவர்களது முகத்தில் கருணையைக் காணமுடிந்தது.

பலரும் உணரத் தவறிய, உணரத் தயங்கிய வேதனையின் படிமங்களை நாளையோர் நினைவிற் கொள்ளவேண்டும் என்பதற்காக, பிறந்த ஊரின் சிறப்புக்கள், வாழ்வியல் குறிப்புகள், வேதனைகளையே கலப்படமின்றி வெளிக்கொண்டுவந்த நான், அதிலிருந்து மாறுபட்டு யாழ்ப்பாண மக்களின் அசாதாரண காலத் துன்பியல் வாழ்வின் கையளவையும், காலத்துக்கு ஒவ்வாதவையாய் சமூகத்தில் புரையோடி யுள்ளனவெனப் பலராலும் கூறக் கேள்விப்பட்டவற்றில் சிலவற்றையும் வெளிக்கொண்டுவர முயன்றுள்ளேன்.

இது, சிலருக்கு இனிப்பாகவும் - கசப்பாகவும், சிலருக்கு உவப்பாகவும் - உறைப்பாகவும், சிலருக்கு மனவுளைச்சலாகவும்கூட இருக்கலாம். விரும்பியோ, விரும்பாமலோ இவற்றின் கலவைதானே மனித உடலின் கலங்களிலும், மனித வாழ்வின் நிலைகளிலும் இழையோடி நிற்கின்றன.

இத்தகைய இழையோட்டத்தைச் சித்திரிக்கும் இந்நாவல் சுட்டிநிற்கும் கால எல்லைக்குள் நடந்தேறியவற்றில், நெஞ்சைத்தொட்ட நிகழ்வுகளை வெளியிலிருந்து பார்க்கும் மனிதனாக, அவனது பார்வை யிற்பட்ட, அவனால் உணரப்பட்ட பட்டறிவின் பதிவுகளாக, பலவற்றின் குறியீடுகளாக இந்நாவல் அமைகின்றது.

கதையை நகர்த்திச்செல்லும் மாந்தர்கள் கற்பனையாக உலா வந்தாலும்கூட நிகழ்வுகளில் பிறழ்வுகள் இல்லை. யாழ்ப்பாணத்தில் ஏதோவொரு பகுதியில், ஏதோவொரு கோணத்தில், ஏதோவொரு சந்தர்ப்பத்தில் நடந்தேறி, யாரோ சிலர் அல்லது சில குடும்பங்கள் அனுபவித்தேயுள்ளன என்பது வேதனைக்குரியதுதான்...

எனது 16 ஆவது நூலாக வெளிவரும் ‘வேப்பமரம்’ நாவலுக்கு மகுடம் சூட்டியதுபோல, பேராசிரியர் கலாநிதி ம. இரகுநாதன் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்ச்சியற்ற ஆழமான ஆய்வுப் பார்வை 'வாசிப்புக் குறிப்பாக' மதிப்பளிக்கிறது, அலங்கரிக்கிறது என்ற வகையில் அவருக்கு எனது மனங்கனிந்த நன்றிகள்.

மேலும், இந்நூலின் வருகைக்கு முன்னோடியாக, கணினிசார் வேலைகள், நூல் மற்றும் அட்டை வடிவமைப்பு போன்றவற்றுடன் வெளியீடு செய்ய முன்வந்த 'ஜெயந்த் சென்ரர்' நிறுவனம்;

எழுத்துக்களுடன் ஒட்டிநின்ற பிழைகளை, கருத்துக்களுடன் முரண்பட்டு நின்ற தகவல்களை கண்டறிய துணைநின்று ஆலோசனை வழங்கிய திரு. கி. செல்மர் எமில், திரு. யோ. மரியாம்பிள்ளை, திரு. றோ. க. கில்பேட்;

எண்ணம்போல் அழகுற அச்சிட்டு வழங்கிய 'யே.எஸ். பிரின்டர்ஸ்' (பண்டத்தரிப்பு);

அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்வும், பெருமிதமும் அடைவதுடன் அவர்கள் கரங்களை அன்புறவுடன் பற்றியும் கொள்கிறேன்.

அன்புடன்,
கலையார்வன்
(கு.இராயப்பு)

kalayarvan@yahoo.com
Kalayarvan Rayappu@face book.com
077 724 9536



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேப்பமரம்



01

"ம்மா... ம்மா... ம்மா..."

சுற்றுமுற்றும் பார்த்தவாறு, வேதனை தோய்ந்த முகத்துடன், ஒழுங்கைக்குள்ளிருந்து கத்திக் கொண்டு வேகமாக வந்தது கறுத்த ஆடு.

எப்போதும், இந்தக் கறுத்த ஆட்டினது குரலுக்கு எதிர்ப்பாட்டுப் பாடுவதைப்போலத் தானும் குரல்கொடுத்தபடி, வாலை அசைத்தவாறு தேடிவரும் குட்டியை இப்போது காணவில்லை.

பல தடவைகள் தொடர்ந்தும், விட்டுவிட்டும் கத்தியபடி பதட்டத்துடன் வீதிக்கு வந்துவிட்டது அந்தத் தாய் ஆடு.

தான் ஈன்ற இரண்டு குட்டிகளில் ஒன்றை ஏற்கெனவே இழந்த நிலையில், மிகவும் கண்காணிப்புடன் மற்றக் குட்டியை வளர்த்து வந்தது தாய்.

குட்டி வீதிக்குச் சென்றுவிடாமல் தடுப்பதற்காக, எந்நேரமும் தன்கூடவே வைத்திருந்து ஒழுங்கைக்குள்ளேயே மேய்ந்துகொண்டிருக்கும். இன்று ஏனோ தெரியவில்லை குட்டி விலகிவிட்டது. தாயின் கவலையீனமா? குட்டியின் விளையாட்டுத்தனமா? அல்லது விதியென்னும் வியாக்கியானமா?

"ம்மா... ம்மா..."

நடு வீதியில் நின்று திரும்பத் திரும்ப கத்தியவாறு சுற்றுமுற்றும் பார்த்த அந்தத் தாய் ஆட்டுக்கு அதனது குட்டி கண்ணிற்படவோ, அதன் குரலொலி கேட்கவோ இல்லை...

ஏக்கம், ஏமாற்றம், வேதனை... அதன் கண்ணிலிருந்து நீராக வழிய மிரள மிரள விழித்தது.

வீதியின் ஓரத்தில் அமர்ந்து அசைபோட்டுக்கொண்டிருந்தன சில ஆடுகள். அவற்றில் ஏதேனும் ஒன்றாவது தனது குட்டி பற்றிய தகவலைத் தெரிவிக்குமென்ற எதிர்பார்ப்பில். அவற்றை நோக்கிப் பார்வையைச் செலுத்தியபடி தொடர்ந்து கத்தியது அந்த ஆடு...

அசைபோடலைத் தவிர வேறெந்தச் சலனமுமின்றி நிமிர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்துவிட்டு மௌனமாகின அவை... இதன் கதறல் அவற்றுக்குப் புரியாமலில்லை. ஆனாலும் சொல்லத் தயங்கின...

ஆடுகளின் எசமானர்களான மனிதர்களில் சிலர் வீதியோரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களையும் பார்த்து தன் கத்தலால் கேள்வியெழுப்பியது.

அதற்கும் பதில் கிடைக்கவில்லை...

"ம்... மா... ம்... மா..."

மிதமிஞ்சிய வேதனையின் வெளிப்பாடாய் வெருட்சி, குரலில் தளர்ச்சி...

வேறு வழியின்றி முன்னரைவிடவும் வேகமாக ஓடியோடித் தேடியது அந்த ஆடு, தானீன்ற குட்டி கிடைத்துவிடும் என்ற நம்பிக்கையில்...

"கொஞ்சத்துக்கு முன்ன பிடிச்சு ஒரு வானில ஏத்திக்கொண்டு போனாங்களே அந்தக் குட்டியட தாயாக்கும் இது. அதுதான் இப்பிடி ஆலாய்ப்பறந்து கத்துது?"

"அது கத்தலில்லையிங்க பெற்றவங்கட உள்ளக் குமுறல்... இதயத் துடிப்பு, அதின்ர அலைச்சலப் பாருங்க. பதறுதுங்க... பாவம், யார்தான் என்ன செய்ய ஏலும்? சொல்லத்தான் முடியுமா?... இப்போ அதுக்குத் தேவையானதெல்லாம் அமைதி... மன நிம்மதி..."

பேருந்து தரிப்பிடத்தில் நின்ற ஆனந்தனின் கேள்விக்கு மற்றவர்களுக்குக் கேட்காத வகையில் பதிலளித்தாள் சந்திரா...




**யாழ்ப்பாணம்**, நாவலர் வீதியிலிருந்து பிரிந்து, நீண்டு செல்லும் ஒடுங்கிய குறுக்கு வீதியில், கணிசமான தூரத்தில் மா, கொய்யா, தேசிக்காய், தோடை, தென்னை போன்ற மரங்களுடன் பூ மரங்கள் பலவற்றையும், வீட்டின் முன்பக்க முற்றத்தில் பெரு விருட்சமாக வியாபித்து நிற்கும் வேப்பமரத்தை யும் உள்ளடக்கிய, ஆடம்பரமற்ற சிறிதும் பெரியதுமான மூன்று அறைகளுள்ள வீட்டுடன் கூடியதுமான மூன்று பரப்புக் காணிதான் சந்திராவின் சீதனம். அவர்கள் வசிக்கும் வீடும் அதுதான்.

ஆனந்தன் சந்திராவின் கணவன்.

சூரியனின் ஒளியை வெகு நேரமாகத் தடுத்து தானே ஏந்திக்கொண்டு முற்றத்திற்கு நிழலையும், குளிர்மையையும் வழங்கியபடி வேம்பு வளர்ந்திருப்பதும், அதிகாலையில் கதிரவன் எழும்போதும், மாலையில் மறையும்போதும் அடிவானில் தோன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்புதக் காட்சிகளை முற்றத்திலிருந்தவாறே மறைப்புகளின்றிப் பார்க்கக்கூடியதாக இருப்பதும் இவர்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமே.

ஒவ்வொரு நாளும் காலையில் வேப்பம் மரத்தைச் சுற்றிப் பெருக்கி, உலர்ந்து விழுந்த இலைகள், கொப்புகளை அகற்றித் தண்ணீர் தெளிப்பது சந்திராவின் முக்கிய வேலைகளிலொன்று.

இன்றும் அவ்வாறே செய்துமுடித்த பின்னர் நெடுநேரமாக வேப்பமரத்தையே கனிவுடன் பார்த்துக்கொண்டு நின்றாள்.

சந்திராவின் தாய் கனகத்தின் பிறந்தநாள் இன்று. இந்த மரத்திற்கு உரித்தாளி அவளேதான். அதனாலேயே சந்திரா தன்னை மறந்து அம்மரத்தைப் பார்த்தவாறு நின்றாள்...

அந்நேரம், பாலர் பாடசாலையில் கற்கும் நாலு வயது மகள் பிரியா, ஓடிவந்து வேப்பமரத்தில் கத்தியினால் கொத்தியதைக் கண்ணுற்ற சந்திரா, அவளைப் பிடித்து முதுகில் நாலைந்து தடவைகள் அடித்து விட்டாள்.

காரணம் புரியாத பிரியா கண்களைக் கசக்கியவாறு அழத் தொடங்கினாள்...

"ரீச்சர்தானம்மா சொன்னவ வேப்பம் மரத்தில பிசின் எடுக்கலாமெண்டு..."

தனது பக்கத்து நியாயத்தை அழுதவாறே கூறினாள்...

"வேப்பமரத்தில பிசின் எடுக்கலாம்தான். ஆனா, இதில இல்ல... இது என்னப் பெத்தவ பராமரித்து வந்த மரம். அவவின்ர நினைவுகள், எண்ணங்கள், கனவுகள் எல்லாம் இந்த மரத்தில் கலந்து வளருது... இத ஆரும் விளையாட்டுக்கும் அடிக்கக்கூடாதெண்டு சொல்லியிருக்கிறனெல்லா?"

பிரியா தொடர்ந்து விம்மி விம்மி அழுதாள்...

கோபத்தில் விறைப்பேறி இருந்த சந்திராவின் முகத்தில் மாற்றம்... மெல்லமெல்ல சோகத்தைத் தழுவியது...

கோபமும், சோகமும் தணிந்த சந்திரா பிரியாவை அணைத்து அவள் கண்ணீரைத் துடைத்தாள்.

"இனிமேல் இப்பிடிச் செய்யவேணாம்..."

பிரியா தலையை அசைத்துச் சம்மதித்தாள்...

ஆயினும், வேதனையுடன் மரத்தை வெறித்துப் பார்த்த வாறே நின்றாள் சந்திரா.

❖❖❖

சின்னையா - கனகம் தம்பதிகள்தான் சந்திராவின் பெற்றோர். சந்திராவின் மூத்த சகோதரன் சுரேந்தர், இளையவள் புவனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னையாவுக்கு மரங்கள் நடுவதில் எவ்வித நாட்டமும் இல்லாதபோதும், கனகம் அதற்கு எதிர்மாறாக இருந்தாள்.

வளவு முற்றிலும் மரங்கள் நடவேண்டும், அவற்றிலிருந்து பெறும் பயனை வீட்டிலுள்ளவர்கள் அனுபவிக்க வேண்டும் என்பது அவளது விருப்பமாக இருந்ததுடன், மரக் கன்றுகள் பெறக்கூடிய இடங்களை, வியாபாரிகளைத் தேடிப்பிடித்து வாங்கி வந்து நடுவதை தனது கடமையாகவே எண்ணிக்கொண்டாள்..

ஒருநாள் எங்கிருந்தோ வேப்பங்கன்று ஒன்றைக் கொண்டு வந்த அவள், தனது விருப்பப்படியே வீட்டின் முன்பக்கம் நட்டு விட்டாள்.

'அந்த இடத்தில் நட்டால்தான் வீட்டுக்கும், வீட்டில உள்ளவர்களுக்கும் நல்லமாம்' என்று யாரோ சொன்னதாக அடிக்கடி சொல்லிக்கொள்வாள்.

தனது அல்லது அயலவரின் பிள்ளைகள் விளையாடும்போது அந்த வேப்பங்கன்றைத் தொட்டுவிட்டால் பத்திரகாளியாகவே மாறிவிடுவாள். அதனால் பிள்ளைகள் விளையாடும்போது மிகவும் அவதானமாக இருப்பார்கள்.

நாள் முழுவதும் கன்றுக்கு போதிய வெயில் படுவதனாலும், கனகத்தின் தவறாத தண்ணீர் ஊற்றலினாலும் அது விரைவாகவே மரமாகியது.

புவனம் 'பூப்படைந்து' விழா கொண்டாடியபோதுகூட வேப்பமரத்துடன் இணைத்து பந்தல் போட முனைந்ததைத் தடுத்து வேறு இடத்தில் போடச் செய்தாள்...

தினமும் காலையில் எழுந்தவுடன் அதனைத் தரிசிப்பதுதான் கனகத்தின் முதல் வேலையாகஇருந்தது.

கன்று மரமாகி, கிளை பரப்பி, பெரும் விருட்சமாகும் வரை, ஏன் அவள் இறக்கும்வரை அதன் நினைவாகவே வாழ்ந்தாள்...

வேப்பமரத்தில் பக்கவாட்டுக்கு நீண்டிருந்த ஒரு கொப்பைக் காண்பித்து, அந்தக் கொப்பில் ஊஞ்சல் கட்டிப் பேரப் பிள்ளைகளை ஆடவிட வேண்டுமென்பது அவளது ஆவல். சந்திராவுக்கு பிள்ளைகள் பிறந்து அவர்கள் மூலம் அது நிறைவேறியதும் கோடி கிடைத்தது போல மகிழ்ந்தாள். இதைப் பெருமையாய் பலரிடமும் சொல்லி மனநிறைவடைவாள்.

தனக்கு நேரம் கிடைக்கின்ற போதெல்லாம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மட்டுமல்ல கணவனோடுகூட வேப்பமர நிழலில் ஓய்வெடுப்பதை பெரும் பாக்கியமாகவே கருதினாள். எவரும் வராதுவிட்டாலுங்கூட தனியாக மரத்தடியில் அமர்ந்துகொள்வாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் இறந்த பின்னர் இந்த மரத்தின் கீழேதான் தனது உடலை வைத்திருக்கவேண்டுமென்று பேரப்பிள்ளைகளுக்கு அடிக்கடி அவள் கூறிவந்ததால், அவள் இறந்த பின்னர் அவளது விருப்பப்படியே செய்தார்கள். அதனால், அந்த மரத்தை கனகத்தின் நினைவுச் சின்னமாக, புனித மரமாகக் கருதி, வீட்டிலுள்ளோர் அனைவரும் வாழ்ந்து வருகின்றனர்.

அவள் இறந்த பின்னர் சிறு கொப்பைக்கூட எரிக்கப் பயன்படுத்தக் கூடாதென்பதில் சின்னையா உறுதியாக இருந்தார். ஏனென்றால்; அந்த மரத்தின் ஒவ்வொரு கொப்பிலும் தன் மனைவி கனகம் வாழ்கின்றாளென்பது அவரது நம்பிக்கை. மருந்துக்கு வேப்பம் பட்டை எடுப்பதற்குக்கூட எவரையும் அனுமதித்ததில்லை.

இந்த நடைமுறையை எத்தகைய இடரிலும் கெட்டியாய்த் தொடர்ந்தாள் சந்திரா...




**வே**ப்பமர நிழலின் குளிர்மையில் வழமை போல பிரியாவுடன் சேர்ந்து சிறுமிகள் சிலர் 'எட்டுக் கோடு' விளையாடத் தொடங்கினர்.

கிட்டத்தட்ட எட்டு அடி நீளமும், நாலு அடி அகலமுமுள்ள நீள் சதுரப் பெட்டி வரையப்பட்டு, அது சம அளவான எட்டுப் பெட்டிகளாக வகுக்கப்பட்டு கோடுகள் போடப்பட்டன. மேல் பக்கத்தில் வலம் இடமாக அமைந்த இரண்டு பெட்டிகளில் புள்ளடியிடப்பட்டன. அவை இளைப்பாற்றிப் பெட்டிகள். ஏனைய ஆறு பெட்டிகளே விளையாட்டுக்குப் பயன்படுபவை.

ஆட்டத்தைத் தொடங்குபவர் கீழ்ப்பக்க வெளியில் வலது அல்லது இடது பக்கம் தொடங்குவார். வலது பக்கம் தொடங்குபவருக்கு இடது பக்கம் உள்ள இளைப்பாற்றிப் பெட்டியும் இடது பக்கம் தொடங்குபவருக்கு வலது பக்கம் உள்ள இளைப்பாற்றிப் பெட்டியும் சொந்தமானதாகும். ஒருவர் மற்றவரது இளைப்பாற்றிப் பெட்டியில் கால் வைக்கக்கூடாது. அதைக் கடந்தே பாயவேண்டும் என்பது விளையாட்டு நியதி.

முதலாவது ஆட்டத்தை வலது பக்கமிருந்து ஆடத் தொடங்கிய சிறுமி, சிறிய ஓட்டுத் துண்டை முதலாவது பெட்டியில் எறிந்து விட்டு ஒற்றைக் காலைத் தூக்கிக்கொண்டு மறுகாலால் கெந்தி அதன்மீது பாய்ந்து, பின்னர் பாதத்தை விலக்கி, குனிந்து அந்த ஓட்டுத்துண்டை எடுத்துக்கொண்டு கெந்தியபடி தனது பக்கமிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய இரண்டு பெட்டிகள் ஒவ்வொன்றிலும் கால் மிதித்து இடப்பக்கமுள்ள தனது இளைப்பாற்றிப் பெட்டியில் நின்று மீண்டும் இடது பக்கம் தொடராக உள்ள ஏனைய மூன்று பெட்டிகள் ஒவ் வொன்றிலும் கால் மிதித்து நின்ற இடத்துக்கு மீண்டாள்.

அவ்வாறே முன்னோக்கி இரண்டாவது பெட்டிக்கு ஓட்டுத் துண்டைப் போட்டு ஒற்றைக் காலால் முன்னுள்ள பெட்டியைக் கெந்திக் கடந்து ஓட்டுத் துண்டின்மேல் பாய்ந்து முன்னரைப்போலவே எடுத்துக்கொண்டு நின்ற இடத்திற்கு மீண்டாள்.

ஆறு பெட்டிகளிலும் இவ்வாறே தொடர்ந்தாள்.

அச்சிறுமி, ஆட்டத்தின்போது மறுகாலை ஊன்றியிருந் தாலோ, ஓட்டுத்துண்டை மிதிக்காமல் விட்டிருந்தாலோ, பாயும் போது பாதம் கோட்டில் பட்டிருந்தாலோ ஆட்டம் இழந்திருப்பாள்.

முதலாவதில் அந்தச் சிறுமி ஆட்டமிழக்காததால் இரண்டா வது ஆட்டத்தைத் தொடர்ந்தாள்.

தனது தலையை வான்நோக்கி நிமிர்த்தி, ஓட்டுத் துண்டை நெற்றியில் வைத்தவாறு வலதுபக்கமுள்ள முதலாவது பெட்டியில் ஒற்றைக் கால் வைத்தாள்.

“றைற்ரோ...?”

“றைற்”

பெட்டிக்குள் கால் சரியாக வைக்கப்பட்டதால் அவளது கேள்விக்கு ஏனையோர் பதிலளித்தனர்.

மறுகாலையும் இரண்டாவது பெட்டியில் வைத்தாள்.

“றைற்ரோ...?”

“றைற்”

பெட்டிக்குள் கால் சரியாக வைக்கப்பட்டதற்கான பதில் கிடைத்ததும் அடுத்த பெட்டியில் கால் வைத்தாள்.

“றைற்ரோ...?”

“இல்லை”

நெற்றியிலிருந்த ஓட்டுத்துண்டை எடுத்துவிட்டு குனிந்து தனது காலைப் பார்த்தாள். பாதம் பெட்டிக் கோட்டை மிதித்திருந்தது. இதனால் அச்சிறுமி ஆட்டமிழந்து நாணத்துடன் வெளியேறினாள்.

இப்படியே மாறி மாறி விளையாடிய சிறுமிகளில் சிலர் ஆட்ட மிழக்க, பிரியா தனது முதலாவது ஆட்டத்தை, இடது பக்கமிருந்து தொடங்கினாள்.

இடது பக்கமுள்ள மூன்று பெட்டிகளைக் கெந்தி, மிதித்துக் கடந்த அவள், நாலாவது பெட்டிநோக்கித் கெந்தியபோது தடுமாறிக் கால்களை ஊன்றினாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகம் வியர்த்துக் கொட்டியது.

அடிவயிற்றைக் கைகளால் அழுத்தினாள்...

"அம்மா!... அம்மா!..."

குரல் கேட்டு சந்திரா ஓடிவந்தாள்...

"அடிவயித்துக்க நோகுதம்மா..."

சந்திரா அவளை ஏற இறங்க பார்த்தாள். உடலின் வலி அவள் முகத்தில் தெரிந்தது.

பாவடையில்...!

பதட்டத்துடன் நின்ற அவளைப் பார்த்ததும் புரிந்துகொண்டவளாய், புன்னகையுடன், அதேவேளை இதயம் படபடக்க வீட்டின் பின்பக்கம் அழைத்துச் சென்றாள்...

சிறுமிகள் தொடர்ந்தனர்.

அவர்களை அதட்டிக் கலைத்தாள்...

சிறுமிகள் முகத்தில் பயம் தெரிந்தது. மறுப்பின்றி அனைவரும் கலைந்து சென்றனர்...

"பிரியா பெரியபிள்ளை ஆயிட்டா..."

தகவல் பல வீடுகளுக்குப் பறந்தது.

தாய்மாமன் சுரேந்தர் - சித்திரா குடும்பம், புவனம் - துரைரெத்தினம் குடும்பம், இராசதுரை - தங்கராணி குடும்பம் என உறவினர் பலரும், மகேந்திரன் - சரோஜா குடும்பம் உட்பட அயலவர்களும் சந்திரா வீட்டில் கூடினர்...

மணிரெத்தினமும் மனைவியும் வந்திருந்தனர். இவர் ஆனந்தனின் உயிர் நண்பன். குடும்பத்தோடு அந்நியோன்யமாகப் பழகுபவர். கடினமான உழைப்பாளி. இவர் கலந்துகொள்ளாமல் ஆனந்தன் வீட்டில் எந்த நிகழ்வுகளும் இடம் பெற்றதே கிடையாது.

கிணற்றிலிருந்து சற்றுத் தள்ளி குப்பைகள் போடப்பட்டு அதன்மேல் பிரியாவை நிறுத்தி தாய்மாமன் சுரேந்தரும் சித்திராவும் அவள் தலையில் தண்ணீர் ஊற்றினர்.

'குப்பைத் தண்ணீர் வார்ப்பு' எனச் சொல்லப்பட்டது.

உடை மாற்றப்பட்டு சித்திராவால் அழைத்துவரப்பட்ட பிரியா, விளக்கின் ஒளியில் விழிக்க வைக்கப்பட்டு தனியாக அறையொன்றில் விடப்பட்டாள்.

முட்டை, நல்லெண்ணெய் மற்றும் மூலிகைகள் - சரக்குகள் கொண்டு அரைக்கப்பட்ட 'காயம்' என அவள் விரும்பாமலே அவை வலுக்கட்டாயமாய் ஊட்டப்பட்டன.

தொடர்ந்த நாட்களில் உணவு வகைகள் நல்லெண்ணெய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கப்பட்டவைகளாகவே இருந்தன.

உடம்பு பலமிழக்காமல் பாதுகாக்க வேண்டுமாம்.

நாள் குறித்து உறவினர்களும், அயலவர்களும் அடங்கிய சிறிய விழாவாகக் கொண்டாட முடிவெடுத்தனர்.

தீர்மானிக்கப்பட்டவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

பிரியா தனது வகுப்பு மாணவிகளுக்கும் அழைப்பு விடுத்தாள்.

முற்றத்தில் போடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலின் உள்ளே கட்டப்பட்டிருந்த மணவறையின் முன்பாக, பிரியா வெள்ளைத் துணியால் மொட்டாக்கு போட்டவாறு அமர்ந்திருக்க, அவள் முன்னால் வெள்ளிச் சட்டியில் பாலும், அறுகம் புல்லும் கலந்த கலவை இருந்தது.

சுரேந்தரும் சித்திராவும் இணைந்து பிரியாவின் தலையில் போடப்பட்டிருந்த மொட்டாக்குச் சேலையை அகற்றி, தமது கரங்களால் கோலிய பாலை அவளது தலையில் ஊற்றினர். மூன்று தடவைகள் அவ்வாறு கோலி ஊற்றினர்.

இவர்களைத் தொடர்ந்து தாய், தகப்பன் உட்பட உறவினர்கள் மற்றும் அயலவர்கள் அவ்வாறே செய்தனர்.

இது முடிவுற்றதும் கிணற்றடிக்கு அழைத்துச்செல்லப்பட்ட பிரியா, நீர் நிரப்பிய தொட்டிக்கு அருகாமை இருத்தப்பட்டதும் தலைக்குத் தண்ணீர் ஊற்றும் நிகழ்வு ஆரம்பமானது.

பிரியாவின் தலைக்கு பால் வைத்த அத்தனைபேரும் தொட்டியில் இருந்த நீரை கிண்ணத்தால் கோலி முன்று தடவைகள் அவளது தலையில் ஊற்றினர்.

தொடர்ந்து நன்றாக நீராட்டப்பட்டாள். இவற்றில் சித்திரா முழுமையாகப் பங்கேற்றுக் கொண்டாள்.

நீராடி முடித்த பின்னர் அலங்காரம் செய்யப்பட்டு, சரிகைச் சேலை அணிந்துகொண்ட பிரியா, முனையில் தேசிக்காய் குத்தப் பட்ட 'சத்தகம்' ஊண்டப்பட்டிருந்த நெல் நிரம்பிய 'கொத்து' இனைக் கையில் ஏந்தியவாறு மெல்லநடை நடந்துவர, குத்துவிளக்கு ஏந்திய குமரிப்பெண்கள் பலர் நிரையாக நின்று அவளை அழைத்து வந்தனர்.

பத்தலின் முகப்பில் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டாள்.

பந்தலின் உள்ளே பெற்றோரினதும், உறவுமுறைப் பெரியவர் களினதும் பாதங்களில் வீழ்ந்து ஆசி பெற்றாள்.

மணவறையின் முன்னால் பிரியாவுக்கு பதினொரு வகையான ஆரத்திகள் எடுக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே 'கும்பம்' வைத்து ஏற்பாடுகளைச் செய்திருந்த சிவாச்சாரியார், புண்ணியதான நிகழ்வை நிறைவேற்றி முடித்தார். இதனை சிலர் 'துடக்குக் கழிவு' என்றும் கூறினர்.

வருகைதந்தவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது...

தொடர்ந்து உறவினர், அயலவர்களின் சந்திப்பு...

அன்பளிப்புகள் பணமாகவும் பொருள்களாகவும் கிடைத்தன.

சுரேந்தர் தங்கச் சங்கிலி அணிவித்தார்.

குடும்பம் குடும்பமாக போட்டோ எடுக்கப்பட்டது.

உணவு பரிமாறலை அவதானித்துக்கொண்டிருந்த ஆனந்தன், அப்போதுதான் போட்டோ எடுப்பதில் இணைந்துகொண்டார்.

அவரது கண்கள் சுற்றுமுற்றும் தேடின...

"ஆரையுங்க தேடுறீங்க?"

"மணிரெத்தினத்தக் காணயில்லை."

சோதிடத்தில் அதீத நம்பிக்கையுள்ள மணிரெத்தினம் முழுகவார்ப்புக்கு நல்லநேரம் பார்த்ததுமுதல் ஓடியாடித் திரிந்து உரிமையோடு வேலைசெய்து கொண்டிருந்தார். அவரைக் காணாதது ஆனந்தனுக்குப் பெரும் சங்கடமாக இருந்தது.

அவரது கூச்ச சுபாவத்தை ஆனந்தன் அறியாததல்ல. அத்துடன் பீடி புகைப்பதில் நாட்டமுள்ளவர். அதனாலேதான் மறைந்து நிற்கிறாரென ஊகித்து, தேடிப்பிடித்து அழைத்துவந்து, இணைந்து போட்டோ எடுத்துக் கொண்டதில் அவருக்கு பெரு மகிழ்ச்சி.

வருகை தந்தவர்கள் மனம் மகிழ, பார்த்தவர் உவகை பொங்க விழா சிறப்புற நிறைவேறியது...




"குழலூதும் கண்ணனுக்கு குயில் பாடும் பாட்டுக் கேக்குதா... கூ... கூ..."

"கேக்குது நல்லாவே கேக்குது... நீ பாடினது போதும். இஞ்ச வா, இந்த வெங்காயத்த உரி."

குயிலின் குரலைப்போல் ஒலித்த பிரியவதனியின் பாடலை அதட்டித் தடுத்தாள் பிரியா.

சுற்றாடலில் குயில் கூவுதோ இல்லையோ பிரியவதனியின் குரல் ஒலிக்காமல் இருக்கமாட்டாது. அவள் சங்கீதம் கற்றதில்லை. ஆயினும் அவளுக்கு சாரீரம் இயற்கையாகவே அமைந்து விட்டது. அதனால் அவளின் பாடல் கேட்பதற்கு இனிமையாய் இருக்கும்.

"உனக்கு நான் பாட்டுப் பாடினாத்தான் பிடிக்காதே..."

பிரியாவை ஏசியவாறு வெங்காயத்தை உரிப்பதற்கென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமர்ந்தாள்.

நிறுவனம் ஒன்றில் லிகிதராகக் கடமையாற்றுபவர் ஆனந்தன். இவருக்குச் சொந்தமாக தோட்டக்காணி ஒன்றும் இருந்தது. புகையிலைச் செய்கையில் அனுபவமுள்ள ஆனந்தன், கூலியாட்களை அமர்த்தி அக்காணியில் புகையிலைப் பயிர்செய்து வந்தார்.

தினமும் சாயந்தர நேரங்கள் மற்றும் விடுமுறை நாட்களில் காணிக்குச் செல்வதும், விளையும் பயிர்களைக் கண்காணிப்பதும், குறைகளை இனங்கண்டு சீர்செய்வதும் அவரது பணியாக இருந்தது. இவற்றின் வருவாய் அவர்களுக்கு நிறைவைக் கொடுத்திருந்தது.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழலால் அக்காணியில் தோட்டம் செய்ய முடியாமல் போனதுடன், அவர் தனது வேலையை இழக்கவும் நேரிட்டது.

பல இடங்களிலும் வேறு வேலை தேடியலைந்து கிடைக்காமையால், குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தின் நிமித்தம் மேசன் வேலையையே தேர்வுசெய்தார்.

கதிரையிலிருந்து லிகிதராக வேலை செய்துவிட்டு மேசன் வேலை செய்வதால் ஏற்படுகின்ற உடல் உபாதையை ஒரு தடவையேனும் மனைவியிடம் எடுத்துக்கூறியதே கிடையாது. தனக்குள்ளே ஜீரணித்துக் கொள்வார்.

தான் தனது 'தோட்டத்தில் இவ்வளவு சிரத்தை எடுத்து கஸ்ரப்பட்டிருந்தால் நாலுபணம் சம்பாதிச்சிருக்கலாம்' என தனது சக தொழிலாளிகளிடம் அடிக்கடி கூறியிருக்கிறார்.

மனைவி சந்திரா ஜீ.சி.ஈ. சாதாரண பரீட்சையில் திறமைச் சித்தியடைந்து, படிப்பதில் ஆர்வமிருந்தும் தொடர்வதிலிருந்த சில இடையூறுகளால் இடைநிறுத்திக் கொண்டவள். அதனால் தனது பிள்ளைகளின் படிப்பில் மிகவும் அக்கறை செலுத்திவந்தாள்.

மூத்த பிள்ளை ஆண், பெயர் பிரியந்தன். மீண்டும் ஓர் ஆண் குழந்தை பிறந்து தொற்றுநோயால் இறந்த பின்னர் அடுத்தடுத்து பிரியா, பிரியவதனி, பிரிந்தா என மூன்றும் பெண்கள்.

நால்வரும் படிக்கின்றனர்.

நால்வர் உள்ள குடும்பத்தில் எதிர்காலத்திற்கான தேடல் எதுவுமின்றி அன்றாட உழைப்பிலே இவர்களது வாழ்வு நகர்ந்தது. அடிக்கடி சிறுசிறு சண்டைகள் போதிய வருமானமின்மையால். மற்றும்படி வீட்டில் குதூகலம்தான்.

பிரியவதனியின் பாடல் ஆனந்தனை வெகுவாகக் கவரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வு நேரங்களில் அவளை ஒரு பாட்டாவது பாடும்படி சொல்லிக் கேட்டு, அவள் பாடுவதை புன்னகையுடன் செவிமடுத்து இரசித்துக் கொண்டிருப்பார்.

பிரியா, பிரிந்தா இருவருக்கும் கதைப் புத்தகங்கள் வாசிப் பதிலும், சினிமாப் படங்கள் பார்ப்பதிலுமுள்ள ஆர்வம் பிரியவதனி யின் பாடலைக் கேட்பதிலில்லை. அவர்களுக்கு ஆர்வமில்லாது விட் டாலும் தந்தைக்காக மௌனமாய் இருந்து விடுவார்கள்.

பெண் பிள்ளைகள் உள்ள வீட்டில் சண்டைக்குக் குறை விருக்காது என்பதற்கு ஆனந்தனின் குடும்பம் ஒரு சான்று. உணவு, படிப்பு, விளையாட்டு, உதவி செய்தல் போன்றவற்றில் ஏதாவ தொன்றில் இவர்களிடையே போட்டியும் வாக்குவாதமும் ஏற் படத்தான் செய்யும்.

சந்திரா இடையில் குறுக்கிட்டு அதட்டித் தடுத்து நிறுத்தி னாலும் முணுமுணுப்பு அடங்கிவிடாது. இவையெல்லாம் சில மணித்தியாலங்களுக்குள் சரியாகிவிடும்.

ஆனந்தன் வந்துவிட்டால் வீட்டில் அமைதியோ அமைதி. பிரியந்தன் எதையும் காதில் போட்டுக் கொள்வதில்லை. அவனது பொழுதுபோக்கு நண்பர்களுடன் ஊர் சுற்றுவதுதான்...




இராசதுரை ஆனந்தனுக்கு மூத்தவராக இருந்தும் எந்த நிகழ்வுகளிலும், முக்கிய விடயங்களி லும் ஆனந்தனின் ஆலோசனைதான் முக்கியம்.

ஆனந்தன் எதையும் இலகுவாக எடுத்துக் கொண்டபோதும், இராசதுரை எதிர்மாறாக, பழமை வாதத்திலிருந்து மீளாதவராக இருந்தார். அதுபற்றி ஆனந்தன் எதுவும் சொல்வதில்லை. அவரது எண்ணத்திற்கே ஒத்துழைப்பு வழங்கி வருவார்.

இராசதுரை, வீடு ஒன்றைக் கொள்வனவு செய்யும் விடயத் திலும் ஆனந்தனின் முயற்சி அதிகம். அவரைத் திருப்திப்படுத்த அவர் எடுத்துக்கொண்ட சிரமமும் அதிகம்.

ஒருவாறாக வீடு கொள்வனவு செய்யப்பட்டதும் தனது சக ஊழியரை அழைத்துவந்து 'வாஸ்து' பற்றி விசாரித்தார். ஊழியர் சொன்ன பதிலால் நிறைவடையாத இராசதுரை, தனது எண்ணப் படியே மேற்கொண்டு செய்ய முற்பட்டார்.

இராசதுரை கேட்டுக்கொண்டதற்கிணங்க சாஸ்திரி ஒருவரை அழைத்து வந்திருந்தார் ஆனந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த வீட்டை 'வாஸ்து' முறைக்கு கட்டினவர்களெண்டு நீங்க சொல்லுறீங்க. ஆனா, என்னைப் பொறுத்தவரை சில குறைகள் இருக்குதுங்க. அதை நிவர்த்தி செய்யத்தான் வேணும்."

"சொல்லுங்க ஐயா!"

"இது தெற்குப் பக்க வாசலாக இருக்கிறதால இந்த முன் அறையை உள் பக்கத்தால உடைச்சு சிறுசாக்கவேணும். குசினிக் கதவை இஞ்சாலப் பக்கம் போடவேணும். அப்பத்தான் ஒழுங்காக அமையும்."

சாஸ்திரி சென்று அரைமணி நேரமாகியும் இராசதுரைக்கு யோசனை விட்டபாடாயில்லை...

'வீட்டைத் திருத்துவதா?... இல்லையா?...'

அறைச் சுவரை இடித்து உள்ளே கட்டுவதென்பது சிறிய வேலையல்ல. கூரையின் ஒரு பக்கத்தை அந்தச் சுவர்தான் தாங்கிப் பிடித்திருக்கிறது...

ஏற்படக்கூடிய செலவை நினைத்துப் பார்த்தபோது இராசதுரையின் இதயத்தில் வலி எடுத்தது.

கையிலிருந்த பணம், கழித்து எடுத்த சீட்டுக்காசு என எல்லா வற்றையும் போட்டு இந்த வீட்டையும், வீட்டோடு சேர்ந்த இரண்டு பரப்புக் காணியையும் வாங்கிய மனநிறைவில் இருந்த அவருக்கு இது தலையிடியாகவே இருந்தது.

"இன்னுமொரு சாஸ்திரியை கூப்பிட்டுக் கேட்டாலென்ன?"

"ஏனண்ணே இதெல்லாம்? இதுக்கு முந்தியும் ஆக்கள் இதில இருந்தவங்கதானே?"

"அவங்க எப்பிடி இருந்திருந்தாலும் எங்களுக்கென்ன?... உனக்கு இதில நம்பிக்கயில்லயெண்டு எனக்குத் தெரியும். ஆனா, இதெல்லாம் பாத்துக் கட்டினாத்தான் வீடு நிலைச்சிருக்கும், வசிக்கிற வங்களும் சிறப்பாக இருப்பாங்க எண்டு நான் நம்புறன்."

ஆனந்தன் எதுவும் சொல்ல முடியாதவாறு சொல்லி முடித்தார் இராசதுரை.

இருவருமாக தேடி அலைந்து பலரிடம் விசாரித்துத் 'திறமையான வாஸ்து சாஸ்திரி' எனப் பேர்பெற்ற ஒருவரை அழைத்து வந்தனர்...

வீட்டின் வெளிப்பக்கத்தையும், அறைகள் ஒவ்வொன்றையும் சுற்றிச் சுற்றி வந்த சாஸ்திரி, சில நிமிட சிந்தனையின் பின்னர், முன்னைய சாஸ்திரி சொன்னவற்றுடன் புதிதாக வீட்டின் பின் பக்கமாக பத்து அடிக்கு ஓர் அறையை வீட்டோடு இணைத்துக் கட்டும்படியும் ஆலோசனை கூறிச் சென்றுவிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசதுரைக்குக் குழப்பம் தீர்ந்தபாடாயில்லை...

எப்படியும் வீட்டில் திருத்தம் செய்யவேண்டுமென்ற கட்டாயம்...

இறுதி முடிவுக்கு வந்தார்.

மனைவியிடமிருந்த நகைகளை வங்கியில் அடைவு வைத்தும், கைமாற்றாகப் பணத்தைப் பெற்றும் வீட்டு வேலையைத் தொடங்கி சில நாட்களில் முடித்து விட்டார்...

முன்னர் வீடு எப்படி இருந்திருந்தாலும் இப்போது முறையான வாஸ்துப்படி வீடு மாற்றியமைக்கப்பட்டதில் பூரண திருப்தி அவருக்கு...

நாள் பார்த்து, நேரம் பார்த்து, உறவினர்கள் - அயலவர்கள் - நண்பர்களென ஒன்றுகூடி, பால் காய்ச்சி - உணவு பரிமாறி சிறப்பாக 'புதுமனை புகும் நிகழ்வு' நடந்தபோது இராசதுரையின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மற்றவர் கண்பட்டுவிடுமென்பதில் கவனமாக இருந்து வாசலில் பெரியதொரு நீத்துப் பூசணிக்காயைக் கட்டியதுடன் பெரிய திருஷ்டி பொம்மை ஒன்றையும் செய்து வைத்திருந்தார்...

இத்தனை நாளும் வாடகை வீடுகளில் மாறி மாறி இருந்து சலிப்படைந்த அவருக்கு சொந்த வீட்டில் குடியேறியமை பெரும் மகிழ்ச்சியையும், நிம்மதியையும் கொடுத்தது.

பின்பக்க வளவில் பயன்தரும் மரங்களை நட்டும், முற்றத்தில் 'குறோட்டன்' வகை மரங்களை நட்டும் அழகூட்டி மகிழ்ந்தார். 'பொன்னொச்சி' எனும் மஞ்சள் நிறப் பூ மரம் வீட்டுக்கு 'லட்சுமி' யாம் என்று நண்பன் கூறியதைக்கேட்டு பெரிய கன்றாகத் தேடிப் பிடித்துக் கொண்டுவந்து வாசலின் உட்பக்கம் நட்டுவிட்டார்.

மரக்கன்றுகளுக்குத் தினமும் நீர் ஊற்றும்போது மனதில் எழும் கற்பனைகளால் அவர் அடையும் பூரிப்பு அளவிடமுடியாது...

இராசதுரை வங்கியில் பல ஆண்டுகளாக பணிபுரிகிறார். இவருக்கு ஆஸ்திக்கு ஓர் ஆணும் ஆசைக்கு ஒரு பெண்ணும் என இரண்டு பிள்ளைகள்... இருவரும் படிப்பில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்லர்... மற்றவர்கள் பொறாமைப்படும் விதமாகப் பையன் யாழ். பல்கலைக் கழகத்தில் இறுதியாண்டிலும், பெண் அதே பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டிலும் கல்வி கற்கிறார்கள். அவர்களைக் கொண்டு எந்தவேலையும் செய்வது கிடையாது. எல்லாவற்றையும் இராசதுரை தானே முன்னின்று செய்வார். பிள்ளைகள்மீது காட்டும் பாசத்திற் கீடாகப் படிப்பிலும் அதீத அக்கறை காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தார்...

மனைவி தங்கராணி மீது அளவுகடந்த அன்பு. 'அவவுக்கு தலையிடி என்றால் இவருக்குக் காய்ச்சல் வந்துவிடும்' என உறவினர்கள் கேலி செய்வதுண்டு. கணவனின் கூற்றுக்கு அவள் மறு வார்த்தை பேசுவதே கிடையாது.

ஆறேழு மாதங்களில் மரக் கன்றுகள் ஆச்சரியப்படத்தக்க வளர்ச்சியைக் கண்டதற்கு இராசதுரையின் இடைவிடாத முயற்சியே காரணம். அவ்வப்போது இலை, குழை, சருகுகள், உலர்ந்த மாட்டுச் சாணம் போன்றவற்றைப் பசளையாகப் புதைத்து அவற்றின் வளர்ச்சிக்கு வலுவூட்டினார்.

'பொன்னொச்சி'யில் மஞ்சள் நிறப் பூ நிறையவே பூத்த போது அவர் மகிழ்வில் குதித்தார். மற்றவர்கள் பேசிக்கொள்வதிலிருந்து அந்த மரத்தை 'அதிஸ்ரலட்சுமி' என்றே நம்பினார். மரம் பூப்பதனால் தமது வாழ்வும் செழிக்கும் என்ற மனநிறைவில் ஒரு வருடம் விரைவாகவே கடந்தது.

இந்தக் காலகட்டம் யாழ்ப்பாண மக்களது துன்பத் தோற்றங்களின் ஆரம்ப காலமாக இருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டக் குழுக்களின் துரித வளர்ச்சியினால் இலங்கை இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரித்துச் செல்ல இராணுவத்தினரும் பதில் தாக்குதல்களை பல வடிவங்களில் மேற்கொண்டனர்.

இதனால், இரு பகுதியினருக்கும் இடையில் மக்கள் அச்சத்தின் மத்தியில் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்...

"என்னங்க! நாட்டு நிலமை வரவர மோசமாப் போகுதுங்க. பிள்ளகளையும் வச்சிருக்கிறநாங்க..."

"நாங்க என்ன செய்யிறது... அவங்கட படிப்பக் குழப்ப ஏலுமா? நீ ஒண்டும் யோசியாத அவங்களுக்கு எதுவும் நடவாது. அந்த நம்பிக்கை எனக்கிருக்கு..."

மனைவிக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வேலைக்குக் கிளம்ப ஆயத்தமானார். அவர் முகத்தில் வழமையான சந்தோஷம் இல்லாமை கண்டு தங்கராணி பதறிப்போனாள். தனது கேள்வி அவரின் மனதில் சலனத்தைப் புகுத்தியிருக்கவேண்டுமென நினைத்தவள் தன்னையே நொந்து கொண்டாள்.

வங்கியில் இராசதுரை அமைதியிழந்து காணப்பட்டார். நாட்டில் நிலவிவந்த அசாதாரண சூழல், பிள்ளைகளை வைத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும் ஒவ்வொரு பெற்றோரினதும் அமைதியைக் கெடுத்துள்ள தென்பது உண்மையே. இதற்கு இராசதுரை மட்டும் விலக்காக முடியாது.

வேலை செய்யக்கூடிய மனநிலை இல்லாமையால் சுகயீன விடுமுறையில் வீட்டுக்கு வந்த அவர், பொன்னொச்சி மரத்தில் தரித்து நின்று மரத்தையும், வீட்டையும் மாறிமாறிப் பார்த்தார்...

அவரது மனதிற்கு ஆறுதலைக் கொடுத்தது...

வீட்டின் உள்ளே நுழைந்தவரிடம் மனைவி எதுவும் விசாரிக்க வில்லை. தான் காலையில் கேட்ட கேள்விதான் அவருக்கு மன உளைச்சலை ஏற்படுத்திவிட்டதென அவள் கருதினாள்.

உடைமாற்றி வந்தவர், தான் படுக்கப்போவதாகக் கூறிவிட்டு அறைக்குள் சென்று படுத்துவிட்டார்.

முன் கதவைப் பூட்டிவிட்டு, 'இஞ்சி' போட்டு தேநீர் எடுத்து வந்து கொடுத்தாள், அவரது தலையைப் பரிவுடன் தடவினாள்.

"றேடியோவப் போடவாங்க?"

"போடு"

படுக்கை அறையின் ஓரமாக இருந்த வானொலியை இயங்கச்செய்தாள்.

"தந்தை வாழ்வு முடிந்துபோனால்
தாயின் மஞ்சள் நிலைப்பதில்லை
தாயின் வாழ்வு மறைந்துபோனால்
தந்தைக்கென்று யாருமில்லை...."

"பார் மகளே பார் படப் பாடல் போகுது 'சவுண்ட' கொஞ்சம் கூட்டிவிடப்பா."

முன்னரைவிட ஒலியை அதிகமாக்கிவிட்டு தானும் அவரது காலடியில் அமர்ந்துகொண்டாள்.

"எத்தின தரமெண்டாலும் இந்தப் பாடலக் கேட்டுக் கொண்டே இருக்கலாம்."

கூறிய இராசதுரை, கண்களை மூடியவாறு பாடலை இரசித்தார். அவளும் அவ்வாறேதான் இருந்தாள், தம்மைச் சுற்றி நடந்து கொண்டிருப்பதை உணராதவர்களாய்.

"டும்..."

பாடலின் ஒலியையும் மீறி திடீரெனக் கேட்ட உரத்த சத்தத்தால் திடுக்கிட்ட இருவரும் தம்மைச் சுதாரித்துக் கொள்வ தற்குள் மீண்டும் அதே சத்தத்துடன் வீடு நொருங்கி விழுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ந்தனர்.

யாழ். போதனா வைத்தியசாலை அவசரப் பிரிவில் இராசதுரையும் தங்கராணியும் மயக்கநிலையில் சேர்க்கப்பட்டிருந்த தகவலை அறிந்த ஆனந்தனும் சந்திராவும் உடனே வைத்திய சாலையை அடைந்தபோதும் பார்வையாளர் நேரம் தவிர்ந்த நேரமென்பதால் உள்ளே அனுமதிக்கப்படவில்லை.

வைத்தியசாலைக்கு வெளியே அயலவர்கள் கூட்டமாக நின்றனர். அவர்களால்தான் காயமடைந்த இருவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்டனர்.

உறவினர், பிள்ளைகளின் வரவால் கூட்டம் மேலும் அதிகரித்துக் காணப்பட்டதுடன் உரையாடலும் அதிகமாயின...

"ஏன் தம்பி இவர்களுக்கு இப்படியாயிற்று?"

ஆனந்தன், அயலவர்களில் அறிமுகமான அழகரெட்டினத்தி டம் கேட்டார்.

"என்னண்டு தெரியில்லயண்ணே. பிளேன் வட்டமடிச்சுச் சுத்திற சத்தம் கேட்டு நாங்களெல்லாம் வெளியால வந்திட்டம். இவகளக் காணயில்ல. கதவும் பூட்டியிருந்தது. வீட்ட யாரும் இல்லையாக்கு மெண்டு நினைச்சோம்..."

"பிறகு என்னண்டு...?"

"ஒரு சந்தேகத்தில நாங்க நாலஞ்சுபேர் உடைஞ்சதுகள விலக்கிப் போய்ப் பார்க்கேக்கதான் இவகளக் கண்டனாங்க... கூரை வளை இவகளுக்கு மேலே கிடந்தது. அத எடுத்துவிட்டு வெளியால தூக்கிவந்து உடனேயே இஞ்ச கொண்டுவந்திட்டோம்."

"அயல்தான் முதலில வரும் எண்டது எவ்வளவு உண்மை. உங்களுக்கு எப்பிடி நன்றி சொல்லுறதெண்டு தெரியயில்ல..."

"அதெல்லாம் எதுக்கண்ணே? எங்கட கடமையத்தானே நாங்க செய்தோம்... நாலஞ்சு வீடுகள் உடைஞ்சதுங்க. அந்த வீடுகளில இருந்த ஆக்கள் சத்தம் கேட்டு முதலிலேயே வெளியால வந்ததால தப்பீற்றாங்க. அண்ணே! வாஸ்து சாஸ்திரப்படி கட்டின வீடுகளப் பாத்தீங்களாண்ணே..."

ஆனந்தனின் இதயத்தில் முள்ளாகக் குத்தியது. இராசதுரை யின் வீட்டு புனரமைப்புவேலை செய்தவர்களில் இவனும் ஒருவன்...

"அண்ணே! எங்க எங்க மனத் திருப்திக்கு, புனிதம் பாத்து வீடுகளக் கட்டுறோம். ஆனா, எதுவும் நடக்காதெண்டில்ல. எப்பையும் ஏதும் நடக்கலாம். நடக்காமலும் இருக்கலாம். புனிதம் மனதுக்கு மட்டும்தான். இப்ப நடக்கிறதுகள் அதைத்தான் சொல்லுது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தன் மௌனமாக நின்றார்.

வைத்தியசாலை வெளிக்கதவு திறக்கப்பட்டதும் கூட்டம் அவசரப்பிரிவு சுற்றாடலில் இடம்பிடித்தது.

அந்தப் பிரிவுக்குப் பொறுப்பான வைத்தியரிடம் அனுமதி பெற்று இராசதுரையின் மூத்த மகனும் ஆனந்தனும் உள்நுழைந்தனர்...

சகோதரனையும் அண்ணியையும் கட்டிலில் கண்டவுடன், இதயத்தை சம்மட்டியால் தாக்கியதுபோன்ற உணர்வினால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாமல் தடுமாறினார் ஆனந்தன்...

வாய்விட்டுக் கதறவேண்டும் போல இருந்தது அவருக்கு. அந்த சூழல் அவரைக் கட்டுப்படுத்தியது.

தங்கராணிக்கு மயக்கம் தெளியவில்லை... உடலில் அசைவு இருந்தது.

மயக்கம் தெளிந்திருந்த இராசதுரையின் கண்கள் கலங்கி யிருந்தன... ஏக்கத்துடன் பார்த்தார்...

மூவர் கண்களிலும் கண்ணீர்.

தன்னைப் பார்த்தவாறே இராசதுரையின் கண்கள் நிலைத் திருந்ததை அவதானித்த ஆனந்தன், அவர் தன்னிடம் எதையோ எதிர்பார்ப்பதாக எண்ணி சற்று நெருங்கிச் சென்றார்.

சற்றுநேரத்தால் இராசதுரையின் சிந்தனை வெகுதூரம் சென்றுள்ளதை, அவரது பார்வையிலிருந்து கிரகித்த ஆனந்தன் குழப்ப விரும்பாமல் அவரைப் பார்த்தவாறு நின்றார்.

"ராசதுரை அண்ணே! மனையடி சாஸ்திரத்திலிருந்து வாஸ்து முற்றாக வேறுபட்டது... இயற்கையும் விஞ்ஞானமும் இணைந்து, மனி தன் இயற்கையுடன் ஒன்றித்து வாழுதலைக் குறித்து நிற்கிறதுதான் வாஸ்து. ஒளி, காற்று, ஈர்ப்பு சக்தியை அடிப்படையாகக் கொண்டது. ஒரு வீட்டினைப் பொறுத்தவரையில் அதன் சுற்று முற்றம், யன்னல் கள் அமைந்துள்ள பகுதி மற்றும் காற்றோட்டம் என்பவையே முக்கியமானவை. ஒரு மனிதனின் சுவாச எளிமை மிக முக்கியம். இதிலேதான் அவனது ஆரோக்கியம் தங்கியுள்ளது என்கிறது வாஸ்து. இதக் கவனத்தில எடுத்தாபோதும் இதவிட்டு ஒவ்வொருதரும் ஒவ்வொண்டச் சொல்லுவாங்க அதுகளக்கேட்டு குழம்பாதீங்க..."

வீட்டைக் கொள்வனவு செய்தபின்னர் தான் உரையாடிய தனது சகஊழியரின் வார்த்தைகள், நிழற்படமாக அவரது விழித்திரையில் தெரிந்தன.

தனது அறியாமையையும் அதனால் ஏற்பட்ட செலவு களையும் நினைத்து தன்னை நொந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டரின் அழைப்புக் கேட்டு ஆனந்தனும் இராசதுரையின் மகனும் அவரது அறைக்குச் சென்றனர்.

"உடனேயே கொண்டுவந்தபடியால அவங்கள உயிரோட பார்க்கக்கூடியதாக இருக்குது. ஆனால்..."

"சொல்லுங்க டாக்டர்..."

"வேறு வழியின்றி அப்பாவினுடைய இடது காலையும் அம்மாவினுடைய வலது கையையும் அகற்றவேண்டியதாயிற்று. பாரமான கூரை வளை விழுந்ததால அவை சிதைந்துவிட்டன. அவர்கள் உயிர் தப்பியதே ஆச்சரியம்தான்."

இருவரும் கலங்கிய கண்களுடன்...

## 06

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக வலிகாமப் போரை இலங்கை இராணுவம் தொடங்கி மூன்று நாட்களாகிவிட்டது...

முன்னேற்றங்கள், முறியடிப்புகள், பின்னடைவுகள், உயிரிழப்புகள், இடப்பெயர்வுகள் எனப் போரின் விளைவுகள் நாளும் வெளிவந்துகொண்டேயிருந்தன...

போரினால் ஏற்படும் அழிவுகள், இழப்புக்களின் தாக்கத்தால் ஈர்க்கப்பட்ட இளைஞர்கள் பலர் போராட்டத்தில் தம்மை இணைத்து விடுதலைப் புலிகளின் பலத்தைப் பெருக்க முயன்றனர்.

பிரியந்தனுக்கு அப்போது வயது பதின்மூன்று...

பிரியந்தனும் அவனுடன் கல்வி கற்கும் சகமாணவர் இருவருமாக விடுதலைப் புலிகள் அமைப்பில் தம்மை இணைத்துக் கொள்வதற்காக அரவமின்றிச் சென்றுவிட்டனர்.

பாடசாலை முடிந்து பிரியந்தன் வீடு திரும்பாமையால், அவனது வகுப்பு மாணவனிடம் விசாரித்தபோதுதான் இந்த உண்மையை அறிந்துகொண்டாள் சந்திரா.

அதிர்ச்சியுடன் வீடு வந்து சேர்ந்தாள்.

சந்திராவிடமிருந்து பீறிட்டுவந்த அழுகுரல் கேட்டு ஓடிவந்த அயலவர்கள், விபரத்தைக் கேட்டறிந்து அவளைச் சமாதானப்படுத்தி, மேசன் வேலைக்குச் சென்றிருந்த ஆனந்தனுக்கு தகவல் சொல்லிவிட்டனர்.

ஆனந்தன் வந்தவுடன் இருவருமாகப் புறப்பட்டு விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள், அவர்களது முகாம்களைத் தேடி விரைந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவாகியும் எந்தப் பயனும் கிட்டாத நிலையில் வேதனையுடன் வீடு திரும்பினர்.

இரவு பூராவும் நித்திரையின்றித் தவித்தாள் சந்திரா...

மறுநாள், அதிகாலை புறப்பட்டுச் சென்று, முதல் நாளைப் போன்று முகாம்கள் பலவற்றில் ஏறி இறங்கியும் எந்த விபரமும் அறிய முடியாமல் திரும்பிவிட்டனர்.

இரவு நித்திரை இழந்திருந்ததுடன் பகல் பூராவும் அலைந்த உடல் உபாதையால், உறக்கம் சந்திராவை அணைத்தபோதும் அவள் மனம் நிம்மதியின்றியே தவித்தது.

சலிப்பின்றி மூன்றாம் நாள் தேடிச்சென்றபோது பிரியந்தனுடன் புறப்பட்டுச் சென்ற சக மாணவர்களின் பெற்றோரை ஒரு முகாமில் சந்தித்தனர்.

ஒன்றிணைந்த மூன்று பெண்களினது அழுகையைப் பார்த்து மனம் இளகிய, முகாமில் வேலைசெய்யும் ஒருவனினால் அவர்களை வைத்திருக்கக்கூடிய முகாம் பற்றி அறிந்துகொண்டு அங்கே சென்றனர்.

அந்த முகாமுக்கு ஏற்கெனவே இரண்டு தடவைகள் சென்றுள்ளனர். அப்போதெல்லாம் அவர்களிடமிருந்து எதனையும் அறிய முடியவில்லை...

இந்தத் தடவை உறுதியுடனே அங்கு சென்றனர்...

எதிர்பார்த்ததுபோல அவர்களிடமிருந்து முன்னைய பதிலே கிடைத்தது.

மூன்று குடும்பத்தினரும் முடிவெடுத்தவர்களாய் முகாமின் முன்னால் அமர்ந்திருக்க, தலையில் அடித்து அழத்தொடங்கினர் பெண்கள்...

இது முகாம் நிர்வாகிகளுக்குச் சங்கடத்தை ஏற்படுத்தியது.

வேறு வழியின்றி முகாம் பொறுப்பாளர் அழைத்து வரப்பட்டார்...

பண்புடன் உரையாடினார் பொறுப்பாளர்.

பெண்கள், கண்ணீரின் ஊடாக தமது வேதனைகளை வெளிக்கொண்டு வந்தனர்.

அவர்களைச் சமாதானப்படுத்த முடியாதவராகத் தவித்த பொறுப்பாளர், மூன்று மாணவர்களும் அங்கு இருப்பதை ஏற்றுக் கொண்டார்.

அவர்கள் வயதில் குறைந்தவர்களாக இருப்பதால் வன்னிக்கு அனுப்பி தமது பராமரிப்பில் வைத்து கற்பிப்பதற்கான ஏற்பாடு செய்துகொண்டிருப்பதாகக் கூறினார்.

அதை ஏற்றுக்கொள்ளாத பெற்றோர், தமது பிள்ளைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மிடம் ஒப்படைக்குமாறும் அதுவரை இங்கிருந்து போகமாட்டோ மெனவும் வலியுறுத்தினர்.

"சரி! நான் உங்கட பிள்ளைகளக் கூப்பிடுறன். அவங்க உங்களோடு வாறெண்டா கூட்டிப்போங்க. அல்லதுபோனா எங்களால விடமுடியாது. எங்கள மன்னிச்சுக்கொள்ளுங்க..."

ஏற்றுக்கொண்டதால் மூன்று மாணவர்களும் அழைத்து வரப்பட்டனர்.

அவர்கள், தமது பெற்றோரைக் கண்டதும் அடக்கி வைத்திருந்த அழுகையை வெளியே கொட்டியது போன்று அழத் தொடங்கினர். அவர்களால் அழுகையை நிறுத்தவே முடியவில்லை.

அதைப்பார்த்து பெற்றோரும் அழுதனர்...

நிலைமையைக் கிரகித்துக்கொண்ட பொறுப்பாளர், அவர்களை அழைத்துச்செல்ல அனுமதியளித்தார்...

மூன்று குடும்பத்தினரும் மகிழ்வில் திளைத்தனர்.

❖❖❖

**யா**ழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறுமாறு பி.ப. 4.00 மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளால் விடப்பட்ட அறிவித்தல் கேட்டு சந்திரா குடும்பம் தடுமாறியது.

தடுமாறியது இவர்கள் மட்டுமல்ல யாழ்ப்பாணத்து மக்கள் அனைவருமேதான்.

அவர்களால் சேமித்து, சேகரித்து வைக்கப்பட்டவற்றை கைவிட்டு வெளியேறுவதோ, அவற்றை உடன் எடுத்துச்செல்வதோ இயலாத காரியமாக இருந்தது.

இதனால், சிலர் இங்கேயே தங்கிவிடும் நோக்கில் அண்மையிலிருந்த பாடசாலை, கோயில்களைத் தேடிப் புறப்பட, புவனம், சுரேந்தர், மணிரெத்தினம் குடும்பத்தினர் விபரமறிய சந்திராவின் வீடு தேடி வந்திருந்தனர்...

பல தடவைகள் யோசித்து, ஈற்றில் அனைவரும் ஒன்றிணைந்து வெளியேறுவதென்ற தீர்மானத்துக்கு வந்தனர்...

வீட்டிலிருக்கும் சமைத்த உணவு, அத்தியாவசியப் பொருட்கள், நகைகள், அவசியமான சில உடைகளை மட்டும் எடுத்துக் கொண்டு வெளியேறுவதென்ற முடிவில் தத்தமது வீடுகளுக்குச் சென்று எடுத்து வருவதில் அவர்கள் விறுவிறுப்பாக இயங்கினர்.

தாயிடம் பணம் பெற்றுக்கொண்டு புறப்பட்ட பிரியந்தன் நாலைந்து கடைகள் ஏறி இறங்கி ஐந்து இறாத்தல் பாணும், சர்க்கரை மற்றும் சீனியுடன் வந்துசேர்ந்தான்.

இராசதுரையின் வீட்டுக்குச் சென்ற ஆனந்தன், விபரத்தைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி அவர்களைத் தம்முடன் வருமாறு அழைத்தார்.

சம்மதித்த அவர்கள், ஆனந்தன் துணைசெய்ய, எடுத்து வரக்கூடிய பொருட்களுடன் புறப்பட்டு வந்தனர்.

இராசதுரை இழந்த தனது ஒற்றைக் காலுக்குப் பதிலாக ஊன்றுகோலை பயன்படுத்தியதால் அவருக்கு உதவிக்காக ஈருருளியையும் எடுத்துவந்தான் அவரது மகன்.

ஐந்து குடும்பமும் ஒன்றிணைந்து புறப்படுவதற்குள் பூமி இருளானதுடன், சுற்றாடல் வெறுமையாகியும் விட்டது...

மேலும் தாமதிக்காமல் இருளோடு இருளாக, நாவலர் வீதியை கடந்து, பிரதான வீதியைஅடைந்து, தூரத்தே இடம்பெயர்ந்து செல்லும் மக்களைப் பின்தொடர்ந்தவர்களாக, நேரந்தாழ்த்திப் புறப்பட்ட மக்களோடு மக்களாக இணைந்து பயணித்தனர் ஐந்து குடும்பத்தினரும்...

தனது ஒற்றைக் கையை இழந்த தங்கராணிக்குத் துணையாக அவளருகிலேயே சந்திரா பயணித்தாள்.

நிரையின்றி, காட்டாற்று வெள்ளம்போல் விடியும்வரை தொடர்ந்த இடப்பெயர்வு நடைப்பவனி சாவகச்சேரியைத் தாண்டியும் தொடர்ந்தது...

இடையில் ஏற்பட்ட துன்பங்கள், வேதனைகள், அசௌகரியங்களை மறந்து, சாவகச்சேரியை கடந்து சங்கத்தானைப் பகுதியில் தங்கிக்கொண்டன ஐந்து குடும்பங்களும்.

ஆனந்தனும், இராசதுரையும், தங்கராணியும் பெரிதும் களைப்புற்றவர்களாகக் காணப்பட்டதால் மேலும் தொடர்ந்து செல்லாமல் அங்கேயே தங்கிவிட முடிவெடுத்தனர்.

தெருவோரத்தில் வழங்கப்பட்ட குடிநீரைப் பெற்று, தம்முடன் எடுத்துவந்த உணவை உண்டு, உடல் அசதி தீர மரநிழலில் ஓய்வெடுத்துக்கொண்டனர்.

சிறிய ஓய்வின் பின்னர் தடிகள், கிடுகுகளைக் கொள்வனவு செய்து தனித்தனி கொட்டில்கள் அமைத்துத் தங்கிக்கொண்டனர்.

புதிய இடம், பரீட்சயமற்ற சுற்றாடல், பாதுகாப்பற்ற கொட்டில்...

இவ்வாறே அச்சுற்றாடலில் பல குடும்பங்கள் கொட்டில் போட்டு தங்கிக்கொண்டதால் இவர்களுக்கு மனநிறைவு.

கிடுகுகள் கொள்வனவுசெய்த பரீட்சயத்தில் அந்த வீட்டிலிருந்த கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்காக விதுஷாவும், பிரியாவும் சென்றிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது கிணற்றில் தண்ணீர் அள்ளுவதற்குரிய வாளி இருக்கவில்லை.

அங்கு கிடுகு பின்னிக்கொண்டிருந்த இருவரிடம் கேட்டனர். அவர்கள் பதிலெதுவும் கூறாது தமது வேலையிலேயே கண்ணாயிருந்தனர்.

வீட்டினுள்ளேயும் ஆட்கள் இருந்தார்கள். அவர்களும் எதையும் காதில் வாங்கிக் கொள்ளாதவர்களாக, கண்டும் காணாதவர்களாக நடந்துகொண்டனர்.

இருவருக்கும் ஆச்சரியமாக இருந்தது. காத்திருந்து ஏமாற்றத்துடன் அடுத்த வளவுக்குச் சென்றனர்.

அங்கு வெளிப் படலை கட்டப்பட்டிருந்தது.

கூப்பிட்டுப் பார்த்தனர்...

வீட்டினில் ஆட்களின் உரையாடல் கேட்டபோதும் பதிலில்லை.

சலிப்படைந்தவர்களாய் பக்கத்திலிருந்த வளவுக்குச் சென்றனர்.

அங்கு ஒரு வயோதிபப் பெண் நின்றிருந்தாள்.

அவளை அணுகி தண்ணீர் அள்ளிட அனுமதி கேட்டனர்...

“நீங்க ஆரோ எண்டு எனக்குத் தெரியாது. ஆனாலும் குடிக்கத்தானே தண்ணி கேக்கிறீங்க, அள்ளுங்க்...”

கூறியவாறு உள்ளே சென்றுவிட்டாள்...

மனிதர்களாக இருந்தும் மனிதரின் தவித்த வாய்க்கு தண்ணீர் எடுக்க அனுமதிக்காத இரக்கமற்றவர்களிடையே மனிதாபிமானம் கொண்ட ஜீவனும் இருக்கின்றமையை எண்ணி, அந்த வயோதிப் பெண்ணை மனதார வாழ்த்தினர்.

இருந்தும், இவற்றுக்கான காரணம் புரியாதவர்களாய் தண்ணீரை அள்ளிச் சென்ற இருவரும், சந்திராவிடம் நடந்த விபரங் களைக் கூறி, மிதமிஞ்சிய ஆவலுடன் காரணத்தை கேட்டனர்.

அவளுக்குக் காரணம் புரிந்துவிட்டது. இருந்தும் பதில் சொல்லி அவர்களின் மனத்தில் வெறுப்பை ஏற்படுத்த விரும்பாமல் அவர்களைச் சமாளித்து அனுப்பிவிட்டு, மனிதத்தை நொந்து கொண்டாள்...

‘வடமராட்சி, தென்மராட்சி என இடப் பெயர்களில் வித்தியாசம் உண்டு. ஆனால், ஒரே மொழிபேசும் மனித மனங்களும் பேதம் காட்டுகின்றனவே, அதுவும் உடுத்திய உடுப்புடன் உயிர்காக்க ஓடிவந்த இந்த நேரத்திலா இதனைக் காட்டவேணும்?’ என்ற கேள்வி சந்திராவின் உள்ளத்தில் எழாமலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளடைவில் இடம்பெயர்ந்து வந்தவர்களில் பலரும் இது போன்ற நிகழ்வுகளைச் சந்தித்துள்ளதாக பேச்சுக்கள் அடிபட்டன.

ஐந்து மாதங்கள் வரை சகிப்புடன் தொடர்ந்தது இடப் பெயர்வு வாழ்வு...

❖❖❖

இலங்கை இராணுவம் யாழ்நகரைக் கைப்பற்றி சாவகச்சேரி யையும் கடந்து, வன்னிக்கான போக்குவரத்துக்குப் பயன்பட்ட கிலாலிப் பாதையைத் தடைசெய்த பின்னர், யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்துவந்த மக்கள் திரும்பவும் யாழ்ப்பாணம் செல்லக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது.

இதைப் பயன்படுத்தி இராணுவத்தினரின் நடைமுறை களுக்கு அமைவாக ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வந்த குடும்பங்களில் இந்த ஐந்து குடும்பங்களும் அடங்கும்.

இராணுவத்தினரால் தங்கவைக்கப்பட்டு சமைத்த உணவு பரிமாறப்பட்ட பின்னர் அவரவர் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டனர்.

ஆனந்தன் குடும்பம் வீட்டுக்குத் திரும்பியபோது தெரு வோரங்கள், வளவெல்லாம் புற்களும், செடி - கொடிகளும் பற்றை களாக நிறைந்து காணப்பட்டன.

தெருவோரப் பற்றையை விலக்கிப் பார்த்தனர்.

வெளிப் படலை உடைந்து கிடந்தது... உள்ளே செல்ல முடியாதவாறு பற்றைகள் பரவிக் கிடந்தன...

இராணுவக் காவலரணில் இரவலாகப் பெறப்பட்ட மண்வெட்டி, குப்பைவிறாண்டியைக்கொண்டு தெருவோரத்தி லிருந்து வீடு செல்லும் வரையில் முற்றத்தில் காணப்பட்ட பற்றை களை ஊடறுத்து வழிவெட்டி, துப்பரவு செய்தவாறு செல்கையில் இடையில் மரக்கொப்பு ஒன்று குறுக்கிட்டது.

நிமிர்ந்து பார்த்தனர்... வேப்பமரம் ஒற்றைக் கையை இழந்ததுபோல் தனது ஒரு கொப்பை இழந்து காணப்பட்டது.

சந்திரா துடித்துவிட்டாள்...

முன்னேறிவந்த படையணிகளின் எறிகணை வீச்சு காரண மாகவே மரத்தின் கொப்பு முறிந்துள்ளதென முடிவெடுத்தனர்.

இந்த சூழலிலும் சந்திராவின் கண்கள் அவளை அறியாமலே கலங்கின...

பற்றைகளுக்கிடையில் விஷப் பூச்சிகள், பாம்புகள் இருக் கலாம் என்ற ஐயத்துடன் உன்னிப்பாகக் கவனித்து ஒருவாறு வீட்டை அடைந்தனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு சேதமெதுவுமின்றி காணப்பட்டதில் அவர்களுக்கு மனநிறைவு.

சீறிவந்த எறிகணையை, வேப்பமரம் தன்னுள் தாங்கி, தன்னில் ஒரு பகுதியை இழந்து வீட்டை சேதமின்றிக் காப்பாற்றி யுள்ளதை எண்ணியபோது அனைவர் உள்ளமும் கசிந்தது...

கனகத்தை மனதில் நினைத்துக்கொண்டாள் சந்திரா.

வீட்டின் முன் கதவு இருக்கவில்லை... நிலத்தில் படர்ந்து கிடந்த கொடிகளை இழுத்து வெளியேற்றினர்.

உள்ளே சென்றபோது சமையலறைக் கதவைத் தவிர வேறு கதவுகள் இருக்கவில்லை.

வீட்டிலிருந்த தளபாடங்களைக் காணவில்லை... அலுமாரிகள் திறக்கப்பட்டுக் கிடந்தன. உள்ளே சில உடைகளைத் தவிர வேறெது வும் இருக்கவில்லை...

இந்த நிலையிலேயே பெரும்பாலான வீடுகள் இருந்ததை தகவல்கள் தெரியப்படுத்தின.

தமது வாழ்வில் இதுவரை சுமந்த சுமைகளில் ஒன்றாக எண்ணி, உயிர் தப்பிய மனநிறைவில் வாழ்வின் அடுத்த அடியை எடுத்துவைக்க முனைந்தனர்...




புவனமும் அவள் கணவன் துரைரெத்தின மும், விதுஷாவுக்கு நிச்சயிக்கப்பட்ட மாப்பிள்ளை யின் பெற்றோரும் வந்திருந்தனர்.

சந்திரா வரவேற்றாள்.

“அக்கா! இண்டைக்குத்தான் மகளின்ர ‘கலியாண காட்’ குடுக்கத் துவங்கியிருக்கிறோம். முதல் காட் உங்களுக்குத்தான் தர கோயிலில வச்சு எடுத்து வந்த னாங்க. எங்கயக்கா அத்தான்?”

“குளிக்கப் போனவர். இந்தா வந்திடுவார்.”

சந்திரா சொல்லி முடியவும் ஆனந்தன் உள் நுழையவும் சரியாக இருந்தது. இருந்தவர்களுக்கு கரம் கூப்பி வணக்கம் கூறினார்.

“புவனம்! கலியாண அலுவலெல்லாம் எப்படிப் போகுது?”

“அதுக்குத்தான் அத்தான் காட் தர வந்தனாங்க...”

கூறியவாறு எழுந்த நால்வரும், வெள்ளித் தட்டத்தில் வைத்து எடுத்துவந்த வெற்றிலை, பூ, மஞ்சள், குங்குமத்துடன் திருமண அழைப்பிதழை ஆனந்தன் மற்றும் சந்திராவிடம் கொடுக்க இருவரும் அதனை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரா உள்ளே செல்ல முனைந்தாள்.

"இஞ்ச வாக்கா. ஒண்டும் வேணாம் மற்ற வீடுகளுக்கும் போகவேணும்."

"அதுக்காக, தண்ணிவென்னி குடிக்காமையா? இந்தா டக்கென வந்திடுவன்."

சந்திரா உள்ளே சென்றதும் அழைப்பிதழை வாசித்துக் கொண்டிருந்த ஆனந்தன், வரவேற்பாளர் பட்டியலில் தனதும் சந்திராவினதும் பெயர்கள் பொறிக்கப்பட்டிருந்ததைப் பார்த்து மனதுக்குள் பெருமிதமடைந்தார்.

சற்று நேரத்தால் சந்திரா தேநீருடன் வந்தாள். மூவரும் அருந்தினார்கள்.

"புவனம்! மறக்காம அவன் மணிரெத்தினத்துக்கு காட் குடுத்திடம்மா. எங்கட சொந்தக்காரர் சிலரைவிட அவன் புறத்தியா னெண்டாலும் மேலானவன். நன்றி மறவாத விசுவாசி..."

"என்ன அத்தான் இப்பிடிச் சொல்லுறீங்க. நாங்க மணிரெத்தி னம் அங்கிள மறந்திடுவோமா?"

வந்தவர்கள் விடைபெற்றனர்.

"அவங்கட மனம்போல கலியாணம் சிறப்பாக நடக்க வேணும்."

ஆனந்தன் சந்திராவைப் பார்த்துக் கூறினார்.

❖❖❖

துரைரெத்தினம் புவனம் குடும்பத்தினருக்கு விதுஷா ஒரேயொரு பெண் வாரிசு. அதனால் ஊரார் மெச்ச, அவளது திருமணத்தைச் சிறப்புறச் செய்யவேண்டுமென்பது துரைரெத்தினத் தின் நெடுநாள் ஆசை. 'தற்போதைய நிலையில் இது அவசியமற்றது' என புவனம் பல தடவைகள் சொல்லியும் பயனெதுவுமில்லை.

நாட்டின் புதிய சூழலால் ஏற்பட்ட பணத்தட்டுப்பாடு, அரசு - விடுதலைப் புலிகளின் சதுரங்க விளையாட்டுக்களால் யாழ்ப் பாணத்தில் நிலவிய பொருட்களின் விலையேற்றம், பொருட் தட்டுப்பாடு, பலவகை கெடுபிடிகள் போன்றவற்றின் மத்தியிலும் ஊரார் வியக்கத் திருமண விழா கொண்டாட வேண்டுமென்ற துரைரெத்தினத்தின் பிடிவாதத்தில் மாற்றம் இருக்கவில்லை. புவனம் அவரின் எண்ணத்திற்கே விட்டுவிட்டாள்.

மூத்த மகன் பிரான்ஸில் இருக்கின்றான். இளையவன் பிரான்ஸ் போகும் முயற்சியில் தடங்கல்கள் ஏற்பட்டுக்கொண்டி ருந்ததால் மலேசியாவில் நிற்கிறான்.

மகன் பிரான்ஸ் சென்று சில மாதங்கள்தான். ஒழுங்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலை இல்லை. இடைக்கிடையே வேலைசெய்வதும் வேலை தேடுவதுமாக இருக்கிறான். இந்த விபரங்கள் பெற்றோருக்குத் தெரியக்கூடாதென்பதற்காக நண்பர்களிடம் பணத்தைக் கடனாகப் பெற்று, சகோதரியின் திருமணத்தைச் சிறப்பாகச் செய்வதற்கேற்ற வகையில் பணம் அனுப்பி வைப்பதாகக் கூறியிருந்தான். இதனால் கணவன் மனைவியிடையே எவ்விதச் சங்கடமோ, சிறப்பான கொண்டாட்டத்திற்கு தடையோ இருக்கவில்லை.

திருமண விழாவை எப்பிடியெப்படியெல்லாம் சிறப்பாக்க முடியும், எவ்வளவு செலவாகும் என்ற சிந்தனையிலும், முன்னேற்பாடு களிலுமே துரைரெத்தினம் கண்ணாக இருந்தார்...

வீட்டுக்கு வர்ணம் அடிப்பதிலிருந்து திருமணத்திற்கான அனைத்து முன்னேற்பாட்டு வேலைகளும் தடல்புடலாய் நடந்து கொண்டிருந்தன...

திருமணத்திற்கு இன்னமும் இரண்டு வாரங்கள் இருக்கும் நிலையில் அதற்குள்ளே செய்யவேண்டிய வேலைகள், வாங்க வேண்டிய பொருட்கள் எனப் பெரும் பட்டியலையே போட்டு வைத்திருந்ததுடன் செயலிலும் இறங்கிவிட்டார் துரைரெத்தினம்...

❖❖❖

**கா**லையில் நகைக் கடையில் கொள்வனவுசெய்த நகைகளை விதுஷா, திறந்த வாய் மூடாமல் தனக்குத்தானே போட்டுப் போட்டு அழகு பார்க்க, புவனம் 'உண்டியல்' மூலம் வந்த பணத்தை எண்ணிக் கொண்டிருந்தாள். இருவரும் அடைந்த மனநிறைவை அவர்களின் முக மலர்ச்சி வெளிப்படுத்தி நின்றது...

வீட்டுக்கு வர்ணம் பூசும் வேலையாட்களுக்கு கூலியையும், கடைக்குக் கொடுக்க வேண்டிய பணத்தையும் பிரித்தெடுத்துக் கொண்டு ஏனைய பணத்தையும், நகைகளையும் கைப்பையினுள் இட்டு வழமைபோல் அலுமாரிக்குள் வைத்துப் பூட்டிக்கொண்டாள் புவனம்.

பகல் பூராவும் ஓடியாடித் திரிந்ததால் ஏற்பட்ட உடல் அலுப்புத் தீர அரைப் போத்தல் சாராயத்தை முழுமையாய் விழுங்கிவிட்ட துரைரெத்தினம், இரவு உணவு உண்ணாமலே அறையில் படுத்துவிட்டார். தாயும் மகளும் எவ்வளவோ முயன்றும் அவரை எழுப்புவதில் தோல்வி கண்டவர்களாய் அவர்களும் மற்ற அறையில் படுத்துவிட்டனர்.

இரவு எட்டு மணி முதல் பரவலாகக் கேட்டுக்கொண்டிருந்த எறிகணைச் சத்தங்கள் துரைரெத்தினத்தின் நித்திரைக்கு எவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால், புவனமும் விதுஷாவும் நித்திரையின்றிப் புரண்டு புரண்டு கிடந்தார்கள். அயர்வதும் ஷெல் சத்தம்கேட்டு விழிப்பதுமாக அவர்கள் நிலை இருந்தது. கண்கள் எரிய தமக்குள்ளே ஏசிக்கொண்டு மெல்லமெல்ல உறக்கத்தை அணைத்துக் கொண்டனர்.

திடுக்கிட்டு விழித்தாள் விதுஷா...

"அம்மா... அம்மா... பின்னால வீட்டில கண்ணாடி உடைஞ்ச சத்தம் கேட்டதம்மா..."

"அது ஒண்டுமில்லை நீ படு... இப்ப கேவியூவெல்லா? கிட்டக் கிட்ட 'ஆமிச் சென்றி பொயின்ற்' இருக்கு இஞ்ச ஆர் வாறது...? கனவு கண்டிருப்பாய் பேசாமப் படு..."

மறு பக்கம் திரும்பி படுத்துக்கொண்டாள். சிறிது நேரம் காதுகளை கூர்மையாக வைத்திருந்த விதுஷாவும் ஆற்றாமையால் அயர்ந்துபோனாள்...

"டக்... டக்..., டக்... டக்..."

அறைக் கதவில் தட்டும் சத்தம் கேட்டு புவனம் சினத்துடன் விழித்தாள்...

"இந்த மனுஷனோட பெரிய கரைச்சல். மூக்குமுட்ட குடிச்சுப் போட்டுப் படுத்தவருக்கு இப்பத்தான் முறிஞ்சிருக்குதாக்கும்."

கூறியபடி எழுந்தவள், எரிந்துகொண்டிருக்கும் கண்களைத் திறவாமலே கதவைத் திறந்தாள்... திடீரென இரண்டு கரங்கள் அவள் மூக்கோடு சேர்த்து முகத்தை அழுத்தின... அவள் தடுமாறி, குரல் எழுப்புவதற்குள் மயக்கம் அவளை முந்திக்கொண்டது...

விழித்துக்கொண்ட விதுஷா, தாய் சோர்ந்து விழுவதையும் யாரோ மூவர் நிற்பதையும் கண்டதும் அவள் இதயம் பயத்தால் பதறியது... வார்த்தைகள் வெளிவராமல் சிக்கிக்கொண்டன... எழ முயன்றாள்.

சட்டென ஒருவன் 'ரிவால்வரை' நீட்டியவாறு விதுஷாவை நெருங்கினான்...

"எழும்ப வேணாம்... வாய் திறக்க வேணாம்... மீறினா எல்லாரையும் சுட்டுப்போடுவன்."

கூறியவாறு அவளது மூக்கில் துணியை வைத்து அழுத்தினான்... சில வினாடிகளில் விதுஷாவின் கண்கள் சொருகின...

பக்கத்து வீட்டில் அழுகுரல் கேட்டு புவனம் சிரமப்பட்டுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைத் திறந்தாள். சூரிய ஒளிக் கதிர்கள் அறைக்கு ஒளியூட்டியது.

கண்கள் நெருப்பாய் எரிந்ததால் மூடி மூடி விழித்தாள்.

அவளுடல் பலத்தை இழந்ததுபோன்ற நிலையில் சோர்வாக இருந்தது.

வயிற்றைக் குமட்டி... நெஞ்சு எரிந்தது...

நெஞ்சைத் தடவிக்கொண்டாள்..

தலை பாரமாக இருந்ததால் தூக்கச் சிரமப்பட்டு படுத்த படியே தலையைச் சரித்துப் பார்த்தாள்...

தான் படுத்த இடத்தில் தற்போது இல்லை...

தேள் கொட்டியதுபோல் துடித்து சட்டென உடலை நிமிர்த்திப் பார்த்தாள்...

விதுஷா உறக்கத்தில்... கிட்டே சென்று தட்டி எழுப்பினாள். அவள் எழவில்லை... சந்தேகத்தில் போத்தலில் இருந்த தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்தாள். முகம் அசைந்தது. கண் திறக்கவில்லை...

இரவு நடந்த நிகழ்வுகள் யாவும் புவனத்திற்கு கனவில் நடந்ததுபோல ஒவ்வொன்றாய் உயிர்த்தவண்ணமிருந்தன... கதவு தட்டப்பட்டது, தான் எழுந்தது கதவைத் திறந்தது, முரட்டுக் கரங்கள் தன் முகத்தை அழுத்தியது எல்லாமே தொடர்புகளற்று நினைவுகளில் புரண்டு வந்தன...

அவளால் நிதானமாகச் சிந்திக்க முடியவில்லை.

பக்கத்து வீட்டிலிருந்து அழுகுரல் தொடராகக் கேட்டுக் கொண்டேயிருந்தது...

தன் நினைவுகளைக் கூர்மையாக்கி யோசித்தாள்...

ஏதோ புரிந்துகொண்டவள் போல தலையை அசைத்தவாறு எழுந்தாள்...

உடல் நடுங்கித் தள்ளாடியது...

பயம் அவளை ஆக்கிரமித்துக்கொண்டது...

இதயத்தின் அதிவேகத் துடிப்பை அப்போதுதான் அவளால் உணர முடிந்தது...

தயங்கித் தயங்கி கணவன் படுத்திருந்த அறையைத் திறந்தாள்.

மருந்து வாடை மூக்கை அரித்தது.

ஏற்கெனவே அவளால் உணரப்பட்ட அதே மணம்...

கணவன் இன்னமும் உறக்கத்தில்... இல்லை மயக்கத்தில் கிடந்தார்...

அடுத்த கணமே, தனது தொடர்புகளற்ற நினைவுகளுக்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரம் கிடைத்துவிட்டதை உணர்ந்தாள்... உடல் சிலிர்த்தது...

இரவு நிகழ்வுகள் யாவும் இப்போது மனத்திரையில் தெளிவாக ஓடிக்கொண்டிருந்தன...

சட்டெனத் திரும்பி, தான் படுத்திருந்த அறைக்குச் சென்று அலுமாரிக் கதவைத் தொட்டுப் பார்த்தாள்...

கதவுகள் திறந்து கிடந்தன....

அவள் போட்ட கூக்குரல், பக்கத்து வீட்டிலிருந்துவந்த அழுகுரலோடு இணைந்து கொண்டது...

தகவல் அறிந்த சந்திராவும் கணவனும் உடனேயே அங்கு சென்றனர். சுரேந்தரும் சித்திராவும் வந்திருந்தனர். அலங்கோலமாகக் கிடக்கும் வீட்டைப் பார்த்ததும் இவர்கள் கண்கள் கலங்கின...

புவனம் கைகளை தலையில் ஊன்றியவாறு கண்ணீருடன் வீட்டு மூலையில் இருந்தாள்...

விதுஷா சோர்வுடன் தாய்க்கு அருகாமையிலே இருக்க, துரைரெத்தினம் தலை கவிழ்ந்தவாறு கதிரையில் இருந்தார்.

இவர்களின் நிலைகண்டு சந்திரா நெகிழ்ந்துபோனாள். விதுஷாவுக்கு அருகாமை அமர்ந்தவள், அவளது கண்களில் வடிந்த நீரைத் துடைத்துவிட்டு ஆதரவாய் முதுகைத் தடவியவாறு ஆறுதல் கூறிய பின்னர் சித்திராவும் அவளுமாக வீட்டுப் பொருட்களை சீர்செய்தனர்.

பொலிசாரின் வரவை எதிர்பார்த்து அலுமாரியில் எவரும் கை வைக்கவில்லை.

"ஒரே இரவில் பல வீடுகளில் துணிகரத் திருட்டு..."

வானொலியில் விசேட செய்தியாக ஒலிபரப்பாவதை வீட்டிலிருந்த அனைவரும் கேட்டுக்கொண்டிருந்தனர்.

விரும்பத்தகாத நிகழ்வு அரங்கேறியபோதும் விதுஷாவின் திருமணம் குறித்த முகூர்த்தத்தில் நடந்து முடிந்தது.

புரிந்துணர்வின் அடிப்படையில் பேசப்பட்ட நகைகள், சீதனம் போன்றவற்றை மணமகன் பெற்றோர் ஏற்றுக்கொள்ள திருமணம் நிகழ்ந்தது. துரைரெத்தினம், தான் பல மாதங்களாகத் திட்டமிட்டு செயற்படுத்த முனைந்தது போலல்லாமல் சாதாரணமாகவே செய்து முடித்தார்.

எவ்வாறாயினும் துரைரெத்தினத்தின் குடும்பத்தினர்மீது ஏற்றப்பட்டுவிட்ட சுமை இலகுவில் இறக்கக்கூடியதல்ல... பிள்ளைகளின் கையையே அவர்கள் நம்பியிருக்கவேண்டிய நிலை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08

பிரியந்தனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. விறாந்தையில் அங்குமிங்குமாக அலைந்தான். அவனைப் பார்த்துச் சந்திரா தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்...

இன்று பிரியந்தனுக்கு 'கீ பேத்டே'.

நண்பர்கள், உறவினர் சகிதம் சிறப்பாகக் கொண்டாட வேண்டுமென்பது அவனது அவா. சந்திரா அதற்குத் தலையசைத்த துடன் அதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தாள்.

"தம்பி! 12 மணி ஆகுது. 'ரவுணு'க்கெல்லா போகப் போறெண்டனி... நேரத்தோட போயிற்று வந்தாத்தான் நீ 'றெஸ்ற்' எடுக்கலாம். நாலு மணிக்கு 'கேக்' வெட்டவெல்லா வேணும்."

"அதுதானம்மா பொடியளைப் பாத்துக்கொண்டு நிக்கிறன். அவங்களக் காணயில்லையே... அம்மா! நான் போறன் அவங்க வந்தா குமாரசாமி கடைக்கு வரச்சொல்லுறீங்களா..."

"ஓம் மகனே... நீ கவனமா போயிற்றுவா."

"சரியம்மா..."

ஈருருளியில் புறப்பட்டான்.

அவன் போவதை பார்த்தவாறு நின்றுவிட்டு திரும்பி சமையலறைக்குச் சென்று தனது வேலையைத் தொடர்ந்தாள்.

பிரியா பாடசாலை செல்லவில்லை தாய்க்கு ஒத்தாசையாக இருந்தாள்.

"டுடும்... டுடும்..."

"இந்தச் சத்தங்கள் எப்பத்தான் நிக்கப்போகுதோ... நேரந் தவறினாலும் இதுகள் மாத்திரம் கேக்கத் தவறாது... இருதய வருத்தக் காரருக்குப் பெருங் கஸ்ரம்தான்..."

ஏதோ விரக்தியில் பேசுவதைப்போல் அவள் வார்த்தைகள் வெளிவந்தன. 'ஷெல்' சத்தம் கேட்பது வழமையாகிவிட்ட நிகழ் வாயினும் சூழ்நிலை சார்ந்ததாகவே அதன் தாக்கம் இருந்தது.

'நாலுமணிக்கிடையில் நாலைந்து பலகாரங்கள் செய்து முடிக்க வேண்டும்'.

'ஐசிங் செய்யக் குடுத்த இடத்தில் கேக் எடுக்கவேண்டும்'.

'நெல்லிரசம் கரைக்கவேண்டும்'

தன்முன் கிடக்கும் வேலைகளின் பட்டியலை நினைத்துக் கொண்டாள் சந்திரா.

பெருமூச்சு வெளியேறியது.

அத்துடன், தான் சொல்லிவிட்ட பொருட்களையெல்லாம் பிரியந்தன் தவறாமல் வாங்கி வருவானா என்ற ஏக்கம் அவளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபுறம் இருக்கவும் செய்தது...

சமையல் வேலையை முடித்துச் சாப்பாட்டை மேசையில் எடுத்துவைத்துவிட்டு நேரத்தைப் பார்த்தாள்...

"பிரியா! ஒரு மணி ஆகீற்றுது. என்னும் ரெண்டு மணித்தியாலத்தில பலகாரங்கள செய்து முடிக்கவேணுமே?"

"செய்திடலாமம்மா சாமான்களெல்லாம் ஆயத்தமாய் இருக்குத்தானே..."

"டும்..."

"கிட்டக் கேக்குமாப்போல இருக்கு!.. எந்தப் பாவிகள் எம்பிட்டுதுகளோ?"

வெளியே ஓடிச்சென்று வீதியைப் பார்த்தாள். வீதி வழமை போலவே காணப்பட்டது... வேலைப் பழுவை நினைத்து அங்கு நீண்டநேரம் நிற்க விரும்பாமல் திரும்பிவிட்டாள்...

ஒருவாறு பலகாரங்களை செய்து முடித்து, அவற்றை அந்தந்த இடங்களில் எடுத்துவைத்தாள்... பிரியவதனியும், பிரிந்தாவும் பாடசாலை முடிந்து வந்தனர்...

"பிள்ளகளும் பள்ளிக்கூடம் விட்டு வந்திற்றிதுகள். இவன் போனவன இன்னும் காணன்.. இனிவந்து சாப்பிட்டு, எத்தின மணிக்கு வெளிக்கிடப்போறான்..."

பிரியா தனக்குள் சிரித்தவாறு நெல்லிரசத்தை வாளியில் ஊற்றிக் கரைத்துக்கொண்டிருந்தாள்.

"அக்கா... அக்கா..."

வாசலிலிருந்து குரல் வந்தது... நிமிர்ந்து பார்த்தாள்.

அவளது சகோதரி புவனம்...

'அதுகளும் வந்திற்று இவன இன்னுங்காணனே...' மனதிற்குள் ஏசிக் கொண்டாள்.

"வாம்மா! இண்டைக்கெண்டாலும் நேரத்தோட வந்தியேடியாத்த, வா வா... பிரியந்தன் ரவுணுக்குப் போனவன் இன்னும் வரயில்ல... எனக்கு வேலையும் இன்னும் முடியயில்ல... இஞ்ச வா.. புள்ளயோட நெல்லிரசத்தக் கரை... நான் கேக் எடுத்துக்கொண்டு ஓடியாறன்... ஆக்கள் வரப்போகுதுகள்..."

படபடவென்று சொல்லி முடித்துவிட்டு முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டாள்...

"அக்கா..."

விம்மலுடன் வெளிவந்த புவனத்தின் குரல்கேட்டு சட்டென நிமிர்ந்து பார்த்தாள்... அவளுக்குப் பின்னால் புவனத்தின் கணவனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேந்தரும் - சித்திராவும், ஊன்றுகோலுடன் இராசதுரையும் - தங்கராணியும், உறவினர் சிலரும் நின்றனர்... பிரியந்தனின் நண்பர்களில் இருவரும் நின்றனர்... அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது...

"என்ன புவனம்?... ஏன் அழுகிறாய்..."

புவனம் விம்மியபடி ஓடிவந்து அவளைக் கட்டியணைத்துக் கதறினாள்...

விபரம் புரியாமல் விழித்தாள் சந்திரா...

"என்ன நடந்தது... ஏதும் பிரச்சினையா? நான் பிறந்த நாளுக்கு வந்திருக்கிறீங்களெண்டெல்லா நினைச்சன்... என்னெண்டு சொல்லுங்களன்..."

"அக்கா..."

"அழுகிறதவிட்டு சொல்லு புவனம்... சொன்னாத்தானே தெரியும்..."

"பிரியந்தன்..."

"பிரியந்தனா? என்ன அவனுக்கு?..."

"அவன் எங்களவிட்டுட்டுப் போயிட்டானக்கா..."

"நீ என்ன சொல்லுறா?"

"உண்மையக்கா. இந்தா அவனட 'பிரன்ட்ஸ்சுகள்' நிக்கிறாங்க அவங்கதான் சொன்னவங்க..."

"ஓமுங்க அன்ரி... ரவுணுக்க ஆரோ கிளைமோர் வைச்சிருக்கிறாங்க.. அது வெடிச்சு மூன்று பேர் அந்த இடத்திலேயே செத்திற்றாங்க. அதில நம்ம பிரியந்தனும் ஓராளுங்க... சுரேஷ், பிரியந்தனுக்குப் பின்னுக்குப் போனவன் அவனுக்குக் காயம். தப்பீற்றான். அவன் சொல்லித்தான் எங்களுக்குத் தெரியும். இப்ப ஆஸ்பத்திரியில வச்சிருக்கிறாங்களாம்..."

சந்திரா உறைந்துபோய் நின்றாள்...

இமை மூட மறந்தவளாக தனது இரண்டு கைகளையும் கோர்த்தபடி உச்சந்தலையில் வைத்தவாறு தரையில் அமர்ந்தாள்...

பிரியவதனியும், பிரிந்தாவும் தாயை அணைத்தவாறு அழுகையில் அவளுடன் இணைந்து கொண்டனர்.

பிரியா கைகளால் தரையில் அடித்து தன் வேதனையைக் கொட்டித் தீர்த்தாள்.

சற்று நேரத்தால் சந்திரா அமைதியிழந்து சோர்ந்து போனாள். அழுவதற்கு அவளால் முடியவில்லை...

பிரியந்தன் அவள் இதயத்திலும், கண்களிலும் நிறைந்து நின்றான்...

மேசன் வேலைக்குச் சென்ற ஆனந்தனிடம் தகவல்சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்துவந்தார் மணிரெத்தினம்.

வீட்டுக்கு ஓடிவந்து விறாந்தையில் இருந்தவர் குப்புறக் கவிழ்ந்து குழந்தையைப் போல கதறியழுதார்.

மணிரெத்தினம் அவரை ஆறுதல்படுத்தி மேற்கொண்டு செய்யவேண்டிய வேலைகளுக்காக அழைத்துச் சென்றார்.

பிரியந்தனின் உடலை எதிர்பார்த்து வீடு நிறைந்த உறவுகளுடன், கண்ணீர் வழிந்தோடக் காத்திருந்தனர் சந்திராவும் பிள்ளைகளும்...




தனது மகள் துவாரகாவுக்கு சீதனத்தை எதிர்பார்க்காத சம்மந்தம் ஒன்று கைகூடி வந்திருந்த தால் மணிரெத்தினம் எல்லைகடந்த மகிழ்வில் காணப்பட்டார்.

இதற்கு முன்னரும் இப்படி இரண்டு வரன்கள் தேடிவந்த போதும், சாதகப் பொருத்தமில்லையென்று சாஸ்திரி கூறிவிட்டதால் அவை கைகூடாமல் போய்விட்டன.

இதனால் வேதனையுடன் காலத்தைக் கடத்திய அவர், இந்தத் திருமணமாவது பொருத்தமாய் அமையவேண்டுமென பிள்ளையாரை வேண்டிக்கொண்டார்.

துவாரகா பார்வைக்கு அழகானவள், எப்போதும் புன்னகை தவழும் அவளது இளமஞ்சள் முகம் பார்ப்பவரை மீண்டும் பார்க்கவே தூண்டும்.

இதுவே அவளை வரன்கள் தேடிவரக் காரணமாக அமைந்தது என்றே சொல்லலாம்.

எத்தகைய வரனாக இருந்தாலும் பொருத்தம் பார்க்காமல், பொருத்தம் அமையாமல் திருமணம் செய்துகொடுப்பதில் மணிரெத்தி னத்துக்கு உடன்பாடில்லை. தனது எண்ணத்தை மாற்றிக்கொள்ளவும் அவர் தயாராக இல்லை.

“என்ன மணிரெத்தினமண்ணே! இஞ்சாலப் பக்கம். சாத்திரி யாரட்டயோ?...”

வாயிலிருந்த பீடியை எடுத்துவிட்டு எச்சிலைத் துப்பிக் கொண்டார்.

“ஓமடா தம்பி! மகளுக்கு கலியாணப் பொருத்தம் பாக்கலா மெண்டு போறன். இதில அவசரப்படலாமா, நிதானமாகப் பொருத்தத் தைப் பார்த்துத்தானே செய்யவேணும். ஆயிரங்காலத்துப் பயி

ரெல்லா..."

"சரியண்ணே... அண்ணே! ஒண்டு கேக்கிறன் கோவிச்சுக் கொள்ளாதேயுங்க... உங்கட மூத்த மகள் லவ் பண்ணித்தானே கலியாணம் முடிச்சவ. அவவுக்குப் பொருத்தம் பாத்தனீங்களா? அவ நாச்சிக்குடாவில நல்லாத்தானே இருக்கிறா..."

மணிரெத்தினத்துக்கு கோபம் முந்திக்கொண்டது.

"அவளின்ர கதை ஏனிப்ப? நான் கேட்டனானா? அவளோட உறவில்லையெண்டு தெரியுந்தானே. அவள் எப்பிடியும் வாழட்டும். இவளை அப்பிடி விட்டுவிடமாட்டன். நல்ல பொருத்தமாப் பாத்து என்னட விருப்பப்படிதான் செய்வன்"

மணிரெத்தினத்தின் முகம் கோபத்தால் சிவந்தது.

பீடியை வாயில் வைத்து ஒருதடவை புகையை உள்ளே இழுத்து வெளியே விட்டார்... இருமல் முந்திக்கொண்டது. எரிச்சலுடன் பீடியை எறிந்துவிட்டு ஏசியவாறு நடந்தார்.

நாளாந்தம் கூலிவேலை செய்து அந்த வருவாயில் சாதாரண வாழ்க்கை வாழ்பவர் மணிரெத்தினம்.

இவருக்கு இரண்டு பெண்கள். துவாரகா இரண்டாமவள். மூத்தவள் சங்கீதா...

சங்கீதா பெற்றோரின் சம்மதத்தை எதிர்பார்க்காமல் தான் விரும்பிய ஒருவருடன் ஓடித் திருமணம் செய்துகொண்டாள்.

ஒரு மாதத்தின் பின்னர் சங்கீதாவும் அவளது கணவனும் வந்திருந்தனர்.

தாய் வரவேற்றாள்... பெற்ற மனமல்லவா!

தாங்கள் கொண்டுவந்த பழங்களை மேசையில் வைத்துவிட்டு அமர்ந்தனர்.

பயத்துடன் மணிரெத்தினத்தின் வரவுக்காகக் காத்திருந்தாள் மனைவி.

அவரும் வந்தார்...

தகப்பனைக் கண்டதும் இருவரும் எழுந்து அவர் பாதத் தண்டை முழங்கால் மடித்து இருந்தனர்...

மணிரெத்தினத்தின் உடல் கோபத்தால் பதறியது...

"இவங்கள ஆரடி உள்ள விட்டது...?"

மனைவியைப் பார்த்துக்கேட்டார். பயத்தால் அவளுடல் ஆட்டம் கண்டது...

"இவங்கள முதலில வெளியால போகச்சொல்லு... இவள் செத்து ஒரு மாதமாச்சு..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே செல்ல முனைந்தபோது மேசையில் பழங்க ளுடனான 'பொலித்தீன் பாக்'கை கண்டதும் அவர்களைத் திரும்பிப் பார்த்தார்.

"இதுவும் இஞ்ச தேவையில்ல..."

அதனை முற்றத்தில் வீசிவிட்டு உள்ளே சென்றார்.

இரு கொள்ளி எறும்பாகத் தாய்...

அவள் கண்களில் கட்டுப் பாடற்ற கண்ணீர்...

செய்வதறியாத இருவரும் வேறு தெரிவின்றி எழுந்து தலை கவிழ்ந்தவாறு வெளியேறினர்...

தன் மகள் இல்லையென்ற முடிவே மணிரெத்தினத்தின் எண்ணங்களில்...

மாதங்கள் பல கடந்த நிலையில் மணிரெத்தினத்தின் மனதில் புதிய ஊற்று சுரந்திருக்குமென அவரது மனைவி எதிர்பார்த்திருந்தாள்.

அந்த எதிர்பார்ப்பில் 'சங்கீதா இப்போது ஒரு குழந்தைக்குத் தாயாகி, நாச்சிக்குடாவில் வசிக்கிறாள். அவள் கணவன் வியாபாரம் செய்துவருவதால் நல்லா இருக்கிறார்கள்' என்று, தான் அறிந்த தகவலை மணிரெத்தினத்திடம் கூறியபோது, அவளை வாய்க்கு வந்தபடி ஏசி விட்டார். அதுமுதல் சங்கீதாவைப் பற்றி அவள் எதுவும் கதைப்பதேயில்லை...

சோதிடரின் வீட்டிலிருந்து புன்னகையுடன் வெளியே வந்தார் மணிரெத்தினம்.

"பொடியன்ர சாதகம் பெண்ணுக்கு நூற்றுக்கு நூறு பொருத்த மாயிருக்குது. இப்படிப் பொருத்தம் அமையிறது குறைவு. கலியாணம் செய்து வைச்சீங்கெண்டா குடும்பம் நல்ல ஆயுசுடன் இருக்கும்."

சோதிடர் கூறியதை நினைத்ததும் துள்ளிக் குதிக்கவேண்டும் போல இருந்தது மணிரெத்தினத்துக்கு... ஆனால், அவரால் அப்படிச் செய்யமுடியவில்லை. உள்ளம் துள்ளிக் குதித்துக் குதூகலித்தது...

மாப்பிள்ளை 'வேள்ட் விஷன்' நிறுவனத்தில் வேலை செய்கிறார். பெயர் அற்புதன். விசாரித்துப் பார்த்தளவில் குறை சொல் வார் எவருமில்லை. ஓரளவு வசதியான குடும்பம். பொறுப்புகள் எதுவு மில்லை. இவை மணிரெத்தினத்துக்கு மனநிறைவைக் கொடுத்தன.

தனது இன்பத்தில் மகிழ்ந்து, துன்பத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் ஆனந்தன் கூடவே இல்லாதது மணிரெத்தினத்துக்கு ஒரு கை இல்லாததுபோல இருந்தாலும், பிரியந்தனின் இறப்பால் அவர் அடைந்த துயர் எவராலும் ஈடுசெய்யக்கூடியதல்ல என்பதை இவர் உணராமலில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தனின் நினைவு மணிரெத்தினத்தின் கண்களில் நீரை வரவழைத்தது.

நேரடியாகவே ஆனந்தன் வீட்டுக்குச்சென்றார்.

தனது வாயிலிருந்த பீடியைப் புகைத்து முடியும்வரை வெளியே நின்று முடிந்தபின் இருமியவாறு உள்ளே சென்றார்.

"இருமுற இருமலப் பார், நெஞ்சே வெடிச்சிடும்போல இருக்கு. நான் சொன்னனானெல்லா இந்த பீடிய நிப்பாட்டச் சொல்லி நீயோ கேக்கிறதாயில்ல."

"அது சும்மா இருமல்தான்."

"நீ அப்பிடித்தான் சொல்லுவா... என்னவோ உனக்கு நல்லதுக்குத்தான் சொல்லுறன். சரி! நீ வந்த விசயத்தச் சொல்லு."

துவாரகாவின் சாதகப் பொருத்தம் பற்றியும், திருமணம் செய்துவைக்க முடிவெடுத்தது பற்றியும் கூறினார்.

மகனை இழந்த வேதனையிலும் அவர் அடைந்த மகிழ்ச்சி கண்டு மணிரெத்தினம் நெக்குருகி நின்றார்.

திருமணத்தை ஆடம்பரமாக்கி கடனைக் கூட்டவேண்டா மென்றும், வேறு சில ஆலோசனைகளையும் கூறி மணிரெத்தினத்தை அனுப்பிவைத்தார்.

❖❖❖

**சோ**திடர் குறித்துக்கொடுத்த முகூர்த்தத்தில் சிவாச்சாரியார் தாலியை எடுத்து மணமகனின் கையில் கொடுக்க, கெட்டிமேளம் முழங்கியது. உறவினர்கள் - நண்பர்கள் மலர் தூவி வாழ்த்தினர். அந்தக் கணத்தில் மணமகளின் கழுத்தில் மணமகன் மாங்கல்யத்தைக் கட்டினான்.

மணிரெத்தினத்தினதும் அவர் மனைவியினதும் கண்கள் நீரேந்தி நின்றன...

வீட்டுக்கு அண்மையிலிருந்த முருகன் கோவிலில் ஆடம்பர மின்றி, அதேவேளை குறைவற்ற சிறப்புடன் நடைபெற்ற திருமணத் தில் தாலி கட்டிய பின்னர் நடைபெறவேண்டிய சம்பிரதாயபூர்வமான நிகழ்வுகளுடன் திருமண வைபவம் நிறைவுபெற்றது.

திருமணத்திற்கு வருகை தந்தவர்கள் வீட்டுக்கு அழைத்து வரப்பட்டு, அங்கு போடப்பட்டிருந்த சிறிய கொட்டகையில் உணவு பரிமாறப்பட்டது.

எட்டாம் சடங்கிற்குப் பின்னர் மணமக்கள், உறவினர் வீடுகளுக்குச் சந்திப்புக்காக புறப்பட ஆயத்தமானபோது, முதலில் ஆனந்தன் வீட்டுக்குச் சென்று அவர்களிடம் ஆசி பெறுமாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிரெத்தினம் கூறியதைக் கேட்டு அவர்களும் அவ்வாறே செய்தனர்.

மணிரெத்தினம் நிம்மதிப் பெருமூச்சுவிட்டார்.

துவாரகாவுக்கு மாப்பிள்ளை நிச்சயிக்கப்பட்டது முதல் திருமணம் வரை எந்தவித இடையூறுகளுமின்றி தனது எண்ணம் போல் நிறைவுபெற்றமை பெரும் மகிழ்ச்சியையும், குறைந்த கடனுடன் திருமணத்தை நடத்தி முடிக்க ஆனந்தனின் ஆலோசனை துணைசெய்தமை ஆறுதலையும் கொடுத்தது மணிரெத்தினத்துக்கு...

தம்பதிகளின் குதூகலமான வாழ்க்கை பெற்றோரை மட்டுமல்ல மற்றோரையும் மகிழ்வுறவே செய்தது.

திருமணப் பொருத்தம் சிறப்பாக அமைந்ததன் வெளிப்பாடு என்பதை எண்ணி மகிழ்ந்தார் தந்தை...

மகள் முழுகாமல் இருக்கிறாள் என மணிரெத்தினத்துக்கு அவர் மனைவி கூறியபோது அவர் அடைந்த சந்தோஷத்துக்கு எல்லையிட முடியாது.

மூத்த மகள் சங்கீதா மீதிருந்த வெறுப்பும் மணிரெத்தினத்தின் மகிழ்வுக்கு ஒரு காரணம்.

அன்னியோன்யமாக வாழ்ந்தனர் புதுமணத் தம்பதிகள்...

❖❖❖

**வே**லைக்குச் சென்ற மருமகன் இனந்தெரியாதோரால் சுடப்பட்டு வீதியில் இறந்து கிடப்பது தெரியவந்ததும் உளம் உடைந்து, தலையில் பாறாங்கல்லு வீழ்ந்ததுபோல தடுமாறிய மணிரெத்தினம் தான் வேலைசெய்து கொண்டிருந்த இடத்திலே உட்கார்ந்துவிட்டார்.

கண்கள் குளமாக, தலையைக் கை தாங்கியவாறு நிலத்தை வெறித்துப் பார்த்தபடியே இருந்தார்.

கணவன் கொல்லப்பட்ட செய்தி காட்டுத்தீயாக வீட்டுக்கு எட்டியதும் துவாரகா துடித்தாள்...

இதயம் வெடித்து நாலாபக்கமும் சிதறியது போன்ற துடிப்பு... துவண்டாள்...

மிகுதியான ஏக்கத்தை தாங்கிக் கொள்ள முடியாமல் மயங்கிச் சரிந்தாள்.

தாய், தன் மார்பிலும் தலையிலும் கைகளால் அடித்து வேதனையை அழுகையாய்க் கொட்டித் தீர்த்தாள்.

அவளது வாயிலிருந்து வந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் நிற்பவர்களின் இதயத்தை வருடி கண்ணீரை வெளியேற்றத்

தவறவில்லை.

அயலவர் சூழ்ந்து மயங்கிய நிலையில் கிடக்கும் துவாரகாவின் முகத்தில் நீர்தெளித்து மயக்கத்தைத் தெளிவிக்க முனைந்தனர்.

துவாரகா கண்விழித்துப் பார்த்தபோது ஆனந்தன் கண்ணீருடன் விம்மியவாறு நின்றார்...

"அங்கிள்...!"

துவாரகாவின் அழைப்புக் கேட்டதும் அவளைப் பார்த்தவாறு குழந்தையைப்போல் அழத்தொடங்கினார்.

இது, அங்கு நின்ற பலரது கண்களையும் கசியச் செய்தது.

வைத்தியசாலையிலிருந்து அப்போதுதான் வீட்டுக்கு வந்தார் மணிரெத்தினம்.

"அப்பா...! எங்கயப்பா அவர்?"

கேட்டவாறு எழுந்து கட்டியணைத்துக் கதறினாள்...

மணிரெத்தினம் மகளின் தலையில் முகத்தைப் புதைத்தவாறு அழுதார்...

காட்சிகண்டு பலரது அழுகுரல் ஒன்றிணைந்து ஒலித்தது...

"புலிகள் இயக்கத்தின் ஆதரவாளர் ஒருவர் சுட்டுக் கொலை" என்ற தலைப்பில் காலை 'உதயன்' நாளிதழில் செய்தி வெளியாகி இருந்தது.

"திருமணம் செய்து நான்கு மாதங்களேயான, அற்புதன் என்னும் இளம் குடும்பஸ்தர், தலைக்கவசம் அணிந்தவாறு உந்துருளியில் வந்தவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரைச் சுட்டுக்கொன்றவர்கள் சுற்றாடலில் நின்றவர்களைப் பார்த்து 'யாராவது புலிகளுக்கு உதவிசெய்தா உங்களுக்கும் இந்த நிலைதான்' என்று கூறிச்சென்றதாக அறியப்படுகிறது..."

செய்தியைப் படித்தவர்கள் வாயடைத்து நின்றனர், தாங்கள் அறிந்திராத விடயம் செய்தியாக வந்திருப்பதுகண்டு...

காலை பத்து மணியளவில் வைத்தியசாலையிலிருந்து அற்புதனின் சடலம் வீட்டுக்குக் கொண்டுவரப்பட்டது.

கணவனின் உடல்மீது விழுந்து தன் பலத்தையெல்லாம் திரட்டிக் கதறினாள் துவாரகா...

சிறிது நேரம்தான் அவளால் அவ்வாறு அழ முடிந்தது.

இதயம் ஒருதரம் நின்றுவிட்டதுபோல, சில கணங்கள் அசைவற்று அப்படியே நின்றாள்...

மயக்கம் அவளை ஆட்கொண்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் நின்றவர்கள் அவளைத் தாங்கிக்கொண்டனர்.

மயக்கம் தெளிந்து கண்விழித்தபோது அவளது சகோதரி சங்கீதா கால்ப்பக்கம் நிற்பதைக் கண்டதும் கண்கள் அகல விரிந்தன...

சிறிதுநேரம் அவளையே வெறித்துப் பார்த்தாள்...

"அக்கா...!"

உள்ளடக்கப்பட்ட உணர்வின் அதிர்வுகள் ஒன்றாய்த் திரண்டு வார்த்தையாய் உரத்து வெளியேறியது.

இருவரும் கட்டியணைத்தனர்... கதறினர்... உள்ளத்தில் உள்ளவற்றை உரத்துச்சொல்லி அழுதனர்...

அயலவரின் ஆறுதல், அன்பான அரவணைப்பு அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை... அழுகை தொடர்ந்தவண்ணமேயிருந்தது...

மடை திறந்த வெள்ளமாக அவர்களது உணர்வுகள்...

அடக்கமுடியாத சோகத்தின் வெளிப்பாடாய் விம்மல் முந்திக்கொள்ள, விழி நிறைந்த நீருடன் உள்ளே வந்த மணிரெத்தினம், துவாரகாவும் சங்கீதாவும் ஒருவரையொருவர் கட்டியணைத்தவாறு அழுவதைக் கண்டு திடுக்குற்று நின்றார்...

இமைமூட மறந்தவர்போல அவர்களையே பார்த்துக் கொண்டு நின்றார்...

அவரிடமிருந்து வழமையாக கோடை இடியெனத் துலங்கும் ஆவேசம் அடங்கி, வார்த்தைகள் உறங்கிக் கிடந்தன...

"உங்கட மூத்த மகள் லவ் பண்ணித்தானே கலியாணம் முடிச்சவ. அவவுக்குப் பொருத்தம் பாத்தனீங்களா?..."

நான்கு மாதங்களின் முன்னர் வீதியில் ஒருவர் கேட்ட கேள்வி நினைவில் வந்து அவர் இதயத்தைப் பிளந்ததுபோல் இருந்தது...

"... இப்படிப் பொருத்தம் அமையிறது குறைவு. கலியாணம் செய்து வைச்சீங்கெண்டா குடும்பம் நல்ல ஆயுசுடன் இருக்கும்."

சோதிடர் கூறிய வார்த்தைகள் தண்ணீரில் மிதக்கும் எண்ணெயாய் உள்ளத்தில் மிதந்தது...

உயிரிழந்து உறங்கும் மருமகனைப் பார்த்தார். கன்னத்தால் வழிந்தது விழிநீர்.

"இப்பிடி எவ்வளவு பேர் கொல்லப்பட்டிருக்கிறாங்க. அவங்களில பொருத்தம் பாத்து கலியாணம் செய்தவங்களும் இருக்கிறாங்க. பாக்காமல் செய்தவங்களும் இருக்கிறாங்க. யாருக்கும் என்னவும் நடக்கலாம். "

"உண்மைதான். விவாகப் பொருத்தம் ஒரு காவல் இல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதுக்கு ஆறுதல் பெற்றவருக்கு மனநிறைவு."

உரையாடியவர்களை ஏற இறங்க பார்த்துவிட்டு திரும்பிய கண்களால், கட்டியணைத்துக் கதறும் பிள்ளைகள் இருவரையும் பார்க்க முடியாமல் தலை குனிந்துகொண்டார் மணிரெத்தினம்.

துயரத்தின் மத்தியிலும் குற்றவாளியாக நாணிக் குறுகி நின்றார் அவர்...




ஆனந்தன் ஓய்வின்றி மேசன்வேலை செய்து கொண்டிருந்தார். அதனால் அவர் களைப்புற்றுக் காணப்பட்டார்.

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு அவரை அவ்வாறு செய்ய நிர்ப்பந்தித்தது...

மகனது இழப்பின் தாக்கமும் காரணம்.

கட்டுவேலைக்காகப் போடப்பட்டிருந்த 'சாரத்தில்' காலைத் தொங்கப்போட்டு இருந்தவாறு சுவருக்கு பூச்சுவேலை செய்து கொண்டிருந்த ஆனந்தன், சீமேந்துடன் இருந்த தகரத் தட்டை தூக்கி சற்றுத் தள்ளிவைக்க முனைந்தார். அந்நேரம் சாரத்தில் ஆட்டம் ஏற்பட சீமேந்துத் தட்டு கைநெகிழ நிலை தவறி இவர் வீழ்ந்து விட்டார்.

சாரம் அவ்வளவாக உயரமில்லையாயினும் நாரியில் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

நண்பன் மணிரெத்தினத்தின் உதவியுடன் எலும்பு முறிவு ஆங்கில வைத்தியர் முதல் நோவுக்கு புக்கை கட்டுபவர் வரை ஏறி இறங்கியாயிற்று. நாரி வருத்தம் மட்டும் நீங்கவில்லை... ஆனாலும் நடமாடக் கூடியவராக இருந்தார்.

நாரியில் சத்திர சிகிச்சை செய்வதன்மூலம் குணப்படுத்தலாம் என வைத்தியர்கள் கூறியபோதும், பலரது எச்சரிக்கை காரணமாக அதனை செய்ய மறுத்துவிட்டார் ஆனந்தன்.

இவர் தொடராக வேலை செய்தபோதே வாழ்வை மேம்படுத்த முடியாமல் திண்டாடிய குடும்பம், வேலைக்கு போகமுடியாத நிலையில் இவர் இருப்பதனால் பெரும் நெருக்கடிக்குள் சிக்கிக் கொண்டது.

மேசன்வேலை இனிமேல் செய்ய முடியாதென்பதால் கடை ஒன்றில் பொருட்களுக்கு சிட்டை எழுதும் வேலையில் இணைந்து கொண்டார். மிகக் குறைந்த சம்பளமாயினும் அவரது உடல்நிலைக்கு அதுவே உகந்ததாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தனின் சம்பளத்துடன் புவனத்திடமிருந்து அவ்வப் போது கிடைக்கும் உதவி குடும்பத்துக்கு ஆறுதலைக் கொடுத்தது...

❖❖❖

சரோஜா, சந்திராவைத் தேடி அவள் வீட்டுக்கு வந்திருந்தாள்.

பிரியந்தனோடு பல்கலைக்கழகத்தில் ஒன்றாகவே கல்வி கற்று தற்போது இறுதியாண்டு மாணவனாகக் கல்வியைத் தொடரும் வினோதனின் தாய்.

வினோதன் குடும்பம் சாதாரண ஒரு குடும்பம். தந்தை மகேந்திரன். இவர் ஆனந்தனுடன் ஒன்றாகவே மேசன்வேலை செய்கிறார். தாய் சரோஜா, பெண்களுக்கான உடைகள் தைத்துக் கொடுப்பதில் கைதேர்ந்தவள்.

இவற்றால் இரண்டு குடும்பங்களிடையேயும் நெருக்கம் இருந்தது.

"உள்ள வா சரோஜா! என்ன இந்த வெய்யிலுக்குள்ள...?"

திடீரென சரோஜாவிடமிருந்து எழுந்த விம்மலைக் கண்டு துடித்துப்போனாள்...

"என்னநடந்தது? புருசன் அடிச்சவரா?"

'இல்லை' என்பதுபோல் தலையசைத்தவாறு கண்களைத் துடைத்துக் கொண்டாள்...

"இல்லையக்கா. வினோதன படிப்பிக்கிற மாஸ்ரர் போன வாரம் சந்தித்தவர். அவர் தம்பிய இனிமேல் இஞ்ச வச்சிருக்க வேணாமாம் எங்காவது அனுப்பி விடட்டாமெண்டு போகப் போகச் சொல்லீட்டு போனவர்..."

"இஞ்ச பொடிபொட்டகள வச்சிருந்தா எப்பயும் பயம்தான். பாத்தியா என்ர மகன... இப்பிடி எத்தனையோ...!"

"நாங்க திடீரென என்ன செய்யிறது? கையில காசு பணமா இருக்கு உடன எங்கையெண்டாலும் அனுப்புறதுக்கு...? எங்களுக்கு ஆற்ற உதவி இருக்கு சந்திரா? இந்த மனுசன் கையக் கால அடிச்சும், என்ர தையலால வாற வருமானத்தாலையும்தான் எங்க எல்லாரட சீவியமும் போகுது... எங்கட்ட என்ன தேட்டம் இருக்கு?"

சரோஜா குழந்தைபோல் விக்கி விக்கி அழுதாள்.

சந்திரா வேதனையுடன் ஆறுதல் கூறினாள்...

"இப்பத்தான் காணிய ஈடுவைச்சு கொழும்புக்கு அனுப்பலா மெண்டிருக்க நாங்க பயந்தது போலவே நடந்திட்டுது. மகனத் தேடிப்போன இவர இன்னும் காணயில்ல. அதுதான் பயமாயிருக்கு."

விம்மலுடன் கண்ணீர்...

"என்ன நடந்தது? எங்க தேடிப் போனவர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரைக் கைகளால் அழுத்தித் துடைத்தாள்.

"நாங்க நல்ல நித்திர..."

சரோஜாவின் நா வறண்டதை அவதானித்த சந்திரா தண்ணீர் எடுத்துவந்து கொடுத்தாள்.

தண்ணீரைக் குடித்துவிட்டுத் தொடர்ந்தாள்.

"விடியப்புறம் நாலு மணி இருக்கும். கதவு தட்டும் சத்தம் கேட்டுது. நாங்க எல்லாரும் முழிச்சு ஒருவற்ற முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு பயந்துபோய் இருந்தோம்...

சத்தம் வரவர பெரிசாகிக் கதவில அடிக்குமாப்போல கேட்டுது... கதவு உடைஞ்சிடும்போல இருந்துது... நான் தடுக்கயும் கேளாம இவர் கதவைத் திறந்தார்... யாரோ ரெண்டுபேர் சட்டென உள்ள வந்தாங்க... அவங்கட கையில சின்னத் துவக்கு இருந்தது.

'வினோதனை விசாரணைக்காக கூட்டிப்போக வந்தனாங்க. சத்தம் போடாம எங்களோட விட்டா விசாரிச்சிட்டு விட்டிடுவோம். குழம்பினா நீங்கதான் கஸ்ரப்படுவீங்க...'

சொல்லிக்கொண்டு வினோதனின் கையப் பிடிச்சாங்க... நாங்க வாயடைச்சுப்போய் நிண்டோம். உடம்பு நடுங்கியது. அவன் எங்களக் கனிவாகப் பார்த்தான்... அந்தப் பார்வை இப்போதும் என்னட கண்ணில நிக்குது சந்திரா...

அவனை விட்டுவிடுமாறு கெஞ்சினேன். அழுதேன்... அவரும் அழுதார்... பிள்ளைகளும் அழுதனர். அவங்க எதையும் காதில வாங்கிக்கொள்ளயில்ல. சேட் போடும்வரை நின்று கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றாங்க. வெளியால ஓடிவந்து பாக்கேக்க வெள்ள வான் வெளிக்கிட்டு போகுது. எங்களால என்னதான் செய்ய ஏலும்?

விடிஞ்சும் விடியாததுமாய் இவர் விசாரிக்கப் போயிட்டார்... மத்தியானமாயும் போகுது இவர என்னும் காணன்."

பிரியா தேசிக்காய் கரைத்து சரோஜாவுக்குக் கொடுத்தாள்.

தன் வேதனையைப் பகிர்ந்துகொண்ட மனநிறைவில் சிறிதுநேரம் ஓய்வெடுத்துவிட்டு புறப்பட்டுச் சென்றாள்...

மனித உரிமைகள் ஆணைக்குழு, இராணுவ முகாம்கள், அமைப்புகளின் அலுவலகங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என முக்கியமான இடங்களுக்கெல்லாம் அலைந்தும் பயனின்றி சோர்ந்து போய் வந்தார் மகேந்திரன்.

வீட்டில் எவருக்கும் நிம்மதியில்லை. சரோஜா அழுது கொண்டே இருந்தாள்.

மறுநாளும் அவ்வாறே... காலையில் புறப்பட்ட மகேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடமும் அலைந்து விசாரித்துவிட்டு பொழுது சாயும்போதுதான் ஏமாற்றத்துடன் வந்தார்.

இரண்டு நாட்களாக அலைந்து உடம்புக்கு முடியாமல் படுத்துக் கிடந்த மகேந்திரன், மனைவி - பிள்ளைகளின் கண்ணீரைச் சகிக்க முடியாமல் புறப்பட்டு மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்கு மட்டும் சென்றுவிட்டு இயலாமையால் திரும்பிவிட்டார்.

ஆனாலும், தன் மகன் வருவான் என்ற நம்பிக்கையில், வாசலில் அவன் வரவிற்காய் காத்திருந்தாள் சரோஜா...

'நெல்லியடிப் பகுதியில் இனந்தெரியாத ஒரு சடலம் கண்டு பிடிக்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக' பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

மகேந்திரன் உடனேயே வைத்தியசாலைக்குப் புறப்பட்டு விட்டார் அவனாக இருக்கக்கூடாது என்ற வேண்டுதலுடன்...

சரோஜாவும் இதே வேண்டுதலுடன் வாசலைப் பார்த்தவாறே இருந்தாள்.

நீண்ட நேரத்தின் பின்னர் மகேந்திரன் முச்சக்கர வண்டியில் வந்திறங்கினார்.

வீட்டிலிருந்தவர்கள் இமை மூட மறந்தவர்களாய் அவரையே பார்த்துக்கொண்டிருந்தனர்...

வீட்டிற்குள் புகும்வரை அமைதியாய் இருந்த அவர், தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் தரையில் இருந்தவாறு கதறிய கதறலும், வெளியேற்றிய கண்ணீரும் வினோதனின் முடிவை தெளிவுபடுத்தியது...

ஆனந்தனும் சந்திராவும் வந்திருந்தனர்...

சரோஜாவின் கதறலுடன் சந்திராவின் அழுகையும் இணைந்து கொண்டது...

அடையாளம் உறுதிபடுத்தப்பட்ட பிரேதத்தை வீட்டுக்குக் கொண்டுவர இரவாகிவிட்டது. மகேந்திரன் எடுத்துக்கொண்ட முயற்சியால்தான் இப்போதாவது பிரேதத்தைக் கொண்டுவர முடிந்தது.

மதியம் மற்றும் இரவு சமைத்த உணவுகளை சந்திரா அனுப்பி வைத்திருந்தாள்.

சில நிபந்தனைகளுக்கு உட்பட, கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்டதற்கமைய மறுநாள் காலை தீயில் சங்கமமாகியது வினோதனின் உடல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆனந்தன் நெடுநேரமாக விறாந்தையில் போவதும் வருவதுமாக இருந்ததை அவதானித்தவாறு அம்மியில் மிளகாய் அரைத்துக்கொண்டிருந்தாள் சந்திரா.

"என்னங்க எந்தக் கோட்டையப் பிடிக்க கடுமையான யோசனை?"

"சவுதிக்கு வேலைக்குப் பெண்கள் தேவையாம்..."

"அதுக்கு நீங்க என்னசெய்யப் போறீங்க?"

..........

"பிரியாவை... அனுப்புவோமா...?"

தயங்கியபடி ஆனந்தன் சொல்லி முடித்ததும், அரைப்பதை நிறுத்திவிட்டு சந்திரா துடிப்புடன் எழுந்தாள்.

"என்ன சொல்லுறீங்க. பிரியாவை அனுப்புறதா?"

"அனுப்பினா என்னெண்டு கேக்கிறன்?... கொஞ்சப் பொம் பிளகளா போகுதுகள்?... நான் நீயெண்டு அடிபட்டுக் கொண்டெல்லா போகுதுகள்."

"மற்றவங்க போறாங்கெண்டதுக்காக படிச்சுக்கொண்டி ருக்கிற அவளையா அனுப்புறது"

"படிச்சு அவ இப்ப என்னத்தக் கிழிக்கப் போறா?... என்னால வேலை செய்ய ஏலுமெண்டா நான் ஏன் கேக்கிறன்? மேசன்வேலை செய்யிற ஆக்களுக்கு இன்சூரன்சா, பென்சனா, புறவிடெண்ட் பண்டா இருக்கு. அப்பிடி ஏதும் இருந்துதெண்டா பறவாயில்ல... இப்ப என்னத்துக்கு சொல்லுறன். ஒரு நாலு வருஷம் நிண்டிட்டு வந்திற்றா ளென்றா எங்கட கஸ்ரமும் தீரும். அதுகளின்ர எதிர்காலமும் நல்லா இருக்குமெல்லா."

சந்திரா சற்று அமைதியானாள். 'கஸ்ரம் தீரும்' என்ற வார்த்தை சந்திராவை சிந்திக்க வைத்திருக்கவேண்டும்.

"அவளை அனுப்பிப்போட்டு நாங்க யோசிச்சுக்கொண்டிருக் கிறதாங்க?"

"நாலு வருஷம் தானேயப்பா. நெடுக அங்கையா நிக்கப் போறாள்... வந்துவந்து போவாள்தானே. இஞ்ச பார். நீ எதையும் சொல்லி அவளைக் குழப்பிடாத. நான் முடிவு எடுத்து அதுக்கேற்ற ஆயத்தங்களையும் செய்திட்டன். அவளைக் கூப்பிட்டு நல்லாப் புத்திமதியைச் சொல்லி சம்மதிக்கவை... தெரியுதா?..."

ஆனந்தனின் வார்த்தைகள் சற்று கடுமையாக வெளிவந்தன...

"என்ன பேசுறீங்க. அவள் பிஞ்சுக் குழந்தையெல்லா?"

"சொல்லுறதக் கேள். இது நல்ல சந்தர்ப்பம். ஏஜன்சி நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுஷன். அவரை எனக்கு முன்னமே தெரியும். எங்கட கஸ்ரத்தத் தெரிஞ்சதால, அனுப்புறத்துக்கு வாங்கிற காசில அரவாசியைத்தான் முதலில கேக்கிறார். மிச்சத்தை மாசாமாசம் தரச்சொல்லுறாரெண்டா பாரேன்... இப்படி ஆரப்பா இந்தநாளில சம்மதிப்பாங்க? இந்தச் சந்தர்ப்பத்த விட ஏலுமா?"

ஆனந்தன் தனது முடிவை மாற்றப்போவதில்லை என்பதை சந்திரா புரிந்துகொண்டாள். அதனால் வேறு வழியின்றி அடங்கி விட்டாள்.

சவுதி பயணம் பற்றி பிரியாவிடம் சந்திரா சொல்லிக் கொண்டிருக்கையில் செருமலுடன் நுழைந்தார் ஆனந்தன்...

பிரியாவின் இதயம் படபடத்தது.

சில நிமிட அமைதி...

"என்னப்பா நான் படிக்கிறனெல்லா?"

"படிச்சாப்போல வேலை கிடைக்கப்போகுதாக்கும்."

"உங்க எல்லாரையும் விட்டுட்டு..."

"அதுக்கென்ன? நன்மைக்குத்தானே!... பிரியா, பிரியந்தன் உயிரோட இருந்திருந்தா உன்னக் கரச்சல் படுத்தமாட்டன். இப்ப நீதான் குடும்பத்தில மூத்தபிள்ள. உனக்கு குடும்பத்தின்மேல அக்கறை இருக்கா? இல்லையா?... அக்கறை இருக்கெண்டத சவுதிக்குப் போய் நிரூபி."

இருவரும் கவிழ்ந்த தலையுடன் அறையை நோக்கிச் சென்றனர்...

"ஆனந்தனண்ணே... ஆனந்தனண்ணே..."

சிரித்த முகத்துடன் ஏஜன்சி நின்றார்... ஆனந்தனும் பதிலுக்குச் சிரித்தபடி உள்ளே அழைத்து வந்தார். பிரியாவும், சந்திராவும் கதிரையைவிட்டு எழுந்து வரவேற்றனர்.

"அண்ணே! இவர் பிள்ளைய சவுதிக்கு அனுப்பிறதெண்ட பிடிவாதத்தில் இருக்கிறார். பொம்பிளப் பிள்ளையெல்லா பய மொண்டும் இல்லையாண்ணே?"

"ஏனம்மா அப்பிடிக் கேக்கிறீங்க? எத்தின பொம்பிளகள் போயிருக்குதுகள். இப்பவும் போய்க்கொண்டுதான் இருக்குதுகள். ஒண்டுக்கும் பயப்பிடாதயுங்கோ."

"ஏஜன்சிமார் இடையில விட்டுட்டு போயிடுறதாக சொல்லுறாங்களே."

"யூறோப் நாடுகளுக்குப் போறவங்களுக்குத்தான் அப்பிடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கிறது. மிடிலீசுக்கு அப்பிடியில்ல... அரசாங்கத்தின்ர அனுமதி யோடத்தான் நாங்க ஆக்கள அனுப்புறோம். அதால பயப்படத் தேவையில்லை."

சந்திரா சற்றுத் தெளிவடைந்ததுபோலக் காணப்பட்டாள்.

"அம்மா பிள்ளைக்கு எத்தின வயது?"

"பதினேழு"

"ஓகோ...! பதினெட்டு வயது முடியவெல்லா வேணும்... சரி, அதொண்டும் பிரச்சினயில்ல... அண்ணே! சவுதிக்கு முஸ்லீம் பெண் களத்தான் வேலைக்கு எடுப்பாங்க. அதனால முஸ்லீம் பேரிலதான் பிள்ளைக்கு பாஸ்போட் செய்யவேணும். அதோட வயசையும் கூட்டிப் போட்டு எடுத்திடலாம்."

"என்ன சொல்லுறீங்க. இப்பிடிச் சுத்துமாத்துச் செய்தா பிரச்சின வராதா?"

சந்திராவின் வாயிலிருந்து இந்தக் கேள்வியை எவரும் எதிர்பார்க்கவில்லை...

மௌனத்துடன் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர்...

"ஏனம்மா பயப்பிடுறீங்க? இப்பிடி எத்தினபேருக்கு அவங்கட பேரையும், வயசையும் மாத்தி பாஸ்போட் எடுத்து அனுப்பியி ருக்கிறம். செற்பண்ணித்தானாம்மா செய்கிறது... இதுவர ஒருத்த ருக்கும் ஒரு பிரச்சினையும் வந்ததில்லயே... இதுகளெல்லாம் உங்களுக்குச் சொல்லக்கூடாது. சொன்னா இப்பிடித்தான் ஆயிரத் தெட்டு கேள்விகள்."

ஏஜன்சி சொல்லி முடித்ததும் சந்திரா மௌனமானாள்...

பிரியாவை சவுதிக்கு அனுப்புகிற செலவில் அரைவாசியை முற்பணமாகவும், மிகுதியை மாதாமாதம் சம்பளம் வந்தபின்னர் பெறுவதாகவும் ஏற்றுக்கொண்டார். அரைவாசிப் பணமும் ஆனந்த னிடம் இல்லையென்பது ஏஜன்சிக்குத் தெரியும். அதனால் வீட்டை உரிய தொகைக்கு ஈடுவைக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறிச்சென்றார். ஆனந்தனின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை...

தாய், சகோதரிகள் மற்றும் நெருங்கிய உறவினர்கள் கண் கலங்கி நின்றனர்.

மணிரெத்தினம் பிரியாவின் தலையில் கை வைத்து ஆசி வழங்கும்போது விம்மி விம்மி அழுதார். பிரியாவை அது சங்கடத்தில் ஆழ்த்தியது.

"அங்கிள் நீங்கள் ஏன் அழுகிறீங்க... அழவேண்டிய ஆக்கள் கம்பு மாதிரி நிங்கிறாங்க..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு புறப்பட ஆயத்தமானாள் பிரியா.

வாசலைத் தாண்டும்முன் குழந்தையாய் மாறி அழுத அவளை யாரும் தடுக்கவில்லை...

சில நிமிடங்களில் அமைதியாகி கண்ணீருடன் விடை பெற்றாள்... ஆனந்தனும் ஏஜன்சியும் கூடவே கொழும்புக்குச் சென்றனர்.

'நஜீம்மா', வயது 19 என பதியப்பட்டிருந்த கடவுச்சீட்டுடன் பிரியா விமானத்தில் ஏறினாள்...

பிரியா சவுதி சென்று ஒரு வாரமாகியும் சந்திராவின் அழுகை நின்றபாடாக இல்லை. அனேகமாக வீட்டு மூலையில் கால்களை மடக்கிப் பிடித்தபடி அழுதுகொண்டே இருப்பாள். எவரது சமாதான மும் அவள் அழுகையைக் கட்டுப்படுத்தவில்லை.

இரண்டு வாரங்களின் பின்னர் பிரியாவிடமிருந்து கடிதம் வந்தது. 'தான் ஒரு வீட்டில் வேலை செய்வதாகவும், அந்த வீட்டுக்கார அம்மா தன்னோடு அன்பாகப் பழகுவதாகவும், எந்தக் குறையுமின்றிச் சந்தோஷமாக இருப்பதாகவும்' எழுதியிருந்தாள். அப்போதுதான் சந்திராவிடம் அழுகையுடன்கூடிய புன்னகையை காணமுடிந்தது.

மூன்று மாத முடிவில் பிரியாவின் சம்பளம் வங்கிக்கு வந்ததும் எல்லையில்லா மகிழ்ச்சி ஆனந்தனுக்கு. செலவுக்கு எடுத்ததுபோக மிகுதியை ஏஜன்சியின் கடனுக்கு கொடுத்தார்...

நாளடைவில் ஏஜன்சியின் கடன் முற்றாகத் தீர்க்கப்பட்டு, வீடும் மீட்கப்பட்டது. முன்னைய வாழ்க்கை நிலையிலிருந்து முற்றிலும் மாற்றம் பெற்றது ஆனந்தனின் குடும்பம்...

பிரியவதனியைவிட பிரிந்தா ஆடம்பரமான, நவநாகரீக வாழ்க்கை முறைக்குள் மெல்லமெல்ல தன்னை இணைத்துக் கொண்டாள்...

சந்திராவிடம் மாற்றம் காணப்பட்டாலும் அவள் இதயத்தை ஏதோ உறுத்திக்கொண்டிருப்பது போன்ற பிரமையிலேயே இருந்தாள்.

சுற்றாடலில் தனது குடும்பம் உயர்ந்த நிலைக்கு வளர்ந் துள்ளமை கண்டு ஆனந்தன் தனக்குள்ளே பெருமிதம் கொண்டார். 'தனது முயற்சியினால், மகளை சவூதிக்கு அனுப்பியதால்த்தான் இந்த உயர்நிலையைப் பெறமுடிந்தது' என மார்தட்டிச் சொல்லுவார். தன்னுடைய வழியைக் கடைப்பிடிக்கும்படி தனக்குத் தெரிந்தவர் களுக்குச் சொல்லிடத் தவறுவதில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12

சில வருடங்களாக பாவனையற்றிருந்த தோட்டக் காணியில் பயிர் செய்வதற்கு ஆனந்தனுக்கு அனுமதி கிடைத்தது.

நாரி வருத்தம் காரணமாக தோட்டம் செய்ய முடியாமல் கைவிட இருந்த நிலையில் மணிரெத்தினத்தின் விடாமுயற்சி, தூண்டுதலினால் இருவரைக் கூலிக்கமர்த்தி பயிர்செய்வதற்கு சம்மதித்ததுடன், கையிலிருந்த மற்றும் கைமாற் றாகப் பெற்ற பணத்தைக் கொடுத்து வேலையை ஆரம்பிக்கவும் செய்தார் ஆனந்தன்.

காணியையும் அதனிலிருந்த கிணற்றின் சுற்றாடலையும் துப்பரவு செய்துவிட்டு, நீரிறைக்கும் இயந்திரத்தின்மூலம் கிணற்று நீரை இறைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்து, இறைக்கும் நீரை காணியில் பரவவிட்டு, அதனைக் கண்காணித்து வாய்க்கால் வெட்டி சீர்செய்து கொண்டிருந்தார் மணிரெத்தினம்.

ஆழமான கிணறு என்பதால் நீர் முற்றாக வெளியேற நீண்ட நேரம் காத்திருக்கவேண்டியிருந்தது.

பதறியடித்துக்கொண்டு ஓடிவந்தார் மணிரெத்தினம்...

ஆனந்தன் பயந்துவிட்டார்.

"என்ன மணிரெத்தினம் இப்பிடி ஓடிவாறா?"

"கிணறு இறச்சனாங்க..."

"அதுதான் தெரியுமே?"

"அதுக்குள்ள..."

"அதுக்குள்ள?"

"எலும்புகள் கிடக்கு"

"எலும்புகளா?"

ஆனந்தனின் உடல் நடுங்கியது.

"என்னண்டு அதுக்குள்ள...?"

"ஆருக்குத் தெரியும்!. நீ ஒருக்கா வா."

"நான் அங்க வரயில்ல என்ன செய்யவேணுமோ அத நீயே செய்துகொள்... அத என்னால பாக்க ஏலாது".

"விதானையட்டதானே சொல்ல வேணும்?"

"அதுதான் நல்லது"

"விதான இப்ப எங்க நிக்கிறாரோ தெரியாது. எனக்குத் தெரிந்த பொலிஸ்காரன் இருக்கிறான் அவனட்ட விபரத்தச் சொல்லி செய்யட்டா?"

"ஆரட்ட எண்டாலும் சொல்லி செய்யன். எங்கள இப்பத்

தானே விட்டவங்க. ஆராரு செய்து போட்டாங்களோ தெரியாது.”

“அப்ப நான் வரட்டா?”

ஆனந்தன் தலையசைத்தார். மணிரெத்தினம் புறப்பட்டார்...

கிராமசேவகர் வந்திருந்தார்.

பொலிசாரும் கூடவே சிலரும் வந்திருந்தனர்.

‘அம்புலன்ஸ்’ வந்திருந்தது.

நீரிறைக்கும் இயந்திரம் மூலம் கிணற்றுக்குள் இருந்த நீர் முற்றாக வெளியேற்றப்பட்டது.

பொலிசாரால் அழைத்துவரப்பட்டவர்கள் கிணற்றுக்குள் இறங்கி அங்கே கிடந்தவற்றை சேகரித்து மேலே கொண்டுவந்தனர்.

இணைப்பு விடுபட்ட நிலையில் எலும்புகள்...

பெண்கள் அணியும் நைலோன் துணியிலான ஆடைகளும் சிதைந்த நிலையில் காணப்பட்டன.

மூன்று மண்டை ஓடுகள் மற்றும் எலும்புத் தொகுதிளைக் கொண்டு மூன்று மனிதர்களது எலும்புகள் என இனங்கண்டனர்.

மூவரும் வளர்ந்தவர்கள்...

ஒரு மண்டை ஓடு நொருங்கிக் காணப்பட்டது.

கிணறு இறைத்தவர்களிடம் அடுக்கடுக்காய் பல கேள்விகள். மணிரெத்தினத்திடமும் கேள்விகளுக்குக் குறைவில்லை.

எலும்புகள் யாவும் ‘அம்புலன்சி’ல் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டன.

ஆரவாரம் அடங்கிய பின்னர் மணிரெத்தினத்தின் கூலி யாட்கள் தயங்கித் தயங்கி கிணற்றைத் துப்பரவு செய்தனர்.

தனது தோட்டக் காணியில் புகையிலைச் செடிகள் செழித்து வளர்வதுகண்டு மிதமிஞ்சிய களிப்பில், அந்தரத்தில் மிதப்பதுபோல் நின்றார் ஆனந்தன்.

தோட்ட வேலையை, பயிர்களின் வளர்ச்சியை ஆனந்தன் தவறாது கண்காணித்து வந்தபோதும் கிணற்றுக்குள் கிடந்த எடுக்கப்பட்ட எலும்புகளினால் உண்டான மனவுளைச்சலிலிருந்து விடுபட பல நாட்கள் சென்றன.

பலரது அறிவுரைகளுக்குப் பின்னர் ஓரளவு தேறியிருந்த ஆனந்தனுக்கு, தினமும் காலையில் தோட்டத்திற்குச் சென்று அதன் செழிப்பைக் கண்குளிரப் பார்ப்பதே பிரதான வேலையாக இருந்தது. மார்பளவு உயரத்திற்குப் பச்சைப் பசேலென வளர்ந்திருக்கும் புகையிலைச் செடிகளை கைகளால் அணைத்து இலைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிட்டு மகிழ்வார்.

அதீத வளர்ச்சி கண்டுள்ள செடிகளுக்குத் தவறாது நீர் பாய்ச்சுவதிலும், நோய்க் கிருமிகள் தொற்றி விடாமல் மருந்து அடிப்பதிலும் மணிரெத்தினம் கண்ணும் கருத்துமாக இருந்தார்.

மணிரெத்தினத்தின் அக்கறை ஆனந்தனை புளகாங்கிதம் அடையவே செய்தது. ஆனாலும், அவர் எப்போதும் பீடியும் கையுமாக இருப்பதையும், அடிக்கடி இருமுவதையும் முற்றாக வெறுத்தார். இதுபற்றிச் சுட்டிக்காட்டிப் பயனின்றி விட்டுவிட்டார்.

தன்னுடைய கண்ணே பட்டுவிடுமென அடிக்கடி கூறும் ஆனந்தன், மற்றவர்களால் கண்ணூறு ஏற்பட்டுவிடாமல் தோட்டத் தின் நடுவில் உயரமான தடியில் 'வெருளி' ஒன்றைக் கட்டிவைக்க ஏற்பாடு செய்தார்.

ஒரு மனிதன் தூக்கில் தொங்குவதுபோல அமைந்துள்ள வெருளியின் வினோதமான அமைப்பு நிச்சயம் மனிதர்களின் பார்வையைத் தன்பக்கம் இழுக்கவே செய்யும் என்பது ஆனந்தனின் நம்பிக்கை.

காணியை உழுது செப்பனிட்ட பின்னரே கண்டுகள் நடுதல் வழமையாக இருந்தபோதிலும் இடையூறுகள், பருவம் பிந்திய காலம், போதிய அவகாசமின்மை போன்றவற்றால் உழுதலைத் தவிர்த்து, சில நாட்களிலேயே பற்றைகளை அழித்து, எரித்து காணியைத் துப்பரவு செய்து புகையிலைக் கன்றுகளை நடுவதற்கு முடிவெடுத்தனர்.

கட்டாந் தரையாய்த் தெரிந்த அந்தத் தோட்டக் காணி புகையிலைக் கன்றுகளால் மெருகூட்டம் பெற்றது. கன்றுகளை நட்டதுடன் பாத்திகட்டி, நீரிறைக்கத் தொடங்கினார் மணிரெத்தினம்.

முறைமாறிச் செய்யப்பட்ட தோட்டமென்பதால் பெரும் வருவாயை எதிர்பார்த்திருக்கவில்லை. நட்டமில்லாமல் கொஞ்ச வருவாய் வந்தாலே போதும் என்ற நிலையில் அந்த விஷப் பரீட்சையில் இறங்கியிருந்தனர். ஆனால், அவர்கள் எதிர்பார்த்ததை விட பல மடங்கு பயனைத் தருவதைப்போல் செடிகள் வளர்ச்சி கண்டமை ஆனந்தனை அதிர்ச்சியடையவே செய்தது. 'கடவுள் கொடுத்த வரம்' என்றே நம்பினார். அதனால், தினமும் கோவிலுக்குச் சென்று நன்றி செலுத்திடத் தவறுவதில்லை.

குறித்த காலத்தில் செடிகள் அடைந்த முதிர்ச்சியினால் கூலியாட்கள் மூலம் பக்குவமாய் இலைகளை வெட்டுவித்தார் ஆனந்தன். ஏற்கெனவே பலமுறை புகையிலைச் செய்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட்டிருந்ததால், அதில் அனுபவம் பெற்றவராக இருந்ததுடன், இலைகளை அடுக்கி உலரவைக்கும் முறையில் முறையான நுட்பம் பயன்படுத்தவேண்டும் என்பதையும் அறிந்திருந்தார்.

தமது அனுபவத்தைப் பயன்படுத்தி கூலியாட்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தார்.

செடிகளிலிருந்து பெற்றுகொள்ளக்கூடிய அதிஉச்சப் பயன் பெறப்பட்ட பின்னர், காணி வெறிச்சோடிக் காணப்பட்டது. சிறு தண்டுகளும், அதன் உயிர்ப்பை வெளிப்படுத்தும் இளந்துளிர்களுமே புகையிலைச் செடிகளின் எச்சங்களாக காட்சியளித்தன...

கிடைத்த நிறைவான வருவாயினால் அடுத்த செய்கையை ஆரம்பிப்பதற்கு காலம் தாழ்த்த விரும்பாமல் ஆயத்தங்களில் ஈடுபடலானார் ஆனந்தன். முன்னராக தனது வருவாயில் ஒரு பகுதியை மணிரெத்தினத்துக்குக் கொடுத்து மகிழ்ந்தார்.

நாள்தோறும் கூலி பெற்றிருந்ததால் பணத்தைப் பெறுவதற்கு விருப்பமில்லாதபோதும் மகளின் திருமணத்திற்கு பட்ட கடனை நினைவிற்கொண்டு கலங்கிய கண்களுடன் பெற்றுக்கொண்டார்.

தமது கடனின் பெரும்பகுதி மீளளிக்கப்பட்டமை மணிரெத்தினம் குடும்பத்துக்கு மகிழ்வைக் கொடுத்தது.

காணியை உழாமலே கன்றுகளை நட்டபோது அவரது வாழ்வில் சந்தித்திராத வருவாயைத் கொடுத்ததென்றால் முறையாக உழுது செப்பனிட்டுக் கன்றுகளை நட்டால் மேலும் பயனைத் தருமென நம்பினார் ஆனந்தன்.

சிலநாட்களாக அகோர வெயில் பூமியை ஆட்கொண்டிருந்த போது தோட்டக்காணியில் முளைத்திருந்த புற்களும், சிறு செடிகளும், எச்சமாய் நின்ற தண்டுகளும் காய்ந்து, கருகிக் காணப் பட்டன.

இதுவே நல்ல தருணமென காணியை உழுதிட முடிவெடுத்து, ஒரு உழவு இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்தி வேலையைத் தொடங்கி விட்டார்.

உழவு இயந்திரம் காணியின் உட்பகுதியால் வட்டமடிக்க, அதில் இணைத்திருந்த கலப்பை மண்ணை ஆழமாகத் தோண்டியவாறு இழுத்துச் செல்ல, மணல் புரண்டு புரண்டு மேலெழுந்து கொண்டிருந்தது.

கலப்பை மண்ணை அழுத்தித் தோண்டும்போது எழுந்த ஓசைகளையோ, வீசிய அருவருப்பான மணத்தையோ சாரதி உணர்ந்ததாகத் தெரியவில்லை. வியர்க்க வியர்க்கச் சுற்றிச் சுழன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுது தனது வேலையை முடித்து வெளியேறினான்.

உழவு இயந்திரம் சென்ற பின்னர், தனது எதிர்கால கனவுகளுடன் உழுத நிலத்தைப் பார்வையிட்டவாறு வரம்பு வழியாக சென்றுகொண்டிருந்த ஆனந்தன் சிறிது தூரம் சென்றதும் அரவத்தை மிதித்தவர்போல தடுமாறி நின்றார்...

அவரது கண்கள் அகல விரிந்திருந்தன...

பயத்தால் உடல் நடுங்கியது...

நெற்றியிலிருந்து வழிந்த வியர்வையை கைகளால் வழித்துத் துடைத்துக்கொண்டு பதட்டத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தார்...

சிறிது நேரத்திற்குள் பலநூறு எண்ணங்கள் நெழிந்து, புரண்டு மேலெழுந்துகொண்டிருந்தன. தனது உணர்வுகளை அடக்கித் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவராய் வரம்பிலிருந்து இறங்கி மண்ணில் கால் வைத்தார்... உடல் சிலிர்த்தது...

உழுததால் புரண்டு கிடந்த மண்ணில் உடைந்த மனித எலும்புகள் கண்சிமிட்டிக்கொண்டிருந்தன...

காற்றோடு கலந்து வந்த புலால் நாற்றம் வெறுப்பையும் மீறி மூக்கினுள் நுழைந்தது...

அவரால் நிலத்தைப் பார்க்கவோ, மணத்தை முகரவோ, மேற்கொண்டு நடக்கவோ முடியவில்லை...

இதயத் துடிப்பு அதிகமாக இருந்ததால் அவரையறியாமலே பயம் அவருடன் ஒட்டிக் கொண்டது. சிந்தனையில் பல எண்ணங்கள் மாறி மாறி எழுந்தன...

தன்நிலை மறந்தவராக நிலத்தை பார்த்துக் கொண்டே நின்றார்...

'என்றோ ஒருநாள் இந்த மண்ணில் புதைக்கப்பட்ட மனித உடல்களின் எச்சங்கள்...'

நினைத்தபோது அவர் உடல் சிலிர்த்தது...

அதீத வளர்ச்சி கண்டு வெட்டப்பட்ட புகையிலைச் செடிகளின் உரமாக மனித சதைகளே இருந்துள்ளன...

தனது கண்கள் வழியாக இரத்தம் கசிவதுபோல் எரிந்ததை ஆனந்தன் உணர்ந்து கொண்டார்...

ஒரு வாரமாகியும் தோட்டக்காணியில் கண்ட காட்சியின் நினைவிலிருந்து ஆனந்தன் மீள்வதாக இல்லை.

தன்னை மறந்து கதிரையில் அமர்ந்திருந்தார்.

"எந்தப் பாவிகளோ?"

"என்னங்க உங்கட பாட்டில கதைக்கிறீங்க..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரா கேட்டபோதுதான் சிந்தனையிலிருந்து மீண்டார்.

“என்னங்க! பிரியாவட்ட இருந்து கடிதங்களக் காணயில்ல.”

“போக்குவரத்து பிரச்சினையாக இருக்கும்”

ஆனந்தன் சமாதானம் கூறினார்.

சந்திரா அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை. அவளின் இதயத்தில் சோகம் புகுந்துகொண்டது. இதன் காரணமாக குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள்...

முன்னரைவிட பல மடங்கு பணம் வங்கிக்கு வந்திருந்தது.

ஆனந்தன் சந்தோஷத்தில்...

பணம் வந்திருந்தும் கடிதம் வராமையால் அமைதி இழந்தவளாகச் சோர்வுடன் காணப்பட்டாள் சந்திரா... கண்ணீரும் கம்பலையுமாக அலைந்தாள்.

பிரியாவைப் பற்றிப் பலரிடமும் விசாரித்துப் பார்த்தும் அவளுக்கு நல்ல பதில் கிடைக்கவில்லை.

ஏஜன்சியும் ‘கொழும்பில் விசாரித்து வருவதாக’ சொல்லிக் கொண்டேயிருந்தார் எதனையும் அறிந்திராதவராய்...




பாடசாலை சென்ற பிரியவதனி அழுதபடி திரும்பி வந்தாள்...

மரங்களுக்கு நீரூற்றிக்கொண்டிருந்த சந்திரா பிரியவதனியைக் கண்டதும் உடல் நடுங்க அவளைத் தேடிவந்தாள்.

“என்னம்மா பள்ளிக்கூடம் போகயில்லையா திரும்பி வந்திற்றா?”

பிரியவதனியின் கண்களில் வடிந்திருந்த நீரைக் கண்டதும் சந்திராவின் உள்ளம் பதறியது. அருகே வந்து அவள் தோள்களை அணைத்துக்கொண்டாள்.

“என்ன நடந்ததம்மா? ஏன் அழுதிருக்கிறாய்? பள்ளிக் கூடத்தில ஏதும் பிரச்சினையா?”

“பள்ளிக்கூடத்தில இல்லையம்மா போற றோட்டிலதான் பிரச்சின.”

“றோட்டில என்ன பிரச்சின...?”

“ஒரு கழிசற என்னப் பாத்து அடிக்கடி சிரிச்சுகொண்டு திரிஞ்சான். நான் அவனப் பாக்காமத்தான் போய்வந்தனான். இண்டைக்கு நான் தனியப் போறதப் பாத்து, கிட்ட வந்து கதகேக் கிறான். ‘ரெலிபோன்’ இருந்தா நம்பரத் தாவெண்டு கேக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூல்பாருக்கு போவோமா? எண்டு கேட்டுக் கரச்சல் படுத்துறான். அதுதான் திருப்பி வந்திற்றன்... சிலவேளயில அவனட கூட்டாளிமார் அசிங்கமான பகிடிகளெல்லாம் விடுகிறாங்கம்மா..."

விம்மி விம்மி அழுதாள்...

சந்திரா அவள் கண்ணீரைத் துடைத்துவிட்டு யோசித்தாள்...

யாழ்ப்பாணத்தில் மலிந்துவிட்ட இந்தச் செயல் பெண்களைப் பெற்றவர்களுக்கு பெரும் தலையிடியே... சில பெற்றோர் தமது வேலைச்சுமையின் மத்தியிலும் தாமே பாடசாலைக்கு பிள்ளைகளுடன் சென்று வருவதுமாக இருந்தனர்.

ஓரளவு வசதி படைத்த சிலர் வாகனத்தை ஏற்பாடுசெய்து தினமும் பயணித்தனர்.

சந்திரா இவை இரண்டையும் செய்யமுடியாத சூழலிலேயே இருந்தாள்.

சிறிது நேரத்தின் பின்னர் ஏதோ முடிவெடுத்தவளாக உடை மாற்றிக் கொண்டு பிரியவதனியுடன் பாடசாலைக்குச் சென்றாள்.

வகுப்பு ஆசிரியரிடம் விடயத்தைக்கூறியதும் பிரியவதனியை உள்ளே வர அனுமதித்தார். அவளை வகுப்புக்கு அனுப்பிவிட்டு தான் அதிபரைச் சந்திப்பதற்காக அதிபரின் அறை வாசலில் காத்திருந்தாள்.

அழைப்பு வந்ததும் உள்ளே சென்றாள்.

நடந்த விபரங்களை அதிபரிடம் அமைதியாக, அதேவேளை கண்கலங்கக் கூறினாள்.

"அம்மா! இதுபற்றி நீங்க மாத்திரமில்ல எத்தினையோ பிள்ளைகள், தாய்மார் வந்து முறையிட்டிருக்கிறாங்க. இதால சில பிள்ளைகள் பாடசாலை வராமலே நிண்டுட்டுதுகள். நாங்க பொலிசில சொன்னாலும் றோட்டில நடக்கிறதுகளில அவங்க கவனம் செலுத்துறாங்கயில்ல. நாங்க என்னம்மா செய்ய ஏலும்?... நான் ஒண்டு சொல்லுறன் செய்யிறீங்களாம்மா?"

"சொல்லுங்க மேடம்..."

"அந்தப் பொடியன ஆரெண்டு அறிஞ்சு அவனட தாய் தகப்பனட்ட போய் விசயத்த, உங்கட கஸ்ரத்தச் சொல்லுங்க. ஒருவேளை அவங்களும் பெண்ணப் பெத்தவங்களாக இருந்தா உங்கட நிலமையப் புரிஞ்சுகெள்ளுவாங்க. அவங்களாக கட்டுப்படுத்தினாத்தான் இது முடிவுக்குவரும்..."

நன்றி கூறி வெளியேறினாள் சந்திரா...

மறுநாள், அந்தப் பையன் பற்றிய விபரங்களை அறிந்து கொண்டு கணவனுடன் அங்கு சென்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண வசதியானவர்கள் என்பதை வீடு உணர்த்தியது.

வெளி வாசலில் நின்று குரல்கொடுத்துவிட்டு உள்ளே சென்றனர்.

தாயும் தகப்பனும் வரவேற்றனர்.

தங்களை அறிமுகம் செய்துகொண்டு பிரியவதனி சொல்லிய விபரங்களை ஒவ்வொன்றாய் கண்ணீருடன் கூறினாள் சந்திரா.

அவர்கள் அமைதியாய் கேட்டுக்கொண்டு இருந்தனர்.

அதிர்ச்சி அவர்களின் முகத்தில் பிரதிபலித்தது.

"நீங்கதான் எங்கட மகனப்பற்றி இப்படி ஒரு விசயத்தச் சொல்லுறீங்க. வேறு யாரும் சொல்லயில்லயிங்க..."

மகனை விட்டுக்கொடுக்காமல் பேசினாள் தாய். இது இருவருக்கும் ஆச்சரியமாக இருந்தது.

"நாங்க உங்கட மகனக் குற்றம் சொல்லஎண்டு வரயில்லயிங்க. மகள் சொன்னதையும் முழுசா நம்பாம மற்றாக்களட்டையும் விசாரிச்சுப் போட்டுத்தானுங்க வந்திருக்கிறம்."

"நாங்க கஸ்ரப்பட்டனாங்க. எனக்கும் நாரி ஏலாது. பிள்ளகள் படிச்சாத்தான் பின்னுக்கு எங்களுக்கேனும் உதவியாயிருக்கும். இப்பிடியே நடந்தா அவள் பள்ளிக்கூடம் போகமாட்டென்று அழுகிறாள். நீங்கதான் இதுக்கு முடிவு காணவேணும். தயவுசெய்து எங்களுக்கு செய்யிற பெரிய உதவியாக அவள் படிக்கிறதுக்கு துணை செய்யுங்க."

கை குவித்து கும்பிட்டார் ஆனந்தன்.

"வயதுக்கு மூத்தநீங்க ஏன் கும்பிடுறீங்க... நீங்க ஒண்டுக்கும் யோசியாமப் போங்க. அவனட்ட விசாரித்து, இனிமேல் ஒண்டும் நடக்காமல் நாங்க பாக்கிறோம்."

ஆனந்தனும் சந்திராவும் மனநிறைவை அடைந்தனர்.

கரம் கூப்பிப் புறப்பட்டனர்.

புறப்படும் முன் அவர்கள் வழங்கிய குளிர்பானம் உடலுக்கும் மனதிற்கும் குளிர்ச்சியைக் கொடுத்தது...




கடுகண்ணாவ...

கிராமத்தின் நடுவே அமைதியான வீடு...

விறாந்தையில் மறைப்பில்லாத ஜன்னல் வெளிகள்...

அவற்றினூடாக தூரத்தே தெரியும் மலைக் குன்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனைச் சூழ்ந்திருந்த புகாரை ஊடறுத்த காலைக் கதிரவனின் கதிர்கள் மலைக்குன்றின் பசுமையான எழிலைக் கண்ணுக்கு விருந்தாக்கிக் கொண்டிருந்தன.

பிரியா அதனை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தாலும் அந்த எழில்மிகு காட்சியை இரசிக்கும் தன்மையை அறவே இழந்தவளாகவே காணப்பட்டாள்.

காலை இளந்தென்றலின் குளிர்மை உடலை உரசி ஸ்பரீசத்தை ஏற்படுத்தியபோதும் அவள் சலனமின்றியே நின்றிருந்தாள்.

வெறுத்த பார்வை... உறுத்தும் உணர்வுகள்... அதிகாலையின் மலர்வை இழந்த முகம்...

அவளது இதயத்தினுள் புகுந்து, புகைந்துகொண்டிருந்த நினைவுகளால் வெளிப்பட்ட அனல் சுவாசம் சுற்றாடலின் குளிர்மையையும் மீறி புகையாக வெளியேறியது.

முளைத்தெழுந்தவாறிருக்கும் வைரமேறிய நினைவுகளிலிருந்து விடுபட முடியாதவளாகத் தவித்தாள்.

"பிரியா! உனக்கு வைத்த தேத்தண்ணி ஆறிப்போகுது. போய்க் குடி. நான் போயிற்றுவாறன்..."

வேலைக்குப் புறப்பட்டுச் செல்லும் சசிகலாவின் குரல் கேட்டு திரும்பிய பிரியா, சசிகலாவைப் பார்த்து தலையசைத்துவிட்டு அவள் போவதையே பார்த்துக்கொண்டு நின்றாள்.

அனல் சுவாசம் மீண்டும் மீண்டும் தொடர்ந்து பெருமூச்சாக வெளியேறியது.

*'சசிகலா மட்டும் இல்லையென்றால்...?'*

தனக்குள்ளே எண்ணிக்கொண்டாள்.

"சில ஆண்டுகள் என்னுடன் ஒரே வகுப்பில் கல்வி கற்ற ஒன்றிற்காக அவள் செய்த செய்துகொண்டிருப்பவை அதிகம்... என்னைப் புரிந்துகொண்டவளும் அவள்தான்."

வார்த்தைகள் மெதுவாக வெளிவந்தன.

கண்களிலிருந்து வடிந்த நீரை தன் சுட்டிவிரலால் தட்டிவிட்டாள்.

கணநேரத்திற்குள் நினைவுகளை முன்னோக்கி நகர்த்தி தான் கடந்துவந்த கடினமான பாதையை ஒருதடவை புரட்டிப் பார்த்தாள்.

துன்பம்... துயரம்... ஏமாற்றம்...

கிளறப்பட்ட உணர்வுகள் கிலேசத்தைக் கொடுக்க மேலும் அங்கு நிற்கமுடியாதவளாய் உள்ளே நுழைந்தவள், சசிகலா கரைத்து வைத்துவிட்டுச்சென்ற தேநீரை எடுத்து ஒரே மூச்சில் குடித்து முடித்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சசிகலா வேலைக்குச் சென்ற பின்னர் உண்டான தனிமை அவளுக்கு வேதனையைக் கொடுத்தது. கண்கள் ஒரு தடவை விசாலமான அந்த மண்டபத்தை சுற்றிச் சுழன்று மீண்டன.

தனிமையின் வேதனை... உணர்வின் உரசல்கள்... எதிர்கால வாழ்வின் ஏக்கங்கள்... அவளை நிலைதடுமாறச் செய்தது.

கதிரையை இழுத்து மேசைக்கு முன்னால் போட்டுவிட்டு, அதில் அமர்ந்துகொண்டு, தனது இரண்டு முழங்கைகளை மேசையிலும், உள்ளங்கைகளை நெற்றியிலும் ஊன்றியவாறு தலை கவிழ்ந்து கொண்டாள்.

விம்மல் கட்டுப்பாட்டை மீறி வெளியேற கண்ணீர்த் துளிகள் மேசையில் விழுந்து தெறித்தன...

அவளிடமிருந்து வெளிப்பட்ட தொடர் விம்மல் உள்ளத்தில் உருண்டு நெகிழும் போராட்டத்தை உரைப்பவையாகவே தென் பட்டது.

சில நிமிடங்களில் தன்னைச் சுதாரித்துக்கொண்டு தலையை நிமிர்த்தி மேசையில் சிதறிக்கிடந்த கண்ணீர்ச் சிதறல்களை சேலையால் துடைத்தாள்.

தனக்குள்ளே ஏதோ முடிவெடுத்த மனநிறைவில் காணப் பட்ட அவள், மேசையில் கிடந்த வெற்றுப் பேப்பரை எடுத்து அதில் எழுதத் தொடங்கினாள்...

"அம்மா!..."

பிரியாவின் கண்கள் கலங்கின... விக்கல் எழுந்தது... தன்னை மறந்து குழந்தையைப்போல் அழுதாள்... தன் மனதின் பாரம் குறையும் வரை அழுதாள்... அழுதாள்... அழுதாள்...

சில நிமிடங்களில் புயலடித்து ஓய்ந்ததுபோன்ற அமைதி நிலை அவள் முகத்தில் தென்பட்டது. கண்ணீரைத் துடைத்தவாறு மனதை இறுக்கமாக்கிக்கொண்டு தொடர்ந்தாள்.

"என்னுடைய கடிதம் காணாது வேதனையில் இருப்பீர்கள் என்பதை உணர்வேன். அதனாலேதான் இதை எழுதுகிறேன். அம்மா! என்னை மன்னித்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு அறிவிக்காமலே சவூதியிலிருந்து நான் இலங்கைக்கு வந்துவிட்டேன். நான் சொல்ல வில்லை என்ற சங்கடத்திலிருப்பீர்கள். உண்மையான காரணத்தை நான் எப்படியம்மா உங்களிடம் சொல்லுவது? எதைச் சொல்லலாம் எதைச் சொல்லக்கூடாது என்று குழம்பிப்போயிருந்த என் அறிவுக்கு எதுவுமே எட்டவில்லை. தோழியிடம் சொல்ல வேண்டியவற்றை பெற்றவளிடம் எப்படியம்மா சொல்ல முடியும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் வேலையிலிருந்து விலகியதால் வருவாயிழந்து நிற்கும் தங்களின் நிலையை, உணர்வை நான் உணராமல் இல்லையம்மா. அதனால்தான் சொல்லாமலே என் பள்ளித்தோழியின் வீட்டுக்கு புறப்பட்டு வந்துவிட்டேன் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும் என்ற வைராக்கியத்துடன். அது தவாறா? இல்லை, அது என் கடமை. சவுதியில் இருந்துதான் உங்களைக் காப்பாற்றவேண்டுமென்ற நியதியில்லையம்மா.

அம்மா! நான் சவுதிக்குச் சென்றது, அங்கு வேலைசெய்து சம்பளம் அனுப்புவது மட்டும்தான் உங்களுக்குத் தெரியும். ஆனால், அங்கு நான் அனுபவித்த துன்பங்கள், அடைந்த வேதனைகள், எதிர்கொண்ட அத்துமீறல்கள் பற்றி எதுவுமே தெரியாது.

மௌனியாய் ஒரு மூலையில் நின்று சலசலப்பான உலகத்தைப் பார்க்கிறேன். அந்த சலசலப்பான உலகத்துடன் இணைந்துகொள்ள என்னால் முடியவில்லை.

நீங்க அடிக்கடி சொல்லுவீங்களேயம்மா அந்த... அந்த... எல்லாவற்றையும் தொலைத்தவளாக நிற்கிறேன். தொலைந்தவர்கள் கிடைக்கின்றார்கள். தொலைந்தவைகள் கிடைக்கின்றன. நான் தொலைத்தது கிடைக்கமுடியாத, மாற்றீடு செய்யமுடியாதவையம்மா...

நான் சாதாரணமானதொரு பெண்தான். அசாதாரண சக்திகள் எனக்கில்லையம்மா. அப்படி இருந்திருந்தால் அந்தக் களத்தில் வென்றிருப்பேன். முடியவில்லை. தோற்றுப்போனேனம்மா... தோற்றுப்போனேன்..."

அவளை அறியாமலே விம்மல்... கண்ணீர்...

தனது சட்டையால் துடைத்துக்கொண்டாள். முகத்தை கைகளால் மூடி அழுத்திவிட்டுக் கடிதத்தைத் தொடரலானாள்...

"அம்மா! தெய்வங்களை நான் பார்த்ததில்லை. ஆனால், சில மனிதர்கள் தெய்வங்களாகக் காட்சியளிக்கிறார்கள். தெய்வத்தின் குணங்களைக் கொண்டவர்களாக இருக்கிறார்கள். அதேவேளை சிலர் அதற்கு முற்றிலும் எதிர்மாறானவர்களாக இருக்கின்றார்கள். மிருகங்களாகவே மாறிவிடுகிறார்கள். அது ஏனம்மா கடவுளின் படைப்பில் இந்த பாகுபாடு?

ஒரே வீட்டில் இந்தத் தன்மைகளைக்கொண்ட மனிதர்களை வாழவிட்டது கடவுளின் தவறில்லையாம்மா? கடவுள் செய்த தவறுக்கு என்போன்றவர்கள் ஏனம்மா பலிக்கடாவாகவேணும்?

புயலில் சிக்கிய துரும்பின் நிலை என்நிலை. கண்ணீரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையாகி ஆறாத வடுவுடன் ஆகாயத்திடம் ஆதரவு கேட்டு நிற்கின்றேன். ஏன்..? ஏன்..? பெண்ணாய் பிறந்ததனாலா?

பெண்ணியத்தின் கொடுப்பனவு பெற்றவரின் நிறைவான சீதனம்தானே? அந்த சீதனம்...

சே! எப்படி எப்படி எல்லாமோ வாழவேண்டுமென எண்ணியிருந்தேன். இன்று... வீட்டைவிட்டு எங்கோ இருக்கிறேன்.

அம்மா! உங்களோடு ஒன்றாயிருந்து கூடிக்குலாவி மகிழ எனக்கும் ஆசைதான். இடையிலுள்ள ஊமைவெளிதான் தடையாக இருக்கின்றது.

அகதியாய் இன்னொருவர் வீட்டில் குடியேறினாலும் முன்னைய அடிமைத்தன வாழ்விலிருந்து விடுபட்டவளாகவே இருக்கிறேன். அது எனக்கு ஆறுதல்... நிம்மதி...

அம்மா! நான் வேலைசெய்த வீட்டுக்கார மேடம் தெய்வமம்மா. உங்களிடமிருக்கும் அன்பையும், பாசத்தையும், பரிவையும் அவவிடம் கண்டேன். என்னை வீட்டு வேலைக்கு வந்தவளாகவல்ல தனது பிள்ளையாகவே பார்த்தார். எனக்குத்தான் சங்கடமாக இருந்தது. ஆனாலும் மேடத்தின் அன்பான அணைப்பை விலக்கிக்கொள்ள விரும்பவில்லை. அவவின் உடலில் உங்களின் இதயத்தைக் கண்டேன்.

நிர்ணயித்த சம்பளத்தைவிட அதிகமாகவே தந்தார். அதனால் உங்களுக்குத் தேவையான பணத்தை அனுப்புவதற்கும், கடனைத் தீர்ப்பதற்கும் வசதியாக இருந்தது.

அவவின் கணவன் இவை எதனையும் பெரிதுபடுத்துவதில்லை. எப்போதும் வியாபாரம், வியாபாரம் என்ற சிந்தனையே அவருக்கு. என்னுடனும் பெரிதாகப் பேசுவதில்லை. உணவு பரிமாறும் நேரம்தான் சில பகிடிகளை விட்டு கதைப்பார். மனைவியின் செயற்பாடுகளில் தலையிடுவதில்லை. எல்லாவற்றிற்கும் தலையசைப்பார்.

பிள்ளைகள் இருவர். அவர்கள் படிப்பிற்காக 'யூ.கே' நாட்டில் தங்கியிருக்கிறார்கள். வருடத்தில் ஒருமுறைதான் விடுமுறையில் வருவார்கள்.

நான் வேலைக்குச் சேர்ந்து ஒரு வருடம் எப்பிடி ஓடி மறைந்துதோ தெரியவில்லை... விரும்பினால் விடுமுறையில் வீடு சென்று வருமாறு மேடம் என்னைக் கேட்டாங்க. அவவ விட்டு விலக எனக்கு விருப்பமில்லை. அதனால், நான் அடுத்த வருடம் சென்று இரண்டு மாதங்கள் நின்று வருவதாகக் கூறினேன். அதனை மனதார வரவேற்று அனுமதித்தார். அதுதான் நான் செய்த பெருந் தவறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதை பின்னர்தான் உணர முடிந்தது..."

பிரியாவின் நா வறண்டு தாகம் எடுத்தது.

சமயலறைக்குச் சென்றவள் குளிர்சாதனப்பெட்டியைத் திறந்து போத்தலில் இருந்த குளிர்ந்த நீரை எடுத்து மளமளவெனக் குடித்தாள். அந்த நீர் உடலை மட்டுமல்ல உள்ளத்தையும் குளிரச் செய்திருக்கவேண்டும். அமைதியாக வந்து அமர்ந்தாள்.

ஏற்கெனவே எழுதியவற்றை படித்துப்பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்தாள்.

"நகரத்து பெண்கள் சிலருடன் மேடமும் சேர்ந்து ஒரு மாத வெளிநாட்டு சுற்றுலா ஒன்றுக்குத் தயாரானார்கள்.

எப்போதும் கூடவே இருக்கும் என்னை விட்டுச்செல்வது மேடத்திற்கு சங்கடமாக இருந்திருக்க வேண்டுமென்பதை அவர் புறப்படும்போது கண்கள் கலங்கியிருந்ததிலிருந்து உணரக்கூடியதாக இருந்தது... எனக்கும்தான்!

அந்த மாளிகைபோன்ற வீட்டில் நான் தனித்துவிடப் பட்டவள் போலானேன். என் வழமையான செயற்பாடுகளில் மாற்றம் எதுவுமில்லை. எஜமானுக்கு உணவு பரிமாறுவது முதல் வீட்டுப் பராமரிப்பு வேலைகள் என்பொறுப்பில்.

மேடம் இல்லாத ஒன்றுதான் குறை. அவ இல்லாதபோது பாசத்திற்காக ஏங்கவேண்டியதாக இருந்தது. அவ என்மீது காட்டிய பரிவை எண்ண எண்ண அவமீது மதிப்பும் மரியாதையும் பெருக் கெடுத்துக்கொண்டேயிருந்தது.

மேடத்தின் நினைவுகள் சுழன்றுகொண்டேயிருந்ததால் ஒவ்வொரு நாளும் எனக்கு நீண்ட நாளாக தெரிந்தது. எப்போது திரும்புவார் என்ற ஏக்கமே மேலோங்கி நின்றது.

அன்று விடுமுறை நாள். அந்த நாள்... எனக்கு மறக்கமுடியாத ஒரு நாள்... அந்த நாளும் வழமையைப் போலவே விடிந்தது. உலகத்தோர் வாழ்வதற்கு ஒளியை அள்ளிக் கொடுத்த கதிரவன், என் வாழ்வின் ஒளியை இருள் மறைக்கும் என்பதை அறிந்திருக்கவில்லைப் போலும்...

வீட்டு எஜமானின் வக்கிரப் புத்தியை அன்றுதான் அறிந்து கொண்டேன். வழமைபோல் வேலைகளை முடித்து குளித்துவிட்டு வந்த என்னை வழிமறித்தார் எஜமான். தடுமாற்றத்துடன் ஒதுங்கினேன்.

அதிர்ச்சி...! சங்கடம்...! ஒரு வருடம் எந்தக் குறையுமின்றி

வைத்துக் காப்பாற்றிய எஜமானா இவர்...?

ஆச்சரியம்...! ஏமாற்றம்...! மேடம் வெளிநாடு சென்றிருக்கும் வேளையில் இப்படி யொரு சோதனையா?

தனிமை...! உதவியில்லா நிலை...! அவரது முரட்டுக்கரம் என் கைகளைப் பற்றியது... திடுக்கிட்ட நான், தெரிந்த மொழியில் கெஞ்சினேன், கதறினேன், கும்பிட்டேன், தப்பிக்க வழிதேடி அங்கலாய்த்தேன்..."

தும்மல் குறுக்கிட்டது... மூன்று தடவைகள் அடுக்கடுக்காய் தும்மினாள் பிரியா...

குளியலறைக்குச் சென்று சுத்தம்செய்துவிட்டு வந்து அமர்ந்தவளுக்கு மேற்கொண்டு எழுதமுடியவில்லை. ஆயினும் அம்மாவுக்கும் மற்றையோருக்கும் தெளிவுபடுத்துவதற்கு எழுத வேண்டிய கட்டாயம் அவளுக்கு...

இதயம் கனத்தது... மறக்க நினைப்பதை உயிர்க்கச் செய்வதற்குத் தயங்கினாள். வேறு வழியின்றித் தொடர்ந்தாள்.

"ஒரு மாதம் கழித்து மேடம் வீடு திரும்பினார். அவவைக் கண்டதும் ஓவென்று அழுதேன். அதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்...?

மேடம் என்னை ஆதரவாய் அணைத்து, கண்ணீரைத் துடைத்து பழங்களும், சில உடைகளும், நினைவுப் பொருட்களும் தந்தார். அதைப் பெற்றுக்கொள்ள என் கைகள் நடுங்கின... எதிரே நிற்க உடல் கூசிக் குறுகியது...

மேடம் மாறாத சிரிப்புடன் என்னைப் பார்த்தார்... மிருகத்தின் இருப்பிடத்தில் இப்படியும் ஓர் தெய்வமா?

இரண்டு நாள் கழித்து, என்னிடத்தில் வழமையான சந்தோஷம், புன்னகையுடன் செயலாற்றும் தன்மை இல்லாமல் எப்போதும் ஏக்கத்துடன் காணப்படுவதை உணருவதாக மேடம் கூறினார். அதற்குப் பதிலாக கண்ணீர்தான் என்னிடமிருந்து வெளி வந்தது.

என் கண்ணீரைக் கண்டதும் மேடத்தின் கண்கள் பனித்தன... அதைக்கண்டு நான் அடக்கமுடியாமல் அழுதுவிட்டேன். விக்கல்... அழுகை... என்னை அணைத்துச்சென்று இருக்கையில் தனதருகில் இருத்தினார். துவாயை எடுத்து என் முகத்தைத் துடைத்துவிட்டார். தானே எழுந்து சென்று பழச்சாறு எடுத்துவந்து என்னை ஆதரவாய்த் தடவியவாறு பருக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா! நான் உங்களைத்தான் நினைத்துக்கொண்டேன். முழுவதும் குடிக்கும்வரை என் தலையைத் தடவியவாறே இருந்தார். அவர் முகத்தில் வேதனையின் சாயல்...

அமைதி... மௌனம்... சற்றுநேரத்தால் என்னை கூர்ந்து பார்த்த மேடம், தான் இல்லாதபோது இங்கு நடந்தது என்ன என்று கேட்டார். நான் தலை கவிழ்ந்தவாறு பதில் கூறத் தயங்கினேன்.

என் தயக்கத்தை அவதானித்த மேடம், என்னைத் தான் தன் பிள்ளைகளில் ஒருவராகவே பார்ப்பதாகவும், தயக்கமெதுவுமின்றி மறைக்காமல் கூறுமாறும் வற்புறுத்தினார்.

அவரது கூற்று உடலைச் சிலிர்க்கச் செய்தது. விம்மல் முந்திக் கொண்டது... கண்ணீரின் மத்தியில் நடந்தவைகள் அனைத்தையும் எடுத்துக் கூறினேன்."

"அம்மா! தனது அறைக்கு இழுத்துச் சென்ற எஜமானின் முரட்டுக் கரத்திலிருந்து என்னால் விடுபட முடியவில்லை. என் கெஞ்சலும், கதறலும் பயனற்றுப்போயின. என் எதிர்ப்புகள் வலுவிழந்துவிட்டன... ஓநாயிடம் சிக்கிய ஆட்டுக் குட்டியின் நிலையில் நான்...

அம்மா! என் பலமெல்லாம் செயலிழந்தது... கடவுளே எனக் கேன் இந்தச் சோதனை... யாரிடம் யாரைப் பற்றி முறையிடுவது..."

பிரியா தன்னை மறந்து கதறினாள். கைகளால் தலையில் அடித்து தன் வேதனையை குறைக்க முனைந்தாள்.

அடக்கிவைத்த துன்பச் சுமை கண்ணீராக வெளியேறியது. சில நிமிடங்கள் சிலையாகவே இருந்துவிட்டாள்.

"அவதானமாகக் கேட்டுக்கொண்டிருந்த மேடத்தின் கண்கள் கொவ்வைப்பழம்போல் சிவந்ததை அன்றுதான் பார்த்தேன். பயந்துவிட்டேன்... மேடத்தை நிமிர்ந்து பார்க்கத் தைரியமில்லாமல் தலை கவிழ்ந்துகொண்டேன்... மேடம் தன் கரத்தால் என் தாடையைத் தொட்டு உயர்த்தினார்.

அவரது சிவந்திருந்த கண்களில் கருணைப் பார்வை... எனக்கு ஏற்பட்ட வீபரீதத்திற்கு தனது கவலையை தெரிவித்தார்... தனது கணவரின் செயலுக்காக மன்னிப்புக் கேட்டார்... தான் இருந்திருந்தால் இவ்வாறு நடந்திருக்காது. நடக்கவும் விட்டிருக்க மாட்டேன் என்று வேதனையுடன் கூறினார்.

மேடத்தைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தளவுக்கு பணிந்துபோயிருந்தார். தனக்கு ஏற்பட்ட துன்பமாகவே எடுத்துக்கொண்டிருக்கவேண்டும். நான் எதுவும் பேசவில்லை... தானாகவே தொடர்ந்தார்....

இந்தத் துன்பகரமான நிகழ்வு பெண்களைப் பொறுத்தவரை ஏற்றுக்கொள்ள முடியாதது என்றும், எனக்கு ஆறுதல் கூறுவதற்குத் தனக்கு அருகதை இல்லையென்றும், மேற்கொண்டு எதுவும் நடக்காம லிருப்பதற்கு தான் உத்தரவாதம் அளிப்பதாகவும் அக்கறையுடன் கூறிய மேடம், ஆட்சேபனை இல்லையென்றால் தொடர்ந்து வேலை செய்யலாமெனவும், வேலையை விட்டு விலகி வீட்டுக்குச் செல்ல விரும்பினாலும் செல்வதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்வதாகவும் வேதனையுடன் கூறினார்.

நான் எதுவும் கூறாது இருந்தேன்.

இது என்னுடைய வாழ்க்கைப் பிரச்சினை என்றும் அதனால் என்னை அமைதியாக, நிதானமாக யோசித்து முடிவெடுக்கும்படியும் கூறிவிட்டு தன் அறைக்குச் சென்றார். செல்லும்போது அவவின் கண்கள் கலங்கியிருந்ததை அவதானித்தேன்... மேடம் சென்ற பின்னர் நான் யோசித்தேன்... நீண்ட நேரமாக, பலவகையில் யோசித் தேனம்மா...

மேடம் திரும்பி வந்தார்... நான் எடுத்த முடிவு பற்றிக் கேட்டார்... வேலையை விட்டு வீட்டுக்குச் செல்லப்போவதாகக் கூறி னேன்... என்னை அணைத்தவாறு அழுதார்... முதல் தடவையாக மேடம் இவ்வாறு அழுததைக் கண்டேன். நானும் அழுதேன்...

சிறிது நேரத்தில் அமைதியானார். எனது முடிவை வேதனை யுடன் ஏற்றுக்கொண்டார்... உடனடியாகவே தொலைபேசி மூலம் உரிய ஆயத்தங்களைச் செய்து முடித்தார்.

வேலையிலிருந்து விலகுவதாக முடிவெடுத்திருந்தாலும் மேடத்தின் அன்பை, அணைப்பை விட்டு விலகுவது கடினமான தாகவே இருந்தது...

சற்று நேரத்தால் மேடம் 'ரவலிங் பாக்' ஒன்றுடன் வந்தார். எனது அருகில் வைத்துவிட்டு அதற்குள் சில உடைகள் இருப்பதாகக் கூறியவர் பணக் கட்டை என்னிடம் நீட்டியபடி, ஒரு வருடச் சம்பளமும் எனது செலவுக்குரிய பணமும் இருப்பதாகவும் கூறினார். நான் இதை எதிர்பார்க்கவில்லை. தேகம் சிலிர்த்தது என்கண்கள் கலங்கி நீர் தொடராக வெளியேறியது... என்னை அறியாமலே மேடத்தைக் கட்டியணைத்தேன்..."

பிரியா மேற்கொண்டு எழுதமுடியால் மேசையில் குப்புறப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவிட்டாள்.

விம்மி விம்மி அழுது கொண்டேயிருந்தவளுக்கு நேரம் சென்றதே தெரியவில்லை. தூக்கத்தில் விழித்ததுபோல் சட்டென தலையை நிமிர்த்திய அவள், முகத்தின் ஈரத்தை சேலையால் துடைத்துக்கொண்டு முன்னைய நிலைக்கு மீண்டாள்...

"அம்மா! எனது நீண்ட கடிதத்தை இத்துடன் முடிக்கின்றேன். மேடம் தந்த பணத்தில் உங்களுக்குத் தந்தது போக ஏனையவை என்னிடத்தில் இருக்கிறது. இன்னும் ஒரு வாரத்தில் நான் நல்ல வேலையொன்றில் இணைந்துகொள்ளப் போகிறேன். அதன் பின்னர் உங்களுக்கு என்றும்போல் உதவுவேன்.

அம்மா! இந்தக் கடிதத்திற்குப் பின்னர் என்னைப் பற்றியே சதா சிந்தித்துக்கொண்டிருப்பீர்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இதை ஒரு கனவாக எண்ணி மறந்துவிடுங்கள். உங்கள் நலன்தான் எனக்கு முக்கியம். நான் என்றும் உங்களுக்குத் துணையாக இருப்பேன். உங்கள் பிள்ளையம்மா நான்...

நீங்க, அப்பா, பிரியவதனி, பிரிந்தா எல்லோரும் சுகமாக இருக்கிறீர்களா? என்னைத் தேடவோ தொடர்புகொள்வதற்கு முயற்சிக்கவோ வேண்டாம். சமயம் வரும்போது நானே வருவேன்."

கடிதத்தை எழுதி முடித்து ஒப்பமிட்டு தாயின் பெயரில் முகவரியிட்டு அனுப்பிவைத்த பினர்தான் மனநிறைவை அடைந்தாள் பிரியா...

## 15

கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்த பிரியவதனி, மாமன் சுரேந்தரும் மாமியார் சித்திராவும் வருவதுகண்டு வாசிப்பதை நிறுத்தினாள்...

இருந்தவர்கள் தம்மைச் சுதாரித்துக்கொண்டு எழுந்து முகத்தை துடைத்துக்கொண்டனர்.

வாசலண்டை வந்த அவர்களை சந்திரா வரவேற்று விறாந்தையில் அமரச் செய்தாள்.

"சந்திரா எல்லாரும் சுகமா இருக்கிறீங்களா?"

"ஓமுங்க அண்ணி! உங்கட சுகம் எப்படியுங்க அண்ணி?"

குரலில் இருந்த தளர்ச்சியை சித்திரா கவனிக்கவில்லை.

"என்னத்த சொல்லுறது சந்திரா. வர வர உடம்பு ஏலாம இருக்கு."

"மருந்து குடிக்கிறனீங்கதானே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொஞ்ச மருந்தா குடிக்கிறன். இப்பவோ எப்பவோ...?"

"அண்ணி...! என்ன சொல்லுறீங்க?"

"உண்மையத்தான் சொல்லுறன்... அது கிடக்கட்டும். சந்திரா! உன்னட்ட ஒரு விசயம் கதைக்கலாமெண்டு வந்தனாங்க..."

"சொல்லுங்க அண்ணி! சொல்லிவிட்டிருந்தா நாங்களே வந்திருப்போமே!"

"அது அழகில்ல சந்திரா... சந்திரா! எனக்கும் வரவர ஏலாம இருக்கு. எங்களுக்கு இருக்கிறது ஒரேயொரு பொடியன். அவனும் இப்ப நிறுவனம் ஒண்டில வேலை செய்யிறான். அவனட கலியாணத்தையெண்டாலும் நான் பார்க்கவேணுமெண்டு ஆசையாயிருக்கு..."

"அதுக்கென்னண்ணி நல்ல இடமாப் பாத்துச் செய்திட்டாப் போச்சு?"

"அதுக்குத்தான் உங்கட்ட உதவிகேட்டு வந்திருக்கிறோம்."

"உதவி கிதவியெண்டு ஏனண்ணி சொல்லுறீங்க. நாங்க என்ன அண்ணி செய்யவேணும். சொல்லுங்க."

பிரியவதனி தேநீர் கொண்டுவந்து பரிமாறினாள்...

தேநீரை அருந்தியவாறே சித்திரா தொடர்ந்தாள்.

பிரியவதனியின் முகத்திலிருந்த வாட்டத்தை சித்திரா அவதானித்தாள்.

"என்னம்மா முகம் வாடியிருக்கு"

"ஒண்டுமில்ல அத்தை... படுத்துக்கிடந்தனான்..."

"சந்திரா! மகனுக்கு பிரியாவ செய்யலாமெண்டு யோசிக்கிறம். உங்க அண்ணன்தான் இந்த யோசினயச் சொன்னவர். அப்பத்தான் சொந்தம் விடுபடாம இருக்குமாம்."

சந்திரா ஆனந்தன் பிரியவதனி பிரிந்தா நால்வரும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்...

மௌனம் அங்கு நிலவியது...

"சந்திரா உங்களுக்கு ஏதும் ஆட்சேபனை இருக்கா? வேறு யாரையாவது நினச்சிருக்கிறீங்களா?"

"அப்படியொண்டும் இல்லையண்ணி... என்னும் வயசிருக்கு அதுதான்."

"இப்ப உடன செய்யச்சொல்லி சொல்லயில்ல..."

"எங்களுக்கு சம்மதம் தானண்ணி. அவள் சவுதியால வரட்டுமன் அவளட்டயும் ஒரு வார்த்த..."

"வேண்டாமென்று சொல்லயில்ல. அவளட்ட கேட்டு நல்ல முடிவாகச் சொல்லுங்களன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியாணக் கதை நின்று வேறு விடயங்கள் பேசப்பட்டு வந்தவர்கள் விடைபெற்றுச் சென்றனர்...

சந்திரா இருகொள்ளி எறும்பாக நின்றாள்...

"... என் கெஞ்சலும், கதறலும் பயனற்றுப்போயின. என் எதிர்ப்புகள் வலுவிழந்துவிட்டன... ஓநாயிடம் சிக்கிய ஆட்டுக் குட்டியின் நிலையில் நான்..."

நிறுத்திவைத்த கடிதத்தின் வரிகளை பிரியவதனி வாசித்துக் கொண்டிருந்தாள்...

"பிரியா..."

அடங்கிக் கிடந்த சந்திராவின் அலறல் சுவரில் பட்டு பல ஒலியலைகளாகத் திரும்பின. வாய்விட்டுக் கதறியபடி தரையிலும், மார்பிலும் கைகளை மாறிமாறி அடித்தாள். பிரியவதனியும், பிரிந்தாவும் அவளை அணைத்துக் கொண்டனர்.

தாய் சிறிது அமைதியானதும் தொடர்ந்து கடிதத்தை வாசித்து முடித்த பிரியவதனிக்கு விம்மல் முந்திக்கொண்டுவந்தது...

"மகளே!... பணத்தாசையால் என் மகளை நானே..."

தலையில் கைகளால் அடித்தடித்தவாறு ஆனந்தன் முதற் தடவையாக வாய்திறந்து அழுதார். கேவிக் கேவி அழுதார்.

அவரை வெறுப்புடன் பார்த்துவிட்டு தாயின் மடியில் முகத்தைப் புதைத்தவாறு அழுதாள் பிரிந்தா...

நிலைகுலைந்து, சோர்ந்து அழுவதற்குக்கூட பலமின்றி அழுதுகொண்டிருந்த தாயைத் தாங்கிப்பிடித்தவாறு பிரியவதனியும் அழுதாள்.

மரணவீட்டின் நிலை... சில நிமிடத்தில் அமைதி... ஆனாலும் கண்ணீர் நிறைந்த விழிகள்...




"ட்றிங்... ட்றிங்... ட்றிங்..."

மாலை 5.00 மணியளவில் குளித்துவிட்டு துடைத்தவாறு வந்த சுரேந்தர் தொலைபேசியை எடுத்தார்...

"ஹலோ..."

"நான் தெய்வேந்திரன் பேசுறன்... என்னைத் தெரியுமா உங்களுக்கு?"

"ரெலிபோனில முகம் தெரியாது... என்ன விசயம் என்று சொல்லுங்க..."

"ராத்திரி சாமத்தில எடுத்தனான் ஏன் எடுக்கயில்ல?"

"நித்திரையா இருந்திருப்போம்."

"பறவாயில்ல, நான்.... ..... ...."

தொலைபேசி உரையாடல் நீண்டுகொண்டே சென்றது. சுரேந்தர் உணர்ச்சிவசப்பட்டவராக மறுப்புக்கூறிக்கொண்டே நின்றார்.

"உங்களப்பற்றி நல்லா அறிஞ்சுதான் கேக்கிறோம். உங்களால செய்ய ஏலும்... நீங்க இப்படி மறுத்தீங்களென்றா உங்களுக்கு கஸ்ரகாலம் துவங்கீற்று எண்டுதான் கருத்து. மறுத்த ஆக்களுக்கு நடந்தவைகளைத் தெரியும்தானே... அதுபோல உங்களுக்கும் நடக்கக்கூடாதெண்டுதான் நினைக்கிறோம். என்னவோ நாளைக்கு காலையில எட்டு மணிக்கு திரும்ப எடுப்பன் அதுக்குள்ள நல்ல முடிவா எடுத்திடுங்க... பார்த்துக் கொஞ்சமா குறைக்கலாம்... என்ன?"

தொலைபேசியின் மறுமுனை துண்டிக்கப்பட்டது. பேயறைந்தது போலக் காணப்பட்டார் சுரேந்தர்...

இதயம் படபடக்க கதிரையில் அமர்ந்தார்.

இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த சித்திரா மெதுவாக கணவன் அருகில் வந்தாள்...

சித்திரா வந்து நிற்பதையே உணராமல் கடும் யோசனையில் ஆழ்ந்திருந்தார் அவர்...

"என்னவுங்க கடுமையா யோசிக்கிறீங்க...?"

திடுக்கிட்டார் சுரேந்தர்.

"ஒண்டுமில்ல சித்திரா..."

"உங்களப் பற்றி எனக்குத் தெரியாதா?... ஆருங்க ரெலிபோனில பேசினது?..."

"அது ஒருதரும் இல்ல... சும்மா இரு..."

"ஒருதரும் இல்லையெண்டா ஏனுங்க உணர்ச்சி வசப்பட்டுப் பேசினீங்க?"

"அது... அது..."

"ஏன் தயங்கிறீங்க சொல்லுங்க..."

"ஆரெண்டு தெரியாது, யாரோ பேசினாங்க... என்னக் காசு தரட்டாம்... மூண்டு லட்சம் நாளைக்கு வைக்கவேணுமாம்..."

"மூண்டு லட்சமா?... நீங்க என்னங்க சொன்னீங்க...?"

"என்னச் சொல்ல விட்டாத்தானே... அது நடக்கும் இது நடக்கும் என்று வெருட்டுறான். நானும் சொல்லிப்பாத்தன் கேக்கிறதா இல்ல... நாளைக்குக் காலயில எடுக்கிறானாம் முடிவைச் சொல் லட்டாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேந்தரின் கண்கள் கலங்கியிருந்தன...

பல இடங்களிலும் நடந்த இதுபோன்ற நிகழ்வுகள் பற்றி ஏற்கெனவே அறிந்திருக்கிறாள் சித்திரா. அதனால் அவள் இதயம் வேகமாகத் துடித்தது. துடிப்பின் பிரதிபலிப்பாக கண்ணீர் வெளியேறியது...

தொலைபேசி வந்த நேரம் முதல் மௌனமே வீட்டில் கோலோச்சியிருந்தது. இருவரும் தனித்தனியாக யோசிப்பதும் இடைக் கிடையே ஆலோசிப்பதுமாக இருந்தார்கள்...

இது பற்றி மகனுக்குச் சொல்லும்படி சித்திரா வற்புறுத்தி னாள். ஆனால், யாருக்கும் சொல்லவேண்டாமென்று அவனால் எச்சரிக்கை விடப்பட்டது மட்டுமல்ல மகனை இதற்குள் நுழைத்து விட சுரேந்தர் விரும்பவில்லை.

இருவரும் இரவு உணவை உண்ணவில்லை... தண்ணீர் மட்டுமே உணவாக இருந்தது.

பேச்சுக்கள் தவிர்த்த இருவரது யோசனைகளும் மறுநாள் காலையைப் பற்றியதாக இருந்தது...

மகன் உள் நுழைந்தான்.

"என்னம்மா ரெண்டுபேரும் இண்டைக்கு கடும் யோசினயில இருக்கிறீங்க."

"ஒண்டுமில்ல பஞ்சியாயிருக்கு, பசிக்கயுமில்ல அதுதான்... சாப்பாடு எடுத்து வச்சிருக்கிறன் நீ சாப்பிடு நாங்க படுக்கப்போறம்."

இருவரும் படுத்தார்கள்.

படுக்கையிலும் மௌனம்தான்.

உறக்கம் அவர்களைப் பற்றிக்கொள்ள வெகு நேரமாகப் பிரயத்தனப்பட்டது...

அதிகாலை விடிந்தது கண்டு எழுந்த சுரேந்தர் வெளியே வந்தார்.

மகன் வேலைக்குப் புறப்படலானான்.

இரவு உணவு உண்ணாமையால் வெறுமையாயிருந்த வயிற்றை நீரால் நிறைத்தார்.

தூக்கத்தில் கிடந்த சித்திராவைக் குழப்ப விரும்பாமல், யோசனையின் மத்தியில் தனது காலை வேலைகளை மெதுவாக செய்து முடித்துக்கொண்டு தேநீர் வைப்பதற்காக மனைவியை அழைத்தார்...

பதிலில்லை...

இரண்டாம் தரம் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலில்லை.

அறைக்குள் சென்று கூப்பிட்டார்...

பதிலில்லை...

உடலைத் தொட்டசைத்துப் பார்த்தார்.

உடல் குளிராகவும், விறைத்தும் இருந்தது.

முகத்தை அசைத்துப் பார்த்து, அவள் உயிர் அடங்கி விட்டதை உணர்ந்தார்.

"சித்திரா... எங்கள விட்டுட்டுப் போயிட்டியா...?"

சுரேந்தரின் கதறல் சுவர்களில் பட்டுத் திரும்பியது...

பறைமேளம் அடிக்கப்பட்டது.

முற்றத்தில் தகரப் பந்தல் போடப்பட்டது.

வீடும், பந்தலும் துக்கத்துக்கு வந்தவர்களால் நிறைந்திருந்தது.

தகவல் அறிந்ததும் துரைரெத்தினம் மற்றும் ஆனந்தன் குடும்பத்தினர் உடனேயே வந்துவிட்டனர்.

சந்திராவும் புவனமும் சித்திராவின் மேல் விழுந்து கதறிய கதறல் அங்கிருந்தவர்களின் இதயத்தை வருடியது.

சித்திராவை நீராட்டி புதிய சேலை அணிவித்து சவப் பேழையினுள் கிடத்தினர்.

கண்மூடி உறங்குவதுபோலக் கிடக்கும் சித்திராவைப் பார்த்து புவனமும், சந்திராவும், பிரியவதனியும் ஓய்வின்றி அழுது கொண்டேயிருந்தனர்...

துக்கம் விசாரிக்க வருபவர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தான் மகன்.

"ட்றிங்... ட்றிங்... ட்றிங்..."

தொலைபேசி மணி தொடர்ந்து ஒலித்துக் கொண்டிருந்தது.

தடைப்பட்டு, மீண்டும் மீண்டும் ஒலித்தது

"மாமா அப்போதயும் கனக்க நேரம் மணி அடிச்சது. நீங்க இல்ல அதால நாங்க எடுக்கயில்ல."

பிரிந்தா சுரேந்தரிடம் கூறினாள்

"சரியம்மா நான் எடுக்கிறன்..."

"ஹலோ... சுரேந்தர் பேசுறன்..."

"நான்தான் தெய்வேந்திரன்... இவ்வளவு நேரமும் எங்க போனனீங்க... எட்டு மணிக்கு அடிக்கேக்க ஏன் எடுக்கயில்ல?... சரி, அது கிடக்கட்டும்... என்ன முடிவு எடுத்தீங்க..."

"............."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்ன நான் கேக்கிறன் ஒண்டும் சொல்லாம நிக்கிறீங்க. நீங்க சிம்பிளா எடுக்கிறீங்கபோல இருக்கு. இது நல்லதுக்கில்ல. உங்களுக்காக ஒரு ஐம்பதாயிரம் ரூபாவைக் கழிச்சு விடுகிறன். மிகுதிய எப்ப தாறீங்க. கெதியா முடிவச் சொல்லுங்க."

"முடிவா? நல்ல முடிவுதான் எடுத்திருக்கிறன்... டேய் ஆரடா நீ? உனக்குப் பணம்தானே வேணும். இல்லையெண்டா என்னடா செய்வாய்? வாடா... உன்னால என்ர சொத்தே பிணமாகிக் கிடக்கிறாள். வந்து எடுத்துக் கொண்டுபோடா..."

உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்... உடல் நடுங்கியது...

தொலைபேசியின் மறுபக்கம் துண்டிக்கப்பட்டது...

சுரேந்தர் விம்மி விம்மி அழுதார்...

சூழ நின்றவர்கள் எதுவுமே புரியாமல் விழித்தார்கள்.

சிறிது நேரத்தால் அமைதியான சுரேந்தர், இரவு நடந்த தொலைபேசி உரையாடல் பற்றிக் கூறியபோதுதான் 'அமைப்புகளின் பெயரை முன்னிறுத்தி பணம் பறிப்பவர்களின் தொலைபேசி மிரட்டல்தான்' சித்திராவின் மரணத்திற்கான காரணம் என்பது மகனுக்கும் மற்றவர்களுக்கும் தெரியவந்தது...




"அம்மா!

சில மாதங்களாக எனது கடிதம் காணாது விரக்தியில் இருந்திருப்பீர்கள் என நினைக்கிறேன்... என்னம்மா செய்யிறது என்மேல் ஏற்றப்பட்ட சுமையை இறக்கித்தானே ஆகவேண்டும். அதற்கும் உரியகாலம் வேண்டாமா?...

வேலை செய்யுமிடத்தில் மூன்றுமாத லீவு தந்தார்கள். இது வழமையாகத் தரும் லீவுதான். இன்றுடன் லீவு முடிகிறது. நாளை மீண்டும் வேலைக்குச் செல்லவேண்டும். அம்மா! எனக்கு அவசரச் செலவுகள் ஏற்பட்டதால வழமையைப் போலில்லாமல் குறைவாகவே பணம் அனுப்ப முடிந்தது. சிரமப்பட்டிருப்பீர்கள். சில மாதங்களுக்கு இந்த நிலைதானம்மா. ஓரளவு சமாளிக்கப் பாருங்கள். மீண்டும் கடிதத்தில் பேசுகிறேன்.

இப்படிக்கு
பிரியா"

கடிதத்தைச் சுருக்கமாக எழுதிமுடித்த உடனேயே தபாலகத்தில் ஒப்படைத்துவிட்டு வந்தவள் சமையலைத் தொடங்கினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கிருந்த மேலதிக வேலைகளுடன் சமையலையும் விரைவாகவே முடித்துக்கொண்டு ஒரு மணித்தியாலம் ஓய்வெடுத்தவள், சசிகலா மதிய உணவருந்த வரும் நேரமென்பதால் மேசையில் உணவை எடுத்துவைத்துவிட்டு காத்திருந்தாள்.

சசிகலா வந்ததும் இருவரும் இணைந்து சாப்பிட்டனர்.

பிரியா வழமைபோலன்றி எதுவும் பேசாது சாப்பிட்டுக் கொண்டிருந்தது சசிகலாவுக்கு சங்கடத்தை ஏற்படுத்தியது...

நிமிர்ந்து பிரியாவைப் பார்த்தாள்... அவளது கடைக் கண்ணிலிருந்து நீர்த்துளிகள்...

"என்ன பிரியா? என்ன நடந்தது? ஏன் கண் கலங்குது..."

சசிகலா பதறியவாறு கேட்டாள்..

"ஒண்டுமில்லை சசிகலா... என்னும் கொஞ்சக் கண்ணீர் இருக்கு அதுதான்..."

"அம்மாவுக்கு கடிதம் எழுதினியாக்கும்?"

'ஆம்' என்பதுபோல தலையை அசைத்தாள்...

"கொஞ்சநேரம் எல்லாத்தையும் மறந்து சாப்பிடு... நீ இப்ப தனியாளல்ல..."

சசிகலாவின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டவள்போல கண்களைத் துடைத்துக்கொண்டு இளநகையுடன் சாப்பிட்டாள்...

கடிதம் பற்றிய பேச்சு எழுந்ததும் தான் காலையில் கடிதம் எழுதத் தொடங்கி நேரம் போனதால் எழுத முடியாமல் விட்டுப்போன ஞாபகம் வந்ததால், சாப்பிட்டு முடிந்ததும் கடிதம் எழுதுவதற்காக மேசைக்குச் சென்றாள் சசிகலா.

"பிரியா இதில கிடந்த பேப்பரிலயா கடிதம் எழுதினனி?"

"ஓ..."

"அதில இந்த வீட்டு விலாசம் எழுதியிருந்தேனே அதக் கிளிச்சனியா?"

"வீட்டு விலாசம் எழுதினியா? அட கடவுளே!..."

பிரியாவின் இதயம் இடி விழுந்ததுபோல அதிர்ந்தது.

"சின்னக் கடிதம் தானே என்று மற்றப் பக்கத்தக் கவனிக்காம எழுதி அனுப்பீற்றன்... இப்ப என்னடி செய்யிறது."

"போஸ்ற்றொவ்விசில குடுத்த பிறகு என்ன செய்ய ஏலும்?"

பிரியாவுக்கு உலகமே சுற்றியது...

❖❖❖

பி.ப. 5.00 மணி.

ஆட்டோ வந்து தரித்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுதானம்மா வீடு. இந்த பக்கத்து லேன்தான் அந்த வீட்டுப் பாதை. அதால போங்க."

ஆட்டோ சாரதி கூறிவிட்டு பணத்தைப் பெற்றுச் சென்றான்.

வீட்டுக் கதவு தட்டப்படும் சத்தம்கேட்டு பிரியாதான் கதவைத் திறந்தாள்...

அவள் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன... இதயம் தரித்து மீண்டும் துடித்ததுபோன்ற படபடப்பு.

எதிரே சந்திராவும் பிரியவதனியும்...

"அம்மா..!"

பிரியாவின் கட்டுப்பாட்டை மீறி கண்கள் நீரை வெளி யேற்றின... கண்ணீரைத் துடைத்துக்கொண்டு தாயைக் கட்டி அணைத்தாள்...

"உள்ள வாங்கம்மா... வதனி வா... ரெண்டுபேரும்தான் வந்தனீங்களா?"

மௌனமாக உள்ளே சென்றனர்...

"இதுதான் என்னட சினேகிதி சசிகலா. இவளின்ர வீடுதான் இது. இவ தனியத்தான் இருக்கிறா."

கரங்குவித்தாள் சந்திரா. பதிலுக்கு சசிகலாவும் புன்னகை யுடன் கைகூப்பினாள்.

"வாங்க... இருங்க அன்ரி... தங்கச்சி இருங்க."

கதிரைகளைக் காண்பித்தவாறு கூறினாள் சசிகலா... பிரியா அதிர்ச்சியிலிருந்து விடுபட்டவளாகத் தெரியவில்லை...

தேநீர் போடுவதற்காக சசிகலா சமையலறைக்குச் செல்ல, பிரியா தாய்க்கு எதிரே கதிரையில் அமர்ந்தாள்.

மௌனம் நிலவிய அதே நேரம் மூவர் கண்களிலும் கண்ணீர்...

"ஏனக்கா நீ வீட்ட வாறாயில்ல...?"

"அப்பாவையும் பிரிந்தாவையும் கூட்டிக்கொண்டு வந்தி ருக்கலாமே..."

"ஏன் நீ விலாசம் அனுப்பினனியா?"

"அப்ப என்னண்டு நீங்க...!"

"உன்னட கடிதத்தில பின்னால ஒரு விலாசம் இருந்தது. முத்திரையிலயும் இந்த இடத்துப் பேர் இருந்தது. அதா இருக்கலா மெண்டு நினைச்சு வந்தனாங்க. அது சரியா இருந்திற்று..."

"தெரியாத இடத்துக்குத் துணிஞ்சு வந்திட்டீங்களே!"

"உன்னைப் பாக்கவேண்டுமெண்ட துடிப்புத்தான்."

"அம்மா! என்னோட கோவமா? ஒண்டும் பேசிறீங்கயில்ல!"

"நான் பேசிறது இருக்கட்டும். தங்கச்சி கேட்ட கேள்விக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிலில்லையே.''

"என்ன கேட்டனி? ஓ! வீட்ட ஏன் வரையில்ல எண்டுதானே கேட்டனி...?''

"..........''

"பிரியா புள்ள கத்திக்கேக்குது...''

சமையலறையிலிருந்து சசிகலாவின் குரல் வந்தது.

பிரியா எழுந்துசென்று பிள்ளையத் தூக்கி வந்தாள்.

"அந்த அக்காட பிள்ளையாக்கா?''

"இல்ல...''

"அப்ப இந்தப்பிள்ள...?''

"என்னடது...''

"உன்னடதா?''

சந்திரா அதிர்ச்சியுடன் கேட்டாள்.

"ஓமம்மா... பத்தொன்பது வயதுத் துவக்கத்தில நான் இந்த ஆண் குழந்தையப் பெற்றெடுத்தேனம்மா...''

"அத்தான் ஆரக்கா? பேரென்னக்கா?''

"தெரியாது...''

"தெரியாதா?''

"உண்மையம்மா. இவனுக்கு தகப்பன் பேர் இல்லையம்மா... நான் சுமந்த வடுவின் அடையாளமாக என் குழந்தை இந்த உலகத்தில் வாழப்பிறந்திருக்கிறான்.''

"என்ன பிரியா சொல்லுறா?''

"சவுதியில நடந்ததையெல்லாம் விபரமாகக் கடிதத்தில் எழுதினேனே!''

பிரியாவின் நிலை, அவளது சங்கடம் இப்போது சந்திராவுக்கு புரிந்தது...

"பிரியா!...''

இருக்கும் இடத்தையே நினைவிற்கொள்ளாது அழுதாள் சந்திரா...

"அம்மா நீங்க எனக்கு ஊட்டி ஊட்டி வளர்த்த விழுமியங் களின்படி வாழவேண்டும் என்ற வைராக்கியத்திலதான் வாழ்ந்தேன்... ஆனால், நடந்ததோ வேறொன்று...''

பிரியாவின் தொண்டை அடைத்தது. பேச்சை நிறுத்தி எச்சிலை விழுங்கினாள்.

"பெண்களின் உயிராக மதிக்கப்படுகிற கற்பு காமுகனால் துவம்சம் செய்யப்பட்டிருக்கிறது... இப்படி எத்தனை பேர், சம்மத மின்றியே சகதிக்குள் புதைந்திருக்கிறார்கள்? அவர்களில் எத்தனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேர் அதனை வெளிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்?..."

அழுதாள்... விக்கி விக்கி அழுதாள்...

சந்திராவும் அழுதாள்... பிரியவதனி இருவரையும் மாறிமாறிப் பார்த்தவாறு அவளும் அழுதாள்...

"பண்பாட்டை, கலாச்சாரத்தை எடுத்துரைக்க விழா தேவையில்லை... பெண்ணியம் பற்றி பெரிதாய் எழுதிக் கிழிக்கத் தேவையில்லை... என்போன்ற பெண்களைக் காப்பாற்ற முடிந்தாலே போதும்... பணத்தாசையால் படிக்கிற வயதிலும் பணம் சம்பாதிக்க அந்நிய நாட்டுக்கு பெண்களை அனுப்பும் பெற்றவங்களுக்கு என் வாழ்வு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கட்டும்..."

சந்திரா எதுவும் கேட்கவோ, பேசவோ முடியாதவாறு மேடைப் பேச்சைப்போல பேசி முடித்தாள் பிரியா.

மௌனம் ஆட்கொண்டது.

இதனைப் பயன்படுத்தி சசிகலா தேநீருடன் வந்தாள்.

இருவருக்கும் கொடுத்தாள். பிரியாவின் தேநீரை 'ஸ்ரூளி'ல் வைத்துவிட்டு பிரியாவின் கையிலிருந்த பிள்ளையைத் தூக்கினாள்...

அமைதியாகி பேச்சோ, அழுகையோ இன்றி தேநீரை அருந்தினார்கள்...

"அம்மா! உங்கட பேரனப் பாருங்கம்மா."

சந்திராவிடம் நீட்டினாள் சசிகலா. தேநீர் அருந்திக் கொண்டிருந்தவளுக்கு புரையேறியது...

உடனே தாயின் உச்சியில் தட்டினாள் பிரியா.

சற்று நேரத்தால் சூறைக்காற்றுக்குப் பின்னரான அமைதியாய் காணப்பட்டது சந்திராவின் முகம்.

கண்களில் ஆனந்தக் கண்ணீர்.

பேரனை ஏந்திக்கொண்டாள்.

"பேரென்னம்மா...?"

"உங்கட மூத்த பையனுடைய பேர்தான், பிரியந்தன்."

ஆனந்தக் கண்ணீர் வடிந்திட கவலைகளை மறந்து ஆவலுடன் கட்டியணைத்தாள் பேரனை... குழந்தையின் முகத்தில் பிரியந்தனைக் கண்டாள்...

இரண்டு நாட்கள் தங்கி புறப்படும்போது பிரியாவை தங்களுடன் வருமாறு அழைத்தார்கள்.

அவள் மறுத்துவிட்டாள்...

"அவசியம் வரும்போது எனது மறைந்த வாழ்வை முடித்துக் கொண்டு வெளிச்சத்துக்கு வருவேனம்மா. இப்ப நீங்க யோசிக்காம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிற்றுவாங்க. அப்பாவட்டயும் பிரிந்தாவட்டயும் சுகம் கேட்டதாகச் சொல்லுங்க... மாமிக்கு ஏற்பட்ட மரணம்தான் கவலையைத் தருகிறது... அம்மா! மணிரெத்தினம் அங்கிள் சுகமா இருக்கிறாராம்மா. அவரட்டையும் சுகம் கேட்டதாச் சொல்லுங்க."

இணைந்தவர்கள் பிரியும் நேரம்...

பிரியாவின் கண்களில் நீர் பனித்தது.

சந்திராவும் பிரியவதனியும் கலங்கிய கண்களுடன் விடை பெற்றனர்...

## 18

பிரியவதனி யாழ். பல்கலைக் கழகத்தில் இரண்டாம் ஆண்டு இறுதியில் கற்றுக்கொண்டிருந்தாள்.

எப்போதும் படிப்பிலேயே கருத்தாக இருக்கும் அவளது குரலில் உள்ள இனிமையைப்போன்று தோற்றத்திலும் அழகு இருந்தது.

தங்கள் வாழ்வுக்காக பிரியா தன் வாழ்வையே இழந்து நிற்கிறாள். தான் படித்து நல்லதொரு நிலைக்கு வந்து அவள் தொடங்கிய பணியை செய்யவேண்டுமென்பதில் உறுதியாக இருந்தாள்.

இந்த வேளையில்தான் அவள் எதிர்பார்த்திருக்காத தகவல் அவளது பதிலுக்காகக் காத்திருந்தது...

ஜேர்மன் நாட்டில் வசித்துவரும் தனது சகோதர முறையான பையனுக்கு திருமணம் பேச வந்திருந்தாள், சந்திராவுக்கு அறிமுகமான பெண்...

மாப்பிள்ளை ஜேர்மனில் இருந்து விடுமுறையில் வந்து ஒரு வாரமாகிறது. தற்செயலாக வீதியில் பிரியவதனியை கண்டுள்ளனர். அவளை மணமகளாக்கிட முடிவெடுத்து வீடு தேடி வந்துள்ளாள் அந்தப்பெண்.

மாப்பிள்ளை ஜேர்மனிலேயே வசிப்பதனால் சீதனம் எதுவும் எதிர்பார்க்கவில்லையாம். திருமணச் செலவைக்கூட தாமே ஏற்றுக் கொள்வதாவும் கூறியுள்ளாள்.

ஆனந்தனினதும் சந்திராவினதும் முகத்தில் மகிழ்வின் கீறல்கள்... ஆனாலும் பிரியவதனியின் சம்மதம் பெறவேண்டுமே...

"நாங்க யோசித்துச் சொல்லி அனுப்புறோமுங்க"

"அவன் ஒரு மாதத்திற்குள் போகவேண்டியிருப்பதால நீங்க நல்ல முடிவாச் சொன்னீங்களெண்டா திருமணத்தை முடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேட அவன் போகக்கூடியதாயிருக்கும். உங்கட பெண்ணையும் கெதியாக் கூப்பிட்டிடுவான்..."

ஆனந்தனினதும் சந்திராவினதும் உள்ளம் துள்ளியது. விரைவாகவே தகவல் சொல்வதாகக்கூறி அவளை வழியனுப்பி வைத்தனர்.

பிரியவதனி படிப்பு முடிந்து வந்தாள்...

அறைக்குள் சென்று உடை மாற்றி, முகம் கழுவி வந்து கதிரையில் அமர்ந்து கொண்டாள்.

சந்திரா தயங்கித் தயங்கி நின்றாள்.

"என்னம்மா ஒரு மாதிரியாக இருக்கிறீங்க?"

"ஒண்டுமில்ல. உன்னட்ட ஒரு விசயம் கேக்கவேணும்."

"அதுக்கு ஏன் இண்டைக்கெண்டு புதுசாத் தயக்கம். என்னண்டு சொல்லனம்மா."

அந்தப் பெண் சொன்னவை அனைத்தையும் ஒருவாறு சொல்லி முடித்து பிரியவதனியின் பதிலுக்காக அவளது முகத்தைப் பார்த்தவாறு காத்திருந்தாள்.

பிரியவதனியின் முகத்தில் எந்த அறிகுறியும் இல்லை. பதிலும் இல்லை.

நெடுநேரமாக பதில் சொல்லாமை சந்திராவை உறுத்தியது.

"என்ன புள்ள ஒண்டும் சொல்லாம இருக்கிறாய்?"

"நான் என்ன சொல்லவேண்டுமெண்டு எதிர்பார்க்கிறீர் ளம்மா?"

"என்னெண்டாலும் சொன்னாத்தானே தெரியும்."

"எனக்கு வேண்டாமெண்டு சொன்னா?"

சந்திராவின் முகம் கறுத்தது.

"என்னட கேள்விக்கே முகம் கறுக்குதே உண்மையே அதுவானால்..."

"எல்லாம் நன்மைக்குத்தானே..."

"நான் படிக்கிறன். இப்படித்தான் அக்காட படிப்பையும் குழப்பி இண்டைக்கு அவ கூனிக்குறுகி மறைந்து வாழுறா."

"அவளுக்கு நடந்தது கொடுமைதான் மறுக்கயில்ல. ஆனா இது அப்பிடியில்ல. உனக்குக் கலியாணம்... இது வலியவந்த கலியாணம். அதுவும் வெளிநாட்டு மாப்பிளை. நாங்க நினைச்சுக்கூட பாக்க முடியாத உதவிகள செய்ய அவங்க முன்வாறாங்க... நீ அங்க போனா சிறப்பாக இருக்கலாம்."

"அம்மா! எனக்கு ஜேர்மன் மாப்பிள்ளையை கலியாணம் செய்யவேண்மெண்டு முடிவெடுத்திற்றீங்க. பேந்தேனம்மா என்னட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டுக்கொண்டு. நீங்க சொன்னா நான் மறுத்தாம்மா பேசுவன். உங்கட விருப்பப்படியே செய்யுங்க."

சந்திராவின் முகத்தில் மகிழ்ச்சியைக் கண்டாள் பிரியவதனி...

"பிள்ளையார் சுழிபோட்டு - நீ நல்லதைத் தொடங்கிவிடு..."

நாதஸ்வர ஓசையில் ஒலித்தவாறிருந்தது பாடல்.

கண்ணைக் கவர்ந்திழுக்கும் கல்யாண மண்டப அலங்காரம். மணிகளால் மெருகூட்டடம் பெற்ற மணமேடை. நிறைவான கலா சாரத்தை என்றும் நினைவூட்டும் சின்னங்களாய் நிறைகுடம், குத்துவிளக்கு, பன்னீர்ச்செம்பு, சந்தனம், மா - வாழை இலைகள்.

மணமேடையில் பல கும்பங்கள், முறையாக வளர்த்த ஓமம், இணையற்ற மந்திரத்தை இயல்புடன் இயம்பும் சிவாச்சாரியார்.

வீடியோ, போட்டோ படப்பிடிப்பாளர்களின் கைவரிசை.

திருமணத்திற்கு வருகை தந்தவர்களில் பாதிப்பேருக்குமேல் திருமணச் சடங்குகளை பார்க்கமுடியாமல் தடுப்பதில் இவர்களின் பங்கு கணிசமாக இருந்தது.

சுற்றம் புடை சூழ்ந்திருக்க, தோழர் - தோழியர் அருகிலிருக்க, சரிகைப் பட்டுடன் மணமகன் சம்பிரதாயம் கூறிநிற்க, கரம் குவித்த கன்னியவள் சிரந்தாழ்த்தி இருந்தாள்.

மணமகன் சோதிநாதன். மணமகள் பிரியவதனி...

மணமக்களின் பெற்றோர்கள் மணமேடையின் முன்னால் இருமருங்கிலும் அமர்ந்திருக்க சிவாச்சாரியார் மந்திரத்தை உரத்து உச்சரிக்க, பெண்ணின் தாய், தந்தை இணைந்தாற்போல் கன்னியின் கரங்களை மாப்பிள்ளையின் கரங்களின்மேல் வைத்ததும், கண்ணீர் மல்க கன்னிகாதானச் சடங்கு நிறைவேறியது.

மணமகனின் பெற்றோர் பெண்ணுக்கான கூறை, சீப்பு - பவுடர், தாலியுடனான கொடி, தேசிக்காய், மஞ்சள், மாலை போன்றவற்றை வெள்ளித் தட்டத்தில் வைத்து பெண்ணின் கையில் கொடுத்தனர்.

பெண்ணின் பெற்றோரும் மாப்பிள்ளைக்கான உடைகள், மஞ்சள், மாலை போன்றவற்றை வெள்ளித் தட்டத்தில் வைத்து மாப்பிள்ளையிடம் கொடுத்தனர்.

கூறை, தாலி கொடியுடன் தேசிக்காய், மஞ்சள் போன்றவை வெள்ளித் தட்டத்தில் வைக்கப்பட்டு, திருமணத்திற்கு வருகை தந்தவர்களின் ஆசீர்வாதத்திற்காகத் தாய்மாமன் சுரேந்தரினால் எடுத்துச் செல்லப்பட்டது.

வருகைதந்த ஒவ்வொருவரும் தொட்டு ஆசீர்வழங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளை தமது கண்களில் ஒத்திக்கொண்டனர்.

பெண் கூறைச்சேலை அணிந்து வந்து மணமேடையில் அமர்ந்ததும், குறித்த முகூர்த்தத்தில் சிவாச்சாரியார் மந்திரம் உச்சரிக்க, கொட்டும் மேளத்தின் ஓசையுடன், கூடியிருந்தவர் ஆசியுடன், கெட்டியாய்க் கழுத்தில் பூட்டினான் தங்கத் தாலிக் கொடியை.

தொடர்ந்து இணைப்பை சகோதரி பொருத்த மாங்கல்ய தாரண சடங்கு நடைபெற்றது.

முதல் முடிச்சு மணமகனும் மற்றைய இரண்டையும் அவன் சகோதரி போடுதலுமென்பது தங்கக் கொடியென்பதால் மாற்றம் பெற்றுவிட்டது.

முதுமையடைந்த பின்னும் உன்னை கைவிடமாட்டேன் என மணமகன் மணமகளிடம் கூறுவதற்காக, விரல்கள் மேல் குவிந்த பெண்ணின் வலது கையை, மணமகன் தனது வலது கையால் எல்லா விரல்களும் சேர்ந்திருக்கும் வண்ணம் பிடித்து வைத்திருக்க கைப் பிடித்தல் சடங்கு நிறைவேற்றப்பட்டது.

மணமக்கள் வேட்டியால் மறைக்கப்பட்ட நிலையில் பால், பழம் அருந்தினார்கள். பார்வையாளருக்கு மட்டுமே இந்த மறைப்பே யன்றி வீடியோ, போட்டோ படப்பிடிப்பாளருக்கு அல்ல.

ஆணுக்குப் பெண்ணும் பெண்ணுக்கு ஆணுமாக மூன்று தடவைகள் மாறிமாறி மாலை மாற்றிக்கொண்டனர்.

அம்மி மிதித்து, வானில் 'அருந்ததி' நட்சத்திரம் காட்டும் நிகழ்வு. பிரகாசமான சூரியஒளியில் 'அருந்ததி' தெரியுதோ இல்லையோ வானில் அது காட்டப்பட்டது.

பெண்ணின் காலில் மெட்டி அணிவித்து, மோதிரத்தைத் தண்ணீர்க் குடத்துக்குள் போட்டுத் தேடியெடுத்தல் போன்ற சம்பிரதாய சடங்குகள் இடம்பெற்று முடிவுற்றதும், மணமக்கள் பெற்றோரின் பாதத்தில் வீழ்ந்து ஆசிபெற்றனர்.

தொடர்ந்து பெற்றோருடன் சுற்றத்தார் எனப் பலரும் அறுகரிசியை கோலி மணமக்கள் தலையில் போட்டு ஆசியும் வாழ்த்தும் கூறினர்.

திருமணத்திற்கு வருகை தந்தவர்களின் சந்திப்புடன் சம்பிரதாய ரீதியிலான திருமண விழா நிறைவுபெற்றதும், விவாகப் பதிவாளரினால் திருமணத்தை உறுதிப்படுத்த பதிவுசெய்யப்பட்டது.

வீட்டிற்கு வந்ததும் பிரியவதனி தாயைக் கட்டியணைத்து அழுதாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அக்கா வந்திருந்தால் சந்தோஷமாய் இருந்திருக்கும்."

"எனக்கு மட்டுமென்ன விருப்பமில்லையா? அவள் குழந்தையோடு இங்கு வந்திருந்தா பலரது கேள்விக்குப் பதில்சொல்ல வேண்டியிருந்திருக்கும். அதனாலேதான் அறிவிக்கவில்லை. பலருக்கும் அவள் சவுதியில் இருப்பதாகவே இருக்கட்டும்."

"எண்டாலும் அக்காவெல்லாம்மா..."

சந்திரா அவளைச் சமாதானப்படுத்தி அழுவதை நிறுத்தினாலும் பிரியாவின் நினைவுகளை நிறுத்த முடியவில்லை...

திடீர் திருமணப்பேச்சு, திடீர் திருமணம் என்றாலும் சிறப்பாக நடைபெற்ற திருமணத்தால் மணமக்களின் பெற்றோர் மகிழ்வில் மூழ்கி எழுந்தனர்.

திருமணத்தின் பின்னரான நடைமுறைகளை பெற்றோர் பின்பற்றத் தவறவில்லை.

தனது எதிர்காலக் கனவுகளில் கரும்புள்ளிகளும் இருக்கும் என்பதை உணராதவளாய் பிரியவதனி பூரிப்பில் மிதந்தாள்...




சோதிநாதன் தனது விடுமுறை முடிந்ததும் ஜேர்மனுக்குச் செல்லப் புறப்பட்டான்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில், விமானம் புறப்படும் பகுதியில் கண்ணீருடனும் வேதனையுடனும் பிரிய மனமின்றிப் பிரிந்தனர் இருவரும்...

கடந்த இரு வாரகால நினைவுகளை ஒவ்வொன்றாய் மீட்டுப் பார்த்தவாறு பிரியவதனி கண்ணாடி மறைப்புக்கு முன்னால் நிற்க, விமான ரிக்கற் பரிசோதனை முடிந்து பொதிகளை அங்கே ஒப்படைத்த பின்னர் கையசைத்துக் காண்பித்துவிட்டு உள்ளே சென்றான் சோதிநாதன்.

விமான நிலையத்திலிருந்து கொழும்பு கொச்சிக்கடையிலுள்ள விடுதிக்கு வந்ததுமுதல் அமைதியிழந்தவளாகவே காணப்பட்டாள் பிரியவதனி.

தனது உடலின் பாதி பிரிந்துசென்ற நிலையிலேயே அவளிருந்தாள். அவ்வளவுக்கு கணவனை நேசித்தாள்...

முதல்நாள் கிடைத்த புதிய அனுபவம், புடைத்தெழுந்த இன்பக் கிளர்ச்சி, அறியாதிருந்து அறிந்துகொண்ட உண்மைகள், மிகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த நாட்கள் மட்டுமே அனுபவித்த சந்தோஷம் அவளைத் திக்குமுக்காடச் செய்தது.

கூடவே சென்றிருக்கக்கூடாதா என்று அவள் மனம் ஏங்கியது.

சோதிநாதன் ஜேர்மன் சென்றாலும் பிரியவதனி அங்கு செல்வ தற்குப் பல மாதங்கள் காத்திருக்கவேண்டும்.

சோதிநாதன், தான் திருமணம் செய்ததை உறுதிப்படுத்தி, மனைவியை அழைப்பதற்கான விண்ணப்பத்தைக் கொடுத்து விசா பெற்றுக்கொண்ட பின்னரே இவள் அங்கு செல்ல முடியும்.

பதிவுத் திருமண சான்றிதழ் கிடைத்ததும், கணவனின் பெயரை இணைத்து அடையாள அட்டை, கடவுச்சீட்டு எடுக்கப் பட்டு சான்றிதழ் மற்றும் கடவுச்சீட்டின் பிரதிகள் சோதிநாதனுக்கு கிடைத்த பின்னர்தான் அவனால் விண்ணப்பம் செய்யமுடியும்.

பிரியவதனி யாழ்ப்பாணம் வந்ததுமுதல் ஜேர்மனிக்குச் சென்ற தனது கணவனின் கடிதத்தையே எதிர்பார்த்துக் காத்திருந்தாள்.

இருவார கால தமது சந்தோஷ வாழ்வின் வெளிப்பாடு அவனது கடிதத்தில் பிரதிபலிக்கும் என்பதால், தான் என்னென்ன எழுதவேண்டும் என்ற கற்பனையில் தினந்தினம் மூழ்கியிருந்தாள்.

தனது மனதைத் தொட்டு, மறக்கமுடியாமல் உயிர்பெற்றுக் கொண்டிருக்கின்ற நிகழ்வுகளை அப்படியே எழுத்தாக்கி அவனுக்கு அனுப்பவேண்டுமென்ற அங்கலாய்ப்பு அவளிடம் மிகுதியாகவே இருந்தாலும் பெண்மையின் இயல்பான குணம் காரணமாக அடக்கிக் கொண்டாள்.

எதிர்பார்த்திருந்ததைப்போல் கடிதம் கிடைத்தது. ஆனால், அவளது கற்பனையில் முகிழ்ந்தெழுந்த எதிர்பார்ப்புகள் எழுத்துக் களில் இருக்கவில்லை.

ஏமாற்றம் அவள் இதயத்தை வருடியது.

வேறு வழியின்றி தனக்குத் தானே சமாதானம் செய்து கொண்டவள், தனது அன்பின் வெளிப்பாட்டை நீண்ட கடிதத்தில் எழுதி அனுப்பிவைத்து மனநிறைவடைந்தாள்.

ஒரு மாத இடைவெளியில் திருமணப் பதிவுச் சான்றிதழ் கிடைத்தது.

அடையாள அட்டை, கடவுச்சீட்டு எடுப்பதற்காக தந்தையு டன் கொழும்பு சென்று இரண்டு நாட்களில் அவற்றை எடுத்துக் கொண்டு வீடு வந்து சேர்ந்தவள், கடவுச்சீட்டின் போட்டோ பிரதியையும் திருமணப் பதிவுச் சான்றிதழையும் இணைத்து பதிவுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபாலில் அனுப்பி வைத்தாள்.

ஜேர்மனில் இருந்து சோதிநாதனின் கடிதம் வந்திருந்தது.

ஆவலுடன் படித்து முடித்தாள்.

"அம்மா!"

"என்னம்மா?"

"மன்னாரில இருக்கிற இவரட அண்ணன்ர மனைவிக்கு பிள்ள பிறந்திருக்கிறதால இவருக்குத் துடக்காம். அதால அவசரப்பட வேண்டாமெண்டு கடிதத்தில எழுதியிருக்கிறாரம்மா. இஞ்ச அவரட அண்ணி பிள்ளப் பெற ஜேர்மனியில இருக்கிறவருக்குத் துடக்கா? என்னம்மா இது?"

"உறவின்ர, உணர்வின்ர தொடர்புதானம்மா அது. முந்தி எல்லாரும் கூட்டுக் குடும்பமாக கணவன்ர வீட்டில்தான் இருப்பாங்க. அதனால துடக்கு அங்கு இருப்பவர்களுக்கு இருந்தது. இப்ப அப்பிடி இல்லாம வேற இடங்களில, வெகு தூரங்களில வசித்தாலும் தொடர்ந்து கடைப்பிடிக்கிறாங்க. இதனை சரியென்று ஏற்கிறாக்களும், பிழையென்று சுட்டிக்காட்டுறாக்களும், குழந்தைக்கு பாதிப்பு ஏற்படக்கூடாதென்பதற்காக செய்பவர்களும் இருக்கிறாங்க... இதத்தவிர என்னட்ட ஒண்டும் கேக்காத."

"சரியம்மா!"

படித்து முடித்த கடிதத்திலும் உணர்வுகளின் பிரதிபலிப்புகள் இல்லையாயினும் தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டவள், எதிர்பார்ப்பை மூட்டைகட்டி வைத்துவிட்டு பதில் அனுப்பி வைத்தாள்...




கொழும்பு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து அதிகாலை விமானத்தில் ஏறியவள் அன்றைய தினமே 'ஜேர்மன்' நாட்டில், 'பிறாங்பேட்' சர்வதேச விமானநிலையத்தில் இறங்கினாள்.

விமானநிலையத்தில் பயணிகள் வெளியேறும் வாசலில் சோதிநான் காத்திருந்தான்...

சோதிநாதனைக் கண்டதும் பிரியவதனியின் உள்ளமும் உடலும் குதூகலத்தால் பிரகாசமாகியது.

'பிறாங்பேட்' விமானநிலையத்திலிருந்து 'பிறாங்பேட் மெயின்' நகரத்துக்குப் போகும் விரைவுப் பாதையில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது சிவப்புநிற 'அல்பா றோமியோ'.

சோதிநாதனே அதனைச் செலுத்திவந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை கடிதத்தின் எதிர்பார்ப்புடனும் கற்பனையிலும் வாழ்ந்தவளுக்கு, சோதிநாதனுடன் இணைந்தாற்போல் வாகனத்தில் பயணிப்பது மகிழ்வைக் கொடுத்தது.

வீதியின் இரு பக்கங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் காணப்பட்ட அழகிய - உயர்ந்த - விசாலமான கட்டடங்கள், வியப்பூட்டும் விதம்விதமான மரங்கள், உயர்ந்த மலைகள் - மலைக் குன்றுகள், பச்சை நிறத்தைக் குறைவின்றிக் காட்சிப்படுத்தும் புல்தரைகள், ஆங்காங்கே மேய்ந்துகொண்டிருக்கும் உயர்ந்த - பருத்த மாடுகள், இடைக்கிடையே காணப்பட்ட பூந்தோட்டங்கள், வீதிகளில் போட்டிபோட்டவாறு விரைந்து செல்லும் பலவகை வாகனங்கள் போன்றவற்றைப் பார்த்து காரினுள் மெய்மறந்திருந்தாள் பிரியவதனி...

யாழ்ப்பாணத்தில் குறுக்குமறுக்கானதும், வளைவுகளுடன் கூடிய ஒடுக்கமானதுமான வீதிகளை மட்டுமே பார்த்துப் பழகிய அவளுக்கு, போவதற்கும் வருவதற்குமென தனித்தனியான பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, பல தடங்களாக அமைத்து ஒருங்கிணைக்கப்பட்டு, அகன்று - நீண்டு செல்லும் வீதிகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தியது..

விரைவுப் பாதையை ஊடறுத்து வாகனங்கள் செல்லாதிருப்பதற்காய், அப்பாதைக்கு கீழாகவும் - மேலாகவும் செல்லும் வீதிகள், வீதிகளுக்கெனப் போடப்பட்டுள்ள பாலங்கள், கழுவித் துடைத்ததுபோல் காணப்பட்ட விரைவுப் பாதையின் இரு மருங்கையும் அழகூட்டும் செடிகள் - பூ மரங்களின் அலங்கரிப்புப் போன்றவை அவளை வியப்பிலாழ்த்தின.

மிதமிஞ்சிய வேகத்தில் ஒன்றுடனொன்று போட்டி போடுவதைப் போல் தடங்களாக அமைந்த வீதியில் விரைந்து செல்லும் வாகனங்கள் அவளின் சிந்தனையைத் தொட்டதுடன், தான் பயணிக்கும் வாகனமும் அவ்வாறே செல்வதை அப்போதுதான் உணர்ந்தாள்... பயம் அவளை ஆட்கொண்டது...

ஆனாலும் எதுவும் சொல்லவில்லை.

'பிறாங்பேட் மெயின்' நகரில் குடிசனங்கள் நெருக்கமாக உள்ள பகுதியில், உயர்ந்த மாடிக் கட்டடங்களின் மத்தியில், ஒரு கட்டடத்தின் முன்னாலிருந்த வாகனத் தரிப்பிடத்தில் கார் நிறுத்தப்பட்டது...

வான்நோக்கி உயர்ந்திருக்கும் கட்டடங்களைச் சுற்றிச் சுழன்று பார்த்து மலைத்துப்போய் நின்றாள் பிரியவதனி. கட்டடங்கள் அமைத்திருந்த சுற்றாடல்த் தரை சிறு குப்பைகூட இல்லாமல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகுறக் காணப்பட்டமை அவளை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. பிரியவதனிக்கு தரையிலே உட்காரவேண்டும் போலவிருந்தது...

யாழ்ப்பாணத்திலுள்ள வீடுகளின் சுற்றாடலை ஒருகணம் நினைத்துப்பார்த்தாள். சிரிப்பு புட்டுக்கொண்டு வந்தது...

ஏழு மாடிகளைக்கொண்ட உயர்ந்த கட்டடத்தின் மூன்றாவது மாடியில் இரண்டு அறைகள், ஹோல், சமையலறை, குளியலறை, பல்கனியுடனான வீடு அது.

யாழ்ப்பாணத்து வீடுகளைப் போலல்லாமல் முற்றிலும் மாறுபட்ட அறைகளின் அமைப்பு, ஹோல் அலங்கரிப்பு, கம்பளம் விரிக்கப்பட்ட தரை மற்றும் தளபாடங்கள் காணப்பட்டமை அவளுக்குப் புதுமையாக இருந்தது.

மிருதுவான இருக்கையில் இருவரும் சாய்வாக அமந்தனர்...

சோதிநாதனின் அணைப்பு அதனால் உருவான ஸ்பரீசம் அவளுடலைச் சிலிர்க்கச்செய்து கிளர்ச்சியை ஏற்படுத்தியது...

இதழ்களின் இணைப்பின் சுவையை சில மாத இடை வெளியின் பின்னர் மீண்டும் அனுபவித்தபோது அவள் கண்கள் மெல்ல சொருகின...

தன்னை மறந்தவளின் உள்ளம் கற்பனையில் மிதந்தது.

உணர்வுகள் தாயின் அணைப்பிற்கு ஏங்கும் சேயின் நிலையில் பரிதவித்தது...

இவற்றை பெரிதுபடுத்தாதவன்போலக் காணப்பட்ட சோதி நாதன் சற்று நேரத்தால் தன்னை விடுவித்து எழுந்தான்.

தனது செயலால் தூண்டப்பட்ட இன்பக் கிளர்ச்சியால் அவள் துவளுவதை கருத்திலெடுக்காதவனாக சென்ற அவன், சுடச்சுட 'நெஸ்ற்' கோப்பி போட்டுக் கொடுத்தான்.

குறைவடையாத உடலின் உஷ்ணத்துடன் சுவைத்துக் குடித்து முடித்தாள்...

சொகுசான இருக்கையும், அருந்திய சூடான கோப்பியும் பிரயாணக் களைப்பிற்கு இதமாக இருந்தது அவளுக்கு.

சோதிநாதன் அவளருகில் அமர்ந்தான்.

அவளது தோள்மீது கைபோட்டுத் தன்பக்கம் இழுத்து, இதழோடு இதழ் சேர அணைத்தான்...

பழுக்கக் காய்ச்சிய இரும்பைப்போல் வளைந்து, இசைந்து கொடுத்தாள்...

அவளது இசைவால் சோதிநாதனின் உடலில் ஏறிய வெப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனலாக வெளியேறியது...

அவனது அணைப்பு மேலும் இறுக்கமானது.

அவனது செயல்கள் பரவலாக விரிவாக்கம் பெற்றன.

அவள் தன்னை மறந்தாள்...

உலகத்தை மறந்தாள்...

இருந்த இருக்கையை மறந்தாள்...

மெல்ல மெல்லத் தனது உடைகளையும் இழந்தாள்...




போர்மேகம் மீண்டும் வடகிழக்குப் பகுதிகளைச் சூழ்ந்து கொண்டது.

முன்னரைவிட கருமை நிறைந்த மேகமாக இருந்தது. அந்த மேகம் குறித்த இடத்தை மட்டுமல்ல பிரதேசத்தையே இருளாக்கியது. அதன் மழைப் பொழிவுகள் நவீனத் தன்மையைப் பெற்றிருந்தன.

வரலாறு காணாத உயிர், பொருள் அழிவுகளால் மக்களை திணற வைத்தது இருள்.

திடீரென உருவான அந்தக் கருமேகத்தின் கருமை காரணமாக குறித்த பகுதிகளில் வாழும் மக்களை, அங்கிருந்து புறப்படுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டதும், அமுலிலிருந்த ஊரடங்கு நிலையையும் புறந்தள்ளி பல திசைகளாகப் பாதுகாப்புத் தேடிப் புறப்பட்டனர் அப்பகுதி மக்கள்.

ஆலயங்கள், பள்ளிக்கூடங்களெனத் தஞ்சம் புகுந்தனர். சிலர் உறவினர் தெரிந்தவர்களின் வீடுகளிலும் குடிபுகுந்தனர். அவ்வாறு ஆனந்தனின் வீட்டில் குடிபுகுந்தவள்தான் இராசம்மா.

இராசம்மா ஆனந்தனுக்கு தூரத்து உறவினள்.

வயதில் மூத்தவளும் இவள்தான். அதனால் எந்த முக்கிய நிகழ்வுகளுக்கும் இவளது பிரசன்னமும் ஆளுமையும் இருக்கும்.

கணவனை இழந்து தனது மகளுடன் வாழ்ந்து வருகிறாள்... பூட்டப் பிள்ளையையும் கண்டுவிட்ட அவள் இரத்த அமுத்த நோய்க்குச் சொந்தக்காரி.

ஆனந்தனின் வீட்டில் முன்னரைவிடப் பெரும் சமையல், பலரின் நடமாட்டம், சிறுவர்களின் சல்லாபங்கள், ஓய்வில்லாத உரையாடல்கள் போன்றவற்றால் போரின் தாக்கத்தையும் மறந்து பூரிப்பில் மிதந்தனர் அங்குள்ளவர்கள்.

பொருட்களின் தட்டுப்பாடு, வியாபாரிகளின் பதுக்கல், பல மடங்கு விலையேற்றம், வருவாயின்மை, இடப்பெயர்வு, திகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைந்த வாழ்வு. இவை அந்த மேகம் கொடுத்த கொடைகள்...

காலையில் ஊரடங்கு நேரம் முடிந்ததும் ஆண்களும் பெண்களும் ஆளுக்கொரு பக்கமாக உணவு மற்றும் பொருட்களைத் தேடி அலைவதும், கிடைக்கக்கூடிய இடங்களில் கூடுதல் விலையென்றாலும் பெற்றுக் கொள்வதும், குடும்ப அட்டையுடன் பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்படும் பதிவிடங்களைத் தேடி ஓடுவது மெனத் தினமும் பெரும் களேபரம்தான்.

அரச அதிகாரிகளின் திட்டமிடலற்ற செயற்பாடுகளினால், வர்த்தகர்களின் நெறிதவறிய முறைகேடுகளினால் மக்கள், அசாதாரண நிலையிலும் பல இடர்களை எதிர்கொண்டனர், பல சுமைகளைச் சுமந்தனர், மோசமாக நடத்தப்பட்டனர் என்பது மக்கள் மனங்களில் மறுக்கமுடியாத உண்மையாக பதிவாகியிருந்தது...

இரவு ஊரடங்கு நேரமென்பதால், பகல் பூராவும் பலவகை வேலைகளில் ஈடுபட்டு ஓய்ந்திருப்பவர்கள், இரவில் வீட்டின் முன்னாலிருந்த முற்றத்தில் கூடி அரட்டையடிப்பதும், அன்று கிடைக்கப்பெற்ற தகவல்களை ஒவ்வொருவரும் மாறிமாறிச் சொல்லும்போது, வாய்பிழந்தபடி மற்றவர் கேட்டுக்கொண்டிருப்பதும், மறுநாள் தேவையை நிறைவுசெய்யும் வழிகளைச் சிந்திப்பதுமாக வீட்டிலுள்ளோரின் பொழுதுகள் போய்க்கொண்டே இருந்தது.

❖❖❖

**வா**னில், பாதி சந்திரன் தன்னாலியன்ற ஒளியைப் பூமிக்குக் கொடுத்துக்கொண்டிருந்தான். மின்சாரம் தடைப்பட்டிருந்ததால் சந்திரனின் ஒளிக்குப் பெரும் வரவேற்பு. அந்த ஒளியில் இராசம்மா வழமைபோல் கதிரையில் இருக்க, ஏனையோர் இராசம்மாவிற்கு முன்னால் நிலத்திலிருந்தவாறு வழமையான பல்லவியைத் தொடர, சிறுவர்கள் லாந்தர் ஒளியில் 'தாயம்' விளையாடிக் கொண்டிருந்தனர்.

வீதிகள் போக்குவரத்து எதுவுமின்றி உறங்கிக் கிடந்தன.

சில வீடுகளில் வீடடங்க உரையாடல்கள் இருந்தபோதும் பெரும்பாலான வீடுகளில் அமைதியின் ஆக்கிரமிப்பு...

"டுடும்... டுடும்... டுடும்..."

திடீரென மிக அண்மையிலிருந்து எறிகணைச் சத்தங்கள் தொடராகக் கேட்டன... இருந்தவர்கள் திடுக்கிட்டு சத்தம் வந்த திசையைப் பார்த்தனர். பல ஒளிப் பிழம்புகள் ஒன்றன்பின் ஒன்றாய் கிழக்கு நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. கணநேரம்தான், இராசம்மாவைத் தவிர எவரும் அங்கு இல்லை. போட்டிபோட்டுக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிற்குள் புகுந்து கொண்டனர்.

இவை 'மல்ரிபரல்' சத்தங்கள்.

தொடர் சத்தங்கேட்டு ஓடியவர்களில் விழுந்தவர்களும் உளர்.

ஏற்கெனவே எறிகணைச் சத்தங்கள் பலவற்றைக் கேட்டிருந் தாலும் 'மல்ரிபரல்' பற்றி அறிந்திருந்தாலும் இந்த விண்ணதிரும் சத்தங்களை முதன்முறையாக இன்றுதான் கேட்கிறார்கள்.

தொடராக முப்பதுக்கும் மேற்பட்ட எறிகணைகள் ஓசை யெழுப்பித் தீப்பிழம்பாய்ப் பறந்தன, மிக அண்மையிலிருந்து சத்தம் கேட்டதினாலுமோ என்னவோ எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்தது...

இதயம் வேகமாக துடிக்க முதன்முதல் உலகத்தைப் பார்ப் பவர்போல் வெறித்துப் பார்த்தபடியே மறைந்து நின்றார்கள் ஆனந்தனின் வீட்டிலிருந்தவர்கள்...

அங்கே முழுமையான அமைதி நிலவியமையால் இதயத் துடிப்பின் ஒலியை ஒவ்வொருவரும் நன்றாகவே உணர்ந்தனர்...

சில வினாடிகளில் தொடரான சத்தங்கள் தூரத்தே கேட்டன. இங்கிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் எங்கோ விழுகின்றன என ஊகித்துக்கொண்டாலும் அவர்களது இதயத்தின் படபடப்பு நின்றபாடாயில்லை...

சத்தங்கள் முற்றாக அடங்கி அமைதி நிலவியது...

மறைந்து நின்றவர்களுக்கு இப்போதுதான் இராசம்மாவின் நினைவு தோன்றியிருக்கவேண்டும். பதைபதைப்புடன் வெளியே ஓடி வந்தனர்...

இராசம்மா கதிரையிலேயே இருந்தார்....

"என்னம்மா பயமில்லாம இருந்தனியா?..."

மகள் கூறியவாறு தாயின் தோளைத் தொட்டசைத்தாள். அவளின் உடல் முன்னோக்கிச் சரிந்தது....

"அம்மா..."

மகளினது அலறல் அமைதியைக் கிழித்துக்கொண்டு பல வீடுகளிலுள்ளவர்களின் காதுகளுக்கும் எட்டியது...

❖❖❖

நாட்கள் செல்லச்செல்ல யுத்த மேகத்தின் கனதியைச் சுமக்க முடியாமல் சுமந்தார்கள் மக்கள்.

கையில் பணமில்லை...

ஒருவேளை உணவுக்காக நிவாரணங்கள் கொடுக்கும் இடங்களைத் தேடி கூட்டம் கூட்டமாக அலைந்தனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை நாலு மணி முதல் வரிசையாக நின்று இராணுவத்தினரின் கடைகளில் சில பொருட்களைப் பெற்று அதனைக் கூடுதல் விலைக்கு விற்றுப் பணத்தைப் பெறுவதற்கும் சிலர் அலைந்தனர்...

பாணைக்கூட பெறுவதற்கு பெரும்பாடு படவேண்டியிருந்தது.

இவற்றால் பலர் நோயாளராகவும், நோயாளர் மேலும் பாதிக்கப்பட்டவர்களாகவும் ஆனார்கள்...

கூட்டுறவுக் கடைகளுக்கு முன்னால், நடுச்சாமம் முதல் வரிசையாய் நின்று பலரிடம் ஏச்சும் பேச்சும் வாங்கி, நெரிபட்டு விழுந்தும் பொருட்கள் கிடைக்காமல் அலையும் துன்பம் நிறைந்த வரலாற்றை யுத்தமேகம் ஏற்படுத்திவிட்டது.

❖❖❖

பலரையும்போல மணிரெத்தினம் குடும்பமும் தாக்குப்பிடிக்க முடியாமல் திக்குமுக்காடியது...

மணிரெத்தினம், மனைவி, துவாரகா, துவாரகாவின் மகன் வசிக்கும் வீட்டில் மணிரெத்தினத்தின் நாளாந்த சம்பளத்திலேயே அவர்களது சீவியம்.

அதுவே போதாத நிலையிலிருக்க, தற்போதைய சூழலால் வேலையின்றி வருவாயிழந்து நிற்கிறது அந்தக் குடும்பம்.

நாளாந்த சேமிப்பென்று கையிலிருந்த பணமும் கோடை நதிபோல வற்றிவிட்டது.

கைமாற்றாக பணம் பெறுவதும், பண உதவியை எதிர்பார்த்திருப்பதும் எத்தனை நாட்களுக்கு தொடரக்கூடியவை. அதுவும் மணிரெத்தினம் கூச்ச சுபாவம் உள்ளவர்...

மணிரெத்தினத்தால் முதல்நாள் எடுக்கக்கூடியதாயிருந்த இரண்டு இறாத்தல் பாணும், தேநீரும்தான் இரண்டு நாட்களின் உணவாக இருந்தது...

கையில் பணமில்லை... தேவைக்கேற்ப உணவில்லை... அனைவரும் சோர்ந்து போயினர்.

பெரியவர்கள் அனுசரித்துப் போனாலும் துவாரகாவின் மகனால் தாங்கிக்கொள்ள முடியாதென்பதால் கிடைப்பவற்றில் அவனுக்குக் கொடுத்த பின்புதான் மற்றவர்கள் சாப்பிடுவார்கள்.

இடைக்கிடையே ஆனந்தனால் வழங்கப்படும் பணம் மற்றும் பொருளுதவி இவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாக இருந்தது.

மறுநாள் கூட்டுறவுக் கடைகளில் நிவாரணம் கொடுக்கப் போவதாகத் தகவல் வெளியாகியதும் நிவாரண அட்டையுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை ஐந்து மணிக்கு முன்னரே கூட்டுறவுக்கடை நோக்கிப் புறப்பட்டு விட்டார் மணிரெத்தினம்.

கூட்டுறவுக் கடையின் முன்னால் நீண்ட வரிசையில் ஆட்கள். வேறு வழியின்றி இறுதி ஆளாக நின்றுகொண்டார். அரைமணி நேரத்திற்குள் அவர் பின்னாலேயும் நீண்ட வரிசை காணப்பட்டது. அதைக் கண்டதும் மணிரெத்தினத்துக்கு உள்ளூர ஆறுதல்...

காலை ஒன்பது மணியளவில் பொருட்கள் விநியோகம் ஆரம்பமாகியது.

பலர் பொருட்களைப் பெற்றுச் சென்றும் ஓர் அடிகூட வரிசை நகரவில்லை. அவ்வளவுக்கு நெருக்கமாக இறுகிப்போய் நின்றது கூட்டம்.

நேரம் செல்லச் செல்ல வரிசையின் நெருக்கம் குறைந்ததும் ஆமைபோல நகரத் தொடங்கியது...

பொருட்களை எடுத்துக்கொண்டு வெளியே வந்த ஆனந்தன், இருமல் சத்தம்கேட்டுத் திரும்பியபோது வரிசையில் மணிரெத்தினம் நிற்பதைக் கண்டதும் கிட்டே சென்றார்.

"பீடியக் குடிச்சுக் குடிச்சு இருமலச் சொந்தமாக்கிவிட்டாய். சொன்னாலும் கேக்கிறாயில்ல... கொஞ்ச நேரத்துக்கு முன்ன வந்திருக்கலாமே?"

கேட்டவாறு அவரது சேட் பையில் பணம் வைத்துவிட்டுச் சென்றார்.

மணிரெத்தினத்தின் உள்ளத்தில் ஆறுதல்...

நேரம் ஒரு மணிக்கு மேலாகிவிட்டது.

காலை உணவு, மதிய உணவு உண்டிட வாய்ப்பில்லாமல் நிற்கும் மக்களில் பலர் சோர்ந்து, தளர்ந்துபோய் நின்றனர்.

வெயில் உச்சி பிளந்துவிடும்போல இருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறவிட்டால் வேறு தெரிவு அவர்களுக்கு இல்லை.

ஊதிவிட்டால் விழுந்துவிடும் நிலையிலும் சிலர் காணப் பட்டனர்.

சோர்ந்து, சலிப்படைந்திருந்த மணிரெத்தினம் தனக்கு முன்னால் நிற்பவர்களை எண்ணிப் பார்த்தார்.

இன்னமும் பத்துப் பேர் செல்லவேண்டும்...

மனதிற்குள் அளவிடமுடியாத ஆனந்தம்.

இப்போது ஒன்பது...

இப்போது ... எட்டு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவலுடன் தனக்குள் எண்ணிக்கொண்டிருக்கையில் திடீரெனக் கடைக்கதவு சாத்தப்பட்டது...

"நாளைக்குத்தான் சாமான்கள் கொடுப்பாங்களாம்..."

பூட்டப்பட்ட கடைக்குள்ளிருந்து கதவைத் திறந்து வெளியேறிய இருவர் கூறிச் சென்றனர்.

நின்றவர்களின் எதிர்பார்ப்பில் இடி விழுந்ததுபோல இருந்தது இந்தத் தகவல்.

கடை முகாமையாளரை ஏசிவிட்டுப் பலர் திரும்பிச் செல்ல, சிலர் அங்கேயே தங்கி நின்றனர், சற்றுத் தாமதித்துக் கடையைத் திறந்து பொருட்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையில்...

'அரிசியையாவது எடுத்துப் போனால்தான் வீட்டில் கஞ்சியேனும் குடிக்கலாம்' என்ற எண்ணம் அங்கு நின்றவர்களிடம் இருக்கவே செய்தது.

மணிரெத்தினமும் அவர்களுடன் சேர்ந்தாற்போல் தங்கி நின்று பார்த்தார்... பயனில்லை.

"இண்டைக்கும் தண்ணீர்தான்..."

வயிற்றின் நச்சரிப்புத் தாங்கமுடியாமல் அவரது வாய் முணுமுணுத்தது...

கூடவே இருமலும் போட்டிபோட்டுக்கொண்டிருந்தது.

கண்கள் சுற்றுவதுபோல இருந்ததால் கண்ணை வெட்டி வெட்டி விழித்தார்.

தொடர் இருமலால் தொண்டை காய்ந்து தாகம் எடுத்தது...

களைப்பு அதிகமாக இருந்தது.

மேலும் அங்கே நிற்க முடியாமல் பல்லைக் கடித்துக் கொண்டு தார் வீதியில் இறங்கி வீட்டை நோக்கி நடந்தார்...

தார் நெருப்பாகச் சுட்டது... தாங்கிக்கொண்டு நடந்தார்...

தொடர்ந்து நடக்க அவரால் இயலவில்லை.

உடல் வழமைக்கு மாறாக வியர்த்துக்கொட்டியது...

கண்களின் ஒளி மங்கிச்செல்லத் தலை சுற்றியது.

தடுமாறினார்...

தன்னைச் சுதாரித்துக்கொண்ட அவர், கைகளை விரித்து தாங்கிக் கொள்ள ஆதாரத்தைத் தேடினார்...

எதுவும் கிடைக்கவில்லை...

மேற்கொண்டு நிற்க முடியாமல் நடுவீதியில் சோர்ந்து விழுந்தார்...

கூட்டுறவுக்கடை முன்னால் வரிசையில் நின்ற சிலர் ஓடிவந்து மணிரெத்தினத்தை தூக்கினர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலாத நிலையிலும் இருமல்...

வாயிலிருந்து வடிந்த நீரில் இரத்தம் கலந்திருந்தது...

"தண் ணீர்... தண் ணீர்..."

மணிரெத்தினத்தின் வார்த்தைகள் தடுமாற்றத்துடன் வெளிவந்தன. ஒருவன் ஓடிச்சென்று தண்ணீரை எடுத்துவந்து பருக்கினான்.

ஒரு முறை விழுங்கினார்.

இரண்டாம் முறை விழுங்கவில்லை.

பருக்கிய நீர் கடைவாயால் வெளியேறியது.

பருக்குதலை நிறுத்தி முகத்தில் நீர் தெளித்தனர்...

உடல் உணர்விழந்தது.

கண்கள் சொருகின...

கைமீறிப் போன நிலையில் மணிரெத்தினத்தின் உயிரற்ற உடல் வீதியோரமிருந்த நிழலில் வளர்த்தப்பட்டது...

தகவல் மனைவியைத் தேடிப் பறந்தது...

பதட்டத்துடன் மனைவி வந்தாள்.

துடிப்புடன் ஆனந்தன் ஓடி வந்தார்.

பெற்றதனால் பெற்றவர் உறவு, கூடப் பிறந்ததனால் சகோதர உறவு, திருமணம் செய்ததனால் மனைவி உறவு, பிள்ளைகளைப் பெற்றதனால் பிள்ளைகள் உறவு. இவையெல்லாம் இரத்த உறவுகள். ஆனால், ஆனந்தனைப் பொறுத்தவரை மணிரெத்தினத்தின் உறவு இவை ஒன்றுக்குள்ளும் அடங்காத நட்பு என்னும் மேன்மை உறவு...

ஆனந்தனின் இதயத்தில் மணிரெத்தினத்துக்கு மேலான மதிப்பு.

தனது நண்பனுக்கு இறுதி அஞ்சலியாக இடைவெளியின்றி அழுதுகொண்டே நின்றார் ஆனந்தன்...

## 22

அங்கிள் என அன்பொழுக அழைக்கப் படுகின்ற, அப்பழுக்கற்ற விசுவாசியான மணிரெத்தினம் மரணமடைந்த தகவலால் வேதனையில் இருந்த பிரியா, பிரியவதனிக்கு திருமணம் நடந்ததை காலங் கடந்து அறிந்தபோது துடித்தே விட்டாள்...

கூடவே வசித்துவந்த சசிகலா திருமணம் செய்து கொண்டதால் வாடகை வீட்டில் தனியாக இருக்கும் பிரியாவுக்கு இவை வேதனையையும், ஏமாற்றத்தையும் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுவும் தனது நிலையை அறிந்திருந்த பெற்றோரே சகோதரியின் திருமணத்தைப் பற்றி தனக்குத் தெரிவிக்காமல் மறைத்துவிட்டமையை நினைத்தபோது அவளுடல் கொதித்தது...

அவள் இதனை எதிர்பார்த்தது என்றாலும், அடிமேல் அடிபட்டு உரமேறிய இதயம் என்றாலும் அவள் உணர்வு, சுவாலையாய் அனல்வீச கண்ணீர் முந்திக்கொண்டது...

தன்னுடைய வாழ்க்கைச் சீரழிவின் பெறுபேறுதான் பிரியவதனியின் திருமணத்திற்கு அழைப்பு விடுக்கப்படாமைக்கான ஒரேயொரு காரணம் என்பதை நினைத்ததும் அவள் இதயம் வேகமாக துடித்தது.

தனக்கு ஏற்பட்ட அவலத்தால் மற்றவர்கள் விரும்பத்தகாத ஒருத்தியாக மாறிவிட்டதை எண்ணி இரத்த நாளங்கள் வெடித்தது போல் துடித்தாள்...

தனது குடும்பமும் இதற்கு விலக்கில்லாமல் போனதன் தாக்கம் தொடர் கண்ணீராக வெளியேறியது...

சோர்வு உடலை ஆட்கொள்ள பிரியந்தன் உறங்குவதைப் பார்த்தவாறு 'இலகு கதிரை' யில் படுத்துவிட்டாள்...

"ட்றிங்...."

கண்களிலிருந்த ஈரத்தைத் துடைத்துக்கொண்டு எழுந்து கதவைத் திறந்தாள்.

சசிகலா வாசலில் நின்றாள்.

அவளைக் கண்டதும் பிரியாவுக்கு அடக்கமுடியாத விம்மல் பீறிட்டது.

அவளை ஆதரவாய் அணைத்து உள்ளே அழைத்துச் சென்றாள் சசிகலா.

சசிகலாவின் மடியில் தலையைச் சாய்த்தவாறு தனது வேதனையை கண்ணீரோடு கொட்டித் தீர்த்தாள்.

"எல்லாம் உன்ர தலையெழுத்துதானடி..."

பிரியா தன் வேதனைகளைப் பகிர்ந்துகொள்வது முதற் தடவையல்ல என்பதால் எப்போதும்போல ஆறுதல்கூறினாள் சசிகலா...

பிரியாவின் முகம் சட்டெனக் கடுப்பாக மாறியது.

தலையை உயர்த்தினாள்...

"தலையெழுத்து!... எல்லாரும் இதைத்தானே கடைசி வார்த்தையாச் சொல்லுறீங்க... சசிகலா உன்னட்ட கேக்கிறன், அந்த தலையெழுத்த எழுதினது யார்? எதுக்காக? எப்ப? எங்க?... அப்பாவட விந்திலா? அம்மாவின்ர கருமுட்டையிலா? நான் உருவான கருவிலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது நான் வெளியே வந்தபோது என்னில எழுதின எழுத்தா?"

பிரியாவின் கேள்வியில் தடுமாறினாள் சசிகலா... அவள் அடைந்த வேதனை அவளை புடம்போட்டுள்ளது என்பதை உணர அவளுக்கு அதிகநேரம் எடுக்கவில்லை.

சிறிது நேரத்தில் வழமையானாள்...

"சொறி சசிகலா...!"

இருவரும் இணைந்து தேநீர் அருந்தினர்... இருவரது மௌனத்தாலும் அங்கு அமைதி நிலவியது.

மௌனத்தை கலைத்தாள் சசிகலா.

"பிரியா! உன்னட்ட ஒண்டு கேக்கவேணும்."

"சொல்லு சசிகலா?"

"எப்பிடி ஆரம்பிக்கலாமெண்டுதான் யோசிக்கிறன்... இது நிச்சயமா உன்னட துயரங்களுக்கு விடிவாயிருக்கும்..."

"என்ன சசிகலா ஒருநாளுமில்லாதவாறு புதிர் போடுறாய்?"

"புதிரல்ல பிரியா. ஏற்கெனவே பல தடவைகள் உன்னட்ட கேட்டதுதான்."

"நீ துவங்கீற்றியா பழைய பல்லவிய..."

"பல்லவி பழசுதான். ஆனா, நீ இத்தனை நேரமும் சரணங்களாக அழுது தீர்த்தியே விரும்பத்தகாத ஒருத்தியாக மாறிவிட்டாயென்று... நான் அன்டைக்கே கேட்டமாதிரி ஒத்துக்கொண்டிருந்தியெண்டா இந்த நிலை உனக்கு வந்திருக்குமா? பிரியவதனியின் கலியாணத்துக்கு அழைப்புக் கிடைக்காமலிருந்திருக்குமா?"

"............"

"நாலு பேரைப்போல நீயும் தலை நிமிந்து நிண்டிருக்கலாமே. கூனிக் குறுகவோ மறைந்து வாழவோ வேண்டிய தேவை இல்லையே."

"............"

"இது என்ன உலகத்தில நடக்காத ஒண்டா? அல்லது யாரும் செய்யாதத நீ செய்யப்போறியா? இல்லையே!"

"............"

"மௌனம் இதுக்கு பதிலில்லை பிரியா... நீ குழந்தையல்ல பாடமாகச் சொல்லித்தாறதுக்கு. உலகத்தை அறிந்தவள். உலகத்தின் நடப்புகளை உணர்ந்தவள். உனக்கு எதையும் சொல்லவேண்டிய அவசியமேயில்லை... என்னைப் பொறுத்தவரை உனக்கு ஓர் அடையாளம் வேணும். ஓர் அந்தஸ்து வேணும். கடந்தகால இருள் வாழ்வுக்கு ஒளி கிடைக்கவேணும் அதுதான் என்னட ஆசை."

வாளிக்குள் கரைத்திருந்த சவர்க்கார நுரை மெல்லமெல்ல கரைந்து உள்ளடங்குவதுபோல பிரியாவின் உள்ளத்திலிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைராக்கியமும் கரைந்து செல்வதை அவளின் முகமாற்றத்திலிருந்து உணர்ந்துகொண்டாள் சசிகலா.

தனது ஆசையின் முதற்படியில் கால் வைத்த மனநிறைவு சசிகலாவுக்கு.

"என்ன செய்யச் சொல்லுறாய் சசிகலா..."

"நீயும் மற்றவங்களப்போல கலியாணம் செய்யெண்டுதானே கேக்கிறன்... முன்ன கேக்கேக்க எந்த ஆயத்தமுமில்லாம உன்ர முடிவ அறிஞ்சு செய்யுறதுக்காக கேட்டனான். இப்ப அப்பிடியில்ல அறுதியும் இறுதியுமாக ஆயத்தத்தோடதான் வந்திருக்கிறன். உன்ர முடிவுதான் என்ன?

"..............."

"பிரியா! உன்னட தயக்கம் எனக்கு விளங்காமலில்லை. உன்ர வாழ்வில வீசிய புயல்... அதனாலுண்டான மன உளைச்சல்...' அதன் பெறுபேறாக கிடைத்த குழந்தை... அந்தக் குழந்தையின் எதிர்காலம்... இவையெல்லாவற்றையும் பற்றித்தானே யோசிக்கிறா..."

'உண்மை' என்பதுபோலத் தலையசைத்தாள்...

பிரியாவின் மனதில் ஏற்பட்ட மாற்றங்கண்டு உசாரானாள் சசிகலா...

"நீ எதைப் பற்றியும் யோசிக்காத. இதனால் சமூகத்தில உனக்கு நியாயமான அந்தஸ்து கிடைக்கும். உன்னுடைய மகனுக்கு அப்பா எண்ட ஸ்தானம் கிடைக்கும். நீ பெட்டிப் பாம்பாக அடங்கிக் கிடக்கவேண்டிய தேவையில்ல... மற்றவர்களின் இழிசொல்லுக்கு ஆழாகவேண்டிய அவசியமுமில்லை... ஏனென்றால் இதனை சமூகம் அங்கீகரிக்கிறது... என்ன சொல்லுறாய் பிரியா?"

"ம்..."

தெளிந்த நீராக மனம்மாறித் தலையசைத்தாள் பிரியா.

"தாங்ஸ்சடி... பிரியா! நான் உனக்காகத் தெரிவுசெய்த மாப்பிள்ளை தங்கமானவரடி. எங்களோடதான் வேலை செய்யிறார். அவர் பெயர் நவரெட்டினம். நவம் எண்டுதான் கூப்பிடுவோம். இதுதான் அவற்ர போட்டோ."

போட்டோவை நீட்டினாள். பிரியா தயங்கியவாறு பெற்றுக் கொண்டாள்.

"அவர் கலியாணம் செய்த ஒரு வருசத்தால மனைவி செத்திட்டா. பிள்ளை இல்லை. உன்னைப்போலவே வேதனையில் இருந்த அவருக்கு உன்னப் பற்றிய விபரமெல்லாத்தையும் சொன்னனான். அவரும் மனதார ஏற்றுக்கொண்டார்... என்ன நம்பு பிரியா. அவர் உனக்கு நல்லதொரு கணவராக, பிரியந்தனுக்கு நல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தையாக இருப்பார்... படத்தப் பாத்துக்கொண்டிருந்தது போதும். உனக்குச் சம்மதம்தானே?"

மௌனத்தை சம்மதமாக்கி, முகம் மலர, நாணத்துடன் தலை குனிந்தாள் பிரியா...

மனம் நிறைந்து ஆனந்தக் கண்ணீர் வடித்தாள் சசிகலா...

பிரியா திருமணம் செய்யப்போகும் தகவல், தபால்மூலம் அறியப்பெற்றதும் சந்திராவின் மகிழ்வுக்கு அளவேயில்லை.

குடும்பமே குதூகலத்தில் மிதந்தது...

உடனடியாகவே சுரேந்தர் வீட்டுக்குச் சென்ற சந்திரா, முதல் தடவையாக பிரியா பற்றிய விபரத்தை அவருக்கு தெரிவித்தாள்.

அவரது மனைவி உயிருடன் இருந்தபோது மகனுக்கு பிரியாவை பெண்கேட்டு வந்திருந்தனர். அப்போதைய சூழலில் ஏதும் பேசமுடியாமல் வாயடைந்து நின்ற அவள், இன்று கண்ணீருடன் கண்ணீர்க் கதையை கூறினாள்...

புரிந்துகொண்ட சுரேந்தர் ஆறுதல் கூறியதுடன் பிரியாவின் வாழ்வு சிறப்பதில் மகிழ்ச்சியுமடைந்தார்.

பிரியா திருமணம் செய்யப்போகும் தகவலை உறவினர் களுக்கும் அறிவித்து மனநிறைவு அடைந்தாள் சந்திரா...

திருமண அழைப்பிதழ் கிடைத்ததும், இராணுவத்தினரிடம் பயண அனுமதிக்கு விண்ணப்பித்து, விசாரணைக்குச் சென்று இரண்டு வாரங்களால் அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டனர்.

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே விமானப் போக்குவரத்து மட்டும்தான் நடைபெற்றது. அதனால் விமானப் பிரயாணச் சீட்டுக்கு முன்கூட்டியே பதிவுசெய்திருந்தார் ஆனந்தன்.

திருமணத்திற்கு ஒரு வாரம் இருக்கையில் விமானப் பிரயாணச் சீட்டு கிடைத்தது. உடனே புறப்பட்டு, பிரியாவின் வீட்டை அடைந்தனர்.

பிரியவதனியின் திருமணம் பற்றி அறிவிக்காமைக்காக மன்னிப்புக் கேட்டாள் சந்திரா. அதற்கான காரணங்களை, கண்ணீரின் மத்தியில் சமூகத்தின் பார்வையில் எடுத்துக்கூறினாள்...

கல்லும் உருகும் நிலை...

பிரியா மறுத்துக் கேள்வி கேட்கவில்லை. அவளது உள்ளம் அமைதியடைந்தது.

திருமணத்திற்கான ஆயத்தங்கள் தொடங்கின...

திருமணவிழா ஆடம்பரமின்றி, மட்டுப்படுத்தப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்புகளுடன் இனிதே நிறைவேறியது...




பல மாதங்களாக கணவன் சோதிநாதன்மீது பிரியவதனிக்கு ஏற்பட்டிருந்த சந்தேகம் இன்று உறுதியாகியது...

பிரியவதனி வசிக்கும் கட்டடத்தில் நாலாவது மாடியில் குடியிருக்கும் மல்லிகா என்ற பெண்ணே அதனை உறுதிப்படுத்தினாள்.

மல்லிகாவும் பிரியவதனியும் 'சுப்பர் மாக்கற்' ஒன்றில் வேலை செய்கின்றனர்.

ஐந்து மாதங்களுக்கு மேலாக இருவரும் அங்கு வேலை செய்யும் மற்றும் ஒரே கட்டடத்தில் குடியிருக்கும் அறிமுகம் இருந்தபோதும், மூன்று மாதமாக ஏற்பட்ட நெருக்கமான நட்பும், மல்லிகா பிரியவதனிமீது கொண்ட அக்கறையினாலும் இதுவரை மறைந்திருந்த உண்மையை அவளே வெளிச்சத்துக்கு கொண்டு வந்தாள்.

பிரியவதனி எதிர்பார்த்ததுதான்.

தன்னால் அறியமுடிந்ததை, கேள்விப்பட்டதைப் பற்றி சோதிநாதனிடம் இதுவரை எதுவுமே கேட்டதில்லை. இனிமேல் அதுபற்றிக் கேட்பதற்கு அவளுக்குத் துடுப்புக் கிடைத்துவிட்டது.

அமைதியின்றி சோர்வுடன் அமர்ந்திருந்தாள்...

'ஏதேனும் காரணத்தைச் சொல்லி இன்றும் நேரந்தாழ்த்தி வருவாரோ' என்ற சிந்தனை அவளுக்கு. இருப்பினும் இன்று கேட்டு விடுவது என்ற முடிவிலேயே இருந்தாள்.

காத்திருந்து காத்திருந்து பொறுமையிழந்தவளாய் படுக்கச் சென்றுவிட்டாள்.

கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான் சோதிநாதன்.

பிரியவதனி நித்திரைபோலக் கிடந்தாள்...

'விஸ்கி' மணம்...

உடல் தள்ளாட்டம்...

படுத்துவிட்டான்...

இப்படி எத்தனை இரவுகள்...?

ஏக்கப் பெருமூச்சு...

அவன் தலைக்கேறிய போதையில் இருந்ததால் அவள் வாய் திறக்கவில்லை.

மறுநாள் கேட்கும் தீர்மானத்தில் கிடந்தாலும் உறக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை அணைக்கவில்லை...

"என்னங்க! ஏனுங்க நெடுகப் பிந்தி பிந்தி வாறீங்க?"

"காரணத்தச் சொன்னாத்தான் இஞ்ச வரலாமா?"

"என்னங்க! குழந்தைத்தனமா பேசிறீங்க... நான் உங்கட மனைவி. எனக்குக் கேக்கிறதுக்கு உரிமையில்லையா?"

"அநேகமாக இப்படித்தான் வாறன். அப்பயெல்லாம் கேக்காம இப்ப என்ன திடீரென்று...?"

"இப்பத்தான் விசயத்த அறிஞ்சனான்."

"அறிஞ்சா பேந்தேனடி கேக்கிறா?"

"நான் அறிஞ்சது உண்மைதானா?"

"உன்னட்ட சொன்னவங்க பொய் சொல்லியிருக்க மாட்டாங்களே. ஏனென்டா இது பரமரகசியமல்ல."

"அப்பிடியெண்டா நீங்க...!"

"ஓமடி, உண்மதான். உன்ன முடிக்கைக்கு முன்னையே ஒரு வெள்ளக்காறியோட இருக்கிறன்."

"சீ... வெக்கமாயில்ல இப்பிடிச் சொல்ல."

"இதுக்கேன் வெட்கப்பட வேண்டும். இஞ்ச இதெல்லாம் சகசம்."

"அப்ப ஏன் என்ன முடிச்சனீங்க?"

"வீட்ட வந்திருக்கேக்க சொன்னாங்க, மறுக்க முடியல்ல... முடிச்சன். அதுக்கென்ன இப்ப. உன்னத் தள்ளியா விட்டுட்டன். நல்லாத்தானே வச்சிருக்கிறன். என்ன, அடிக்கடி அங்கையும் போய்வாறன். அவ்வளவுதான். இதால உனக்கொரு குறையும் வைக்கயில்லையே?"

"அப்பிடியெண்டா உங்கட முடிவு..."

"அப்பமெண்டா புட்டா காட்டவேணும்? அனுசரிச்சு நடக்கவேண்டியதுதானே... அவள் எனக்கு எவ்வளவோ செய்திருக்கிறாள். என்னால அவளை விட்டுப் பிரிய முடியாது."

"இப்பிடிக் கேவலங்கெட்டு எத்தின கலியாணம் முடிச்சிருக்கிறீங்க?"

"பொத்தடி வாய்!"

பிரியவதனியின் இரண்டு கன்னங்களிலும் மாறிமாறி அடித்தான்.

"கேள்வியாடி கேக்கிறா? எனிமேல் ஏதும் கதச்சா நான் என்ன செய்வேனெண்டு எனக்கே தெரியாது."

இரண்டு கைகளாலும் கன்னத்தைப் பொத்தியவாறு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தனை நேரமும் இருந்த துணிவு அடங்கியவளாய் பயந்து நின்றாள் பிரியவதனி. மேற்கொண்டு அவளால் எதுவும் பேச முடியவில்லை.

'கேள்வி கேட்டதற்கு அடிப்பவனிடம், தான் கேட்பதற்கெல்லாம் தயக்கமோ, வெட்கமோ, அச்சமோ இல்லாமல் பதில் சொல்லுபவனிடம் எதைக் கேட்டும் பயனில்லை' என்பதை உணர்ந்து மௌனியானாள்.

அவன் உடை அணிந்து வெளியேறினான்.

அவள் கன்னத்தில் வழிந்தோடும் கண்ணீருடன் சுவரைப் பார்த்தவாறு அதிர்ச்சியில் உறைந்திருந்தாள்...

வேலைக்கு அழைத்துச் செல்வதற்காக வழமைபோல மல்லிகா உள்நுழைந்தாள்.

அவளைக் கண்டதும் எழுந்து கட்டியணைத்து அழுதாள்...

குடும்பத்தில் பூகம்பம் ஏற்பட்டுவிட்டதை மல்லிகாவால் உணர முடிந்தது...

நடந்தவற்றைக் கூறி முடித்தாள் பிரியவதனி.

"சோதிநாதனும் அந்தப் பொம்பிளையும் நாலு வருசமா இந்த வீட்டிலதான் இருந்தவங்க. நீ வாறத்துக்கு ஒரு மாசத்துக்கு முன்னதான் வேறு எங்கேயோ வீடெடுத்து போனவங்க. நீ வந்ததுக்குப் பிறகுதான் அவன் ஊரில கலியாணம் செய்தது தெரியவந்தது. மோசம் போயிற்றாய் வதனி..."

பிரியவதனி தனது நிலையை எண்ணிக் கலங்கினாள்...

'வேலைக்கு வரவில்லை' என பிரியவதனி மறுத்தபோதும், அவளை தனியே இருக்கவிட்டுச் செல்ல மல்லிகா விரும்பவில்லை. அதனால் அவளைச் சமாதானப்படுத்தி வேலைக்கு அழைத்துச் சென்றாள்.

வேலை முடிந்து வரும்போதுதான் பிரியவதனி மீண்டும் கதையைத் தொடர்ந்தாள்...

"எனக்கு என்ன செய்யிறண்டே தெரியயில்லயக்கா..."

"நீ இஞ்ச இருக்கிறது இனிமேல் உனக்கு நல்லதில்ல. அவனட்ட மாற்றத்த எதிர்பார்க்க முடியாது."

"அதத்தான் தன்ர வாயாலயே சொல்லிப்போட்டானே."

உணர்ச்சிவசப்பட்டவளாகக் கூறினாள் பிரியவதனி.

"நீ அக்கா எண்டு அழைக்கிறபோதெல்லாம் என்ர கூடப் பிறந்த தங்கச்சியாத்தான் நான் உன்ன நினைக்கிறன். அதால ஒண்டு சொல்லுறன் செய்யிறியா?"

"எனக்கு எந்தத் துணையக்கா இருக்கு. நம்பிவந்தவனும் நடுக்கடலில விட்டுட்டான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ ஒண்டுக்கும் யோசிக்காத. இஞ்ச நீ இருக்கவேண்டாம். உன்ர சாமான்களை எடுத்துக்கொண்டு வீட்டுத் திறப்ப தபால் பெட்டிக்க போட்டுட்டு என்ர வீட்ட வந்திரு."

"அக்கா!"

"கொஞ்ச நாளைக்கு இரு. அவன் அங்க வந்து பிரச்சின பண்ணமாட்டான். அப்பிடி ஏதுமெண்டா பொலிசுக்கு 'போண்' பண்ணினா உடன வந்திடுவாங்க. இவரட தங்கச்சி கிட்டத்தான் இருக்கிறா. அவள் இருக்கிறது 'அயன் சிம்மர்'* வீடு. அவளுக்கு பிள்ள பிறந்திருக்கு அதால 'சுவை சிம்மர்'** வீடு பாத்திருக்கிறா. அவள் இருக்கிற வீட்டுக்குப் பக்கத்திலேயே சரிவந்திற்றுப்போல இருக்கு. அவளட்ட கேட்டு அவளிருக்கிற வீட்ட உன்ர பேருக்கு மாத்திப் போட்டு நீ அங்கேயே இரு. அவள் உனக்கு உதவியா இருப்பாள். நீ வேலைக்கும் வந்து போகலாம்."

"அக்கா உங்களில பிரியா அக்காவப் பாக்கிறன்."

அவள் முகத்தில் தெளிவின் கோடுகள்.

இருவருமே இணைந்து வீட்டிலிருந்த அவளுக்குரிய பொருட்களை எடுத்துக்கொண்டதும், கட்டத்தின் வெளி வாசலினுள்ளே வரிசையாய் இருந்த தபால்பெட்டிகளில் தனது வீட்டுத் தபால் பெட்டியில் திறப்பைப் போட்டுவிட்டு வெளியேறினாள்...




சில மாதங்களுக்கு முன்பு பிரியவதனி அனுப்பி வைத்திருந்த கையடக்கத் தொலைபேசிதான் பிரிந்தாவின் பொழுதுபோக்கு...

க.பொ.த. உயர்தர வகுப்பில் கற்கும் இவள், வகுப்பில் இருக்கும் நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தொலைபேசியும் கையுமாகவே இருப்பாள்.

பூபாலசிங்கம் புத்தகசாலையில் பாடப்புத்தகம் ஒன்றைக் கொள்வனவுசெய்துகொண்டு வைத்தியசாலை வீதியால் ஈருருளியில் வரும்போது இராணுவத் தொடரணிக்காக பாதை பூட்டப்பட்டு கூட்டம் அதிகமாக இருந்தது...

நின்றவர்களிடம் அவள் விசாரித்தபோது, அவர்கள் அரை மணித்தியாலமாக நிற்பது தெரியவந்தது...

வழமையாக அடுத்த வாகனம் வரும் இடைவெளிக்கேற்ப இடைக்கிடையே பயணம் செய்ய அனுமதிப்பார்கள். அதனால்

*ஒரு அறை **இரண்டு அறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்மணி நேரம் தாமதித்துப் பார்த்தாள்... பயனில்லை. தாய் தேடிக்கொண்டிருப்பாள் என்பதால் ஈருருளியைத் திருப்பிக்கொண்டு நாவலர் வீதிக்குச் சென்றாள்...

நாவலர் வீதியில், பிறவுண் வீதிச் சந்தியிலிருந்து முன்னோக்கித் தொடராக வாகனங்கள் தரித்து நின்றன...

வாகனங்களுக்கு இடையில் இருந்த வெற்றிடங்களால் புகுந்து பாதி தூரம் சென்றுவிட்டாள். அப்பால் செல்ல முனைந்த போதுதான் அது நிகழ்ந்தது...

தனது கையடக்கத் தொலைபேசி மணி அடிக்கும் சத்தம் கேட்டதும் அதை ஒரு கையால் எடுக்க, மறு கை உறுதியற்றுத் தடுமாற, அருகாமை வந்த ஒரு வாலிபனின் ஈருருளியோடு இவளது ஈருருளி மோதுண்டு இரண்டு ஈருருளிகளும் ஒன்றன்மேல் ஒன்று விழ இருவரும் விழுந்தனர்.

கையடக்கத் தொலைபேசி அநாதரவாய் அலறியவாறு கிடந்தது.

அங்கு நின்றவர்கள் துணைசெய்ய இருவரும் எழுந்தனர்.

பிரிந்தாவுக்குக் காயமில்லை. உடல் நோ இருந்தது. அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

அந்த வாலிபனின் கையிலும் காலிலும் உரசல் காயம்...

நாணத்தால் தலை குனிந்து நின்றாள்.

அவன் அவளைப் பார்த்தவாறு புன்னகைத்தான்...

"சொறி..."

"தற்ஸ் ஓகே... சிறிய காயம்தான் பறவாயில்ல. உங்களுக்கு!"

"ஒண்டுமில்ல..."

"இரும்பு உடம்புபோல இருக்கு..."

அவள் சிரித்தாள்... அவனும் சிரித்தான்...

"இந்தாங்க உங்கட கான் போண்"

கீழே கிடந்ததை எடுத்துக் கொடுத்தான்...

"தாங்ஸ்..."

"தாங்ஸ் எனக்கா, கான்போனுக்கா?"

அவளின் இதழில் புன்னகை...

தாய் தேடுவாள் என்ற நினைப்பு இதயத்தைக் குடைந்து கொண்டிருந்ததால் கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்தாள்.

"எங்கேயோ அவசரமா போகவேணும் போல இருக்கு நேரத்த அடிக்கடி பாக்கிறீங்க..."

"அம்மா தேடுவாங்க..."

"என்னங்க செய்யிறது. இப்ப இப்படித்தானே! நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசரமா மருந்து வாங்க வந்தனான். ஒரு மணித்தியாலமா நிக்கிறன்.''

விசில் சத்தங்கள் கேட்டன... எல்லோரும் புறப்படுவதற்காகத் தம்மைச் சுதாரித்துக்கொண்டு ஆயத்தம் செய்தார்கள்... நெரிசல் குறையாது ஆமை வேகத்தில் நகர்ந்தது...

"இனிமேலாவது கவனமாப் போங்க மறுபடியும் ஆரையும் இடிச்சு விழுத்திடாதீங்க. எல்லாரும் என்னமாதிரி இருக்க மாட்டாங்க...''

அவனது பேச்சு அவளுக்கு சிரிப்பை வரவழைத்தது... அதைப் பார்த்து அவன் மகிழ்ந்தான்.

"நேராத்தானே போறீங்க? நானும் அதாலதான் போறன். கனக்க வாகனங்கள் வருகுது கவனமா வாங்க...''

ஐநூறு மீற்றர் ஒன்றாகவே பயணித்த பின்னர், பிரிந்தா திரும்பவேண்டிய சந்தியால் திரும்ப முனைந்தாள்.

"திரும்பப் போறீங்களா? கவனமா அக்கம் பக்கம் பாத்துப் போங்க.''

அவள் தலையசைத்தாள்...

அவன் விடைபெற்று நேராகவே சென்றான்.

போகும்போது இருவரும் ஒருவரையொருவர் திரும்பிப் பார்க்கத் தவறவில்லை.

இரவு... அமைதியிழந்தவளாக அங்குமிங்குமாக முற்றத்தில் நடந்தாள் பிரிந்தா...

வீதியில் பலபேர் முன்னிலையில் நடந்த விபத்து... மோதுண்டு ஒருவர்மேல் ஒருவர் விழுந்த நிகழ்வு... அந்த வாலிபன்... அவனது பார்வை... வேடிக்கையான பேச்சு... சந்தியில் பிரிவு... விலகும்போது தன்னையறியாமலே திரும்பிப் பார்த்தமை என ஒவ்வொன்றாய் அவளது சிந்தனையில் உயிர்பெற்றவண்ணமிருந்தன...

கையடக்கத் தொலைபேசியை எடுத்துப் பார்த்தாள்...

"தாங்ஸ் எனக்கா, கான்போனுக்கா?''

அவன் கூறியவை மனதில் உதிக்க தனக்குள்ளே சிரித்தாள்...

அவளை அறியாத உணர்வின் உரசல்...

விபரிக்க முடியாத ஏக்கம்...

"என்ன பிரிந்தா படுக்கயில்லையா?''

தாயின் அதட்டலான கேள்வியால் சிதறுண்ட நினைவுகளுடன் படுக்கைக்குச் சென்றாள்...

உறக்கத்தைத் தர கண்கள் மறுத்தன...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரண்டு புரண்டு படுத்தாள்.

விழிந்திருந்தது கண்கள் மட்டுமல்ல உணர்வுகளும்தான்...



பல வருடங்களாக பாவிப்பின்றி கிடந்த தோட்டக்காணியில் மேற்கொள்ளப்பட்ட புகையிலைச் செய்கையால் அதீத வருமானம் கிடைத்த போதும் காணியை உழுதபோது மேலெழுந்து காணப்பட்ட மனித எச்சங்களால் உண்டான நெருடலால், மேற்கொண்டு காணியைப் பயன்படுத்த விரும்பாமல் குத்தகைக்குக் கொடுத்திருந்தும், நாட்டில் நிலவிய அசாதரண சூழலால் அவர்களாலும் கைவிடப்பட்ட பின்னர் தோட்ட வருவாயை இழந்திருந்த ஆனந்தனுக்கு, பிரியாவிடமிருந்தும் பின்னர் பிரியவதனியிடமிருந்தும் கிடைத்த உதவிகள் கைகொடுத்தன.

பிரியாவின் திருமணத்திற்குச் சென்றதால் ஏற்பட்ட பிரயாணச் செலவை பிரியாவே ஏற்றிருந்தாள்.

இந்நிலையில் சில மாதங்களாக பிரியவதனியிடமிருந்து கிடைத்துவந்த உதவிகள், கடிதங்கள் கிடைக்காமை, இவர்களைச் சங்கடத்திலாழ்த்தியது.

பிரியாவிற்கு ஏற்பட்ட கசப்பான நிகழ்வு இவர்கள் நினைவுகளில் தோன்றவே செய்தது. ஆனாலும், ஒன்றுக்கொன்று வேறுபட்டது என்பது அவர்கள் மனதிற்கு ஆறுதலைக் கொடுத்தது.

இதுபற்றி பிரியாவுக்கும் தெரிவித்திருந்தனர். அவளுக்கும் கடிதம் வருவதில்லை என்பதை அறிந்தபோது வீட்டில் அமைதியற்ற சூழல்...

பலமுறை தொலைபேசி மூலம் தொடர்பை ஏற்படுத்த முயன்றனர்.

அதுவும் சாத்தியமாகவில்லை.

கடிதங்களுக்கும் பதிலில்லை.

செய்வதறியாது திகைத்தனர்.

பிள்ளைகளால் உருவான சோகம் சந்திராவுக்குத் தொடர் கதையாகவே இருந்தது...

அமைதியிழந்தவளாய் வாழ்வைத் தொடர்ந்தாள்...

"அக்கா...!"

அழைத்தவாறு உள்ளே வந்த புவனம், சந்திராவை குற்றவாளியைப் பார்ப்பதைப்போல பார்த்தாள்...

"வா புவனம் இரு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னக்கா நீ ஒண்டையும் விசாரிக்காமையா வதனிக்கு கலியாணம் செய்துவைக்க முடிவெடுத்தனி."

"ஏன் புவனம் இப்படிக் கேக்கிறா?"

"நான் கேக்கயில்ல இந்தக் கடிதம் கேக்குது."

"என்ன கடிதமடி?"

"என்னட மகனட்டயிருந்து வந்த கடிதம்... அக்கா! அவன நம்பி மோசம் போயிற்றோமக்கா..."

அழுதாள்...

"புவனம்...!"

"கடிதத்தக் கண்டதும் பதறிப்போய் வந்திருக்கிறேன் என்னெண்டு சொல்லுறெண்டு தெரியாம..."

"என்னடி சொல்லுறா...? தேகமெல்லாம் நடுங்குது. கெதியாச் சொல்லடி...!"

"மகன் கடிதம் எழுதியிருந்தானக்கா, பிரியவதனி ரெலிபோனில அவனோட கதைக்கேக்க எல்லாத்தையும் சொல்லி அழுதிருக்கிறாள்."

"அவளுக்கு என்ன நடந்தது?"

"அவளுக்கு ஒண்டுமில்ல. நீ செய்துவைச்சியே வெளிநாட்டு மாப்பிள்ளையெண்டு. அவன்தான் பிரச்சினையே."

"சந்தோஷமாத்தானே இருந்தவங்க..."

"எப்ப மட்டும்?"

"இப்ப கொஞ்சநாளாகத்தான் கடிதம் வரயில்ல."

"எப்படி அவள் எழுதுவாள் அவன் வெள்ளக்காறியோட நாலு வருசமா குடும்பமா இருக்கிறானெண்டா...?"

"என்ன சொல்லுறா?"

"கலியாணம் செய்யேக்கு முதலில விசாரிக்கிறயில்லையா?"

"என்னடி இது பெரிய இடியப் போடுறா..."

"விசயத்த எப்பிடியோ அறிஞ்ச வதனி, புருசனட்ட கேட்டிருக்கிறாள். இதால ரெண்டுபேருக்கும் பிரச்சினையாம். அவன் அடிச்சுப்போட்டானாம். இப்ப ரெண்டுபேரும் பிரிஞ்சு வேறவேற வீட்டிலதான் இருக்கிறாங்களாம்."

"மகளே...!"

சந்திரா இழவுசொல்லி அழுவதுபோல அழுதாள்...

அந்த நேரம் உள்ளே வந்த ஆனந்தன் அந்த சூழலைப் பார்த்துக் குழம்பிப்போய் நின்றார்...

புவனம் விபரத்தைச் சொன்னதும் அவரும் தலையில் கைவைத்தவாறு கதிரையில் அமர்ந்துகொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுகுரலைத் தவிர எவரது பேச்சுக்குரலும் அங்கு இல்லை.

அழுகையை நீடிக்க விடாமல் புவனம் தொடர்ந்தாள்.

"மகன் எழுதியிருக்கிறானக்கா, 'அங்க ஆக்கள வச்சு அவன்ர காலக் கைய முறிச்சு விடவா?' எண்டு வதனியட்ட கேட்டானாம். அதுக்கு அவள், 'அவர் யாரோட இருந்தாலும் சந்தோஷமா இருக்கட்டும். என்னட தலை எழுத்து இவ்வளவு தானெண்டு இருந்திடுறன்' எண்டு சொன்னாளாம். 'இது உன்னட வாழ்க்கைப் பிரச்சினை யெல்லா' எண்டு கேட்டானாம். அதுக்கு அவள், 'தெரியும் அதற்கு இது பரிகாரமில்லை, ஏதோ பிள்ளையார் விட்ட வழி...' எண்டாளாம்."

சந்திராவின் கண்களில் நீர் கோர்த்தது.

"என்னடி இது? ஆரட கண்பட்டுதோ? இழப்புகள் வேதனைகள் பிள்ளகளின்ர பிரச்சினைகள் எல்லாம் சுத்திச் சுத்தி வருகுது. அண்ணன்ர குடும்பத்தில அப்பிடி... ராசதுரை மச்சான் குடும்பத்தில அப்படி... உன்ர வீட்டில அப்படி... நாங்க ஆருக்கு என்ன தீமை செய்தோம்..."

வாய் உதறி அழுகை புறப்பட்டது. உடம்பு தள்ளாடிற்று... அழுது தீர்த்தாள், தன் வாழ்வில் ஏற்பட்ட துன்பியல் நிகழ்வுகளால் தான் நோயாளி ஆகிவிட்டதை அறியாதவளாய்...




ஒரு வாரத்தின் பின்னர் பிரிந்தாவும் அந்தப் பையனும் சந்தித்தனர்.

பிரிந்தாவின் உள்ளம் மகிழ்ந்தது...

மடை திறந்த வெள்ளத்தின் நிலையில் அவன்...

இருவரும் தம்மை அறிமுகம் செய்துகொண்டனர்.

அவன் பெயர் ரமேஸ்...

அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகின்றான்.

அறிமுகம் பெயர்களில் மட்டுமல்ல இருவர் உள்ளங்களிலும் அரங்கேறின...

"காயமெல்லாம் மாறீற்றா?"

"உடம்பில உரசல் காயம்தான் அது மாறிடும். உள்ளத்தில... உங்களுக்கு...!"

கபடமற்ற புன்னகையுடன் இருவர் கண்களும் நேருக்குநேர் சந்தித்து மீண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிய மனமின்றிப் பிரிந்தனர் மீண்டும் சந்திக்கவேண்டு மென்ற ஆவலில்...

சந்தித்தனர்...

காதல் இருவர் இதயத்திலும் வேரூன்றி வளரத் தொடங்கியது.

இருவர் உள்ளங்களும் பிரிவை அனுமதிக்காத, தாங்கிக் கொள்ளமுடியாத நிலை...

அட்டவணையின்படி சந்திப்புகள் சில மாதங்களாகத் தொடர்ந்தன...

கோயில்கள், தேநீர் அருந்தகங்கள், குளிர்களி அருந்தகங்கள், வீதி வலங்கள் என சந்திப்புகள் விரிவடைந்தன...

சித்திரைப் புத்தாண்டு...

சிநேகிதி வீட்டுக்குப் போவதாகச் சொல்லி தாயிடம் அனுமதி பெற்றதும் பிற்பகல் நாலுமணியளவில் உடை மாற்றி புறப்பட்டாள்.

சொல்லப்பட்ட இடத்தில் ரமேஸ் நின்றான்...

மலர்ந்த முகத்துடன் இருவரும் அருகருகே ஈருருளிகளில் சென்றனர்...

யாழ். நகர பேரூந்து நிலையச் சுற்றாடலில் போடப்பட்டி ருந்த அங்காடிக் கடைகள் பெரும்பாலும் அகற்றப்பட்டு சோபை யிழந்து காணப்பட்டது வீதி.

இரண்டு தற்காலிக புடவை மற்றும் பல்பொருள் கடை மட்டும் காத்திருந்தன.

ஒரு பெண் ஆறு வயதுச் சிறுமியின் கையைப் பிடித்தவாறு அந்தக் கடையைத் தேடி போய்க்கொண்டிருந்தாள்.

இருவரினதும் உடைகளிலும் தூய்மை இருந்தது. புதியவை களல்ல...

“பிரிந்தா அங்க பார் அந்தப் பிள்ளையையும் தாயையும்...”

“பேமன்ற கடைக்கு போறாங்க...”

“அந்தப் பிள்ளைக்கு புது உடுப்பு எடுத்துக்குடுக்க காசில்லாம இருந்திருப்பாங்க... இப்பத்தான் கைவியளங்கள் வாங்கிய காசில் அந்தப் பிள்ளைக்கு உடுப்பெடுக்கப் போறாங்க. பாவம்...”

“என்னண்டு அப்பிடிச் சொல்லுவீங்க...”

“நீ வா அந்தக் கடைக்குப்போய் அந்த அம்மாவுக்கு பின்னால நிண்டு பாப்பம்.”

அவ்வாறே செய்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தத் தாய் சிறுமிக்காக பல சட்டைகளைப் பார்வையிட்டு இறுதியில் ஒன்றை எடுத்தாள்...

விலை கேட்டாள்...

"முன்னூறு ரூபாயம்மா..."

"முன்னூறா? நூற்றம்பது தரவா?"

"என்னம்மா இவ்வளவு நேரமும் கிளறிப்போட்டு எடுத்ததையும் பாதிவிலை கேக்கிறீங்க..."

"என்னட்ட அவ்வளவுதான் இருக்கு."

"அப்பிடியெண்டா அந்தா அதில கிடக்கிற உடுப்புகளில பாருங்க..."

அதை அவள் விரும்பயில்ல...

"அப்ப இருக்கட்டும். வா புள்ள..."

சிறுமியின் முகத்தைப் பார்க்க வேதனையாக இருந்தது.

எதிர்பார்ப்பின் ஏமாற்றம் அவள் முகத்தில் தெரிந்தது.

சிறுமியின் கையைப் பிடித்தவாறு திரும்பியவளை ரமேஸ் மறித்தான்.

"அம்மா நீங்க விரும்பின சட்டைய எடுங்கம்மா நான் மிச்சக்காசக் குடுக்கிறன்..."

சொல்லியபடி 150 ரூபாவைக் கொடுத்தான்...

சிறுமியின் முகத்தில் மகிழ்ச்சி. நன்றியுடன் பார்த்தாள் அவனை...

"தாங்ஸ் அங்கிள்"

"உனக்கு சந்தோஷம்தானே? இந்தா இத வச்சிருந்து ஐஸ் கிறீம் வாங்கிக் குடி"

ஐம்பது ரூபாவை எடுத்து சிறுமியிடம் கொடுத்தான்.

காலையில் மலர்ந்த மலர்போல அவள் முகம் இருந்தது.

"நாங்க வாறம் நீங்க கவனமா போங்க..."

அவர்கள் நன்றிகூற இவர்களின் ஈருருளிகள் புறப்பட்டன.

"முன்ன தெரியுமா அவங்கள..."

"தெரிஞ்சு உதவிசெய்தா உதவியல்ல பிரிந்தா. நான் இந்தச் சட்டைக்குக் காசு குடுத்திராவிட்டா அந்தப் புள்ளயின்ர மனம் என்ன பாடு பட்டிருக்கும்... இப்ப மற்றப் பிள்ளகளப்போல தானும் புதுச் சட்டை போட்ட சந்தோஷத்தில இருக்குமா இல்லையா?"

பிரிந்தாவின் மனதில் ரமேஸ் உயர்ந்து நின்றான்...

கஸ்தூரியார் வீதியிலிருந்த 'ராஜா கிறீம் ஹவுஸ்' இல் ஐஸ்கிறீம் குடித்து விட்டு வெளியே வந்தபோது வானம் இருண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டது.

கஸ்தூரியார் வீதியில் நேராகச் சென்று நாவலர் வீதியால் திரும்பி வீடு நோக்கிச் செல்கையில் ரமேஸின் நண்பன் மனோஜ் தனது வீட்டு வாசலில் நின்றான்.

அவனைக் கண்டதும் ஈருருளியை நிறுத்தி பிரிந்தாவை அறிமுகம் செய்துவைத்தான் ரமேஸ்...

வீட்டுக்குள்ளே வருமாறு அழைத்தான்...

"வானம் இருளாயிருக்கு மழை வந்தாலும் வரும். இன்னொரு நாளைக்கு வாறம்."

"என்னடா வருஷமும் அதுவுமாய்... இண்டைக்கெண்டாலும் வாவன்ரா..."

திடீரென மழை... சரியான மழை. இடி மின்னலுடன் கூடிய மழை. காற்றோடு கூடிய மழை...

"பாத்தியாடா மழையே மறிக்குது."

வீட்டுக்குள் நுழைந்தனர்...

மனோஜின் பெற்றோர் வெளியே சென்றிருந்ததால் வீடு வெறுமையாக இருந்தது.

பிரிந்தா உட்கார்ந்து ஜன்னல் வழியாக பெய்யும் மழையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க ரமேஸ் அவளருகில் அமர்ந்தான்.

மழை மற்றும் சிறிதாக நனைந்த உடை அவர்கள் உடலுக்குக் குளிராகவும் உள்ளத்துக்கு இதமாகவும் இருந்தது.

மனோஜ் பலகாரம் எடுத்து வருவதற்காகச் சென்றதைப் பயன்படுத்தி சற்று நெருக்கமாக அமர்ந்தான்...

ரமேஸின் நெருக்கம் அவளுக்கு சுகமாக இருந்ததால் அதை அனுமதித்தாள்.

"என்னை ஒருக்கா கொஞ்சமாட்டியா...?"

ரமேஸிடமிருந்து இந்தக் கேள்வியை அவள் எதிர்பார்க்க வில்லை. அவளது இதயம் வேகமாகத் துடித்தது. ரமேஸைப் திரும்பிப் பார்த்துவிட்டு மீண்டும் மழையைப் பார்த்தாள்... தாய் தேடுவாள் என்ற அச்சம் நினைவுகளில் மீண்டவண்ணமிருந்தது.

அவன் அவள் பிடரியில் கைவைத்து வருடினான். காது விளிம்பைத் தடவினான். தோள்பட்டையை நீவினான்.

அவள் சிலையாக இருந்தாள்.

அவளுக்கு உடம்பு சிலிர்த்தது. வயிறு குழைந்தது. இடுப்பு தசைகள் சூடேறி அழுத்தியது... அவன் தொடத்தொட மனசு இறங்கிற்று. உதட்டை மடித்துக் கடித்தபடி அவன் கையை விலக்கி விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிந்து உட்கார்ந்து அவளை இறுக்கிக்கொண்டு அவள் எதிர்பார்க்காத வகையில் கன்னத்தில் முத்தமிட்டான்... தடுமாறிய வளுக்குத் தன் கன்னம் காட்டினான்...

அவள் மறுப்பும் விருப்புமாய் தடுமாறினாள். பிடித்தும் பிடிக்காததுமாய் அவஸ்தைப் பட்டாள். முதுகு முழுக்க அவன் கைகள் தடவ கண் கிறங்கினாள். அவன் உடம்பு காந்தியது. மூச்சு உஷ்ணம் கன்னம் சுட்டது. அவன் தலை கோத சுகம் உடம்பு முழுவதும் பரவியது...

பள்ளிக்கூடத்தில் ஆசிரியை பயமுறுத்தியது அவள் நினைவில் குத்தியது.

"என்னை கை விட்டிட மாட்டீங்களே?"

"ஏன் இந்த சந்தேகம்?"

"நீங்க வேற சாதி நான் வேற சாதி."

"நான் இத ஏற்கிறதில்ல. பிரிந்தா!... 'மனிதத்துக் கேதடா உயர்வு தாழ்வு? எவரெண்டாலும் மனிதன மதி... சொத்தக் குவிச்சி என்னடா பலன்? உள்ளதில கொஞ்சத்தயேனும் குறுகிய எண்ணமில்லாம கஸ்ரப்பட்டவங்களுக்குக் கொடு... அப்பத்தான்ரா வாழ்க்கையில் மனிதனாக வாழலாம்' எண்டு அப்பா அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் எனக்கு வேதவாக்கு. அவற்ற பிள்ள நான். அவர் பாதையிலே போறவன். எனக்கு நீதான் முக்கியம். நீ சம்மதமெண்டா இப்பவே..."

"என்னட படிப்பு முடியவேணும்... அதுமட்டும் பொறுத்தி ருக்கத்தான வேண்டும்."

"கட்டாயம் படிக்கத்தான் வேணுமா?"

"ஓம்... முதலில படிப்பு அதுக்குப் புறகுதான் எல்லாம்."

பலகாரத் தட்டுடன் வந்த மனோஜ், அவர்களிடம் கொடுத்து விட்டு குடிப்பதற்கு எடுத்துவர உள்ளே சென்றான்.

இம்முறை அவன் விரைவாகவே திரும்பி வந்ததால் ரமேஸுக்கு சங்கடமாகிட்டது.

மனோஜ் அவர்கள் முன்னால் அமர்ந்து உரையாடத் தொடங்கியதும், அவனை மனதிற்குள் திட்டிக்கொண்டான் ரமேஸ்.

"ரமேஸ்! மழை வந்திராட்டி நீ வீட்டுக்க வந்திருக்க மாட்டாய்தானே?"

ரமேஸிற்கு அதிர்ச்சி...

"ஏனடா அப்பிடிச் சொல்லுறா?"

"உங்கட அம்மாவப்போல சாதி வெறி பிடிச்சவங்கள நான் காணவேயில்லடா. அதால நீயெல்லாம் எங்கட வீட்டுக்கு..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மனோஜ்! நீ என்னப் புரிஞ்சுகொண்டது இவ்வளவு தானாடா? படிக்கேக்க சாதிக் கதயக் கதச்ச எத்தினபேரோட சண்ட போட்டிருப்பன் தெரியாதா உனக்கு? அப்பாவும், அம்மாவும் ஒரே ஆக்களாக இருந்தும் அப்பா எந்த வேற்றுமையுமில்லாம எல்லாரோ டயும் தான்ரா அன்பாப் பழகினார். அம்மாவுக்கு ஏனிந்த வெறித்தனமோ தெரியாது. என்னவோ அப்பாவ மதிக்கிறன், அவரது நடத்தயப் பின்பற்றி வாறன்... அம்மாவிலயும் அன்பு, பாசம் இருக்குத்தான் அவயட குணத்தால எல்லாமே வெறுப்பாயிருக்கடா... மனோஜ்! நான் எண்டைக்கும் அம்மாவட எண்ணத்துக்கு நடக்கவோ, அவயட வழிக்கு போகவோ மாட்டனடா. என்ன நம்படா..."

"சொறி ரமேஸ்! உன்னச் சங்கடப்படுத்திப்போட்டன். நான் சும்மா வேடிக்கையாகத்தான்ரா கேட்டனான்..."

"பறவாயில்லயடா..."

பிரிந்தாவைப் பார்த்தான் ரமேஸ். அவளும் பார்த்தாள்.

அவள் மனதில் ரமேஸ் நம்பிக்கையை விதைத்துவிட்டான்.

அமைதி....

சிறிது நேரத்தால் மழை ஓய்ந்து இள வெயில் படர்ந்தது.

"எனக்கு நேரம் போகுது நான் வரப்போறன். அம்மா தேடுவாங்க..."

இருவரும் புறப்பட்டுச் சென்றனர் வழியில் எவரும் தங்களை அவதானிக்கவில்லை என்ற நம்பிக்கையில்...



"வீட்டுக்காரர்... வீட்டுக்காரர்..."

படலை பக்கமிருந்து அழைப்புச் சத்தம் கேட்டதும் சந்திரா அங்கு சென்றாள்...

"என்ர பெயர் மணிமாலா. உங்களோட கொஞ்சம் பேசவேணும்."

"உள்ள வாங்க."

விறாந்தையிலிருந்த கதிரையில் அமர்ந்தனர். ஆனந்தனும் இணைந்து கொண்டார்.

"உங்களுக்கு ஒரு பெண் படிக்கிறாளாக்கும்."

"ஓமுங்க."

"ஒண்டு கேட்டா கோவிக்காதயுங்க. அவள நீங்க படிக்க அனுப்புறனீங்களா? அல்லது ஊர் சுத்த அனுப்புறனீங்களா?"

"என்னம்மா! வந்ததும் வராததுமாய் அபாண்டமாய் கேக்கிறீங்க..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் உண்மையச்சொன்னா உங்களுக்கு அபாண்டமாய்த் தெரியுதாக்கும்... என்ர மகனோட தான் உங்கட மகள் ஊர் சுத்துறாள்... அது ஒண்டுமே உங்களுக்குத் தெரியாதாக்கும். தெரிஞ்சிருந்தாலும் வளைச்சுப் போடுறதுக்காக கண்ண மூடிக்கொண்டு இருந்திருப்பீங்க."

"அம்மா எங்கட வீட்டயே வந்து எழுந்தமானமா எங்களக் கேவலமா பேசுறீங்க..."

"மேடை போட்டா இதையெல்லாம் பேச முடியும்... நாங்க ஆரு, நீங்க ஆரு? எங்கட நிலை என்ன, உங்கட நிலை என்ன? அதப்பற்றியெல்லாம் யோசிக்காம மாப்பிள புடிக்க பொண்ண அனுப்புறீங்களா?"

"அம்மா! நீங்க பொம்பிள எண்டபடியா பேசாம இருக்கிறன். வார்த்தைய அளந்து பேசுங்கம்மா..."

"என்ன செய்திடுவீங்க... அடிச்சிடுவீங்களா? எங்க அடியுங்க பாக்கலாம். செய்யிறதையும் செய்துபோட்டு நியாயம் கதைக்கிறார், நியாயம்... இஞ்சவாங்க, நான் கனக்க பேச விரும்பயில்ல. உங்கட்ட சொல்லிப்போட்டன் இனிமேல் உங்கட பொண்ணு என்ர மகனச் சந்திக்கவோ, பேசவோ, ஊர் சுத்தவோ கூடாது. கண்டிச்சு வையுங்க."

"எங்களுக்கு கட்டளை போடுறீங்க உங்கட மகனக் கண்டிக்கலாமே."

"அது எனக்குத் தெரியும். நீங்க சொல்லத் தேவையில்ல... திரும்பவும் என்ன இஞ்ச வர வைச்சிடாதீங்க."

கோபமாக, வேகமாக எழுந்து சென்றாள்...

ஆனந்தன் சிலையாக உறைந்துவிட்டார்...

சந்திரா இருமியவாறு தலை சாய்த்தாள்...

❖❖❖

பிரிந்தாவும் ரமேஸும் முனியப்பர் கோவிலின் பின்பக்கமாக ஒல்லாந்தர் கோட்டை அரண் கட்டின் மேல் இருந்தனர்.

ரமேஸ் பிரிந்தாவையே பார்த்துக்கொண்டிருந்தான்.

அவள் சிரித்தவாறு இருந்தாள்.

"என்ன இண்டைக்குத்தான் பாக்கிறமாதிரி என்னையே பாத்துக்கொண்டு இருக்கிறீங்க?"

"பிரிந்தா! குத்துவிளக்கு சுடர் அழகு என்று சொல்லுவாங் களே அந்த அழகை உன்னிடத்திலதான் காணுறன். நீ சிரிக்கும்போது எனக்கு கிறுகிறுப்பாய் இருக்குது. சில சமயம் உன்னைப் பார்க்கும் போது திகைப்பாய் இருக்குது. இவ்வளவு அழகியான ஒருத்தி எனக்கு மனைவியாக கிடைப்பது நான் செய்த பாக்கியம்தான்... அண்டைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் வீதியில் கான்போண் மணி அடித்திருக்காவிட்டால் நீ கிடைத்திருக்கவே மாட்டாயெல்லா..."

அவள் கன்னம் குழிவிழச் சிரித்தாள்.

அந்தச் சிரிப்பில் காந்தத்தின் தன்மை தெரிந்தது.

முகத்தின் வசீகரம் மிளிர்ந்தது.

"கதைப் புத்தகம் ஏதும் வாசித்தனீங்களாக்கும்? நல்லாத்தான் புகழுகிறீங்க. புகழ்ந்தது போதும். வீட்டில அம்மா பாத்துக் கொண் டிருப்பா."

"இப்ப என்ன நேரமா போச்சுது? கொஞ்சநேரம் இருந்திட்டுப் போகலாந்தானே."

"அங்க பாருங்க கோயிலுக்கு வாற ஆக்கள. அவங்களில ஆராவது தெரிஞ்சவங்க இருந்தா."

"இருந்திட்டு போகட்டுமன்."

"உங்களுக்கென்ன. நீங்க ஆம்பிள பின்னுக்கிருக்கிற மண்ணத் தட்டீற்றுப் போயிடுவீங்க..."

"நீங்க மண்ணோடயே போயிடுவீங்களாக்கும்..."

தானே சிரித்தான்... பிரிந்தாவும் சிரிப்பாளென எதிர் பார்த்தான்.

சிரிக்கவில்லை. அவள் முகத்தில் மாற்றம் தெரிந்தது.

"நீ நினைக்கிறது எனக்கு விளங்குது பிரிந்தா. அப்படிப் பட்டவனல்ல நான். என்ன வந்தாலும் சந்திக்க, நியாயத்துக்காக விவாதிக்கத் தயாராத்தான் இருக்கிறன்."

"அதுக்காக வலியப்போய் மாட்டவேணுமா?"

"அதுவும் சரிதான்."

எழுந்தனர்...

ஈருருளியைத் தேடி நடந்தபோது பிரிந்தாவின் கையடக்கத் தொலைபேசி அலறியது...

"அலோ...!"

மறுபுறத்தில்

"எங்க நிக்கிறா?"

"என்னப்பா?"

"கெதியா வா வீட்டுக்கு...!"

இணைப்பு துண்டிக்கப்பட்டது.

"அப்பா கெதியா வரட்டாம். என்னண்டு தெரியயில்ல வாங்க கெதியா..."

இருவரது நடையிலும் வேகமிருந்தது.

பிரிந்தாவுடன் பயமும் கூடவே பயணித்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 28

கையடக்கத் தொலைபேசியில் வந்த தகவலின் அதிர்ச்சியிலிருந்து விடுபடாதவனாக இருந்தான் ரமேஸ்.

பிரிந்தா பாடசாலை செல்வதற்கு விதிக்கப் பட்ட தடை... அவள் வெளியே செல்ல மறுக்கப்பட்ட அனுமதி... தன்னைப் பார்ப்பதற்கும் பேசுவதற்கும் விடுக்கப்பட்ட கட்டுப்பாடு... அவர்களது வீட்டில் தனது தாய் நடந்து கொண்ட விதம் அனைத்தையும் அறிந்து நிலை குலைந்தவனாய் விறாந்தையில் அங்குமிங்குமாய் நடந்தவாறிருந்தான்.

சமையலறையிலிருந்து வந்த தாய் அவனை ஆச்சரியமாகப் பார்த்தவாறு நின்றாள்...

"என்ன ரமேஸ்! குட்டிபோட்ட பூனை மாதிரி அலையிறா?"

முகத்தை விறைப்பாக வைத்தவாறு தாயை நோக்கினான் ரமேஸ்.

"நேற்றைக்கு எங்கயம்மா போனனீங்க?"

"நான் எங்க போனாலும் உனக்கென்ன?"

"நான் கேட்டதுக்கு பதில் சொல்லுங்கம்மா."

"ஓ! அந்த ஓடுகாலி எல்லாத்தையும் சொல்லீற்றாளாக்கும்."

"அம்மா! வார்த்தைய கொஞ்சம் நிதானமாகப் பேசுங்கம்மா உங்களுக்கு நாகரிகமே தெரியாதா?"

"அதப்பற்றி எனக்கு சொல்லித்தரப்போறியா?"

"மற்றவங்கட மனச நோகடிக்கிறதுதான் உங்கட நாகரிகமா? ஏனம்மா விழுந்தடிச்சு அங்கபோய் அவங்களக் கேவலப்படுத்தினனீங்க என்னட்ட ஒரு வார்த்தை கேட்டிருக்கலாமே."

"பேய்! அவங்க என்ன சாதியடா, நாங்க என்ன சாதியடா. எங்கட கௌரவத்த விட்டுக்குடுக்க முடியுமா? அதனால, நான் அப்பிடித்தான் பேசுவன். அதப்பற்றி நீ எனக்கு உபதேசம் செய்யத் தேவையில்ல."

"உலகமே மாறி வருகுது... நாட்டில என்னவோவெல்லாம் நடக்குது. இன்னும் ஏனம்மா சாதி சாதியெண்டு அலையிறீங்க. அப்பா உயிரோட இருக்கேக்க ஒரு நாளாவது இப்பிடி பேசியிருக்கிறேரா. அவர் எல்லாரையும் அணைச்சுத்தான் வாழ்ந்தவரம்மா. நீங்க ஏனம்மா அப்பிடி இருக்கக்கூடாது."

"அது என்னோட கூடப்பிறந்த குணம், என்னட கௌரவம். உன்ர கொப்பர் அப்பிடியெண்டா நான் அப்பிடி இருக்கவேண்டு மெண்ட கட்டாயமில்லையே? என்னை ஆரும் தடுக்க ஏலாது."

"கௌரவம், சாதி... கூடப்பிறந்த குணம்... இப்பிடிப் பேச

உங்களுக்கு வெட்கமாயில்ல. கண்டறியாத கௌரவம்..."

"நான் ஏன் வெட்கப்படவேணும்? என்னத்தால குறஞ்சு விட்டன்? ஆரட்ட கையேந்திறன்?"

"தொண்ணூற்றி அஞ்சில இடம் பெயர்ந்து போகேக்க இந்த கௌரவமும், சாதி வெறியும் எங்கயம்மா போனது? ஆற்ற வீடெண்டாலும் ஒண்டு கிடைச்சா போதுமெண்டு தேடியலைந்து, கிடைச்ச இடத்தில தங்கிவிட்டீங்களே. அப்ப எந்தச் சாதி, எந்தச் சமயம் எண்டு பாத்தா தங்கினீங்க... தாகத்தால் ஓடிவரேக்க றோட்டில வச்சு தண்ணீர் அள்ளி ஊற்றினாங்களே. குடித்து தாகம் தீர்த்தீங்களே. அப்ப எந்தச் சாதி ஆக்கள் ஊத்தினாங்க, எந்தச் சாதியச் சேந்தவங்கட கிணத்தில இருந்து தண்ணீர் எடுத்தாங்க எண்டு பாத்தா குடிச்சனீங்க. அப்ப உங்களுக்குத் தேவையான தெல்லாம் உங்கட தாகம் தீர தண்ணீர், நீங்க உயிர் தப்பிவாழ இடம். இல்லையாம்மா..."

"அதெல்லாம் கிரகங்களட பிழையால நடந்தது. அதை யெல்லாம் தூக்கிப்பிடிக்க ஏலாது. குறைஞ்ச சாதியெண்டா தீண்டாச் சாதிதான். தொட்டா துடக்குத்தான்... முன்னோர்கள் சொல்லி யிருக்கிறாங்க."

"பழைய செருப்பை கழற்றி விடுகிறீங்க, பழைய உடுப்பக் களைந்திடுறீங்க. முன்னோரட எண்ணங்கள் தவறென்றாலும் உங்களால கழற்றிவைக்க முடியவில்லையே!"

"ரெத்தத்தோட ஊறிவிட்டது."

"சரியம்மா! பஸ்ஸில போறீங்க வாறீங்க, பக்கத்தில இருக்கிறது எந்தச் சாதியெண்டு பார்த்தா இருக்கிறீங்க... பக்கத்தில இருப்பவர் செத்த வீட்ட போயிட்டு வாறாரா? துடக்கு வீட்டில இருந்து வாறாரா எண்டெல்லாம் கேட்டா இருக்கிறீங்க... அதெல்லாம் கிரகங்களட பிழையா?... காய்கறி வாங்க, ஆட்டிறைச்சி வாங்க கடைகளுக்குப் போறீங்க. நீங்க வாங்கிறதை எந்தச்சாதி வளர்த்தது? எந்தச்சாதி அறுத்தது? எந்தச் சாதியின்ர கடையென்று விசாரிச்சா வாங்கிறீங்க. இவையெல்லாம் இயல்பாகவே மனிதனோடு கலந்து விட்டவையம்மா. சாதியின் பேரால பிழைப்பு நடத்துகிறவங்க தாங்க வாழ போடுகின்ற தூபமம்மா.."

"விட்டா கனக்க கதைச்சுகொண்டு போறியே."

"உண்மைதான்... நீங்க வீடு வாடகைக்கு விட்டிருக்கிறீங்களே சுப்பிரமணியம் அவர் வளவில விழுந்த தேங்காய்கள் கொண்டுவரும் போதெல்லாம் அவரை வைக்கும்படி சொல்லி அனுப்பிவிட்டு அதுக்கு துடக்கு எண்டு தண்ணி தெளித்து உள்ளே எடுக்கிறீங்களே. வாடகைக் காசு தரேக்க மட்டும் வாங்கி தண்ணி தெளிக்காம அலுமாரியில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கிறீங்களே காசில துடக்கில்லையாம்மா? ஏனம்மா இந்த ரெட்டை வேஷம்...? தண்ணி தெளிச்சா துடக்கு போகுமெண்டா மனுசருக்கும் தண்ணிதெளிச்சு உறவாடுங்களேன்."

"நீ பேசுவாயடா. இதில்ல, இதுக்கு மேலயும் பேசுவாயடா. ஏனெண்டா உன்னப் படிக்கவச்சு ஆளாக்கியிருக்கிறனெல்லா. அப்பிடி படிச்சதாலதானே வேலைக்குப் போறா. அதால நல்லாக் கதைக்கப் பழகீற்றா அப்ப பேசுவாதானே... இப்ப என்ன வேணும் உனக்கு?"

"நீங்க நடந்துகொள்ளுறது பிழையெண்டு உணர்ந்துகொள்ளுங்கம்மா. எனிமேலாவது உங்களத் திருத்திக்கொள்ளுங்கம்மா..."

"ஆக, அந்த பொட்டச்சி உன்ன நல்லா மயக்கியிருக்கிறாள்... அவங்க அதில கைதேர்ந்தவங்கதானே."

"ஏனம்மா அவங்கள தேவையில்லாம வம்புக்கு இழுக்கிறீங்க... அவங்க நல்லவங்கம்மா... என்ன கொஞ்சம் கஸ்ரப்பட்டவங்க அவ்வளவுதான்."

"அவளுவ சாதியில குறைஞ்சவங்க... அத மறந்திட்டியே!"

"நினைச்சிருந்தாத்தானே மறப்பதற்கு. எனக்குத்தான் இதில உடன்பாடு இல்லையெண்டு உங்களுக்குத் தெரியாதா? அப்பா நடந்து காட்டிய பாதையம்மா இது. அவரட வார்த்தைகளெல்லாம் எனக்கு கீதாவுபதேசமம்மா. அது எண்டைக்கும் என்ர மனசில இருக்கும்... நீங்க உங்கட போக்கில இருந்து திருந்துறீங்கயில்லயெண்டு எத்தினநாள் அப்பா வேதனைப்பட்டார் தெரியுமா?..."

"உனக்கு அப்பன்ர குணம் தொத்தீற்றாக்கும்."

"ஓமம்மா. அத நான் பெருமையா நினைக்கிறன்... நீங்க திருந்தவேணும்!... திருந்துவீங்கம்மா, அண்டைக்குத்தான் அப்பாவட ஆன்மா சாந்தியடையும்... அம்மா! நான் பிரிந்தாவ விரும்புறன். இந்த கேவலங்கெட்ட சாதி வெறியத் தூக்கிப்பிடிச்சு அவளை ஒதுக்கிவிட நான் தயாராயில்ல."

"பெற்றவளவிட ஆரோ ஒருத்தி உனக்கு உசத்தியாப் போயிற்றாளா?"

"பெற்றவள் பேய்க்கோலம் கொள்ளுறபோது மற்றவங்க உசத்தியாத்தான் இருப்பாங்க..."

"இனி உன்னோட பேசுவதில எந்த பிரயோசனமுமில்ல... நீ ஒண்ட முடிவெடுத்துக்கொள்ளு... பெற்றவள் உனக்கு வேணுமெண்டா அந்த பரதேசிய மறந்திடு... அவள்தான் வேணுமெண்டா என்ன மறந்திடு. என்ர முகத்திலேயே முழிக்கக்கூடாது..."

ரமேஷின் பதிலை எதிர்பார்க்காமல் சமையலறைக்குச் சென்றுவிட்டாள் மணிமாலா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29

எவ்வித தொடர்புகளுமற்று ஜேர்மனியில் வசித்துவரும் பிரியவதனியுடனான தொடர்பு, சில மாதங்களின் பின்னர் கையடக்க தொலைபேசி ஊடாக பிரியாவுக்குக் கிடைத்தது.

எல்லைகடந்த மகிழ்வில் பிரியா...

அடுத்த கணம் அடி வயிற்றில் உருவாகி, புயலென எழுந்த அழுகையை வெளியேறவிடாமல் தடுத்து, சிரமத்துடன் அடக்கி அமைதியானாள்...

கண்கள் உதிர்த்த நீரை அவளால் தடுக்க முடியவில்லை.

"எப்படி சுகமா இருக்கிறியா?"

"ஓமக்கா. நீங்க எப்பிடி இருக்கிறீங்க?... அம்மாக்கள்..."

"நாங்க நல்லா இருக்கிறோம். அம்மா, அப்பா, பிரிந்தா எல்லாரும் சுகமா இருக்கிறாங்க... இப்பதானா எங்களின்ர நினைவு வந்தது உனக்கு?"

"எல்லாம் விதி செய்த சதியக்கா..."

பிரியவதனியின் பிரச்சினையை ஏற்கெனவே அறிந்திருந்த தால் அதைப்பற்றி விசாரிப்பதைத் தவிர்த்திருந்தாள் அவள் மனம் நோகும் என்பதற்காக.

பிரியாவின் நல்வாழ்வு, யாழ்ப்பாணத்து நிலமை போன்ற பல விடயங்கள் உள்ளடக்கியதாக இருவரும் நீண்ட நேரம் மனந்திறந்து உரையாடினார்கள்.

அவளாகவே இடைக்கிடை தனக்கு அங்கு நிகழ்ந்தவற்றை கூற முனைந்தபோதும், அதில் ஆர்வத்தைக்காட்டி அவளுக்கு வேதனையை ஏற்படுத்த விரும்பாதவளாய் பேச்சை வேறு திசைக்குத் திருப்பி உரையாடிக்கொண்டிருந்தாள்.

வாழ்வழிக்கப்பட்டவளாய் வேதனையில், சோதனையில் மூழ்கி எழுந்தவளல்லவா பிரியா. தற்போது அவளது உள்ளத்தின் காயங்களுக்கு மருந்து போடப்பட்டு ஓரளவு குணமான நிலையில், தனது சகோதரி ஜேர்மனியில் வாழாவெட்டியாய் வாழ்வது பிரியாவின் நெஞ்சை உறுத்தாமலில்லை.

"அக்கா! எனக்கு ஒருமாதம் 'வக்கேஷன்' இருக்கு. அதுக்கு இலங்கைக்கு வரப்போறன். நீ ஏயாப்போட்டுக்கு வாறியாக்கா?"

"என்னடி அப்பிடிக் கேக்கிறா? நீ வருவதாகச் சொல்லுவதை கேட்கவே எவ்வளவு சந்தோஷமாயிருக்கு. நான் ஏயாப்போட்டுக்கு வராமலிருப்பனா?... எப்ப வாறாய் சொல்லு?"

"இன்னும் அஞ்சுநாள் வேலை செய்திட்டு வரலாமக்கா. அண்டைக்கே வெளிக்கிடக்கூடியதா ரிக்கற் போடப்போறன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இண்டைக்கே ரிக்கற்றப் புக்பண்ணீற்று எனக்கு அடிச்சுச் சொல்லு. நானும் அவரும் லீவு எடுக்கவேணும். அதோட நீ வாற திகதிக்கு யாழ்ப்பாணம் போறதுக்கும் ரிக்கற் போடவேணும். நானும் யாழ்ப்பாணம் வந்தமாதிரி இருக்கும்."

"நான் வாறத இப்போதைக்கு வீட்ட சொல்லாதயக்கா..."

"நான் சொல்லுவேனா? சொல்லாம நேரில போனாத்தான் அவகளுக்கு சந்தோஷமாயிருக்கும்."

யாழ்ப்பாணத்துக்கான விமானப் பயணச்சீட்டுகளைப் பெற்றுக்கொண்ட பிரியா குடும்பத்தினர், பிரியவதனியை வரவேற் பதற்காக கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பயணிகள் வெளியேறும் பகுதியில் காத்திருந்தனர்.

கையடக்கத் தொலைபேசி அலறியது. எடுத்தாள், மறு முனையில் தகப்பன்...

"சொல்லுங்கப்பா!"

பிரிந்தாவிற்கும் ரமேஸிற்கும் இடையிலான காதல். அதனால் நிகழ்ந்த விரும்பத்தகாதவைகள் என ஒவ்வொன்றாய் ஆனந்தன் சொல்லிக்கொண்டிருக்க, அவை பிரியாவின் இதயத்தில் முள்ளு களாகக் குத்தின.

தனது குடும்பமே சூறாவளிக்குள் சிக்கிவிட்டமையை ஜீரணிக்க முடியாதவளாய் தடுமாறினாள்...

"கவலப்படாம நீங்க வையுங்கப்பா. நாங்க நாளைக்கு அங்க வாறம்."

"நாளைக்கு வாறீங்களா?... கேக்க எவ்வளவு சந்தோஷமாயி ருக்கு. இந்த நேரத்தில நீங்க வாறது நல்லதுதான். அப்ப நான் வைக்கட்டா?"

தொலைபேசி இணைப்பு துண்டிக்கப்பட்டது.

பிரியாவின் சிந்தனை துண்டிப்பின்றி தொடர்ந்தது...

பிரிந்தாவின் விவகாரத்தைத் தவிர வேறு எதையும் தகப்பன் சொல்லாதது பிரியாவுக்கு சங்கடமாக இருந்தது... தானும் 'கேட்பதற்கு யோசிக்கவில்லை' என்று தன்னையே நொந்துகொண்டாள். 'நாளைக்கு வீட்டுக்குபோய்விடலாம்தானே' எனத் தனக்குள்ளே சமாதானமும் செய்துகொண்டாள்.

பிரியவதனி ஜீன்ஸ் அணிந்தவாறு வெளியே வந்தாள்.

இருவரும் தம்மையும் சூழலையும் மறந்து அணைத்தவாறு ஆனந்தக் கண்ணீர்...

விமான நிலையத்திலிருந்து புறப்பட பி.ப. 4.00 மணியாகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. நேராக புடவைக் கடையொன்றுக்குச் சென்று சுரிதாரும், சாறியும் வாங்கிக் கொடுத்தாள் பிரியா, அவள் ஜீன்ஸ் அணிந்தவாறு யாழ்ப்பாணம் செல்லக்கூடாது என்பதற்காக...




திருமணம் செய்துகொண்டதன் பின்னர் தனது அஞ்ஞாதவாசத்தை முடித்துக்கொண்ட பிரியா, அவளது கணவன் நவம், மகன் பிரியந்தன் மற்றும் பிரியவதனி யுடன் முச்சக்கரவண்டியில் வந்து வீட்டு வாசலில் இறங்கினாள்...

"அப்பா! அக்காக்கள் வந்திருக்கிறாங்க. ஓடிவாங்கப்பா..."

முற்றத்தைப் பெருக்கிக்கொண்டு நின்ற பிரிந்தாவின் குரல் கேட்டு ஆனந்தன் வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தார்.

வந்தவர்கள் வெளிப் படலையைத் திறக்க முயற்சிசெய்து கொண்டிருப்பதை அவதானித்த பிரிந்தா ஓடிச்சென்று திறந்து விட்டாள்.

அவளது உள்ளப் போராட்டத்தின் வடுவாக முகம் உலர்ந்து, சோபையிழந்து காணப்பட்டதை பிரியா அவதானிக்காமலில்லை.

பிள்ளைகளைக் கண்ட ஆனந்தத்தை, ஆனந்தனால் கட்டுப் படுத்த முடியாமல் ஆவலுடன் ஓடி வந்தார்.

முற்றத்தில் பாசச் சூறாவளியே வீசியது...

நால்வர் கண்களும் நீரால் நிரம்பி வழிந்தன...

ஆனந்தன் இருவரையும் அணைத்தவாறு வாய்விட்டு அழுதார்... அதிலே அவருக்கு நிம்மதி இருந்தது...

பிரியாவும் அழுதாள்... பிரியவதனியும் அழுதாள்...

நவமும் பிரியந்தனும் செய்வதறியாது அவர்களையே பார்த்தவாறு நிற்பதைக் கண்ணுற்ற பிரிந்தா, பிரியந்தனை ஏந்திக் கொண்டாள். அவன் சேர மறுத்தபோதும் அவள் இறக்க மனமின்றி அணைத்துக் கொண்டாள்.

"வாங்க அத்தான்..."

நவத்தை அழைத்தாள்... அவரும் கட்டுப்பட்டு பொதிகளில் இரண்டைத் தூக்கிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்.

நகர முடியாமல் தந்தையின் பாச அணைப்பில் சிக்கிக் கொண்ட பிரியாவும், பிரியவதனியும் வீட்டு வாசலையும் முற்றத் தையும் ஆவலுடன் பார்த்து, ஏமாற்றத்தில் ஒருவரையொருவர் நோக்கிக் கொண்டனர்.

தொடர்ந்து அங்கு தரித்துநிற்க விரும்பாமல், அணைப்பிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து ஒருவாறு விடுபட்டு வீட்டுக்குள் நுழைந்தனர்.

இருவரது கண்களும் விறாந்தையை உன்னிப்பாய் அவதானித்தன...

"பிரிந்தா!... அம்மா..."

விம்மல் சத்தம் கேட்டு திரும்பினர்...

ஆனந்தன்...

"அப்பா...!"

இருவரது குரல்களும் ஒருமித்து வந்தன...

அவரின் இருபக்கங்களிலும் நின்று கொண்டனர்...

"ஏனப்பா அழுகிறீங்க? அம்மாவுக்கு என்ன?..."

"அம்மா அறையுக்க..."

"அறையுக்கையா...? அங்க என்ன செய்யிறா?"

உடனேயே அறைக்குள்ளே சென்றனர்...

கண்டனர் தாயை...

அதிர்ச்சி...

சந்திராவின் முகத்தில் புன்னகை... கண்களிலிருந்து வடியும் நீருடன் படுக்கையில் கிடந்தாள்... உடல் மெலிந்திருந்தது...

"அம்மா!..."

அவளால் தலையை மெல்லத்தான் உயர்த்த முடிந்தது...

ஏதோ சொன்னாள்... நின்றவர்களுக்குப் புரியவில்லை.

பிரிந்தா தாயை அணைத்தவாறு உயர்த்தி சுவரில் சாய வைத்தாள்...

"அம்மாவுக்கு என்ன பிரிந்தா...?"

"இந்தப் பக்கக் கையும் காலும் வழங்காமல் போயிற்று... வாயும் இழுத்ததால பேச்சு விளங்கிற கஸ்ரமாயிருக்கு... ஐஞ்சாறு நாளாய் ஆஸ்பத்திரியில வச்சிருந்து நேற்றுத்தான் கொண்டு வந்தனாங்க..."

அறையே அதிரும் அளவுக்கு இருவரும் அழுதனர்...

அழுகைச் சத்தம் கேட்டு உள்ளே வந்த ஆனந்தனும் அவர்களின் அழுகையோடு இணைந்து தானும் அழுதார்...

அவர்களது உள்ளத்தின் வேதனை உடைப்பெடுத்த வெள்ளமாக கண்களால் வெளியேறிய பின்னர் வேறு நீரின்றி அமைதி நிலவியது...

தாயின் அருகருகாக பிரியாவும் பிரியவதனியும் அமர்ந்து கொண்டனர்.

இருவரது அணைப்பிலும் சந்திரா மகிழ்வுற்றதை அவளது முகம் வெளிக்காட்டியது. புன்னகை... கண்களில் திவலை...

இவற்றினிடையே கண்களால் பேசினாள்... தனது இடது கையால் உணர்வுடன் இருவரையும் தடவினாள்...

தலையை மெல்லத் திருப்பி கண்களைச் சுழற்றிய தாய் அறையுள் யாரையோ தேடுவதைப் புரிந்துகொண்டவள்போல எழுந்த பிரியா, கணவனை அழைத்துக்கொண்டு மகனை ஏந்தியவாறு திரும்பி வந்தாள்.

இருவரையும் கண்டதும் சந்திராவின் கண்கள் அகல விரிந்தன.

பிரியந்தனை தாய்க்கு நெருக்கமாக தனது மடியில் வைத்திருந்தாள் பிரியா.

அவனது முகத்தை வாஞ்ஞையுடன் தடவியவாறு புன்னகைத்தாள் சந்திரா...

சிறிது நேரம் இருந்துவிட்டு தாயிடம் விடைபெற்று மகனுடன் வெளியே வந்த பிரியா, குளிர்பானம் வாங்க பிரிந்தாவை பக்கத்துக் கடைக்கு அனுப்பிவிட்டு காத்திருந்த ஆனந்தனுக்கு முன்னால் வந்தமர்ந்தாள் தகவல் அறியும் நோக்கில்...

குளிர்பானத்துடன் வந்த பிரிந்தா அதனைப் பரிமாறிவிட்டு குற்ற உணர்விற்குள் தன்னை இணைத்தவளாய் ஓரமாக நின்றாள்...

"ஏனப்பா என்னட்ட ஒண்டும் சொல்லயில்ல?"

"நீ ஏற்கனவே துன்பத்தை அனுபவித்து ஓய்ந்திருக்கும் நிலையில திரும்பவும் உன்னை வேதனைப்படுத்துவானென்றுதான் சொல்லயில்ல..."

"உங்கட எண்ணம் விளங்குதப்பா. ஆனாலும் அம்மா வெல்லா?... என்னப்பா நடந்தது அவவுக்கு?"

ஆனந்தன் திரும்பி பிரிந்தாவைப் பார்த்தார். அதுகண்டு பிரியாவும் அவளையே பார்த்தாள்.

அவள் தலை கவிழ்ந்து நின்றாள்.

"எல்லாம் இவளால வந்த வினைதானம்மா..."

பிரியாவுக்கு தொலைபேசி மூலம் ஏற்கெனவே ஆனந்தன் கூறியிருந்ததால் அவளுக்கு உடனேயே விளங்கிக்கொண்டது.

"போனகிழம பொடியன்ர தாய் இஞ்சவந்து கொஞ்சப் பேச்சா பேசினவள். எவ்வளவு கேவலமா பேசினாள் தெரியுமாம்மா. பணத் திமிரில, தாங்க உயந்த சாதி என்ற நினைப்பில வாயில வந்தத யெல்லாம் சொல்லி முடிச்சிற்றாளம்மா..."

ஆனந்தனுக்கு விக்கல் முந்திக்கொண்டது... அழுதார்... சிறிது நேரத்தில் அமைதியானார்.

"அண்டைக்கு இருந்த இடத்தில சரிஞ்சவதான் அம்மா... காச்சல் துவங்கீற்று. நாங்க பனடோல் வாங்கிக் குடுத்தோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுமெண்டு. அடுத்த நாளும் நடுக்கத்தோட சரியான காச்சல். சோர்ந்து போயிட்டா. உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனனாங்க. அங்கதான் தெரிஞ்சுது பிறசர் கூடி வலப்பக்க கைகால் வழங்காமல் போயிற்றெண்டு... உயிருக்கு ஒண்டும் ஆபத்தில்லாமப் போனது அவ செய்த புண்ணியமெண்டு டொக்டர் சொன்னார்..."

பிரிந்தா அழுதாள்... அழுதாள்... தடுப்பாரின்றி அழுதவள் அங்கிருந்து விலகிச் சென்றாள்.

அவளைப் பார்த்து பிரியாவின் கண்கள் கலங்கின.

"அப்பா! எங்களை ஏனப்பா துன்பம் இப்பிடி சுற்றிச்சுற்றி வருகுது? நாங்க ஆருக்கு என்ன தீங்கு செய்தோமப்பா?"

"தெரியயில்ல அம்மா!"

நா தளுதளுத்தது

"அவரட பிறந்தநாளும் அதுவுமாய் அண்ணனப் பறிகொடுத் தோம், அன்னிய நாட்டில் நான் என்னையே இழந்து நின்றேன், அநியாயமாக அத்தைய இழந்திட்டோம், பெரியப்பாவும் பெரியம்மா வும் கை - கால இழந்து நிக்கிறாங்க, நீங்க நாரி வருத்தத்தால அவதிப்படுகிறீங்க, வதனி ஜேர்மனில வாழாவெட்டியா நிக்கிறாள். பிரிந்தா இஞ்சால பிரச்சின, வீட்ட வந்திருந்த இராசம்மா அன்ரி அப்படி. பாவம் மணிரெத்தினம் அங்கிள். எங்களோடு சேந்ததுக்காக அவரையும் எங்கட துன்பம் துரத்தியிருக்குது. இப்பிடியே பட்டியல் நீளுதேயப்பா..."

ஆனந்தன் மடியில் தலை கவிழ்ந்தவாறு விம்மி விம்மி அழுதாள் பிரியா... ஆனந்தனும் அவளை ஆதரவாய்த் தடவியவாறு அழுதார்.

சட்டெனத் தலையை நிமிர்த்தினாள்...

"அப்பா...! பிரிந்தாவட காதலின்ர வினைதானே அம்மாவுக்கு இந்த நிலையை ஏற்படுத்தியிருக்கு?... "

"வேற என்னத்தச் சொல்லயம்மா?"

"அப்பிடியெண்டா அவளுக்கு அவள் விரும்பியவனையே கலியாணம் செய்து வைத்து அம்மாவின்ர மனதிற்கு சந்தோஷத்த கொடுக்கிற ஒண்டுதான் நாங்க அவவுக்கு செய்யக்கூடிய கடமையா இருக்கும். இல்லையாப்பா?"

"உண்மைதான், அது நடக்குமாம்மா?"

"முயன்றா முடியாத ஒன்றுமில்லையப்பா. நடக்கும், நடத்தி வைத்துவிட்டுத்தான் நான் இங்கயிருந்து போவன்..."

உணர்ச்சிவசப்பட்டு கூறினாள்... அவள் மூச்சுக்காற்று அனலாக வெளியேறியது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரியாவின் உரத்த சத்தம் கேட்டு பிரியவதனி வெளியே வந்தாள்.

"என்னக்கா? ஏனக்கா ஒரு மாதிரியா இருக்கிறா?"

"ஒண்டுமில்ல வதனி! நீ போய் அம்மாவக் கவனமாப் பார்... பிரிந்தாவக் கூப்பிட்டு அம்மாவட உடுப்ப எடுக்கச்சொல்லு. கூட்டிப் போய் குளிச்சவார்ப்போம்."

"சரியக்கா... பிரிந்தா!"

அழைத்தவாறு தாயிடம் சென்றாள்.

"அப்பா! கள்ளியங்காட்டில நல்ல ஆயுள்வேத டொக்டர் இருக்கிறாரெல்லாப்பா? அவரட்ட அம்மாவ கூட்டிப்போய் காட்டுவோமாப்பா? வேற ஆராவது நல்ல டொக்டர் இருந்தாலும் விசாரிச்சுப் பாருங்கப்பா. உடனேயே கொண்டுபோய் காட்டுவோம்... உங்கட நாரியையும் காட்டியிருக்கலாமேயப்பா."

"நான் செய்யாத வைத்தியமில்லயம்மா. ஒப்பிறேசன் செய்யச் சொல்லுறாங்க. ஆனா, அது கூடாதெண்டு கனபேர் சொல்லுறாங்க. என்னடத விடு. என்னால நடக்கக்கூடியதா இருக்குத்தானே. அம்மாவ கூட்டிப் போறது நல்லதுதான். என்னால தனிய அவய பாக்க ஏலாது. விதுஷாதான் இடைக்கிடையே வந்து கவனிக்கிறாள். அவளும் பாவம்... நீங்க நிக்கிறது பலதாலையும் உதவியா இருக்கும்."

"சரியப்பா! அம்மாவ கவனிக்கிறது எங்கட முதல் வேலை. நீங்கபோய் ஆகவேண்டியதைப் பாருங்கப்பா."

"சந்தோஷமாயிருக்கம்மா... அம்மாவுக்கு இப்ப வேண்டிய தெல்லாம் அமைதி... நிம்மதி... அதுக்கு நீங்கதான் வழிகாட்ட வேணும்."

"நீங்க ஒண்டுக்கும் யோசியாதயுங்கப்பா."

உடனேயே செயலில் இறங்கினார் ஆனந்தன்...

## 31

பொழுது சாயும் நேரம் வேப்பமரத்தின் கீழ் இருந்து நெடுநேரமாக யோசித்துக்கொண்டிருந்த பிரியா, தனக்குள் ஏதோ முடிவெடுத்தவள்போல தலையை அசைத்தவாறு பிரிந்தாவை அழைத்தாள்.

பிரிந்தா வந்தாள்...

"பிரிந்தா! அம்மம்மாவின் உணர்வுகள் இணைந்த வளர்ந்த இந்த வேப்பமரத்தின்ர கீழ இருந்து கேக்கிறன் நீ எதையும் மறைக்காம எனக்குச் சொல்லவேணும்."

"ஓமக்கா"

"ஆரு அந்தப் பொடியன்?... அவனட பேரென்ன?"

"ரமேஸ்..."

நடுக்கத்துடன் சொன்னாள்.

"எங்க வேல செய்யிறான்?"

"ஒரு நிறுவனத்தில..."

"எவ்வளவு நாளா பழக்கம்."

"ஏழெட்டு மாதத்துக்கு மேல..."

"இன்னாரெண்டு தெரியாமலா அவன விரும்பினனி."

"தெரியுமக்கா! அவர் நல்லவர், வித்தியாசமானவர்."

"இப்ப என்ன சொல்லுறான்?"

"அவர் போன் எடுத்தாலும் நான் ஆன்சர் பண்ணுறயில்ல."

"ஏன்?"

"அப்பா மறிச்சவர்"

"நீ அவன உண்மையா விரும்புறியா?"

"ம்..."

"அவன் உன்னக் கலியாணம் முடிப்பானெண்டு நம்புறியா?"

"ஓமக்கா..."

"என்ன நம்பிக்கயில சொல்லுறா?"

"அவரோட பழகினதில இருந்து தெரியுமக்கா."

"அப்ப, அவன எங்க சந்திக்கலாம்?"

"ஏனக்கா?"

"நான் சந்திக்கவேணும். அவனட நோக்கத்த அறியவேணும். நீ போணப் போட்டுக்கேள் எங்க சந்திக்கலாமெண்டு."

ஒரு வாரமாக ரமேஸின் தொலைபேசி அழைப்பை நிராகரித்த பிரிந்தா, சகோதரியின் தூண்டுதலால் மீண்டும் தொடர்பை ஏற்படுத்த முற்பட்டாள்...

❖❖❖

ஆயுள்வேத மருத்துவரிடம் அழைத்துச் சென்றதுமுதல் அவர் கொடுத்த மருத்தெண்ணெயை அவரது கூற்றின்படியே தவறாமல் பயன்படுத்தி வந்தனர் பிரியாவும் பிரியவதனியும்...

"நீங்க யோசியாதையுங்க. அம்மாவுக்கு அவ்வளவு பெரிய பாதிப்பு ஏற்படயில்லை. அவயட பலவீனம்தான் இப்பிடியிருக்குது. சத்துள்ள சாப்பாடுகளக் கொடுத்து, நான் சொன்னமாதிரி செய்து வந்தீங்கெண்டா கெதியாவே குணமாகிடும்... இதில என்னட பங்கவிட உங்கட பங்குதான் அதிகம். கட்டாயம் சுகம்வருமெண்டு நினையுங்கோ. அந்த நம்பிக்கையில இருந்து கவனமெடுங்க."

வைத்தியரின் கூற்று அவர்களை அதிக அக்கறை காட்டிடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தது.

இருவரும் காலையில் சந்திராவை கைத்தாங்கலாக கிணற்ற டிக்கு அழைத்துச்சென்று குளிப்பாட்டி உடை மாற்றிய பின்னர், அவளின் தலை உச்சியின் இடதுபக்கமாக மருத்தெண்ணெயை ஊற்றி நன்றாக சூடேறத் தேய்த்தனர்.

உடலின் வலது பக்கமாக முகத்திலிருந்து கால் பாதம் வரை அவ்வாறே எண்ணெய் ஊற்றி சூடேறும்வரை தேய்த்தனர்.

கை - கால்களை அசைத்து, மடக்கி நீட்டி உடல் தசைகளைப் பிசைந்து உடற்பயிற்சி கொடுத்தனர்...

பின்னர் வேம்பு, பாவட்டை, நொச்சி, ஆமணக்கு போன்ற மரங்களின் இலைகளை சேர்த்து பொட்டலமாகக் கட்டி ஆவியில் அவியவைத்து, இளஞ் சூட்டுடன் ஒத்தணம் கொடுத்தனர்.

இவை யாவும் முடிவுற்றதும், வீசும் காற்றைத் தானேந்தி உயிர்க்காற்றாக வெளியேற்றும் வேப்பம் மரத்தின் கீழ் தாயின் விருப்பப்படி இருத்தி வந்தனர்.

அம் மரத்தின் கீழே அமர்ந்திருக்கும்போது தனது தாயின் அணைப்பில் இருப்பது போன்ற இனம்புரியாத சுகத்தில் முகிழ்ந்து எழுந்தாள் சந்திரா. நோய் தீர்க்கும் ஔடதம் என்றும் உளமார நம்பினாள்...

இவைகளனைத்தும் திரும்பவும் மாலை ஐந்து மணிக்கு நடைபெற்றன.

இவற்றைத் தமது பிரதான பணியாக ஏற்றதுடன், தாயைப் பராமரிக்கும் தார்மீகப் பொறுப்பு கிடைத்ததில் இருவருக்கும் மனநிறைவு.

வைத்தியர் கூறியபடி ஒத்தணம் கொடுக்கப் பாவித்த இலைகளை சேர்த்து அவித்து, வாரத்தில் மூன்று தடவைகள் தாயை குளிப்பாட்டியும் வந்தனர்.

இவற்றால், தனது உடல் உபாதை குறைந்து வருவதை சந்திரா உணர்ந்திருந்ததை அவளது செயற்பாடுகளிலிருந்து பிள்ளை களால் உணரக்கூடியதாக இருந்தது. அதனால் மேலும் உற்சாகமாக பணியைத் தொடர்ந்தனர்.

நேரந் தவறாது உணவு ஊட்டுவதிலும், போசாக்குள்ள பால்மா கரைத்து பருக்குவதிலும் இருவரும் போட்டி போட்டு செயற்பட்டனர்.

பிள்ளைகளின் கபடமற்ற கவனிப்பால், சந்திராவின் உள்ளம் மகிழ்வில் நிறைந்திருந்ததை அவளது முகம் கண்ணாடிபோல வெளிக்காட்டியது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 32

மனோஜ் வீட்டின் முன்பாக பிரியாவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர் ரமேஸ் மற்றும் மனோஜ்...

பிரியாவும் பிரிந்தாவும் முச்சக்கர வண்டியில் வந்திறங்கினர்.

அவர்களைக் கண்ட ரமேஸ் கேற்றைத் திறந்துவிட்டு விறாந்தைக்குச் சென்றான்.

வாசலைத் தேடி வந்தனர் இருவரும்.

"நான் ரமேஸின் நண்பன். இது எங்கட வீடுதான். நீங்க கூச்ச மெதுவுமில்லாம உள்ள வரலாம்."

மனோஜ் வரவேற்று இருவரையும் உள்ளே அழைத்துச் சென்றான்.

'செற்றி'யில் இருவரும் கதிரையில் இருவருமாக அமர்ந்து கொண்டனர்...

பிரிந்தாவை கடைக்கண்ணால் பார்த்தவாறு ரமேஸ் இருக்க ஏனையோர் நிலத்தையே பார்த்துக்கொண்டு இருந்தனர்.

மௌனமே அங்கு கோலோச்சியது.

"அக்கா! நீங்க ஏதோ கதைக்க வருவதாக ரமேஸ் சொன்னான். இப்பிடியே பேசாம இருந்தா?"

தொடக்க உரைபோல மனோஜ் சொல்லவும் பிரியா இளநகை புரிந்தாள்.

"உங்கட நண்பனும் இவளும் ஏழெட்டு மாதமா பழகி வருவதாக இவள் சொல்லுறாள். உண்மையா எண்டு கேளுங்க."

"உண்மைதான்."

ரமேஸ் பதில் சொன்னான். அதனால் அவன் பக்கம் திரும்பினாள் பிரியா.

"நீங்க இவள உண்மையா விரும்புகிறீங்களா?"

"ஓமக்கா..."

"இவள கலியாணம் செய்யிற அளவுக்கு விரும்புறீங்களா?"

"ஓமக்கா..."

"இவள இன்னாரெண்டு தெரிஞ்சுதானே விரும்பினீங்க?"

"ஓமக்கா..."

"எங்கட வீட்ட உங்கட அம்மா நடந்துகொண்ட விதத்தை அறிஞ்சிருப்பீங்கதானே. அதிலயிருந்து அவங்க கலியாணத்துக்கு எண்டைக்கும் சம்மதிக்க மாட்டாங்க எண்டு தெரியும் உங்களுக்கு. இந்த நிலையில உங்கட முடிவு என்னவாயிருக்கும்."

"அம்மா அங்க நடந்துகொண்டதுக்கு நான் உங்கட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப்புக் கேக்கிறனுங்க. அதப்பற்றி அம்மாவோட பெரிசா சண்டபிடிச்சனான். அம்மாவட செயலால உங்க அம்மாவுக்கு ஏற்பட்ட நோயைப்பற்றி பிறகுதான அறிஞ்சனான். இதுக்காக மனம் வருந்திறன். இது ஆராலையும் ஏற்றுக்கொள்ளக் கூடியதில்லை."

ரமேஷின் கண்களிலிருந்து நீர் வடிந்தது. அழுத்தி துடைத்துக் கொண்டான்.

"எண்டைக்கும் அம்மாவட சம்மதத்தோட எங்கட கலியாணம் நடக்காது எண்டு விளங்குது."

"அப்பிடியெண்டா?"

"நீங்க என்ன முடிவெடுக்கிறீங்களோ அதுக்கு நான் கட்டுப்படுறன்."

"அம்மா சம்மதிக்க மாட்டாங்க எண்டா எங்களால ஒண்டும் செய்ய ஏலாது. நாங்க இவளுக்கு வேற கலியாணம் செய்யப்போறம்."

"என்ன சொல்லுறீங்க? இதச் சொல்லுறதுக்காவா இஞ்ச வந்தனீங்க. நான் பிரிந்தாவ மனமார விரும்புறன். என்ர நெஞ்ச வெட்டிப்பாத்தா அவதான் இருப்பா... அவ இல்லாம எனக்கு வாழ்வே இல்லை. அவ கிடைக்கயில்லையெண்டா நான் சாகவும் தயங்க மாட்டேன். இது சத்தியமுங்க."

உணர்ச்சிவசப்பட்டவனாக காணப்பட்டான்...

பிரிந்தா கண் கலங்கினாள்.

"உங்கட மன உறுதிய அறிஞ்சுகொள்ளளத்தான் அப்பிடிக் கேட்டனான். ஐயாம் வெறி சொறி..."

"பறவாயில்லயிங்க..."

"உங்கள நம்புறன்... நாங்க கலியாணம் செய்ய முடிவெடுத்தா உங்க அம்மா இடைஞ்சல் செய்யமாட்டாங்களா?"

"நான் வீட்டவிட்டு வெளியேறுற முடிவில இருக்கிறன்."

"அது தப்பில்லையா? என்ன இருந்தாலும் அவங்க உங்க அம்மா... ஆசா பாசம் எண்டு அவவுக்கும் இருக்கும்... நாங்க உங்க இருவரையும் பிரிச்சு வைச்சிற்றோமெண்டு கோவப்பட்டு ஏதும் வீபரீதம் நடந்துவிடாதா?"

"அதப்பற்றி நீங்க ஒண்டும் யோசியாதயுங்க. அம்மாவப்பற்றி எனக்கு நன்றாத் தெரியும். அம்மாவுக்கு சாதிமோகம் அதிகம். ஆனா, வாயில இருக்கிற துணிவு நெஞ்சில இல்லையுங்க. நான் வெளி யேறினாத்தான் அவயின்ர சாதிவெறி அடங்கி ஒரு மனுசியா இருப்பா. இது என்னட சுயநலமில்லை. நான் அவவுக்கு செய்யக்கூடிய வைத்தியம்."

"அம்மாவையும் சேத்துக்கொண்டு கலியாணம் செய்யிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே எல்லாருக்கும் நல்லது."

"உண்மைதான். அதுக்காக அவயோட சேந்து அவயட சாதிவெறிக்கு தூபம் போடச் சொல்லுறீங்களா? அவைக்கு பிள்ளைப் பாசத்தைவிட சாதிமேல பாசம் அதிகம். அவ அப்பிடியே இருக்கட்டும். நான் ரெடி, நீங்க றெஜிஸ்ரர் செய்யும் வழியப் பாருங்க. நான் றெஜிஸ்ரர் செய்ததை அறிஞ்சா அம்மா கோவப்படுவாங்கதான்... அவ கோவப்படட்டும். நீங்க ஒரு நல்லநாளாப் பாருங்க. கலியாணத்தச் செய்வோம். அவயட காசு ஒண்டும் எனக்குத் தேவையில்ல. அதுக்குப் பிறகு அவயால என்னனங்க செய்ய ஏலும்.?"

"நீங்க இவ்வளவு உறுதியா இருக்கிறதால நாங்களும் உங்களோடு சேந்து நிக்கிறோம். நீங்க உங்கட முடிவில இருந்து மாற மாட்டீங்கதானே? ஏனெண்டா நாங்க பட்டனுபவிச்சவங்க. இவளட வாழ்வெண்டாலும் சிறப்பா இருக்கட்டுமெண்டுதான் விரும்புறோம். அதால இப்படிக் கேக்கிறதில தவறில்லத்தானே!"

"இது இயல்பான பயம்தான். என்னங்க அழுதுகொண்டே பிறக்கிறோம், குறைகூறுவதிலும் நம்மை நாமே உயர்த்துவதிலும்தான் வாழ்கிறோம், ஏமாற்றத்துடனே சாகிறோம், நாம் என்னத்தைச் சாதித்தோம்? நீங்க என்ன நம்பலாம். நீங்க செய்யவேண்டிய அலுவல்களச் செய்யுங்க... மனதார விரும்பிய பெண்ண மணக்கிறதில இருக்கிற சந்தோஷத்தவிட உலகில வேறென்ன இருக்கு."

உறுதியுடன் கூறினான் ரமேஸ்... அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் தேனாக இனித்தது பிரிந்தாவுக்கு... அதனால், கவலை விடுபட்டவளாக பிரிந்தா... மன நிறைவுடன் பிரியா...

## 33

ஒரு வாரமாகியும் சந்திராவின் உடலில் மாற்றம் பெரிதாக ஏற்படாதபோதும், ஓரளவு தென்பு காணப்பட்டதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அது அவர்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்க அவர்களின் பணி மேலும் விரிவாக்கம் பெற்றது.

"என்னங்க என்னும் நாலு நாளில லீவும் முடியுது."

"இந்த நிலயில அம்மா விட்டுட்டு நீ என்னண்டு வருவா?."

"அதுதானுங்க நானும் யோசிக்கிறன். அவங்க இந்த லீவத் தாறதுக்கே பஞ்சிப்பட்டவங்க."

"இஞ்ச இவ்வளவு பிரச்சினய வைச்சுக்கொண்டு நீ அங்க நிம்மதியா வேல செய்வியா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மைதான். அப்படியெண்டா ஒண்டச் செய்வோமா? நீங்க என்னட 'றிற்றன் ரிக்கற்ற கான்சல்' பண்ணிப்போட்டு நீங்க வெளிக்கிட்டு போங்க. எப்படியும் ரெண்டு கிழமைக்குள்ள பிரிந்தாவட கலியாணத்த முடிக்க வேணும். நீங்க வெளிக்கிடுறத்துக் கிடயில கலியாண திகதிய முடிவெடுத்திடுவோம். நீங்க போனதும் வாறதுக்கு ரிக்கற்ற போட்டு வையுங்க. என்னட வேலை போனாப் போகட்டும். வந்தபிறகு வேற வேலை எடுக்கலாம் தானே."

பிரியாவின் கோரிக்கையை ஏற்ற நவம் பயணச்சீட்டை ரத்து செய்வதற்காக முகவர் நிலையம் தேடிச் சென்றார்...

❖❖❖

பிரியவதனியின் பெயரில் கடுகதி தபால்...

வேப்பமரத்தின் கீழ் கதிரையில் அமர்ந்திருந்தவளிடத்தில் பிரிந்தா கொண்டுவந்து கொடுத்தாள்.

ஜேர்மனியில் வசிக்கும் அவளது கணவன் சோதிநாதனிட மிருந்துதான் தபால் வந்திருந்தது.

வெறுப்புடன் அதேவேளை பதறியவளாய் எழுந்து கடிதத்தைப் பிரித்தாள்...

நீண்ட கடிதம்...

அக்கறையற்றறவள்போல வாசித்துக்கொண்டிருந்தவள் பலவற்றைத் தவிர்த்து இடையில் சில வரிகளை மட்டும் திரும்ப வாசித்தாள்...

"...வதனி என்னை நம்பு. நான் முன்னரைப் போலயில்ல. அவளிடமிருந்து முற்றாகவே மீண்டுள்ளேன். நாங்க இருந்த வீட்டை ஏஜன்சியிடம் திரும்பக் கையளித்ததால கொலேக்கட* வீட்டில்தான் இருக்கிறன். மல்லிகாவிடம் கேட்டபோதுதான் நீ பேலியனுக்கு** சிறீலங்கா போயிருப்பதாக அறிந்தேன். அதனால உடனேயே இந்தக் கடிதத்தை எழுதி அனுப்பியுள்ளேன்... உன்னோடு திரும்பவும் இணைந்து வாழ விரும்புகிறேன். இனிமேல் உனக்கு துரோகம் செய்ய மாட்டேன். என்றும் இணைந்து வாழ்வோம். என்னை நம்பு வதனி..."

படித்து முடித்தவள் குழப்பத்தால், மனப் போராட்டத்தால் தடுமாறினாள். சோதிநாதன் எழுதியிருப்பது உண்மையா? நடிப்பா? என்பதை இனங்காண முடியாதவளாக தவித்தாள்... சில நிமிடங்களில் உணர்வின் உந்தலால் அமர்ந்து கொண்டாள்...

சிறிது நேர இடைவெளியின் பின்னர் ஏதோ நினைத்துக் கொண்டவளாக கடிகாரத்தைப் பார்த்தாள்.

நேரம் பத்தரை மணியை காட்டியது.

* கூடவே வேலை செய்யும் நண்பன் ** விடுமுறை காலம் (Vacation)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னும் வேலைக்கு போகமாட்டா..."

அவளது வாய் முணுமுணுத்தது...

கையடக்கத் தொலைபேசியை எடுத்துவந்து இலக்கங்களை அழுத்தினாள்...

மறுமுனையில்,

"அலோ..."

"குட்டன் மோர்கன்*+ மல்லிகா அக்கா!"

"குட்டன் மோர்கன் வதனி! சொல்லு..."

"அக்கா! உங்களோட கொஞ்சம் பேசவேணும் எனக்கு ஒருக்கா எடுக்கிறிங்களாக்கா."

"சரி..."

தொலைபேசி இணைப்பைத் துண்டித்து காத்திருந்தாள்.

தொலைபேசி அலறியது.

"வதனி! என்னடி விடியக்காலம அவசரமாய்?"

"அக்கா! சோதிநாதனட்ட இருந்து கடிதம் வந்திருந்தது. அதில ஏதேதோவெல்லாம் எழுதியிருக்கிறார். அவளத் தான் விட்டிட்டா ராம். தான் திருந்தீற்றாராம். என்னோட சேந்து வாழப் போறாராம். வீடில்லாம கொலேக்கட வீட்டில இருக்கிறாராம். என்னக்கா இதெல்லாம். பெரிய அதிசயமா இருக்கு... நடிப்பா, உண்மையா?"

"உண்மைதான் வதனி. என்னட்ட போன கிழம வந்து கதைத் தவர். அவளில இப்ப அவருக்கு வெறுப்புத்தான். இவர் இல்லாத நேரம் அவள் வேற ஆரோடையோ டிஸ்கோவுக்குப் போய் வந்திருக்கிறாள். இத அறிஞ்சு அவளட்ட கேட்டிருக்கிறார். அதுக்கு அவள் 'நீ என்ன என்னட மானா?* பிறொன்ற்+ தானே! அதேபோலதான் அவனும் பிறொன்ற். நீ அனுசரிச்சு போறண்டா இரு. அல்லாட்டி நீயும் ஒரு பிறொன்டின++ தேடு' என்றாளாம். அவளோட பேசிறதில ஒரு பலனுமில்லையெண்டு உடனே வெளிக்கிட்டு வந்திற்றதாகச் சொன்னார். தான் உனக்குச் செய்தது துரோகமெண்டு கவலைப் பட்டார். நீ எப்ப வருவதாகக் கேட்டார். தங்கச்சியட கலியாணம் முடிஞ்ச பிறகுதான் வருவாயெண்டு சொன்னனான் வதனி..."

"என்ன திடீரென்று இந்த மாற்றம்?... இவர் வழமையப்போல நடிக்கிறாரா எண்டு அறியத்தான் எடுத்தனான்..."

"வேற என்ன புதினம் வதனி?"

"அம்மாவட நிலை பற்றி ஏற்கெனவே சொன்னனான்தானே! இதுவர அவயில பெரிய மாற்றம் தெரியயில்ல. தங்கச்சியட கலியாண அலுவலாத்தான் ஓடித் திரியிறம்... அக்கா! நேரம் போகுது நீங்க

*+காலை வணக்கம் *கணவனா? +நண்பன் ++நண்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைக்கு வெளிக்கிட வேணும். வைக்கிறனக்கா பிறகு ஒருநாளைக்கு எடுங்களன்..."

இணைப்பு துண்டிக்கப்பட்டதும் புதிய உலகத்தில் நிற்பது போல இருந்தது பிரியவதனிக்கு...

மறுநாள், பிரிந்தாவுக்கும் ரமேஸிற்கும் பதிவுத் திருமணம் செய்யவிருப்பதையும், அடுத்தவாரம் கலியாணம் செய்யவிருப்பதையும் சந்திராவுக்கு சொல்லிக்கொண்டிருந்தாள் பிரியா.

பொட்டுவைத்து, திருநீறு பூசி, தலையில் பூ வைத்து அலங்கரித்திருந்த சந்திராவின் முகம், பிரியாவின் கதையைக் கேட்டு மலர்ந்திட, அவளிதழில் புன்னகை...

கையால் சைகை செய்தாள் சந்திரா.

தாயின் சைகைகளை நாளடைவில் புரிந்துவைத்திருந்த பிரியா, பிரிந்தாவை அழைத்தாள்.

"என்னக்கா?"

"அம்மா கூப்பிடுறாங்க..."

தாயின் பக்கத்தில் அமர்ந்தாள்.

கனிவோடு பிரிந்தாவின் தலையையும் முதுகையும் தடவினாள் சந்திரா.

அவள் கன்னத்தில் ஆனந்தக் கண்ணீர் தொடராக வழிந்தது.

பிரிந்தா துடைத்துவிட்டாள்.

திட்டமிட்டபடி பிரிந்தாவுக்கும் ரமேஸிக்கும் பதிவுத் திருமணம் நடைபெற்றது.

விவாகப் பதிவாளர் வீட்டில் நடைபெற்ற பதிவுத் திருமணத்தில் ரமேஸின் சார்பாக அவனின் சிறிய தகப்பனும் சிறிய தாயும் வந்திருந்தனர். பிரிந்தா சார்பாக ஆனந்தனும் பிரியாவும் கலந்துகொண்டனர்.

பதிவு முடிந்ததும் வீட்டுக்கு வந்த ரமேஸும் பிரிந்தாவும் சந்திராவின் காலைத்தொட்டு ஆசி பெற்றனர்.

சந்திரா ஆனந்தத்துடன் இடது கையால் அவர்கள் தலையைத் தொட்டு ஆசி வழங்கினாள்.

❖❖❖

எவ்வளவுதான் இரகசியமாக செயற்பட்டாலும் ஏதோ வழியாக கசிவு ஏற்படத்தான் செய்கிறது.

அந்தக் கசிவால் அறிந்துகொண்டாள் மணிமாலா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருத்திர தாண்டவமே ஆடினாள்...

இதை எதிர்பார்த்தவாறு தாயைத் தேடி வந்திருந்த ரமேஸ், அக்கினிக் ஜுவாலையாக வெளிவரும் அவளது ஏச்சை கேட்டவாறு அமைதியாய் இருந்தான்...

"சித்தப்பன் என்னோடதான் கோவம் உன்னோட நேசமாக்கும். அவனும் அவளும் வந்திருந்தாகளாமே. எல்லாரும் சேர்ந்து எனக்குப் பேய்ப் பட்டம் கட்டுறீங்களாக்கும்..."

"............."

"எல்லாத்தையும் ரகசியமாச் செய்துபோட்டு இப்ப வந்திருக்கிறியாக்கும் என்ன சேப் பண்ணுறதுக்கு! அதொண்டும் இஞ்ச நடக்காது. ஒண்டச் சொல்லிப்போட்டன். நீ என்ர சொல்ல மீறி அவள றெயிஸ்ரர் பண்ணீட்டாயெல்லா. இப்பவே உன்ர உடு பிடவய எடுத்துக் கொண்டு வெளியால போ!"

வீட்டுக்குள் இருந்து வெளியே வந்தாள்...

"நான் வெளியால போயிற்று வரேக்க நீ இஞ்ச இருக்கக் கூடாது... தெரிஞ்சுதா?"

இதுதான் நடக்குமெண்டு அவன் தீர்மானித்திருந்ததால், மௌனமாக தனது உடைகளை அடுக்கிக்கொண்டிருந்தான் ரமேஸ்...

❖❖❖

**பி**ரியா, திருமண அழைப்பிதழின் மாதிரியை ரமேஸிடம் காண்பித்தாள்.

அது ஆங்கிலத்தில் அதிக ஆடம்பரமற்ற பின்புலத்தைக் கொண்டதாக இருந்தது.

"அழைப்பிதழ் நல்லாத்தான் இருக்கு ஆனா...!"

"என்ன தம்பி...?"

"நாங்க ஐரோப்பியருக்கா அழைப்பு குடுக்கப் போறோம்?"

"ஏன் அப்பிடிக் கேக்கிறீங்க?"

"அவங்களுக்கெண்டாத்தான் கட்டாயம் இங்கிலிசில அடிக்கவேணும். இஞ்ச எல்லாரும் தமிழர்தானே. தமிழிலேயே அடிக்கலாம்தானே?"

"சும்மா ஒரு மாறுதலுக்காக..."

"இதில என்னங்க மாறுதலும் பெருமையுமிருக்கு. அழகான தமிழ் இருக்கேக்க, அதில அர்த்தமுள்ள வார்த்தைகளிருக்கேக்க வேறு என்ன மாறுதல் இங்கிலிசில எதிர்பாக்கிறீங்க? தமிழிலே அச்சிட்டாத்தானுங்க எங்களுக்குப் பெருமை."

"சரி தம்பி!"

பிரியா முற்றிலும் எதிர்பார்த்திருக்காதவற்றை ரமேஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறியதும் அவன்மீது அவளுக்கு மதிப்பு ஏற்பட்டது. தன் தவறை உணர்ந்தவளாக எதுவும் பேசாது உடனேயே அச்சகம் நோக்கிப் புறப்பட்டாள் தமிழில் அழைப்பிதழை அச்சிடுவதற்காக...




ஆனந்தன் வீட்டில் போதிய உதவி இல்லாத போதும், பிரிந்தா - ரமேஸ் திருமணத்துக்கான ஆயத்த வேலைகள் தடல்புடலாக நடைபெற்றன.

இடையிடையே ரமேஸ் வந்து வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டது ஆனந்தனுக்கும் மற்றையோருக்கும் மகிழ்வாக இருந்தது.

வீட்டு முன்றலில் ‘சொக்கட்டான்’ பந்தல் போடப்பட்டு உள்ளே மணமேடை கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பிரியா தனது எண்ணம்போல் சிறப்பாகத் திருமணத்தை நடத்தி முடிப்பதற்கு ஏற்ற வகையில், பிரியவதனியுடன் இணைந்து அனைத்திலும் கவனத்தைச் செலுத்திவந்தாள்.

தாலி, கொடி, கூறைச்சேலை போன்றவற்றை ரமேஸ் கொள்வனவு செய்திருந்தான்.

பெண்ணுக்கான 20 பவுண் நகையும் வீடும் கொடுப்பதாகவும், திருமணச் செலவையும் தாமே ஏற்பதாகவும் பிரியா ஏற்கெனவே ரமேஸிற்கு தெரிவித்திருந்தாள்.

ரமேஸ் எதையும் எதிர்பார்க்காதபோதும், பெண்வீட்டாரின் கடமையாகச் செய்ய முன்வந்தனர்.

ஆனந்தனினால் உறவினர் அயலவர்களுக்கு திருமணத்திற் கான அழைப்பு விடுக்கப்பட்டபோதும், ரமேஸ் சார்பாக அவனின் சிறிய தந்தை குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் கூடவே வேலை செய்பவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

❖❖❖

தாயைத் தேடி வீட்டுக்கு வந்திருந்தான் ரமேஸ்!

அவள் முகத்தைக் கடுப்பாக வைத்துக்கொண்டு விறாந்தை யிலிருந்த கதிரையில் அமர்ந்திருந்தாள்.

நெருங்கிச் சென்று அவள் முன்னால் நின்றான்.

சட்டெனத் தலை கவிழ்ந்து கொண்டாள்.

தாயின் முரட்டுப் பிடிவாதத்தை இன்றுவரை அறிந்த வன்தானே! சமாளித்து நின்றான்...

“அம்மா! நாளைக்கு எனக்கு கலியாணமம்மா. பதினொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கு முகூர்த்தமம்மா. முன்னுக்கு நிண்டு செய்யவேண்டிய நீங்கதான் அதுக்கு வரப்போறயில்லையே! இப்பயாவது என்னை ஆசீர்வதியுங்கம்மா..."

கவிழ்ந்த தலை நிமிரவில்லை.

"அம்மா! உங்கள நான் எதிர்த்துப் பேசினது கோவமாம்மா? தவறாகவோ, வேண்டுமென்றோ ஒண்டும் சொல்லயில்லையே! உங்கட எண்ணம் பிழையெண்டுதானேயம்மா சொன்னனான். அது தவறெண்டா மன்னிச்சுக் கொள்ளுங்கம்மா."

"............."

"நான் உங்கட பிள்ளைதானே! பிள்ளை பிழைசெய்தா மன்னிச்சு மறக்கக்கூடாதா?"

தலை கவிழ்ந்த சிலையின் நிலையில் இருந்தாள் மணிமாலா.

சிறிதுநேரம் நின்று பார்த்தான். தாயிடத்தில் மாற்றம் வருவதாக இல்லை. ஏமாந்த ரமேஸ், குனிந்து தாயின் பாதத்தைத் தொட்டு, தனது கண்களில் ஒத்திக்கொண்டான். கண்ணீர்துளி அவள் பாதத்தில் வீழ்ந்து தெறித்தது.

"அம்மா! உங்கட பாதத்தைத் தொட்டதே எனக்குக் கிடைத்த ஆசியம்மா. அது போதும்... அம்மா! ஐஞ்சு வருசத்துக்கு முன்ன நீங்க வான் ஒன்றோட அடிபட்ட ஞாபகமிருக்கா? அப்ப உங்களுக்குத் தேவைப்பட்ட குறூப் இரத்தம் ஆஸ்பத்திரில இல்லாதபடியா பலரிடமும் கேட்டு அலைஞ்சோம். கடைசியில நீங்க வீடு வாடகைக்கு விட்டிருக்கிறீங்களே சுப்பிரமணியம் அவரட இரத்தம்தான் பொருந் தீற்றுது. உங்கட உடம்பில ஓடுற ரெத்தத்தில நீங்க விலக்கி வைக்கிற சுப்பிரமணியத்தின்ர ரெத்தமும் கலந்திருக்குது. இந்த உண்மைய நீங்களும் அறிஞ்சிருக்க வேணுமெண்டதுக்காக இப்பத்தானம்மா சொல்லுறன்... அம்மா! நான் போயிட்டு வாறன்."

மீண்டு பாதத்தைத் தொட்டுவிட்டு விம்மல், கண்ணீருடன் வெளியேறினான்...

கிளர்ந்தெழுந்த உணர்வினால் சட்டெனத் தலையை உயர்த்தினாள் மணிமாலா... அவளது கண்ணின் ஒளியை திவலை மறைத்திருந்தது... இதயம் துடித்தது... உள்ளம் உருகிட, அவளை அறியாமலே கையை நீட்டியவாறு எழுந்து காலை முன்வைத்தாள்... கௌரவம் தடுப்புச் சுவராக வழிமறித்தது. மேற்கொண்டு நகராமல் அவன் போவதையே பார்த்துக்கொண்டு நின்றாள், திரும்பிப் பார்க்க மாட்டானா என்ற ஏக்கத்தோடு...

கல்லுக்குள்ளும் ஈரம் இருக்கும் என்பதை அவளது கண்கள் வெளியேற்றிய கண்ணீர் வெளிப்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமேஸின் நண்பர்கள் பலர் வந்திருந்தார்கள்.

பந்தல் வாடகைக்கு விடுபவரினால் பந்தல் மற்றும் மணமேடை அலங்கரிப்பு செய்யப்பட்டதால் நண்பர்களுக்கு பெரிதாக வேலை இருக்கவில்லை.

ஆனந்தனின் உறவினர்கள், அங்கு தங்கி நிற்பவர்களுக்கான இரவு உணவு தயாரிப்பதிலும், கூலிக்கமர்த்திய சமயல்காரர் மறுநாள் காலையில் வருபவர்களுக்கான காலை உணவு தயாரிப்பதற்கும், திருமணத்திற்கு வருகை தருபவர்களுக்கான மதிய உணவு தயாரிப் பதற்குமான ஆயத்த வேலைகளிலும் ஈடுபட்டுமிருந்தனர். உறவினர் கள் அவர்களுக்கு ஒத்தாசை புரிந்தனர்.

பிரியா திருமணத்துக்கான வேலைகளைக் கண்காணிக்க, பிரியவதனி வந்திருப்பவர்களுக்கு குளிர்பானம் கொடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தாள்.

திருமணத்துக்குத் தேவையான பூக்களை நவம் எடுத்து வருவதாகவிருந்ததால் பிரியா, நேரத்தைப் பார்ப்பதும் படலையைப் பார்ப்பதுமாக அவரையே எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவளது எதிர்பார்ப்பை நீடிக்க விரும்பாதவர்போல, நவம் முச்சக்கர வண்டியிலிருந்து இறங்குவதை அவதானித்த பிரியா ஓடிச் சென்று அழைத்துவந்தாள்.

நவம் கொண்டுவந்திருந்த பொதியை உடனேயே அவிழ்த்து பூக்களைப் பார்த்த பின்னர்தான் அவளுக்கு மனநிறைவு...

## 35

விடியும் என்ற நம்பிக்கையில் உறங்கப் போவதும், உணவு ஜீரணமாகும் என்ற நம்பிக்கையில் சாப்பிடுவதும், வாயுமண்டலத்தில் மூச்சுக் காற்றுக்குப் பஞ்சம் இருக்காது என்ற நம்பிக்கையில் சுவாசிப்பது போலவும்தான் நல்லனவே நடக்கும் என்ற நம்பிக்கை யில் இருள் மறைந்து ஒளி மலர்ந்தது...

ஒலிபெருக்கிகள் பாடல்களை ஒலிபரப்பியவாறு தமது பணியை அதிகாலையே ஆரம்பித்தன...

தங்கியிருந்தவர்கள், வருகை தந்தவர்களுக்கு இட்லி, சட்னி, சாம்பார் மற்றும் உழுந்துவடை முதலியவை காலை உணவாகப் பரிமாறப்பட்டன.

திருமணத்தில் கலந்துகொள்ள வருகை தந்திருந்தவர்களால் பந்தலின் பெரும்பகுதி நிறைந்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரமேஸ் சேலம் பட்டு வேட்டியும், பிரிந்தா பச்சை நிற சேலையும் அணிந்தவாறு மணமேடையில் அமர்ந்திருக்க, சிவாச்சாரியார் மந்திரம் சொல்லியவாறு முன் ஆயத்தச் சடங்குகளை நடத்திக் கொண்டிருந்தார்.

ஏற்கெனவே பிரிந்தாவை மணமேடைக்கு அனுப்பிவைத்த பிரியா, பின்னர் தாய்க்கு சரிகைச் சேலை அணிவித்துக்கொண்டிருந்தாள்.

தங்கையின் திருமண நிகழ்வை கண்குளிர பார்த்துக் கொண்டிருந்த பிரியவதனியின் காதில் விதுஷா மெதுவாகக் கூறியதைக் கேட்டுத் திரும்பிப் பார்த்த அவள், விபரம் புரியாதவளாக அவளோடு பந்தலிலிருந்து வெளியேறினாள்.

வெளிப் படலையில் முச்சக்கர வண்டியொன்று நின்றது.

திறந்திருந்த படலையின் ஊடாக உள்ளிருந்து இறங்கியவரை அடையாளம் கண்டதும் அதிர்ச்சி.

"குட்டன் மோர்கன் வதனி!"

"குட்டன் மோர்கன்..."

அதிர்ச்சியிலிருந்து விடுபடாதவளாய் படலையோரத்தில் நின்றாள்...

"வீடுதேடி வந்தவனை வரவேற்கமாட்டீங்களாக்கும்?"

அவளிதழில் இளநகை...

"வாங்க!"

முச்சக்கரவண்டி சாரதி இரண்டு பொதிகளை இறக்கினான். அவனுக்குரிய கூலியைக் கொடுத்துவிட்டு, ஒரு பொதியை தூக்க மறுபொதியை விதுஷா எடுத்துக்கொண்டாள்.

மூவரும் பந்தலைக் கடந்து வீடு நோக்கிச் சென்றனர்.

"இண்டைக்குத்தான் தங்கச்சியட கலியாணமாக்கும்?"

"ம்..."

"தாலி கட்டி முடிஞ்சுதா?"

"இல்லை"

"நானும் சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்கிறன் போல!"

"அம்மாவுக்கும் சுகமில்லையெண்டு மல்லிகா சொன்னா. இப்ப எப்பிடி?"

வீட்டுக்குள் நுழைந்தனர்...

பொதியை வைத்துவிட்டு வீட்டை நோட்டமிட்டான்...

"வாங்க..."

அறை வாசலில் நின்று அழைத்தாள் வதனி...

மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவன்போல அவனும் அவள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் அறைக்குள் சென்றான்...

சந்திரா கதிரையில் இருக்க பிரியா நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்துக்கொண்டு நின்றாள்.

அறியாத ஒருவர் வருவதைக் கண்டு விலகி நின்றாள்...

"ஆன்ரி! என்னாச்சு உங்களுக்கு...?"

கேட்டவாறு சந்திராவின் காலைத் தொட்டு நின்றான்.

சந்திரா இளநகையுடன் இடதுகையை தலைமேல் வைத்து ஆசீர் வழங்கினாள்...

அவள் கண்களில் வடிந்த நீர்த்துளிகளை பிரியா சேலைத் துண்டுகொண்டு ஒத்தி எடுத்துவிட்டு வந்தவரையே பார்த்துக் கொண்டு நின்றாள்...

"இவர்தான் வதனியின்ர புருஷன் சோதிநாதன். ஜேர்மனியில இருந்து வந்திருக்கிறார்."

பிரியாவின் சங்கடத்தை புரிந்துகொண்ட விதுஷா, வந்தவரை அறிமுகம் செய்துவைத்தாள். இருவரும் கரம் குவித்து வணங்கினர்.

"ஓ! நீங்கதான் வதனியின்ர அக்காவா?"

மலர்ந்த முகத்தால் தன் அதிர்ச்சியைக் காட்டிக்கொள்ளாது தடுத்தாள்...

"வதனி! நேரமெல்லாபோகுது, நீங்க பந்தலுக்குப் போங்க. நானும் விதுஷாவும் அம்மாவக் கூட்டிக்கொண்டு வாறம்."

"நீங்க 'வோஷ்' பண்ணப் போறீங்களா?

"வேண்டாம் நேரம்போயிடும். நான் ரிசுவால கிளீன் பண்ணீற்று வாறன். பிறகு வோஷ் எடுப்போம்.

கூறியவாறு பாக்கில் இருந்து சிறிய பைக்கற் ஒன்றை எடுத்து அதனுள்ளிருந்த ஈரமும் குளிர்மையுமான 'ரிசு' பேப்பரை எடுத்து விரித்து முகம், கழுத்து, கைகளைத் துடைத்துக்கொண்டு, உடை மாற்றி, தலை சீவி சில நிமிடங்களில் தயாராகி புறப்பட்டான்.

பந்தலில் இருந்த பலரும் சோதிநாதனை ஆச்சரியமாகப் பார்த்தனர்.

சந்திராவுக்கான ஆடை அணிவிப்பு முடிவுற்றதும், அவள் தன்னை வேப்பமரத்தின் கீழ் கூட்டிச் செல்லுமாறு சைகை செய்தாள்...

பிரியாவும் விதுஷாவும் அவ்வாறே கைத்தாங்கலாக அழைத்துச்சென்று வேப்பமரத்தின் கீழ் கதிரையில் இருத்தினர்...

கண்களை மூடியவாறு தியானத்தில் இருப்பதுபோல சந்திரா இருந்தாள்.

அவள் முகத்தில் அமைதி... மலர்ச்சி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசித்திருந்தவன் பசியாற உண்டதுபோன்ற மனநிறைவு அவளுக்கு...

வேப்பமரம் அவள்மேல் பூக்களை உதிர்த்தியது...

பூக்களில் சிலவற்றை தனது இடது கையால் ஏந்திக் கொண்டாள் மகிழ்வுடன்...

இந்தப் பூக்கள் வாழ்த்துதலா? அன்றேல் நோய் தீர்க்கும் மருந்தா?...

சிறிது நேரத்தின் பின் அழைத்துவரப்பட்டு மண மேடைக்கு நெருக்கமாக கதிரையில் இருத்தப்பட்டாள் சந்திரா.

வேப்பமரத்தின் கீழ் உண்டான அமைதியின் நீட்சி இப்போதும் அவளிடம் காணப்பட்டது...

அவளுக்கு தேவையானது அமைதி, நிம்மதி, சந்தோஷம்... ஏற்கெனவே வாழ்க்கைப் புயலுக்குள் சிக்குண்டு முடமாகியல்லவா இருக்கிறாள்.

திருமணத்தின் தொடர் நிகழ்வுகளாக கன்னிகாதானம் நிறைவேற்றப்பட்டு, ரமேஸின் சிறிய தந்தை - சிறிய தாயினால் கூறை அன்பளிப்புச் செய்யப்பட்டதும், பந்தலில் இருந்தவர்களிடம் எடுத்துச் சென்று ஆசிபெற்று முடிந்ததும் மணமகள் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டு கூறை அணிந்தவாறு மணமேடையில் வந்தமர்ந்தாள்...

மகாலட்சுமியைப் போலக் காட்சியளித்த சந்திராவைக் கண்டதும் பிரிந்தாவின் கண்கள் கலங்கின.

சாதுரியமாகத் துடைத்துக்கொண்டாள்.

வீடியோ படப்பிடிப்பாளன் அதைத் தவறவிடாது பதிவு செய்து கொண்டான்.

சிவாச்சாரியாரின் சடங்கு முறைகள் ஓரளவு நிறைவாகி மாலைமாற்றி, தாலி கட்டும் நேரம் நெருங்கியது.

பந்தல் வாசலில் பரபரப்பு...

உள்ளே இருந்த அனைவரும் திரும்பிப் பார்த்தனர்.

மணிமாலா வேகமாக நடந்து வந்தாள்...

ஏதோ விபரீதம் ஏற்படப்போகின்றதென்பதே பந்தலினுள் இருப்பவர்களது பேச்சாக இருந்தது.

அனைவர் கண்களும் மணிமாலாவை நோக்கின...

ரமேஸின் கண்களிலும், உடலிலும் பதட்டம் இருக்கவே செய்தது.

ரமேஸ் சிறிய தகப்பனைப் பார்த்தான். அவர் அமைதியாக இருக்கும்படி கண்களால் சைகை செய்தார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணமேடைக்கு வந்துவிட்டாள் மணிமாலா...

மந்திரம் உச்சரிப்பதை நிறுத்திக் கொண்டார் சிவாச்சாரியார்...

பதட்டத்தில் சந்திரா...

சற்றுமுன் காணப்பட்ட அமைதியிலிருந்து விடுபட்டவளாக சந்திரா காணப்பட்டாள்...

அதுகண்டு பிரியாவும் ஆனந்தனும் அவளருகில் வந்து நின்றனர்.

"பிரியா! அம்மாவுக்குத் தேவையான நிம்மதி அவவுக்கு கிடைக்காமலே போயிடும்போல இருக்க..."

"ஏன் அப்படிச் சொல்லுறீங்க?"

"அங்க பார், ராட்சசி மாதிரி ஒருத்தி இடையில புகுந்திருக் கிறாளே!"

"அப்பா! வாழ்க்கையில் நாங்க எவ்வளவத்தையோ இழந்தி ருக்கிறோமப்பா. ஆனா, ஆருக்கும் துரோகம் செய்யயில்லையே! அதனாலேதான் என்னட கலியாணம் நடந்தது. வதனியின்ர புருசன் தேடிவந்திருக்கிறார். பிரிந்தாவின்ர கலியாணத்தில நிற்கிறோம் அதுவும் நல்லா நடக்குமப்பா. அம்மாவட மனசுக்கு அவ நல்லா இருப்பாவப்பா."

"அம்மாவ அமைதியா, நிம்மதியா, சந்தோஷமா வாழச் செய்யிறது ஒண்டே எங்கட பிரதான கடமையம்மா. அவளுக்கு வேண்டியது இந்த மூண்டும்தான்."

ஆனந்தன் உணர்ச்சிவசப்பட்டவராகக் காணப்பட்டார்.

"அப்பா நீங்க முதலில அமைதியா இருங்கப்பா. எல்லாம் நல்லதாகவே நடக்கும்..."

மணிமாலா, மணமேடையின் சுற்றாடலில் நின்றவர்களை ஒவ்வொருதராய் பார்த்தாள்...

அவளது கடுப்பான முகங்கண்டு நின்றவர்கள் பயந்து விட்டனர்.

கையில் தாலித் தட்டத்தோடு நின்ற ரமேஷின் சிறியதாயை கோபமாகப் பார்த்தாள்.

அவளது உடல் நடுங்கியது.

சட்டென அவளைத் தேடிச் சென்று தாலித் தட்டத்தைப் பற்றி பிடித்தாள்.

"அவனுக்குத் தாய்க்குத் தாயா, தகப்பனுக்குத் தகப்பனா நானிருக்கேக்க நீ எதுக்கு இடேக்க?"

இழுத்து தனது கையில் எடுத்துக்கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியதாய் வாயே திறக்கவில்லை. அந்தளவுக்கு பயத்தில் உறைந்தவளாய் நின்றாள்.

"ஏன் ஐயா! மந்திரத்த நிறுத்தினனீங்க? தொடருங்க..."

அவளிடமிருந்து ஆணையாய் வெளிவந்ததுகண்டு சிவாச்சாரியார், மகுடிக்குக் கட்டுப்பட்ட சர்ப்பத்தைப்போல அடங்கி மந்திரத்தை உச்சரிக்கத் தொடங்கினார்.

உச்சரிப்பில் பதட்டம் இல்லாமலில்லை.

தம்முள் புகுந்து நிறைந்திருந்த சந்தேகம் சிறிதும் விலகாதவர்களாகவே பந்தலினுள்ளே இருந்த அனைவரும் காணப்பட்டனர்.

உறவினர்கள் வெளிக்காட்டிக் கொள்ளாதபோதும் அவர்களிடையேயும் பயம் இருக்கவே செய்தது.

"என்ன வதனி இது? நல்லநேரமும் அதுவுமாய்?"

"கொஞ்சம் பொறுங்க, என்ன நடக்குதெண்டு பாப்பம்."

"என்ன பொறுக்கிற... இவதானா மாப்பிள்ளையின்ர தாய்?"

"ஓமுங்க... நீங்க ஏதையும் கதைச்சு பிரச்சினையில மாட்டிக் கொள்ளாதேயுங்க. பெரியவங்க இருக்கிறாங்கதானே!"

சோதிநாதன் மணிமாலாவைப் பார்த்துவிட்டு தலை கவிழ்ந்து கொண்டான்.

முன்னர் இருந்த அமைதியை பந்தல் இழந்திருந்தது.

எல்லோரினது கண்களையும், உரையாடலையும் தன்பக்கம் இழுத்தவளாக மணிமாலா நின்றாள்...

சிறிது நேரத்தால் பந்தலைச் சுற்றி வந்த அவளது கண்கள் மணமக்கள் மீது நிலைத்து நின்றன...

சில நிமிடங்கள் நிசப்தம்...

மணமக்களிடையே பதட்டம்...

ஏதோ விபரீதம் நடைபெறப்போகிதென்பது மட்டும் அங்கிருந்தவர்களுக்குத் தெளிவாகப் புரிந்தது. அதனால் பலரும் ஆவலுடன் பார்த்துக்கொண்டிருந்தனர்.

"... அம்மா! ஐஞ்சு வருசத்துக்கு முன்ன நீங்க வான் ஒன்றோட அடிபட்ட ஞாபகமிருக்கா? அப்ப உங்களுக்குத் தேவைப்பட்ட குறூப் இரத்தம் ஆஸ்பத்திரில இல்லாதபடியா பலரிடமும் கேட்டு அலைஞ்சோம். கடைசியில நீங்க வீடு வாடகைக்கு விட்டிருக்கிறீங்களே சுப்பிரமணியம் அவரட இரத்தம்தான் பொருந்தீற்றுது. உங்கட உடம்பில ஓடுற ரெத்தத்தில நீங்க விலக்கி வைக்கிற சுப்பிரமணியத்தின்ர ரெத்தமும் கலந்திருக்குது..."

ரமேஸ் கூறிச்சென்ற வார்த்தைகள் மணிமாலாவின் உள்ளத்தில் உயிர்பெற அவளுடல் சிலிர்த்தது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தின் தெளிவு முகத்தில் பிரதிபலிக்க, அவளிடமிருந்த கடுப்பு மெல்லமெல்ல விடைபெற்றுச்செல்வதைக் கண்டனர். அந்த இடத்தை மகிழ்வின் கோடுகள் ஆக்கிரமித்தன. புயலுக்குப் பிந்திய அமைதியாக தோன்றிய அவளது முகத்தில் புன்னகை தாண்டவ மாடியது. ரமேஸை ஆவலோடு பார்த்தாள்...

இமை மூடாது அவளையே பார்த்துக்கொண்டிருந்தவர்களின் முகத்திலும் அதே புன்னகை... அதேவேளை எல்லைமீறிய ஆச்சரியம்...

"ஐயா..!"

அச்சத்துடன் திரும்பினார் சிவாச்சாரியார்.

"நல்ல நேரம் முடியறத்துக்கிடையில தாலிய கட்டிடச் சொல்லுங்களன்..."

உரிமையோடு, பாசத்தோடு, பண்பாக சிவாச்சாரியாரிடம் கூறிய அவள், தாலித் தட்டத்தை சிவாச்சாரியாரின் கையில் கொடுத்து விட்டு மணமக்களுக்கு அருகாமை சென்று நின்றுகொண்டாள்.

அதிசயம் நிகழ்ந்ததுபோல அனைவரும் நோக்கினர்.

அந்தநேரம் சந்திராவின் முகத்தில் தோன்றிய மலர்ச்சியை சூழ நின்றவர்கள் அவதானிக்கத் தவறவில்லை.

மணிமாலா சொல்லும்வரை காத்திருந்தவர்போல சிவாச்சாரி யாரும் தாலியை எடுத்து மணமகன் கையில் கொடுத்தார்.

ரமேஸ், நன்றியோடும் பாசத்தின் விரிவாக்கத்தோடும் தாயைப் பார்த்தான்.

அவளும் சிரித்தவாறு கையை உயர்த்தி ஆசி வழங்கினாள்.

அவளது கண்கள் கலங்கின...

கெட்டிமேளத்தின் மத்தியில், தூவப்படும் மலர்களுக்கு இடையில், சிவாச்சாரியாரின் மந்திர உச்சாரணத்துடன் பிரிந்தாவின் கழுத்தில் தாலியைக் கட்டி தனது மனைவியாக ஏற்றுக்கொண்டான் ரமேஸ்.

எதிர்பாராத திருப்பத்தில் நடந்தேறிய நிகழ்வுகண்டு பந்தல் அதிரும் கரகோசம்...

சந்திராவின் உள்ளம் அக்களிப்பால் துள்ளியது. உடலில் திடீரெனத் தென்பு எற்பட்டதுபோன்ற உணர்வு... உவகை பொங்க மணமக்களையும், மணிமாலாவையும் மாறிமாறிப் பார்த்தாள்.

தாலி கட்டியதைத் தொடர்ந்து கைப்பிடித்தல் மற்றும் சம்பிரதாய சடங்கு நிகழ்வுகள் தொடர்ந்தன.

மணிமாலா, தனது மைத்துனனையும், சகோதரியையும் நெருங்கி வந்தாள்.

அவர்கள் தலை கவிழ்ந்து நின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரியின் கரத்தைப் பற்றிக்கொண்ட மணிமாலா, நா தழுதழுக்க, கண்கள் கலங்க, தான் தாலித் தட்டத்தைப் பறித்தெடுத்த தற்காக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டாள்...

கனவு காண்பதுபோன்ற உணர்வு இருவருக்கும்...

"பறவாயில்லயிங்க... நீங்க குடுப்பதுதானேயுங்க முறை..."

"அப்பிடியில்ல. பிழையான செயலுக்கு நியாயம் கூடாது. அதுக்கு ஒரு முறையிருக்குது. நான் இதுவரை நடந்துகொண்ட முறைகளை காலம நினைச்சுப் பார்த்தன். அவைகள் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன. ஏளனம் செய்கின்றன... இப்போது அவற்றி லிருந்து முற்றாக என்னை விடுவித்துக் கொண்டன். இதுவரை நான் செய்த பிழைக்காக என்னை மன்னிச்சுக் கொள்ளுங்க."

மூவர் முகத்திலும் மகிழ்ச்சி... விடுபட்டிருந்த பாசப் பிணைப்பு கற்பாறையில் மோதிய அலையாக மேலெழுந்தது...

ஐந்து வருடங்களுக்குப் பின்னர் இன்றுதான் அருகருகாக சந்தித்தனர், உறவு கொண்டாடினர்... சில நிமிடங்கள் யாவற்றையும் மறந்து கலந்துரையாடினர்...

இவர்களிடமிருந்து விலகி, சந்திராவைத் தேடிச்சென்று அவளருகில் நின்றதும் பிரியா கதிரை கொண்டுவந்து போட்டாள்.

"வேணாமம்மா, நான் அம்மாவுக்குப் பக்கத்திலேயே நிக்கிறன்."

ஆனந்தன் சிரித்தவாறு விலக முயன்றார்.

"நீங்க எங்க போறீங்க? பிள்ளகள் வருவாங்கெல்லா? அவங்கள ஆசீர்வதிக்க வேணாமா?"

ஆனந்தன் மறுப்பின்றி மறுபக்கம் நின்றுகொண்டார்.

சந்திரா சற்று தலையைச் சரித்து மணிமாலாவின் முகத்தைப் பார்த்தாள். அவள் உளமாரச் சிரித்தவாறு ஆதரவாகத் தடவிக் கொடுத்தாள்... சந்திராவின் கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைத்தும் விட்டாள்.

இதனாலும், இன்று நிகழ்ந்தேறிய மகிழ்ச்சியான நிகழ்வுகளி னாலும் புளகாங்கிதம் அடைந்த சந்திரா, அதியுச்ச சந்தோஷத்தில் மூழ்கித் திளைத்தாள். அவளது நரம்புகள் முறுக்கேறியதுபோன்று நிமிர்ந்து இருந்தாள்.

இதைக் கண்ணுற்ற அவளின் உறவுகள், பிள்ளைகள் சந்திராவை சூழ்ந்து நின்றுகொண்டனர்.

சிவாச்சாரியார் முன்னின்று நிகழ்த்தவேண்டிய நிகழ்வுகள் முடிவுற்றது. ஆசி வழங்கும் நிகழ்வு...

முதலாசி பெறுவதற்காக மணமக்கள் பெற்றோர் இருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிடம் தேடிவர அறுகரிசி தட்டுடன் சிவாச்சாரியார் பக்கம் வந்தார்.

மணமக்கள் மணிமாலாவுக்கு முன்னால் தாழ்பணிய முயன்றபோது அவள் மறித்து, முதலில் சந்திராவிடம் ஆசிபெறுமாறு சைகை காட்டியதும், அவ்வாறே அவர்கள் சந்திராவின் முன்னால் தாழ்பணிந்து பாதத்தைத் தொட்டனர்...

மகிழ்வில், பூரிப்பில், மனநிறைவில் இறைவனை மனதில் நினைத்துக்கொண்டு, ஆசி வழங்குவதற்காய் அவர்களின் தலைக்கு மேலே இடது கையை உயர்த்தியவள் சட்டென அதை வலிந்து மடக்கிக் கொண்டாள்.

தன் உடலின் பலமெல்லாவற்றையும் சிரமப்பட்டுக் குவித்தவளாக, உணர்வின் உந்தலில் மூழ்கியவளாக வலது கையை உயர்த்த முயன்றாள்...

பனிக்கட்டியால் உண்டான விறைப்பு விலகிச் செல்வதைப் போன்ற உணர்வு, தனது வலது பக்கத்து உடற்பாகத்தில் ஏற்பட்டதை சந்திராவால் உணரமுடிந்தது...

நரம்புகள் வழியாக எறும்புகள் ஊருவதுபோன்ற உணர்வு. தலையின் இடதுபக்கமும், உடலின் வலது பக்க உறுப்புகளும் குளிராக இருந்த தன்மையை இனங் கண்டாள்...

உடலெங்கும் ஏதோ நெருடுவதைப்போன்ற உணர்வு...

இதயம் வழமையை மீறி துடித்தது...

சதைகள் திரண்டு முறுக்கேறின...

நரம்புகள் புடைத்தன...

உரோமங்கள் சிலிர்த்தன...

உணர்வுகள் திரண்டன...

உடல் நடுங்கிட நெளிந்தாள்...

கணநேரத்தில் அனைவர் கண்களும் அகல விரிய, இயங்க மறுத்த அவளது வலது கரம் மெல்ல உயர்ந்தது.

கடும் பிரயத்தனத்தின் மத்தியில் மேலும் உயர்த்தியவாறு விரல்களை பிசைந்தாள், மடித்து மீண்டும் விரித்தாள்...

கோணி இருந்த வாய் சிறிது சிறிதாக மாற்றம் கண்டது...

சூழ நின்றவர்கள் மெய்மறந்து நின்றனர்...

கன்னத்தில் வழியும் நீர், மீண்டெடுத்த புன்னகையுடன், உயர்த்திய தனது வலது கையை மணமக்களின் தலைமேல் வைத்து ஆசி வழங்கி, அறுகரிசியை அள்ளி அவர்கள் தலைமீதும் தூவினாள்...

மகிழ்வு பூகம்ப அதிர்வு ஒலியாக வியாபித்தது...

மனிதருடைய செவிகள் இருபது தொடக்கம் இருபதினாயிரம் கேட்ஸ்* வரையுள்ள அதிர்வு ஒலியை மட்டுமே ஏற்கும். அதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்பட்ட அதிர்வுக்குரிய ஒலியை செவி கேட்காதென்பதால் அங்கிருந்தவர்களது செவிகளால் உணர்வுபூர்வமான அதிர்வலையை கிரகிக்க முடியவில்லை.

"அம்மா!..."

தன்னை மறந்து கட்டியணைத்தாள் பிரிந்தா...

கூடிநின்ற உறவுகள் குதூகலித்தன... அவற்றின் உச்சம் குறைவடையாதிருப்பதற்காக கண்ணீர்த் துளிகள் அவர்களுக்கு குளிரூட்டி, வலுவூட்டின...

இவற்றைக் கண்ணுற்றோ என்னவோ ஒலிபெருக்கி மௌனித்தது மின்சாரம் தடைப்பட்டதால்...

வெறுப்புகளின் மரபுகள், பிரிவுகள், துயரங்கள் எதுவும் நிரந்தரமானவைகளல்ல என்பதை உறுதிப்படுத்துவதைப்போல் எதிர்பாராத நிகழ்வுகள் அரங்கேறும் களமாக திருமணப் பந்தல் காணப்பட்டது.

சந்திரா தானடைந்த துன்பங்களை மறந்து சிரித்தாள்... மனதாரச் சிரித்தாள்... சிரித்துக்கொண்டே இருந்தாள்...

"அந்தச் சீலையை ஒதுக்கிவிடம்மா"

பந்தலின் மறைப்புக்கென பக்கமாகக் கட்டப்பட்டிருந்த சேலையைச் சுட்டி, பிரியாவை பார்த்து சந்திரா கூறிட, அவளும் அவ்வாறே செய்தாள்.

சேலை ஒதுக்கிய வெளியினூடாக வெளியே பார்த்தாள். வேப்பமரம் முழுமையாகத் தெரிந்தது. தனது உணர்வுகளில் தாய் கனகத்தின் முகத்தை அதில் கண்டாள். கொப்புகளின் அசைவுகள் பெற்றவள் வழங்கும் ஆசீர்வாதமாக உணர்ந்தாள். உடல் குளிர்ச்சி கண்டது. கண்களை மூடியவாறு சிறிதுநேரம் மௌனமாக இருந்தவள், முன்னைய நிலைக்கு மீண்டாள், மாறாத சிரிப்புடன்...

விழுதுகளாய் இல்லாமல் விலகி நின்ற உறவுகள் ஒன்றுசேரும் கணத்தில் இருக்கிற மகிழ்வுக்கு உலகத்தில் ஏதேனும் ஈடு உண்டோ? அதைப் பறைசாற்றுவதுபோல இருந்தது இந்தக் காட்சி...

ஆனந்தன் எதிர்பார்த்திருந்த அமைதி, நிம்மதி, சந்தோஷம் சந்திராவுக்குக் கிடைத்ததும், துன்பத்தின் புகை மூட்டம் காற்றிழந்த பலூன்போல அவளிடமிருந்து விலகிக்கொண்டது...

"ம்மா... ம்மா..."

வீதியில் ஆடு கத்தும் சத்தம்...

சில ஆண்டுகளுக்கு முன்னர் வீதியில் குட்டிகளைத் தேடிய லைந்த கறுத்த ஆட்டின் நினைவு சட்டென அவளுக்குத் தோன்ற,

*(Herts) அதிர்வை அளவிடப் பயன்படும் அலகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலையைத் திருப்பி வீதியைப் பார்த்தாள்...

நின்றவர்கள் விபரம் புரியாமல் தாங்களும் பார்த்தனர்.

"ம்மா... ம்மா..., ம்மா... ம்மா..."

குட்டி ஆடுகள் கத்தும் சத்தங்களும் தொடர்ந்து கேட்டன.

சந்திராவின் முகத்தில் மகிழ்வுடன் கூடிய புன்னகை...

"குட்டிகள் தாயிடம் சேர்ந்துவிட்டன..."

புன்னகையுடன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள்.

உறவுகள், பாசப் பிணைப்பில் இணைந்து தம்மை மறந்திருந்ததுகண்டு, திருமணப் பந்தலில் இருந்தவர்களிடையேயும் மகிழ்வின் ஆர்ப்பரிப்புகள்... ஆரவாரங்கள்...

பந்தலிலிருந்த பொரும்பாலானோர் அறிந்திராத தகவல்கள் அப்போதுதான் ஒவ்வொன்றாய் வெளிவந்தவாறிருந்தன...

ஆச்சரியத்தில் வாய் பிளந்தவாறு பலர்...

"இவ்வளவும் நடந்திருக்கே!"

"இடம்பெயர்வில சொந்தங்களக் காணாம அலைஞ்சு திரிஞ்ச குடும்பங்கள் திடீரென்று ஒண்டு சேர்ந்ததுபோல இருக்குது."

"சந்திராட குடும்பத்துக்க பெரிய புயலே வீசியிருக்கு. புயலும் அடங்க அவளுக்கும் சுகம் வந்திற்று."

"சந்திரா பாவம். அவள் பட்ட துன்பங்களுக்கு இப்பயெண்டாலும் விடிவு கிடைச்சிருக்கே."

"இப்பிடியும் நடக்குமா எண்டு கேக்கிறவங்களுக்கு இஞ்ச நடந்தது ஒரு உதாரணந்தான்."

"என்ன சொல்லுறீங்க? இதப்போல எதித்தின நடந்திருக்கு. இது இஞ்ச நடந்தபடியால உங்களுக்குத் தெரியுது. சண்ட நடந்த இடங்களில இதுமாதிரி கனக்க நடந்திருக்கு. இதெல்லாம் தெரிய வராதுங்க..."

"மணிமாலா இறங்கி வந்ததுதான் எல்லாத்தையும்விட பெரிய அதிசயம்."

"அவள் லேசில மாறக்கூடியவளில்ல ஏதோ முக்கிய காரணமிருக்கு."

"அவயட்ட சுப்பிரமணியத்தின்ர ரெத்தமும் கலந்திருக்கெல்லா. அதுதான் இந்த மாற்றம்."

"ஆரு அவகட வளவில இருக்கிற சுப்பிரமணியமா?"

"ஓம்..."

"அவள் ஓமெண்டவளா?"

"வேற வழியில்லாம, அவளுக்குத் தெரியாம ஏற்பாடு செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுத்தவனே நான்தான்."

மண்டபத்திலிருந்தவர்களது உரையாடல்களின் மத்தியில் தொடர்ந்து திருமண நிகழ்வுகள் நடைபெற்று நிறைவு பெற்றன.

வருகைதந்தவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது.


சந்திராவுக்கு பிரியா உணவூட்ட ஆயத்தங்களைச் செய்தாள். தன்னால் சாப்பிட முடியுமென சந்திரா கூறியபோதும் ஏற்றுக் கொள்ளாத பிரியா தானே உணவூட்டி மகிழ்ந்தாள்.

மணிமாலா ஓடியோடி மணமக்களையும் மற்றும் வந்திருப் பவர்களையும் உபசரிப்பதைப் பார்த்து பலரும் மெய்மறந்து நின்றனர்.

"... வாழ்க்கை என்றால் ஆயிரம் இருக்கும்
வாசல்தோறும் வேதனை இருக்கும்..."

எங்கிருந்தோ வானொலியில் ஒலித்து, காற்றுடன் கலந்து, மிதந்து வந்தது திரைப்படப் பாடலின் வரிகள்...

▲▲▲





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிவந்தவை...

### இலக்கியம்

01. தடுமாறும் சாஸ்திரங்கள் *(கவிதைத் தொகுப்பு)* சுவிற்சர்லாந்து 1993
02. அவலத்தின் இராகங்கள் *(கவிதைத் தொகுப்பு)* சுவிற்சர்லாந்து 1995
03. களம் தந்த களங்கம் *(தென்மோடிக் கூத்து)* யாழ்ப்பாணம் 2003
04. ஆகுதி *(சிறுகதைத் தொகுப்பு)* இந்தியா 2009
05. கூத்துக்கள் - 5 *(5 தென்மோடிக் கூத்துக்கள்)* யாழ்ப்பாணம் 2009
*சிறந்த நூலுக்கான அரச இலக்கிய (சாஹித்திய) விருது - 2010,*
*சிறந்த நூலுக்கான தமிழியல் விருது - 2010.*
06. குறுங்கூத்துக்கள் *(5 தென்மோடிக் கூத்துக்கள்)* யாழ்ப்பாணம் 2011
*சிறந்த நூலுக்கான அரச இலக்கிய (சாஹித்திய) விருது சான்றிதழ் - 2012*
*சிறந்த நூலுக்கான இலங்கை இலக்கியப் பேரவையின் விருது - 2012*

### அறிவியல்

07. தமிழ்ச்சோலை *(ஐரோப்பா வாழ் சிறுவர் பாட நூல்)* சுவிற்சர்லாந்து 1994
08. செயல்முறை கணிப்பொறி சுவிற்சர்லாந்து 1998
09. கணிப்பொறி 2000 யாழ்ப்பாணம் 2001
10. தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குரிய முன்னோடிக் குறிப்புகள் யாழ்ப்பாணம் 2009

### பல்துறை

11. குருநகர் கலைமாட்சி யாழ்ப்பாணம் 2003
12. கடலைகள் கொஞ்சும் நகரம் யாழ்ப்பாணம் 2006
*சிறந்த நூலுக்கான வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது - 2007*
13. குருதிக் குளியல் *(3 குறுநாவல்கள்)* யாழ்ப்பாணம் 2007
*சிறந்த நூலுக்கான வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது - 2008*
14. ஆன்மீகத்தில் குருநகர் மக்கள் யாழ்ப்பாணம் 2008

### நாவல்

15. உப்புக்காற்று யாழ்ப்பாணம் 2012
*சிறந்த நூலுக்கான அரச இலக்கிய (சாஹித்திய) விருது - 2013*
*சிறந்த நூலுக்கான வடக்கு மாகாண கல்வி அமைச்சின் விருது - 2013*
*சிறந்த நூலுக்கான தமிழியல் விருது - 2013*
*சிறந்த நூலுக்கான இலங்கை இலக்கியப் பேரவையின் விருது - 2013*
16. வேப்பமரம் யாழ்ப்பாணம் 2013

### இறுவட்டு (பாடலாக்கம்)

யாகப்பரே எங்கள் காவலரே யாழ்ப்பாணம் 2002
புகழ் பூத்த புனிதர் யாழ்ப்பாணம் 2011
வெள்ளோட்டம் யாழ்ப்பாணம் 2011



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடபுலத்து அரங்கக் கலைகளில் ஆர்வம் மிக்கவராக இருந்த 'கலையார்வன்' யாழ்ப்பாணத்து குருநகர்ப் பிரதேச மக்களின் வாழ்வை மையமாகக்கொண்டு படைத்த 'உப்புக்காற்று' (2012) என்ற நாவலோடு புனைகதை உலகிலும் அடியெடுத்து வைத்தவர்.

மீனவக் களங்களை மையப்படுத்தி காதல் கதைகளையே எழுதி வந்த ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் கலையார்வனின் 'உப்புக்காற்று' அந்த மக்களின் வாழ்வின் சுவடுகளை உள்ளவாறே எடுத்துக்காட்டி உன்னதமானதொரு இலக்கியப் பிரதியாகப் பலரதும் உள்ளத்தைக் கவர்ந்து நின்ற வேளையில் அவரது இரண்டாவது நாவல் 'வேப்பமரம்' என்ற பெயரோடு இப்போது வெளிவருகின்றது. இது கலையார்வனின் 16வது நூலாகும்.

'வேப்பமரம்', போர்க்காலச் சூழலில் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மக்களின் வாழ்வின் ஒரு பகுதியை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது....

... இந்த நாவலினூடாக கலையார்வன் போர்க்காலத்து யாழ்ப்பாணச் சமூக வாழ்வின் சில பகுதிகளை எடுத்துக் காட்டியுள்ளார். அவர் சொல்லாத சேதிகள் பல - சொல்லாமல் சொல்லியவையும் பல - அவர் சொல்ல நினைத்தும் சொல்லாத சேதிகளை நிச்சயமாக அவரின் அடுத்த நாவலில் எதிர்பார்க்கலாம் என்ற நம்பிக்கையோடு வாசகர்கள் காத்திருக்கலாம்.

**பேராசிரியர், கலாநிதி ம.இரகுநாதன்**
**தமிழ்த்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
(வாசிப்புக் குறிப்பிலிருந்து)

ISBN 978-955-0197-03-3

**ஜெயந்த் சென்ரர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org